கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி நிர்ணயக் குழு

***286 வினா.—திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குக கூலி நிர்ணயக் குழு அமைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அக் குழு அமைக்கப்படும் ?

(உ) அக் குழுவில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் உரிய அளவுக்கு அங்கம் வகிக்க ஏற்பாடு செய்யும் உத்தேசமுண்டா ?

[1969 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

திரு. சி. கோவிந்தராசன் : எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் இல்லாமல் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிருர்கள். அவர்களுக்கு ஏதாவது சட்டப் பாதுகாப்புக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி ஆல் இந்தியா ஹாண்ட்லூம் போர்ட், தேவையா, தேவையில்லையா என்று பரிசிலித்தார்கள். அதற்குப் பிறகு தேவையில்லை என்று சொன்ன காரணத்தாலே அதை நிறைவேற்ற முன்வரவில்லை.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே பெரிய மில்களையே ஆரம்பிக்கின்ற இக் காலத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பெரிய பிரச்னைகளுக்குத் தீர்வு காண கைத்தறி நெசவுச் சங்கங்களை நிறுவுவதற்கு வழிமுறைகள் வகுத்துக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நூற்பாலைகள் கைத்தறி நெசவுக்கு நூல் கொடுப்பதற்காக அமைக்கப்படுகின்றன. கைத்தறி சங்கங்களுக்கே கொடுத்தால் வருமானம் அதிகப்படும், வேலையில்லாத் திண்டாட்டம் வராமல் தடுக்கப்படும் என்பதால் அதைப்பற்றிப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடம்

*287 வினா.—**திரு. எம். பூபதி** : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மவுண்ட் ரோடில் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வாங்கிய கட்டடத்தை எவ்வளவு வாடகைத் தொகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது?

(இ) தற்சமயம் சங்கம் இருக்கும் கட்டடத்திற்கு வாடகை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாடு கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்கு, சென்னை மலைச் சாலையில் சொந்தமாக வாங்கியுள்ள கட்டடத்தை மாதம் ஒன்றுக்கு ரூ. 767.50 வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது.

(இ) சங்கத்தின் செயலகம், எழும்பூர் பாந்தியன் சாலையில் உள்ள தன் சொந்தக் கட்டடத்திலேயே உள்ளது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, இம்மாதிரி உள்ள நிலைமை எத்தனை வருடமாக இருக்கிறது? அதை மாற்றியமைக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? நம்முடைய சொந்தக் கட்டடத்திற்குள் வைக்காமல் ஏன் வெளியிலே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது நம்முடைய சொந்தக் கட்டடத்தில்தான் இருக்கிறது. நாம் மவுண்ட் ரோடில் வாங்கிய கட்டடத்தில் கோ-ஆப்டெக்ஸ் ஸாரி மியூஸியம் துவங்கப் பட்டது. அதற்கு 1,000 ரூபாய் வாடகை கொடுக்கப்படுகிறது. நமக்கு 767½ ரூபாய் வாடகை வருகிறது. நாம் அந்தக் கட்டடத்தை வாங்கியவுடனே அங்கே குடியிருக்கிற நபர்களை வெளியேற்ற முடியவில்லை. அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றார்கள். உயர் நீதிமன்றம் நமக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதற்கு மேலே உயர்நீதிமன் றத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

காஞ்சிபுரத்தில் சரிகை தயாரிக்கும் பிரிவு

*** 288 வினா.—திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் கூட்டுறவுத் துறையில் சரிகை தயாரிக்கும் பிரிவு ஒன்று நிறுவப் பெற்றுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): இல்லை.

காஞ்சிபுரத்தில் கூட்டுறவுத் துறையில் சரிகை தயாரிக்கும் பிரிவு ஒன்றை அமைக்கும் திட்டத்திற்கு அரசு கொள்கையளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்ற தொடக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

காகிதத் தொழிற்சாலைகள்

*** 289 வினா.—திரு. ஆர். கருப்பையா:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி வட்டத்தில் காகிதத் தொழிற்சாலை (Paper factory) நிறுவும் எண்ணம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

* 290 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start a paper factory at Hosur Taluk; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is an extensive bamboo forest near Denkinikota in Hosur taluk with a sizable lantana growth, and with the available raw material it is possible to start paper manufacture on a cottage industry basis. It will provide work for the suffering people and the effect of the drought will be reduced. On this score will the Hon. Minister make arrangements for a re-investigation of the matter?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் தொழிற்சாலை டிலைசென்ஸ் செய்யப்பட்டது. விலைவாசி ஏறியிருக்கின்ற நிலைமையில் இந்தத் தொழிற்சாலையில் நாம் ஈடுபடுவது நல்லதல்ல என்று நினைக்கிறேன்.

அரசு தொழிற் பயிற்சிப் பள்ளி மாணவர்கள்

* **291 வினா.—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டுதோறும் அரசினர் தொழிற்பயிற்சிப் பள்ளி (G.I.T.I.) களிலிருந்து எவ்வளவு மாணவர்கள் பயிற்சி முடித்து வெளிவருகிறார்கள் ?

(இ) அவர்கள் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) கிட்டத்தட்ட 6,000 பேர்.

(இ) தொழிற் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுவோருக்கு வேலை தேடித்தருவதில் வேலை வாய்ப்பகம் தனி அக்கறை செலுத்துகிறது. தொழிற் பயிற்சிப் பள்ளித் தலைவர்களும் அவர்களைப் பணியிலமர்த்துவதற்கும் தொழில் பழகச் செய்வதற்கும் தங்களாலியன்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர்.

திரு. எஸ். கணேசன் : தொழிற்பேட்டைப் பள்ளிகளிலே படித்துத் தேர்வுபெற்றவர்கள் வெளியே வரும்பொழுது அவர்களுக்கு வேலை கிடைக்காத நிலைமை இருக்கிறது. இதன் காரணமாகத் தொழிற்பேட்டையில் படிக்க வருகிற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. எனவே, இதைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிற்குப் பொது. இந்தப் பள்ளியிலே படிக்கிற காரணத்தினாலே வேலையில்லாத் திண்டாட்டம் என்று ஏற்படவில்லை. இதிலே படிக்கின்றவர்களுக்கும் வேலை வாங்கித் தருகின்ற அலுவலகத்திற்கும் தொடர்பு எற்படுத்த அரசாங்கம் தன்னால் ஆன முயற்சிகளைச் செய்து வருகிறது.

1969 செப்டம்பர் 13]

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் படித்து வெளியே வருகின்ற மாணவர்கள், கம்பெனிகளில் அப்ரென்டிஸ் ஆக வேலை செய்து தேர்வு அடைய வேண்டுமென்ற நிலையில் அதற்குரிய வாய்ப்பு இல்லாமல், பலர் படித்து முடித்த பிறகு வேலையற்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதால் அதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் வகையில் ஆங்காங்கு இருக்கும் தனியார் கம்பெனிகளில் அதிகமான அளவுக்குத் தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற மாணவர்களை அப்ரென்டிஸ் ஆக எடுத்துக் கொள்ள வழி வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நல்ல யோசனை. இது பற்றி அரசாங்கம் பரிசீலித்து டைரக்டர் ஆஃப் எம்ப்ளாய்மென்ட்ஸ் ஒவ்வொரு பகுதியிலுள்ள தொழில் அதிபர்களையும் சந்தித்து, நம்முடைய தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்று வருகிற மாணவர்களை ஆங்காங்குள்ள தொழிற்சாலைகளில் தேவைப் படுகிற அளவுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்ற வகையில் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

Madras–Cape Comorin Road

* 292. *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the State Government has submitted any proposal to the Government of India to take up the Madras-Cape Comorin Road under Border Road Development Scheme by the Defence Department of the Government of India; and

(*b*) whether any financial assistance has been received under the above scheme, so far, in Tamil Nadu for any other roads?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இந்திய அரசின் பாதுகாப்புத்துறை எல்லைப்பகுதிச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சென்னை-கன்னியாகுமரிச்சாலை (கிழக்குக் கடற் கரைச் சாலையை) அமைக்கும் பணியை, எடுத்துக் கொள்வது குறித்து இந்திய அரசுக்கு செயற்குறிப்பு ஏதும் அனுப்பப்பட வில்லை.

(இ) மேற்படி திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தின் எந்தச் சாலையின் பொருட்டும் இந்திய அரசிடமிருந்து இதுவரை நிதி உதவி ஏதும் பெறப்படவில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : இந்தியப் பாதுகாப்பு அமைச்சரகம், பாதுகாப்பு என்ற வகையில் பல கோடிக் கணக்கான ரூபாயை எல்லை ஓரச்சாலை மேம்பாட்டுக்காகச் செலவழிக்கிறது. மலை வழியை நோக்குமிடத்து அஸ்ஸாம், நாகலாந்து போன்ற வட மாநிலங்களும், கடல் வழியை நோக்கு மிடத்து ஆந்திரம், தமிழகம் போன்ற திராவிட மாநிலங்களும் எல்லை ஓர மாநிலங்களாக இருக்கின்றன. அப்படி இருக்க,

சென்னை-கன்னியாகுமரி நெடுஞ்சாலையை இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளாததற்குக் காரணம் என்ன? ஒருவேளை தமிழ்நாடு இந்திய அரசின் எல்லைக்கு அப்பால் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது டெல்லி பாராளுமன்றத்தில் கேட்க வேண்டிய கேள்வி.

THIRU K. VINAYAKAM : Sir, my question is whether this Government have made any representation to the Centre regarding the formation of one straight road on the borders of our State near the coast?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தச் சாலையைத் தேசிய நெடுஞ்சாலையின் தரத்திற்கு உயர்த்துவதற்காக 14 கோடி ரூபாய் திட்டம் மத்திய அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. நான்காவது திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்திலே கவனிக்கப்படும் என்று மத்திய அரசாங்கம் தெரிவித் திருக்கிறது.

உளுந்தூர்ப்பேட்டை-நெய்வேலி இருப்புப் பாதை

*** 293 வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்ப்பேட்டைக்கும் நெய்வேலிக்கும் இடையே ரெயில் பாதை போடும் விஷயமாக இம்மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்திய அரசுக்கு அவ்வித பரிந்துரை எதும் செய்யப்படவில்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : நெய்வேலி முக்கியமான பட்டணம். அங்கு செல்லுவதற்கு கடலூர் சென்று போக வேண்டும், அல்லது விருத்தாசலம் சென்று போகவேண்டும். ஆகவே, நேரான பாதை அமைப்பதற்கு மறுபடியும் பரிசீலனை செய்து மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே இரண்டாவது, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டங்களில் பல சாலைகளைப் போட வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் வற்புறுத்தி அவைகளுக்கே முடிவு எற்படாத நேரத்திலே இதற்கும் சிபாரிசு செய்வதால் எந்தவிதமான பயனும் எற்படாது.

1969 செப்டம்பர் 13]

திருவொற்றியூர்-பொன்னேரி சாலையில் இரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம்

*294 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர்-பொன்னேரி சாலையிலுள்ள லெவல் கிராசிங்குக்கு மேல் மேம்பாலம் கட்டுகின்ற செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) அவ்விதச் செயற்குறிப்பு எதுவும் ஆலோசனையில் இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம்: சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையிலே ரயில்வே கேட் இருப்பதால் அதிகமான அளவுக்கு போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. மேலும் அங்கே ஆயில் ரிபைனரி போன்ற தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா: இதைவிட அதிகமான போக்குவரத்து உள்ள இடங்கள் இருக்கும் காரணத்தால் இதைத் தற்போது எடுத்துக் கொள்ள சாத்தியம் இல்லை என்று சொல்லப்படுகிறது.

கும்பகோணம் நகராட்சியில் கேளிக்கை வரி

*295 வினா—**திரு. நா. காசிராமன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகராட்சி 1965-66-ம் ஆண்டில் கேளிக்கை வரி மீதான மேல் வரியை உயர்த்தியுள்ளதா ?

(இ) கும்பகோணம் நகராட்சி கேளிக்கை வரி மீது விதித்த மேல் வரி அதிகரிப்பை வருவாய்த்துறை வாரியம் தள்ளிவிட்டதா ?

(உ) நகராட்சி செயற்குறிப்பையும், முடிவையும் தள்ளி வைத்து வருவாய்த் துறை வாரியம் பிறப்பித்த ஆணை செயல்படுவதை அரசு தடுத்து நிறுத்தி வைத்துள்ளதா?

(எ) வருவாய்த்துறை வாரியம் எடுத்த முடிவின் மீது அரசு தடுப்பு ஆணை பிறப்பித்திருந்தபோதிலும், திரைப்பட மாளிகை அதிபர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட கேளிக்கை வரி மீதான மேல் வரியை கும்பகோணம் வணிக வரி அதிகாரி நகராட்சிக்குக் கொடுக்க மறுத்தாரா ?

(ஐ) அவ்வாறு அவர் நிறுத்தி வைத்துக் கொண்ட கேளிக்கை வரித் தொகையும் கேளிக்கை மேல்வரித் தொகையும் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆம்.

(எ) இது குறித்து அரசிடமிருந்து இறுதி ஆணைகள் வரும் வரை தொகை கொடுக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

(ஐ) ரூ. 58,870-16 (ஐம்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று எழுபது ரூபாய், பதினாறு காசு மட்டும்).

திரு. நா. காசிராமன் : நகராட்சிக்குச் சேரவேண்டிய இவ்வளவு பெரிய தொகையை நிறுத்தி வைப்பதால் நகராட்சி நிதி நிலைமையில் நெருக்கடியான கட்டம் உண்டாகிறது. ஆகவே, உடனடியாகத் தொகையைக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நகராட்சி மன்றம் குறிப்பிட்ட ஒரு சினிமாக் கொட்டகையின் உடைய உரிமையாளர்கள் மீது இந்த வரி விதிப்புப் போட்டதைத் தொடர்ந்து வாரியத்தினிடம் ஆய்வு மனு தாக்கீது செய்யப்பட்டது. 1961-ம் ஆண்டு உள்ளாட்சித் துறைச் சட்டம் விதி 3 (3) பிரிவுக்கு முரணானது என்று இருக்கிறது. கூடுதல் தொகையைத் திருப்பித் தரவேண்டுமென்று கூறப்பட்டது. அதை எதிர்த்து நகராட்சிப் பொறுப்பு அதிகாரி அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார். சிக்கல் நிறைந்த கும்பகோணம் நகராட்சிப் பிரச்சினையாக இருப்பதால் இது பற்றி அரசாங்கம் வழக்கறிஞர்களோடு தீவிரமாகப் பரிசீலித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. நா. காசிராமன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது சிக்கல் நிறைந்த கும்பகோணம் நகராட்சி நிர்வாகம் என்று சொன்னார்கள். பிரச்சினை சிக்கலானதா அல்லது நகராட்சி நிர்வாகம் சிக்கலானதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சிக்கல் நிறைந்த கும்பகோணம் நகராட்சிப் பிரச்சினை என்று சொன்னேன். கும்பகோணத்தில் அந்தப் பிரச்சினை இருக்கும் காரணத்தால் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கலாம்.

வடுகப்பட்டி ஊராட்சி ஒன்றியம், பள்ளிக் கட்டடம்

* **296 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், வடுகப்பட்டியில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியின் கட்டடம் கட்ட 1964-ல் அஸ்திவாரம் போடப்பட்டதா ?

(இ) இதுவரை கட்டடமே கட்டத் தொடங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வடுகப்பட்டியில் ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டிடம் கட்ட தீர்மானம் எதுவும் நிறைவேற்றவில்லை. இது விஷயமாக ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் எவ்வித மதிப்பீடும் தயார் செய்யப்படவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நான் வடுகப்பட்டிக்குச் சென்றிருந்த நேரத்தில் பள்ளிக்கூடம் கட்டுவதற்காகத் தோண்டப்பட்ட அஸ்திவாரத்தையே பொதுமக்கள் என்னிடம் காட்டினார்கள். அமைச்சர் அவர்களுக்கு ஒன்றியத்திலிருந்து வேறு தகவல் வந்திருப்பதாக அறிகிறேன். அமைச்சர் அவர்கள் இதுபற்றி மீண்டும் விசாரித்து அறிக்கை அனுப்பக் கோருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எந்த விதமான மதிப்பீடும் தயார் செய்யாமல், அனுமதியும் பெறாமலேயே பாலராஜபுரம் ஊராட்சித் தலைவர் 1963-64-ல் அஸ்திவாரத்திற்கு மண் பறித்திருக்கிறார். அதற்கான செலவு 23 ரூபாய். அவர் அதை அப்படியே விட்டு விட்டுப் போய்விட்டார். இப்போது கட்டடம் இல்லாமல் பொதுச்சாவடியில் நடைபெற்று வருகிறது. நடப்பு நிதியாண்டில் ஒன்றியத்தின் மூலம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வற்புறுத்தலாம்.

Peace Corps volunteers

*297 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether a number of (i) men and (ii) women peace corps volunteers are to take up assignments in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

பரசலூர், செம்பனார் கோயில் ஊராட்சி மன்றங்களின் இணைப்பு

*298 வினா—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிப்புக்கு உள்ளடங்கிய பரசலூர், செம்பனார்கோயில் ஊராட்சி மன்றங்களிலிருந்து, குறிப்பிட்ட இரண்டு ஊராட்சி மன்றங்களையும் இணைத்து பேரூராட்சி மன்றமாக அமைக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இக் குறிப்பின் மீதான நடவடிக்கையை அரசு ஒத்தி வைத்துள்ளது.

Promotion of First Grade Gramasevaks

* 299 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) when the panel of names of the First Grade Gramasevaks who are eligible for promotion as Panchayat Development Officers and Extension Officers (Education) in 1967-68 in South Arcot District was received from the District Collector;

(b) the number of persons, among them who were selected for promotion during 1967-68;

(c) the number of persons among the selected who were promoted in that year; and

(d) whether the promotion was based on seniority?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) வரவில்லை.

(இ) முதல் (எ) வரை : இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : இது குறித்து அந்த மாவட்டத்திலிருந்து அரசாங்கத்திற்குப் புகாரோ, கோரிக்கையோ வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட புகாரோ, கோரிக்கையோ வந்ததற்குத் தகவல் இல்லை. ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் நியமிக்கப்பட வேண்டியவர்களுடைய எண்ணிக்கையே இன்னும் பாக்கி இருக்கிறது. அது முடிவடைந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உள்ளாட்சி கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்கள் பட்டியலைத் தருவார்கள்.

Health-cum-Tourist Centre at Honnagurki

* 300 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government has received any recommendation from the Collector of Dharmapuri, in his capacity as the Chairman of the District Development Council to sanction a "Health-*cum*-Tourist Centre" at Honnagurki village in Hosur Taluk; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

1969 செப்டம்பர் 13]

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, considering the salubrous and beautiful climate of the Hosur taluk—the entire taluk is an air-conditioned taluk—I have suggested that Honnagurki is an ideal place which has got natural beauty and historical importance as also water facilities, railway station facilities and nearness to Bangalore, which is an international city. In the previous century, the Europian Generals who went to the distant war-fields came to this place for taking rest. Also European Collectors used to hold *jamabandhi* and also attend to administrative work there. Considering all these things, will the Hon. Minister be pleased to sanction a "Health-*cum*-Tourist Centre" there?

THE HON. THIRU M. MUTHUSWAMY: The Collector who was consulted in the matter has reported that there is no sufficient space in this village for this purpose. Further, he has also stated that this place does not have any tourist importance. Therefore the District Development Council, Dharmapuri, at its meeting held on 20–9–1968, did not resolve to recommend this proposal to the Government for sanction.

THIRU K. S. KOTHANDARAMIAH: The 'contention' of the Collector as read out by the Hon. Minister is in conflict with the existing conditions. So I request the Hon. Minister to refer the matter to the Collector of the district for further clarification?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 1968 செப்டம்பர் மாதத்திலிருந்து 1969 செப்டம்பருக்குள்ளாக நிலைமை இவ்வளவு பெரிய மாற்றம் அடைந்திருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

மின் கம்பங்கள் உற்பத்தி

*301 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னைக்குப் பக்கத்தில் செர்மானிய நிறுவனம் ஒன்றின் உதவியோடு மின் கம்பங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கவிருக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் வாழ்வதாகச் சொல்லிக் கொண்டு கர்னல் ராமன் என்ற பெயர் புனைந்த ஒருவர் சென்னைக்குப் பக்கத்தில் செர்மானிய நிறுவனம் ஒன்றின் உதவியோடு மின் கம்பங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு அனுமதித்துள்ளது என்று சொல்லிக் கொண்டு பங்குத் தொகை சேர்த்து வருவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதுபற்றித் தெரியாது.

திரு. தி. பொன்னுமலே : தற்போது மின் கம்பங்களுக்கு நிறைய கிராக்கி இருக்கிறது. ஆகவே தாலுகாவிற்கு ஓர் இடத்தில் தனியார் துறையில் மின் கம்பங்கள் தயாரிப்பதற்கு அனுமதி வழங்க முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தாலுகாவிற்கு ஓர் இடத்தில் என்று இல்லே. இரண்டு ஆண்டுகளுக்கு 16,50,000 மின் கம்பங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. இப்போது நம் மின்சார வாரியத்தின் மூலமாகவே பல கம்பங்கள் செய்து வருகிருர்கள். தனியார் காண்ட்ராக்ட் மூலம் செய்து வருகிருர்கள். அவற்றைத் தயாரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு தாலுகாவிற்கும் எவ்வளவு என்று பிரித்து கொடுக்கலாமோ அதைச் செய்யலாம்.

Workers in State Undertakings

* 302 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is proposed to bring the workers in State Undertakings under the purview of the Workmen's Compensation Act;

(*b*) whether the views of the Heads of Departments have been obtained in the matter; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) 1923-ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளபடி தொழிலாளர் எவரேனும் காயமுற்ருல் அவர் வேலே செய்து வந்த நிறுவனம், பொது நிறுவனமாயிருந்தாலும் சரி அல்லது தனியார் நிறுவனமாயிருந்தாலும் சரி மேற்படி சட்டத்தின் விதித்துறைகள் அவருக்குப் பொருந்தும்.

(இ) & (உ) இவ்வினக்கள் எழவில்லே.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலேவர் அவர்களே, இது விஷயமாக அரசாங்கத் தொழில் ஸ்தாபனமாகட்டும் அல்லது தனியார் தொழில் ஸ்தாபனமாகட்டும் எல்லோருக்கும் ஒருவிதமான சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது பற்றிப் பாராட்டுகிறேன். இது மாதிரி தொழிலாளர்களுக்குள்ள உரிமைகள் எல்லாம் இந்த இரண்டு ஸ்தாபனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் மேலும் அமலுக்குக் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : அப்படித்தான் அமல் செய்யப்படுகிறது.

1969 செப்டம்பர் 13]

வெள்ளிக்குறியிடாத வினுக்கள்

சேஷசாயி காகித அட்டை ஆலைக்கு மூங்கில் வழங்கல்

வினு 13—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

1960 முதல் சேஷசாயி பேப்பர் மில்லுக்கு மூங்கில் வாரை எத்தனே வருடங்களுக்கு, என்ன விலைக்குச் சர்க்கார் கொடுத்துள்ளது ?

விடை :

திரு. சேஷசாயி காகித அட்டை ஆலைக்கு 1962-ம் ஆண்டிலிருந்து வனத்துறை மூங்கில் வழங்கிவருகிறது. உரிமை வரி வீதம் டன் ஒன்றுக்கு ரூ. 6.90 என விதிக்கப்படுகிறது.

Bamboo is supplied to Thiru Seshasayee Paper and Boards, Limited by the Forest Department from 1962 onwards. The seigniorage rate is Rs. 6.90 per tonne.

கிராம அதிகாரிகள்

வினு 14—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா —

நமது ராஜ்யத்தில் எத்தனை அரிசனங்கள், பெண்கள் கிராம முன்சிப், கிராம கர்ணங்களாக இருக்கிறார்கள், மாவட்டவாரியாக ?

விடை :

விவர அறிக்கை * ஒன்று சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

பத்மப் பதக்கங்கள்

வினு 15—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா —

(அ) நமது ராஜ்யத்தில் 1969-வது ஆண்டில் பத்ம பூஷணம், பத்மஸ்ரீ முதலிய பட்டங்கள் யார் யாருக்குக் கொடுக்கப்பட்டன?

(இ) இதில் யார் யாருக்கு நமது சர்க்கார் சிபார்சு செய்தது ?

(உ) திரு. டி. முத்தையன் (டைரக்டர், டெக்னிகல் எஜுகேஷன்) அவர்களுக்கும் சிபார்சு செய்யப்பட்டுள்ளதா ?

* 374-375-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

விடை :

(அ) 1969-ல் கீழ்க்கண்டவர்களுக்குப் பத்மப் பதக்கங்கள் அளிக்கப்பட்டன—

பத்மபூஷன் —

(1) திரு. கே. ஸ்ரீனிவாசன்.
(2) திரு. செம்மங்குடி ஸ்ரீனிவாச அய்யர்.
(3) திரு. எஸ். எஸ். வாசன்.

பத்மஸ்ரீ —

(1) திருமதி பி. சரோஜாதேவி.
(2) திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷரீப்.
(3) திருமதி ராஜம் ராமசாமி.
(4) திரு. எஸ். நடராஜன்.
(5) டாக்டர் டி. வி. மகாலிங்கம்.
(6) திரு. டி. முத்தையன்.
(7) திரு. வி. சுப்பையா பிள்ளை.

(இ) & (உ) இப்பரிவுரைகள் ரகசியமானவையாதலால், இந்த அரசு பரிவுரை செய்த பெயர்களை வெளியிடுவது பொதுநலனுக்கு ஏற்றதல்ல.

(a) The following persons have been awarded Padma Medals in 1969—

Padma Bhushan—

(1) Thiru K. Srinivasan.
(2) Thiru Semmangudi Srinivasa Iyer.
(3) Thiru S. S. Vasan.

Padma Shri—

(1) Thirumathi B. Saroja Devi.
(2) Thiru K. S. G. Haja Shareef.
(3) Thirumathi Rajam Ramaswamy.
(4) Thiru S. Natarajan.
(5) Dr. T. V. Mahalingam.
(6) Thiru T. Muthian.
(7) Thiru V. Subbiah Pillai.

(b) & (c) Since the recommendations are confidential, it will not be in the public interest to reveal the names recommended by this Government

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1969 செப்டம்பர் 13]

திருப்பூர் மருத்துவமனை

வினா 16—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) D.M.S. அவர்கள் 1967-ம் வருடம் நவம்பர் மாதம் 13-ம் தேதி திருப்பூர் மருத்துவமனையைப் பார்வையிட்ட பின்னர் அரசுக்கு அம்மருத்துவமனை பற்றிப் பரிந்துரை ஏதேனும் அனுப்பி உள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

விடை :

(அ) ஆம்.

(இ) இவ்விஷயம் பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

வினா 17—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை வீட்டு வசதி போர்டார் வாடகைக்கு விடுவதற்கு என்று கட்டி முடிக்கப்பட்டுள்ள Middle Income group and LowIncome group flat களில் 1967-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி அன்று வாடகைக்கு விடாமல் இருக்கும் flat கள் எவ்வளவு ?

(இ) இவைகளை வாடகைக்கு விட என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

விடை :

(அ) 1967-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி நிலவரப்படி இரண்டு படுக்கையறைகள் கொண்ட 8 அங்கணங்களும், மூன்று படுக்கையறைகள் கொண்ட 7 அங்கணங்களும் நந்தனம் உயர்மாடி கட்டிடத்தில் (Tower Block) காலியாக இருந்தன.

(இ) நந்தனம் " டவர் பிளாக் " கட்டிடத்தில் வாடகைக்கான அங்கணங்கள் கிடைக்குமென்று அரசாங்க அலுவலர்கள் உட்பட எல்லாப் பெரிய நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டது என்றும் காலியாயுள்ள அங்கணங்கள் நிரப்புவதற்கென விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டு முக்கிய நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது என்றும் தமிழ்நாட்டு வீட்டுவசதி வாரியத் தலைவர் அறிவித்துள்ளார். பொருளாதார விகித வாடகை 25 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

(*a*) Eight two-bed roomed flats and 7 three-bed roomed flats in the Nandanam Tower Block were vacant as on 31st March 1967.

(*b*) The Chairman, State Housing Board has reported that all the leading firms including the Government officers were addressed informing the availability of the rental flats at Tower Block,

Nandanam, and that advertisements were also made in the leading local dailies inviting applicants to fill up the vacant flats. The economic rent has been reduced by 25 per cent.

வினா 18—திரு. சு. [redacted]துரைசாமி: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டு வசதி போர்டார் கடந்த மூன்று ஆண்டுகளில் West Madras Neighbourhood பகுதிகளில் Parts I, II and III எனப் பிரித்து பொது மக்கட்கு தவணையில் பணம் கட்டும் முறையில் குடியிருப்பு மனைகள் வழங்கியுள்ளதில் 1967-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி வரை வசூலாக வேண்டிய பாக்கித் தொகை, வசூல் ஆன தொகை முறையே எவ்வளவு ?

(இ) மீதித் தொகையை வசூலிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

விடை—

(அ) மேற்கு சென்னைப் புறநகர் திட்டப் பகுதி I, II ஆகியவற்றில் வீடு கட்ட மனை ஒதுக்கப்பெற்றவர்களிடமிருந்து 1967-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி வரை அரையாண்டுத் தவணைத் தொகைக்காக ரூ. 16.76 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. இந்தக் கால அளவில் நிலுவையிலுள்ள ரூ. 1.96 லட்சம் ரூபாயைத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் வசூலிக்க வேண்டும். 1976-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி வரை மனை எவருக்கும் வழங்கப்படாததால் III-வது தொகுதியைச் சேர்ந்தவர்களிடமிருந்து தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் தவணைத் தொகை ஏதும் வசூலிக்கவில்லை.

(இ) நிலுவைத் தொகையைச் செலுத்த வேண்டியவர்களிடமிருந்து வசூலிப்பதற்காக 1961-ம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் 84 (2) பிரிவின்கீழ் அறிவிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

(*a*) A sum of Rs. 16.76 lakhs has been collected up to 31st March 1967 towards half-yearly instalments from the allottees of plots in West Madras Neighbourhood Scheme Parts I and II, and the State Housing Board have to collect a sum of Rs. 1.96 lakhs as arrears of instalments for the above period. No instalment of amount has been collected by the State Housing Board from the allottees under Batch III as no plots were handed over up to 31st March 1967.

(*b*) Notices under section 84 (2) of the State Housing Board Act, 1961 have been issued on the defaulters for collecting the balance amount.

1969 செப்டம்பர் 13]

கீழ் பவானித் திட்டத்தின்கீழ் பாசன வசதி

19 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ் பவானித் திட்டத்தின் மூலம் திட்டத்தை எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில் எத்தனை போகத்திற்கு எத்தனை ஏக்கர்களுக்குத் தண்ணீர் விடுவது என்று திட்டமிடப்பட்டிருந்தது ?

விடை—

இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 207,000 ஏக்கர் பரப்பளவிற்குப் பாசன வசதி அளிப்பதெனத் திட்டமிடப்பட்டது. இதில் தாழ்வான இடங்களில் உள்ளவையும் நீர்க் கசிவால் பாதிக்கப்படுவையுமான 10,000 ஏக்கர் நிலத்தில் ஒரு போக நெல் பயிரை விளைவிக்கலாமென எதிர்பார்க்கப்பட்டது. எஞ்சிய பகுதியில் ஆகஸ்ட் 15-ம் நாள் முதல் மார்ச் 15-ம் நாள் வரையுள்ள பாசனப் பருவத்தில் பருத்தி, சிறு தானியங்கள், வேர்க்கடலைப் பயிர்களை விளைவிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

The project envisaged irrigation to a total extent of 207,000 acres, out of which 10,000 acres in low lying seepage affected lands were expected to raise one single paddy crop and in the remaining acres cotton, millets and groundnut crops during the irrigation season from 15th August to 15th March.

நகராட்சி மன்றங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம்

20 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நகராட்சி மன்றத்தில் இடம் ஒதுக்குவது சம்பந்தமாகத் திருப்பூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து 7—11—1968-ம் தேதிய விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(இ) அவ்விண்ணப்பம் ஆழ்ந்து பரிசீலனை செய்யப்பெற்றதெனினும் நிதி நிலைமையின் காரணமாக செயல்படுத்த இயலவில்லை என்று பதில் அளிக்கப்பட்டது.

[1969 செப்டம்பர் 13

அரசுப் போக்குவரத்திலுள்ள பேருந்துகள்

21 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்தில் 1968 பிப்ரவரி முடிய இருக்கும் பஸ்கள் எத்தனை ?

(இ) இதில் எத்தனை ஓடிக்கொண்டிருக்கின்றன ?

விடை—

(அ) 29—2—1968 அன்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமாக இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,688 ஆகும்.

(இ) 29—2—1968 நிலவரப்படி இயக்கப்பட்டுவந்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,490 ஆகும்.

(*a*) As on 29th February 1968, the total number of buses owned by Tamil Nadu Transport Department was 1,688;

(*b*) The number of buses operated was 1,490 as on 29th February 1968.

22 *Q*.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the rate of fare per kilometre that was charged for the Tamil Nadu Transport Department buses plying between Madras and Vellore and Madras to Krishnagiri on 1st October 1968;

(*b*) the total number of buses belonging to the private operators on these routes on 1st October 1968 and 1st November 1968; and

(*c*) the total number of buses belonging to the Tamil Nadu Transport Department run on these routes on 1st October 1968 and 1st November 1968.

A.—

(*a*) The rate of fare which was charged in the buses of the Tamli Nadu Transport Department plying between Madras and Vellore on 1st October 1968 was 2.5 paise per kilometre as they were ordinary buses. The buses of the Department on the route from Madras to Krishnagiri are express buses and hence, the rate of fare in those buses was five paise per mile on 1st October 1968.

(b) Two buses were operated on 1st October 1968 and 1st November 1968 by a private operator (Sri Balavinaygar Bus Service) between Madras and Vellore. No private operator was operating buses on the route from Madras to Krishnagiri on the above dates;

(*c*) Nine ordinary buses were operated by the Department on the route from Madras to Vellore on 1st October 1968 and 1st November 1968 and two express buses were operated by the Department on the route from Madras to Krishnagiri on those two dates.

1969 செப்டம்பர் 13]

(அ) 1—10—1968-ல் சென்னைக்கும் வேலூருக்கும் இடையே இயங்கிக்கொண்டிருந்த தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த பேருந்துகள் சாதாரணப் பேருந்துகளானவையால் அப்பேருந்துகளில் மீட்டருக்கு 2.5 காசு சட்டணம் வசூலிக்கப்பட்டது. சென்னை-கிருஷ்ணகிரி வழித்தடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இத்துறையைச் சேர்ந்த பேருந்துகள் கடுவிசைப் பேருந்துகளாதலால் 1—10—1968 அன்று ஒரு மைலுக்கு 5 காசு கட்டணம் வசூலிக்கப்பட்டது.

(இ) சென்னைக்கும் வேலூருக்கும் இடையே 1—10—1968 அன்றும் 1—11—1968 அன்றும் இரு பேருந்துகள் தனியார் நிறுவனத்தால் இயக்கப்பட்டன. (திரு. பாலவினாயகர் பஸ் சர்வீஸ்). மேற்சொன்ன தேதிகளில் சென்னை-கிருஷ்ணகிரி வழித் தடத்தில் எத்தனியார் நிறுவனமும் பேருந்துகளை இயக்கவில்லை.

(உ) 1—10—1968 அன்றும் 1—11—1968 அன்றும் சென்னை வேலூர் வழித்தடத்தில் ஒன்பது சாதாரணப் பேருந்துகளும், அதே நாட்களில் சென்னை-கிருஷ்ணகிரி வழித்தடத்தில் இரு கடுவிசைப் பேருந்துகளும் அரசுப் போக்குவரத்துத் துறையினரால் இயக்கப்பட்டன.

திருச்சி-கரூர் சாலையில் புலியூருக்கு அருகிலுள்ள பாலம்

23 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி-கரூர் நெடுஞ்சாலையில் புலியூருக்கு மேல்புரம் இருக்கும் பாலம் மிகவும் குறுகியதாக இருப்பதால் 1967 மார்ச் மாதம் வரை எத்தனை விபத்துக்கள் ஏற்பட்டன?

(இ) இதை அகலப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எப்போது எழுப்பப்பட்டது?

(உ) தற்போது எந்நிலைமையில் இருந்து வருகிறது?

விடை—

(அ) திருச்சி-கரூர் சாலையில் புலியூருக்கு மேல்புரம் இருக்கும் பாலத்தில் 1967 மார்ச் வரை ஓரே விபத்துதான் ஏற்பட்டது.

(இ) இந்தக் குறுகிய பாலத்தை அகலப்படுத்தும் திட்டம், 1968 ஏப்ரலில் நடைபெற்ற தென் திருச்சிராப்பள்ளி வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

(உ) இப் பாலத்தை அகலப்படுத்துவதற்காக ரூபாய் 15,000 செலவு மதிப்பீட்டிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் வேலை முழுவதும் நிறைவேற்றப்பட்டுள்ளது

A.—

(a) Only one accident occurred up to March 1967, on the bridge on the western side of Puliyur on Tiruchirappalli-Karur Road.

(b) The proposal for widening the narrow bridge was stressed during the Tiruchirappalli South Development Committee meeting held in April 1968.

(c) An estimate for Rs. 15,000 for widening the bridge has been sanctioned and the work has been completed in all respects.

அரிசனங்களது வேலை வாய்ப்புக்கான தனிப் பயிற்சி

24 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மை—அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வி கற்ற அரிசன இளைஞர்கள் வேலை பெறுவதற்கு உதவும் வகையில் அவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், 1966-67-லும், 1967-68-லும் முறையே திருச்சி மாவட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டது ?

(உ) 1966-67-லும் 1967-68-லும் திருச்சி மாவட்டத்தில் பயன் அடைந்தோர் எத்தனை பேர்கள் ?

விடை—

(அ) ஆம்.

(இ) 1966-67-ம் ஆண்டுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்காக அரசாங்கம் ரூ. 11,607-00 அனுமதித்தது. 1966 செப்டம்பருக்கு மேற்பட்டு இத்திட்டம் நீட்டிக்கப் படவில்லையாதலின், 1967-68-ல் செலவு எதுவும் செய்யப்படவில்லை.

(உ) 1966-67-ல், தமிழ்நாடு அரசாங்க அலுவலர் தேர்வுக் கழகம் நடத்திய நான்காவது தொகுதிப் பணியாளர் தேர்வுக்கு அரிசன வகுப்பையும் பழங்குடி வகுப்பையும் சேர்ந்த அறுபத்திரண்டு பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது. அவர்களில், ஒன்பது பேரை தமிழ்நாடு அரசாங்க அலுவலர் தேர்வுக் கழகம் தேர்ந்தெடுத்தது. மேலும், அரிசன வகுப்பையும் பழங்குடி வகுப்பையும் சேர்ந்த 324 பேருக்கு, நேர்முகத் தேர்வில் எவ்வாறு நடந்து கொள்ளுவதென்பது பற்றி பயிற்சியளிக்கப்பட்டது. இவர்களில் 11 பேர் வேலையில் அமர்த்தப்பட்டனர்.

1967-68-ல் இத்திட்டம் செயல்படாமையால், இந்த ஆண்டுக்கான விவரங்கள் இல்லை.

(a) Yes.

(b) A sum of Rs. 11,607.00 was sanctioned by the Government for Tiruchirappalli District for 1966-67. As the scheme was not extended beyond September 1966, no expenditure was incurred during 1967-68.

(c) During 1966-67, sixty-two Candidates belonging to Scheduled Castes and Scheduled Tribes were trained for Group IV Examination conducted by the Madras Public Service Commission out of which 9 were selected by the Madras Public Service Com-

[1969 செப்டம்பர் 13]

mission. Further, 324 candidates belonging to Scheduled Castes and Scheduled Tribes were given coaching in the interview technique and out of this number, 11 were placed in employment.

As the scheme was not in operation during 1967-68, particulars for this year are Nil.

தொட்டியம் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டட வசதி

25 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் உயர்நிலைப் பள்ளிக்கு போதுமான கட்டட வசதி இல்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், கட்டட வசதி ஏற்படுத்த எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(இ) 1963-64-ம் ஆண்டில் இணை மானியத் திட்டத்தின் கீழ் ஒரு கட்டடம் கட்டப்பட்டது. மேலும் இடவசதியைப் பெருக்க ரூ. 82,000 செலவில் முன்னேற்றப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

A.—

(a) Yes.

(b) A building was constructed under the Matching Grant Scheme during 1963-64. Further improvements for providing additional accommodation at a cost of Rs. 82,000 are being carried out.

சிவகாசி விளையாட்டு அரங்கம்

26 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசியில் ஸ்டேடியம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

A.—

(a) No, Sir.

(b) Does not arise.

Saraswathi Higher Elementary School Building, Madurai

27 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the State Government's appeal in the Madras High Court on the Saraswathi Higher Elementary School building collapse at Madurai case has been dismissed?

A.—

Yes.

ஆம்.

Mobile Laboratories for School Students.

28 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the details of the mobile laboratories being introduced in the State from 1968, for school students?

A.—A pilot scheme with two mobile science laboratories each containing one jeep and a trailor with science equipments with aid from CARE organisation has been started in the Mayuram Education District. These mobile laboratories will go round the various high schools in that area according to a schedule. Practical classes will be conducted during those visits.

"கேர்" நிறுவனத்தினரின் உதவியுடன் விஞ்ஞானக் கருவிகள் கொண்ட ஜீப் வண்டியும், இணைப்பு வண்டி ஒன்றும் கொண்ட சுற்றி இயங்கும் விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் இரண்டுடன் முன்னோடித் திட்டம் ஒன்றை மாயூரம் கல்வி மாவட்டத்தில் செயல் படுத்தக் கருதியுள்ளது. சுற்றி இயங்கும் இந்த விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் அப்பகுதியிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்குக் குறிப்பிட்ட திட்டப்படிச் சென்று செயல்முறை வகுப்புகள் நடத்தும்.

Medical Examination for Secondary School Students

29 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether medical examinations for Secondary School Students by Government Doctors has been introduced from 1968?

A.—

No.

இல்லை.

Fiat Taxi

30 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether four passengers are being taken in Fiat Model Taxis in the City of Madras from 1st April 1968?

A.—

Yes.

விடை—

ஆம்.

Traffic Accidents

31 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of fatal traffic accidents in the City during 1968?

A.—

162—

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள்

32 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

தமிழகத்தில் வறட்சிப் பகுதியாக எந்தெந்த மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டன ?

விடை—

1. செங்கற்பட்டு.
2. வட ஆற்காடு.
3. தென் ஆற்காடு.
4. சேலம்.
5. தர்மபுரி.
6. கோயம்புத்தூர்.
7. திருச்சிராப்பள்ளி.
8. தஞ்சாவூர்.
9. மதுரை.
10. இராமநாதபுரம்.
11. திருநெல்வேலி.

1. Chingleput.
2. North Arcot.
3. South Arcot.
4. Salem.
5. Dharmapuri.
6. Coimbatore.
7. Tiruchirappalli.
8. Thanjavur.
9. Madurai.
10. Ramanathapuram.
11. Tirunelveli.

கூட்டுறவு நூற்பாலை, மாயூரம்

33 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மாயூரம் மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிவோரின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) 1967-68-ம் ஆண்டில் மேற்கண்ட ஆலையில் எற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

விடை—

(அ) மாயூரம் மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பு ஆலையில் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதியில் பணிபுரிந்த தொழிலாளரின் எண்ணிக்கை 372.

நிர்வாக ஊழியர்களின் எண்ணிக்கை 28.

(இ) மேற்கண்ட ஆலையில் 1967-68-ம் ஆண்டில் தேய்வு ஒதுக்கீடு நிதிக்காக ரூ. 7,18,467.19 ஒதுக்கியபின் ஏற்பட்ட நட்டம் ரூ. 6,96,650.07.

(*a*) The number of workers in the Thanjavur District Co-operative Spinning Mills, Manalmedu, Mayuram, as on 31st March 1969, was 372, and the strength of the administrative staff was 28.

(*b*) After providing a sum of Rs. 7,18,467.19 for Depreciation Reserve Fund, the Mills sustained a net loss of Rs. 6,96,650.07 during the year 1967-68.

நகரப் பேருந்துகள்

34 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாயூரம் போன்ற நகரங்களில் டவுன் பஸ்கள் இரவு எத்தனை மணி வரை ஓட்டப்படுவதற்கு அனுமதிக்கப் பட்டிருக்கிறது?

விடை—

பேரவைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

A statement * is placed on the Table of the House.

பூம்புகாருக்கு அரசுப் பேருந்து

35 வினா.—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இலக்கியச் சிறப்புப் பெற்ற 'பூம்புகார்' நகரத்திற்கு அரசுப் போக்குவரத்துத் துறையினரால் தொலை தூர பஸ் விடும் செயற்குறிப்பு ஏதும் அரசுக்கு உள்ளதா?

விடை—

இல்லை.

Pasture Demonstration plots

36 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether there is any proposal to introduce pasture demonstration plots in each Panchayat?

* 375–379 ம் பக்கத்தில் நான்காம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

A.—

No Sir, but pasture demonstration plots in selected private holdings in key village areas would be laid.

விடை :

இல்லை, மையக் கிராமப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் பட்டா நிலங்களில் மேய்ச்சல் பண்ணைகள் கட்புல விளக்க வகையில் நிறுவப்படும்.

Calf Subsidy Scheme.

* 37 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce calf subsidy scheme in our State to cross breed and Halikar heifers;

(*b*) If so, when it will be implemented?

A.—

(*a*) No, Sir.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Licences for sale of pesticides

* 38 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) Whether there is a proposal to transfer the powers of issuing pesticides licences from the District Collector to the District Agricultural Officers; and

(*b*) If so, when it will be implemented.

A.—

(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Sprinkler Irrigation System

* 39 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce sprinkler irrigation system in any of our State Cattle Farms; and

(*b*) If so, when it will be implemented?

A.—

(*a*) A sprinkler unit is functioning at the Sheep Farm, Kattupakkam since 1961. A proposal to introduce sprinkler irrigation in the Livestock Research Station, Hosur Cattle Farm, is under the consideration of the Government.

(*b*) Does not arise.

விடை :

(அ) தெளிப்பு முறை பாசனப்பிரிவு **(Sprimbler Irrigation) Unit** ஒன்று 1961 முதல் காட்டுப்பாக்கம், செம்மறியாட்டுப் பண்ணையில் செயல்பட்டு வருகின்றது. ஹோசூர் கால்நடைப் பண்ணையிலுள்ள கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் தெளிப்பு முறைப் பாசனத்திற்குச் செயலுக்குக் கொண்டு வருவது பற்றிய செயற் குறிப்பு அரசின் ஆலோசனையிலுள்ளது.

(இ) இவ்வினா எழவில்லை.

அரசுப் போக்குவரத்திலுள்ள சிறப்புப் பேருந்துகள்

40 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நடந்த உலக வர்த்தகப் பொருட் காட்சியினைச் சுற்றிப் பார்ப்பதற்காக எத்தனை பேருந்துகள் கட்டப்பெற்றன ?

(இ) இவைகளுக்கான மொத்தச் செலவு என்ன ?

(உ) இவைகளால் அரசுக்குக் கிடைத்த லாப, நட்டம் முறையே எவ்வளவு ?

விடை—

(அ) மூன்று பேருந்துகள்.

(இ) ரூ. 57,498.52.

(உ) சிறப்புப் பேருந்துகளைக் கட்டி, சென்னையில் நடந்த உலகப் பொருட்காட்சியில் ஓட்டியதால் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறைக்குக் கிடைத்த ஆதாயம் ரூ. 74,151.44.

A.—

(a) Three buses ;

(b) Rs. 57,498.52.

(c) The gain to Tamil Nadu Transport Department on account of construction and operation of special buses in the **Fair is** Rs. 74,151.44.

மாயூரம்-காரைக்குடி விரைவுப் பேருந்து

41 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து காரைக்குடிக்கு விரைவுப் பேருந்து விட அரசு உத்தேசித்துள்ளதா ?

விடை—

இல்லை.

A.—No.

1969 செப்டம்பர் 13]

ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம்

42 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வணிக வரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

படி அரிசித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மக்கட்தொகை எவ்வளவு ?

விடை—

45.5 லட்சம் மக்கள்.

No-horn areas in Madras City.

* 43 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

The basis for declaring places as " No Horn " areas in Madras City?

The restriction of " No Horn " is enforced under rule 440 of the Madras Motor Vehic'es Rules, 1940, in built up areas where hospitals, schools and colleges are situated and in places where the horning of vehicles disturbs the peaceful atmosphere of a particular area.

மருத்துவ மனைகள், பள்ளிகள், கல்லூரிகள் அமைந்துள்ள கட்டிடப் பகுதிகளிலும், வண்டிகளில் ஒலியெழுப்பப்படுவதால் குறிப்பிட்ட ஒரு பகுதியின் அமைதியான சூழ்நிலை குலையும் என்றுள்ள இடங்களிலும் தமிழ்நாடு 1940-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளின் 440-வது விதியின்படி "ஒலியெழுப்பக் கூடாது" என்ற தடை செயலுக்குக்கொண்டு வரப்படுகிறது.

Shelters in bus stops in Madras City.

* 44 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) Whether the Transport Department are putting up shelters in bus stops in Madras City; and

(b) the basis on which they are put up?

A.—

(a) No.

(b) Does not arise.

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி () இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].*

2. அவையுரிமைக் கேள்வி

தொழிலாளர் துறை அமைச்சர் திரு. கா. வேழவேந்தன் அவர்கள் மீதும், 'தினமலர்' நாளிதழ் ஆசிரியர் மீதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ஜார்ஜ் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பிறகு.

THIRU V. GEORGE : On 7th instant, our Hon. Minister for Labour, Thiru Vezhavendan visited our Kanyakumari district and addressed several public meetings. While addressing a public meeting, he has made a statement that the Congress M.L.As. from Kanyakumari district are not participating in Assembly proceedings and the Deputy Leader of the Opposition is not at all speaking in the House, etc. This is reported in 'Dinamalar' of the 9th instant on page 5 and I have produced the same.

This is clearly a case of reflection on the conduct of Congress members of the House hailing from Kanyakumari district and it amounts to a wilful misrepresentation of the proceedings of this House. So it is a clear case of breach of privilege and hence I request that this matter may be taken as privilege motion in this House.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே . .

THIRU V. GEORGE : Under our Assembly Rules, a privilege matter must be one of recent occurrence. I submit that this happened on 7th instant and on the very first day of the meeting I have given notice of the privilege motion. So it comes within our Assembly Rules.

The seconnd point is that a *prima facie* case of breach of privilege should be made out. As to when a *prima facie* case of breach of privilege can be deemed to have been made out—on that point our Assembly Rule is not clear. As per Clause 3 of Article 194 of the Constitution, we have to refer to May's Parliamentary Practice. In May's Parliamentary Practice (16th edition) on page 117 it is written as follows :—

Speeches or writings reflecting on either House.

" In 1701 the House of Commons resolved that to print or publish any books or libels reflecting on the proceedings of the House is a high violation of the rights and privileges of the House and indignities offered to their House by words spoken or writings published reflecting on its character or proceedings have been constantly punished by both the Lords and the Commons upon the principle that such acts tend to obstruct the Houses in the performance of their functions by diminishing the respect due to them

Reflections upon Members, the particular individuals not being named or otherwise indicated, are equivalent to reflections on the House.''

Similarly, in a book "The Law of Parliamentary Privileges in India" by Thiru V. G. Ramachandran, on Chapter 3, Page 93 it is said as follows :

திரு. இராம. அரங்கண்ணல் : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், தலைவர் அவர்களே, சாதாரணமாக பத்திரிகைகளில் வந்த செய்திகளை வைத்து அதன் மீது எந்தவிதமான பிரச்சினையையும் சபைக்குக் கொண்டுவரக் கூடாது என்ற ஒரு விதி இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து (குறுக்கீடு.)—கடிதத்தில் வந்தது ஆசிரியரே எழுதிய கட்டுரை—பத்திரிகையில் வந்த செய்தியின் அடிப்படையில் எந்தவிதமான பிரச்சினையும் எழுப்பப் படக்கூடாது என்று ஒரு விதி இருக்கிறது. அதைப் பற்றி தங்கள் தீர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல முறை இந்த மன்றத்தில் உரிமைப் பிரச்னையை எழுப்புகிற நேரத்திலெல்லாம் சொல்லப் பட்டிருக்கிறது. பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துத்தான் கொடுத்திருக்கிறோம். பிறகு அந்தச் செய்தி தவறு என்று மறுக்கப்பட்ட நேரத்தில் அதை ஏற்றுக்கொண்டு பத்திரிகையில் வந்த செய்தியின் மேல் கொண்டுவரும் உரிமைப் பிரச்சினையைத் தள்ளுவது வழக்கம். அதை எழுப்புவது முறையற்றது என்று சொல்வது முறையாக இருக்காது.

THIRU V. GEORGE : In Article 20, 'Reflections on Members,' it is stated as follows :—

"The Commons resolved on 26th February 1910 that to print or publish any libels reflecting upon any member of the House for or relating to his service therein was highly violative of the rights and privileges of the House. The libel must concern the character and conduct of the member as such.

Speeches or writings reflecting on the character and conduct of a member (alleging corruption in the discharge of his duty) were held actionable in conttmpt."

Again in Article 22, regarding 'wilful misrepresentation of proceedings', it is stated that such a thing is a breach of privilege destructive of the freedom of Parlaiment.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. வேழவேந்தன் அவர்கள் பேசியதாக வந்த செய்தியினைக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்சினையை இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் அதற்காக ஆதாரங்கள் எண்ணிறந்தவைகளைக் காட்டு

வதற்கும் தயாராக இருக்கிறார்கள். ஆனால், இந்த மன்றத்தினுடைய நேரத்தையும், இன்றையதினம் விவாதிக்கப்பட வேண்டிய பல விஷயங்களையும் நாம் மனத்திலே, கருத்திற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். திரு. வேழவேந்தன் அவர்கள், 'அப்படிப் பேசவில்லை, பத்திரிகைகளில் தவறாக வந்திருக்கிறது' என்று அறிவித்திருக்கிறார்கள். அதை இப்பொழுது அறிவிக்கவும் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் அந்தப் பதிலைச் சொல்லயிருக்கிறார்கள் என்று நான் முன்கூட்டியே குறிப்பிடக் காரணம், இந்த மன்றத்தின் நேரத்தை இன்று வீணாக ஆக்கிவிடக்கூடாது என்பதற்காகத்தான். ஆகவே, இதுபற்றி அமைச்சர் திரு. வேழவேந்தன் அவர்களின் விளக்கத்தைக் கேட்டு, அவர்கள், 'ஆமாம், அப்படித்தான் பேசினேன்' என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லா ஆதாரங்களையும் தரலாம். அதற்குப்பிறகு, அதிலே உரிமைப் பிரச்னை இருக்கிறதா, இல்லையா என்று சபாநாயகரவர்கள் தீர்ப்பு அளிக்கலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதலமைச்சரவர்கள் இப்பொழுது பேசியிருக்கிறார்கள். பலஇடங்களில் பேசி, பத்திரிகைகளில் செய்தி வருகின்ற நேரத்தில், 'இப்படி நான் பேசவில்லை', 'இப்படி நான் பேசவில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தால், பத்திரிகை தர்மம் என்ன ? அவர்கள் தவறு செய்கிறார்களா ? அல்லது அரசியல்வாதிகளாகிய நாம் தவறு செய்கிறோமா ? முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அவமானமெல்லாம் பட்ட பிறகு, அப்படிப் பத்திரிகைகளில் வந்ததுதான் மக்கள் மனத்தில் இருக்கும். ஆகவே, கொட்டை எழுத்துக்களில், அப்படி நான் பேசவில்லை, பேசியிருந்தால் அது தவறு என்று சொல்வார்களா ? அப்படிச் சொன்னால்தான் சரியாகயிருக்கும். எத்தனையோ சந்தர்ப்பங்களில் மிக முக்கியமான விஷயங்களைப் பேசிவிடுவது, அது பத்திரிகைகளில் வருவதற்காக பேசுகிறார்கள் என்று. அவர்கள் எதற்காகப் பேசுகிறார்களோ? காலைப் பத்திரிகையில் வரவேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கிறார்களோ? நான் சொல்வது, இது இப்படியே போய்க்கொண்டிருப்பதற்கு விடக்கூடாது என்பதுதான். எனவே, இது சம்பந்தமாக விதிமுறைகளை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகளிலே செய்தி வந்து, அந்தச் செய்தியையொட்டி உரிமைப்பிரச்சினை கொண்டு வருகிறோம். அப்படிக் கொண்டுவந்தபிறகு, அப்படிப் பேசவில்லை, பத்திரிகையிலே வந்த செய்தி தவறு என்று சொன்னால், இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் அவர் சொல்வதை ஏற்றுக்கொண்டு, உரிமைப் பிரச்னை இல்லை என்று தீர்ப்பளிப்பது வழக்கம். பேசிவிட்டு இல்லை என்று சொல்லுகிறார்கள் என்றால் அது வேறு. வெளியே நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியதற்கு விதிமுறைகள் இருக்கின்றன, நடைமுறைகள் இருக்கின்றன.

1969 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

மன்றத்திலே இருக்கும் நேரத்திலே இதைத்தான் சொல்ல முடியும். எனவே, சுருக்கமாகச் சொல்லுங்கள். 'கொடேஷன்ஸ்' அதிகம் தேவை இல்லை.

THIRU V. GEORGE : Privilege is an important matter which has top priority in the proceedings of the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது முதலமைச்சரவர்கள், அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாமென்று சொல்லவில்லை, சுருக்கமாகச் சொல்லுங்கள் என்றுதான் சொன்னார்கள். வேறொன்றுமில்லை.

THIRU V. GEORGE : Even in the book written by M. N. Kaul, this has been stated on pages 204 and 217.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன சொல்லப் பட்டிருக்கிறது ? அது "உரிமை மீறிய நிகழ்ச்சி" என்ற தலைப்பிற்குள் வருகிறதா? இப்படி வருவது உரிமைப் பிரச்னைக்கு வரும் என்பதற்கான 'கொட்டேஷன்ஸ்' கொடுங்கள் என்று சொல்லுகிறேன்.

THIRU V. GEORGE : Coming to the fact of the matter, on 7th the Hon. Minister visited our district and at about noon he hoisted a flag at Karunkal, my native village. My house is just a furlong away from the place. After hoisting the flag, he addressed the meeting. He was telling that the Congress M.L.As. from the Kanyakumari District were not coming to the Assembly at all. they never spoke at all and they never represented the peoples grievances. The Government was always eager to attend to the people's needs. But those members never cared for the people at all, they never spoke anything in the Assembly. I was just hearing with my own ears and I can give any number of witnesses.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் வந்து உங்களுடைய குறைகளை மன்றத்திலே கூறவில்லை என்று அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள் என்றால் அது பொதுவான குற்றச்சாட்டு. இந்தத் தேதியில், இந்த வாதத்திலே கலந்து கொள்ளவில்லை என்று, கலந்து கொண்டிருந்தபோதும் அப்படிக் கலந்து கொள்ளவில்லை என்று சொன்னால் அது இந்த நிகழ்ச்சியைத் திரித்துக் கூறுவதாக இருக்கும். இந்த நேரத்திலே வந்திருந்து, அவர்கள் வரவில்லை என்று சொன்னாலும் விவாதத்திலே கலந்து கொண்டிருந்து கலக்கவில்லை என்று சொன்னாலும் அது திரித்துக் கூறுவதாக இருக்கும். அவர்கள் வரவில்லை என்று பொதுவான நிலையில் சொல்வது இந்த மன்றத்தின் நிகழ்ச்சியைத் திரித்துக் கூறியதாக இருக்குமா ? எனவே, உறுப்பினர் அவர்கள் இதைப்பற்றி விளக்குவது நல்லது.

Thiru V. GEORGE : I request the Hon. Speaker not to interrupt me in the middle of my argument. Please hear me patiently and then give your ruling. I will state the facts and say how the speech comes within the four corners of the laws of privileges.

I myself heard the speech at Karunkal. In the evening he addressed a public meeting at Nagercoil and the report has appeared in the 'Dinamalar' under the main heading

"குமரி மாவட்ட காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள் மீது மந்திரி வேழவேந்தன் புகார்"

and the sub-heading

"சட்டசபையில் பேசுவதில்லை என்கிறார்".

"சட்டசபையில்

குமரி மாவட்டத்திற்கு தி.மு.க. ஆட்சி எதுவுமே செய்யவில்லை என்று இங்கு காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள் பேசிவருவதாக அறிந்தேன். இங்கிருந்து 6 காங்கிரஸ் உறுப்பினர்களையும் ஒரு தி.மு.க. உறுப்பினரையும் அனுப்பியிருக்கிறீர்கள். தி.மு.க. உறுப்பினர் பாலன் மட்டும் மாவட்டத்திற்கு வேண்டிய நன்மைகளைச் செய்துவருகிறார். மற்ற காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களை நானும் சட்டசபையில் பார்க்கும்போதெல்லாம் அந்த இடங்கள் காலியாகவே இருக்கின்றன.

எதிர்க்கட்சியின் உபதலைவராக பணியாற்றுகிற உங்கள் மாவட்ட பிரதிநிதி சட்டசபையில் பேசுவதே இல்லை, மக்களின் பிரதிநிதியாக சட்டசபையில் பேசுவதை விட்டுவிட்டு இங்கு பேசுவதில் என்ன இருக்கிறது ?"

He has spoken like this. He has said that the members are not sitting, that they are not speaking. This is clearly a breach of privilege, because it reflects on the conduct of the members of the House. Reflection on the conduct of members is a reflection on the House itself, and that comes under privilege. This is against facts and that was why I said that it was a wilful misrepresentation of the proceedings of the House. It is well known that all the members are usually present, take part in the proceedings of the House, always represent the grievances of the public to the extent allowed by the Speaker. I had been raising my hand to catch the eye of the Speaker for putting supplementary questions. But I have stopped raising my hands because the result is that it pains my hand. If one refers to the proceedings, it wil be clearly seen that in almost all the issues beofre the House, the members from the Kanyakumari District had participated. On 28th March 1968 I myself brought forward an adjournment motion regarding an incident on the 18th and 19th March 1968 between the villagers, students and teachers of Padirvedu Meldarpakkam in Chingleput District. While the fact is that the members from the Kanyakumari District have taken keen interest even in the problems arising in the Labour

Minister's own constituency, the Hon. Minister has wilfully misrepresented the proceedings of the House. My submission is that he may cleverly try to escape by saying 'I have not said like that'.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தப்பித்துக் கொள்ள என்று சொல்லுகிறீர்கள். அதை எப்படி நீங்கள் சொல்லுகிறீர்கள்? தப்பித்துக் கொள்ளுகிருர்கள் என்று சொன்னல் என்ன அர்த்தம்?

THIRU V. GEORGE : I am mentioning arguments.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது சொல்ல முடியாது. தப்பித்துக் கொள்ளப் பார்க்கலாம் என்று சொல்வது வாதத்திலே, ஆர்க்யூமெண்டிலே வராது. குற்றச்சாட்டு.

An Hon. Member : Hypothetical.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை ஏற்றுக்கொள்ள முடியாது. தப்பித்துக்கொள்ளப் பார்க்கலாம் என்று சொன்னல் எப்படி? Hypothetical ஆக வரவே வராது.

THIRU K. VINAYAKAM : The Chief Minister has given the clue. So he presumes that that may happen.

THIRU V. GEORGE : Sir, I am just trying to give a reply. Already the Hon. Chief Minister has stated that the Hon. Thiru Vezhavendan has not stated so and that the latter is going to make a statement. But I may submit that it is not factually so because I myself heard it in Karunkal. So, it is a matter of privilege to be referred to the Committee of Privileges and if it is referred to that Committee, I am prepared to let in any number of witnesses to appear before that Committee. மு.ப. 10–30

Then as for the publication, if the Editor has published a matter which has not been stated by the Hon. Minister, then the Editor is punishable for libel and it is a breach of privilege of the House. So, I request the Hon. Speaker to refer the matter to the Privileges Committee which can take action against the Hon. Minister and the Editor of the Paper.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் சென்ற வாரம் 7—9—1969 அன்று, குமரி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தபோது, பேசியதாக இந்த உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டிருக்கிறது.

குமரி மாவட்ட காங்கிரஸ் உறுப்பினர்களே சட்டசபையில் இல்லை என்று நான் சொல்லவில்லை. மேற்கண்ட 'தினமலர்' 9—9—1969-ஆம் தேதிய இதழ் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன், நேற்றே பத்திரிகைகளுக்கு என் மறுப்பைக் கொடுத்திருக்கிறேன். வறட்சித் தணிப்புக்கு குமரி மாவட்டத்திற்கு ஒன்றும் ஒதுக்கவில்லையென்றும், கட்சிக் கண்ணோட்டத்துடன்

ஆட்சியினர் நடந்து கொள்வதாகவும் சட்டமன்ற உறுப்பினர் சிலர் பேசியதாக என்னிடம் கூறப்பட்டது. ஏறத்தாழ 27 இலட்சம் ரூபாய்க்குமேல், ஒரு வட்டத்தின் பரப்பளவுள்ள குமரி மாவட்டத்திற்கு வறட்சி நிவாரணத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், இதை சட்டமன்றத்திலே கேட்டால், பதில் சொல்லி யிருப்போம் என்றும் கூறி இருந்தேன். காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களும் எதிர்க் கட்சித் துணைத் தலைவரும் இன்னும் இந்தப் பேரவை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு எதிர்க்கட்சிக் கேற்ற பணியை இன்னும் சீரிய வகையில் ஆற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் தான் இதைக் குறிப்பிட்டேன். ஆனால், 'தினமலர்' ஏட்டில் வந்துள்ளதுபோல, குமரி மாவட்ட எம்.எல்.ஏ.-க்களின் இடமே சட்டமன்றத்தில் காலியாக உள்ளது என்று குறிப்பிடவில்லை. அப்படிக் கூற வேண்டிய அவசியமும் இல்லை. எனவே அந்தச் செய்திக்கு நான் பொறுப்பல்ல. எனவே மேற்கண்ட உரிமைப் பிரச்னைக்கு இடமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU V. GEORGE : Now the Hon. Minister is trying to evade the whole thing. Sir, on 20th July 1965 when a privilege motion was brought against the then Minister for Industries by the present Government Whip, Thiru Alagamuthu, the then Minister explained that it was with a good intention to improve the discussion in the House that he made that observation and it was not intended to cast any aspersion on the House. Now, the Hon. Minister is going to use that precedent......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த நேரத்திலே நான் சட்ட மன்றத்திலே இருந்ததாலே, அமைச்சர் தான் அப்படிப் பேச வில்லை என்ற சொல்லாததாக நினைப்பு. இந்த நோக்கத்தோடு தான் பேசவில்லை என்று தான் சொன்னாரே தவிர, தான் பேசவேயில்லை என்று சொல்லவில்லை. இப்பொழுது இவர் தான் பேசவில்லையென்று சொல்கிறார்.

THIRU V. GEORGE : Sir, if he has not spoken like that, still the Editor of that Paper is responsible for the breach of privilege of the House.

Then, again I must say that I heard that speech in Karunkal. But the Hon. Minister has stated that he has not stated so. So, it is a fit case to be referred to the Privileges Committee.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தேன் என்று ஒரு சாட்சி சொல்ல வருகிறார். அந்த சாட்சியை விசாரணையில் எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்வார்கள், அதற்கு எதிர் தரப்பு வாதம் எப்படி வரும் என்று முடிவு செய்ய வேண்டியது வேறு இடம். (குறுக்கீடு) பிரிவிலெஜ் கமிட்டியிலே அந்த எவிடென்ஸ் வராது. இது பிரிவிலெஜ் கமிட்டிக்குப் போகிற நேரத்திலே பேசினார்களா

1969 செப்டம்பர் 13] *[பேரவைத் தலைவர்]*

இல்லையா என்பதைப் பற்றிய வாதம் அங்கே வந்து, சாட்சிகளைக் கூப்பிட்டுக் கேட்பது அங்கே வராது. இங்கே உரிமைப் பிரச்னை இல்லை என்று சொல்லிவிட்டால் பத்திரிகைகள் வழக்கு மன்றத்திற்குப் போகட்டும். இப்படிக் கூறினார், இப்பொழுது கூறவில்லையென்று சொல்கிறார் என்று சொல்லட்டும். இங்கு கூறவில்லை என்று சொல்வதை வைத்து நாம் ஒரு முடிவு எடுக்கிறோம். ஆகவே, உறுப்பினர் அதை எழுப்ப வேண்டியது வேறு இடத்தில்.

THIRU K. VINAYAKAM : Sir, there are two hon. Members alleging two different views on the floor of the House. Here the Hon. Speaker should not consider this Member as Minister and that Member as an ordinary Member. The two Members have got equal rights to express their views. This gentleman says that he has heard it and that gentleman says that he has not stated it. We can decide on the floor of the House how it is a fit matter to be referred to the Privileges Committee. Let the Privileges Committee go into the matter. Who are we to say that this gentleman is wrong or that gentleman is wrong; that is not our concern. That is my point.

திரு. பி. ஜி. கருத்திருமன்: *சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இதுமாதிரி பேசவில்லையென்று சொல்கிறார்கள். பேசவில்லை என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்வதுதான் மரபு. ஆனால் இன்னொரு விஷயம், அந்தத் தொகுதியிலே, அதே அங்கத்தினரே இருந்து, அங்கேயே பேசிக்கொண்டிருக்கும் படியான சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டிருந்தேன் என்று கூறுவதால் இது ஒரு புதுப் பிரச்னை. என் தொகுதியில் வந்து, என் வீட்டுக்குப் பக்கத்திலேயே பேசி, நானும் இருந்து அதைக் கேட்டேன் என்று அவர் கூறுகிறார். அதை இல்லையென்று சொன்னால் அங்கத்தினர் சொல்வது தவறு என்று அர்த்தமா? நீங்கள் கோர்ட்டுக்குப் போங்கள் என்று சொன்னால் இதற்கு ஒரு தீர்ப்பு வேண்டும். அமைச்சர் அவர்கள் மறுப்பதைப்பற்றி ஆட்சேபணை சொல்லவில்லை.*

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்பத்தில் பத்திரிகையில் வந்த தகவலை வைத்துத்தான் உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிறார். தான் கேட்ட தகவலை வைத்து கொண்டுவரவில்லை. 'தினமலர்' பத்திரிகையில் அமைச்சர் அவர்கள் பேசியதாக வந்திருக்கிறது. இது உரிமை மீறிய செயல் அல்லவா என்பதுதான் அவரது உரிமைப் பிரச்னை. அவர், தான் கேட்டதைப் பற்றிய உரிமைப் பிரச்னை எழுப்ப வில்லை. நான் கேட்டேன், அவர் பேசினார் என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை.*

திரு. பி. ஜி. கருத்திருமன்: *தயவுசெய்து அமைச்சர் அவர்கள் அங்கத்தினர் பேசின குறிப்பை எடுத்துப் பார்க்கட்டும். நான் இருந்தேன், நான் கேட்டேன்*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவிலெஜ் நோட்டீஸில் அப்படி இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பேசியதெல்லாம் வராதா? (குறுக்கீடு) எழுதிக் கொடுத்தால்தான் வருமா? (குறுக்கீடு) அப்படியானால், (உறுப்பினர் திரு. ஜார்ஜைப் பார்த்து) அடுத்த தடவை எழுதித் தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது நம்முடைய பேரவையினுடைய மரபு அந்த வகையிலே தான் இருக்கிறது. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு மரபைப் பின்பற்றப் போகிறோம் என்று சொன்னார்கள். பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. இது உரிமை மீறிய பிரச்னை என்று உறுப்பினர் சொல்கிறார். அமைச்சரவர்கள், நான் சொல்லவில்லையென்று சொல்லி விட்டார். அது அமைச்சருக்கு மட்டுமல்ல, உறுப்பினர்கள் சொன்னாலும் கூட ஏற்றுக் கொண்டு, அந்த உரிமைப் பிரச்னையைக் கைநழுவ விடுகிற முறையைத்தான் நாம் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு விவாதத்தைக் கிளப்பிக்கொண்டு பேசிக் கொண்டிருக்கக் கூடாது. அமைச்சர் சொல்லிவிட்டார், ஆகவே அமைச்சருக்குத் தனிச் சலுகையா என்று கேட்கக் கூடாது. அமைச்சருக்கு மட்டுமல்ல, உறுப்பினர்கள் கூறவில்லையென்று கூறினாலும், கூறவில்லையென்ற வாதத்தை ஏற்றுக்கொண்டு அந்த உரிமைப் பிரச்னையை அந்த அளவுக்கு முடிவுசெய்வதுதான் மரபாக இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜார்ஜ் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சர் மீது ஒரு உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிறார்கள். தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அப்படிக் கூறவில்லையென்று சொன்னார்கள். கூறியதை வைத்துத்தான் உரிமைப் பிரச்னை வரும். அப்படிக் கூறவில்லை; பத்திரிகைக்குச் செய்தி அனுப்பிவிட்டேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே இதில் உரிமைப் பிரச்னை இல்லை. ஆனால் பத்திரிகை, அமைச்சர் சொல்லாததை சொல்லியதாகப் போட்டிருக்கிறதே என்றால்—அப்படி சொல்லியிருந்தால், அதை ஒருவர் சொல்வதும், அதைப் பத்திரிகையில் வெளியிடுவதும் கூட உரிமை மீறிய செயலாகும்—அதைப் பற்றி என்ன செய்யலாம் என்று யோசித்துப் பிறகு முடிவு கூறுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இப்பொழுது ஒரு பிரச்னை எழுகிறது. அமைச்சர் அவர்கள், இல்லையென்று கூறிவிட்டார்கள், அங்கத்தினர் உண்டென்று சொல்கிறார்கள். அமைச்சர் சொல்லவில்லை என்று இவ்வாறு விடுவதானால் அங்கத்தினர் மீது உரிமைப் பிரச்னை எழுகிறது. அமைச்சர் கூறுவது உண்மையாகவும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். அங்கத்தினர், அமைச்சர் உறுதியாகக் கூறினார்

1969 செப்டம்பர் 13] [திரு. ஜே. ஜெம்ஸ்]

என்று கூறும்போது அதை உரிமைக் குழுவுக்கு விடாமல் இருப்பது தவறு. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அங்கத்தினர் உண்டென்று சொல்லும்போது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்த தீர்ப்பு தவறு என்று கூறுகிறீர்களா ? (குறுக்கீடு) இப்பொழுது தீர்ப்பு கொடுத்தாகி விட்டது. கனம் அங்கத்தினர் பத்திரிகையில் வந்த செய்தியைக் கொண்டு உரிமைப் பிரச்னை எழுப்பினர். அமைச்சர் அவர்கள் பேசவில்லையென்று சொன்னார்கள். இவர்கள் சொல்லி, அமைச்சர் அப்படிப் பேசவில்லையென்று மறுப்புத் தெரிவித்தவுடனே, அமைச்சர் என்ற உரிமைக்காக கொடுக்கப்படுகின்ற சலுகை கூட அல்ல, அதை ஏற்றுக்கொள்வது. வேறு எந்த உறுப்பினர்மீது கொண்டு வந்தாலும், அந்த உறுப்பினர், நான் அப்படிச் சொல்ல வில்லை என்று சொல்லியவுடனே உரிமைப் பிரச்சினையைக் கைநழுவவிடுவதுதான் இந்த மன்றத்திலே இருக்கிற மரபு. அந்த மரபை ஒட்டி, இதிலே எந்தவிதமான உரிமைப் பிரச்னையும் இல்லை யென்று தீர்ப்புக் கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பத்திரிகைச் செய்திகள் இரண்டு பத்திரிகைகளில் இரண்டுவிதமாக வந்திருக்கின்றன. திரு. பொன்னப்ப நாடார் அவர்களே இது பற்றி ஒரு மறுப்பு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அது "நவசக்தி" பத்திரிகையில் வந்திருக்கிறது. அதில் "தினமலரி"-ல் உள்ள வாசகங்கள் எதுவும் இல்லை. அவர்களே அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். "கோட்டையிலே பேசவேண்டியதை கோர்ட்டில் பேசியிருக்கிறார்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார் என்று மாத்திரம் கூறி, அதற்கு அந்தப் பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து கண்டனம் தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு திரு. வேழவேந்தன் அவர்கள் குறிப்பிட்டது, வறட்சிப் பணிகளுக்காகச் செலவழிக்கப்படுகிற தொகை ஒழுங்காகச் செலவழிக்கப்படவில்லை என்று கூறிய குற்றச்சாட்டை மறுக்கின்ற வகையில், 'இவைகளையெல்லாம் கோட்டையில் கூறவேண்டும், அங்கே கூறாமல் இங்கே கூறி என்ன பயன் ? அங்கே கூறியிருந்தால் உடனுக்குடன் விளக்கங்கள் அளிக்க முடியும்' என்று பொதுவாகக் கூறியிருக்கிறார்கள். தினமலரில் 'இடமே காலி, கன்யாகுமரி மாவட்டத்து எம்.எல்.ஏ.-க்கள் இடத்திலேயே இல்லை' என்ற அளவில் கூறியதாகச் செய்தி வந்திருக்கிறது. துணைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அறிக்கையிலே அந்த வாசகங்கள் எதுவும் இல்லை. குற்றச்சாட்டிற்கு ஆளான அவரே அந்தப் பத்திரிகையில் அதைப்பற்றிப் வாசகம் எதுவும் குறிப்பிடவில்லை. இரண்டு பத்திரிகைகளிலும் இரண்டு வெவ்வேறு செய்திகள் வந்திருக்கின்றன. யாரைப்பற்றி வேண்டுமானாலும் யாரும் உரிமைப் பிரச்சினை கொடுத்துவிடலாம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேரில் ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாம்

என்று, கழக ஏட்டில், இப்படிப் பேசினார், திருச்சியிலோ சென்னையிலோ ஒரு கூடத்தில் இப்படிப் பேசினார் என்று; அவர் பேசிய தேதியை மட்டும் குறிப்பாகக் கொடுத்துவிடலாம். பிறகு அவர்மீது சட்டத்தை மீறிப் பேசினார் என்று உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவரலாம். ஆகவே, செய்திப் பத்திரிகைகள் அம்மாதிரியெல்லாம் தவறாகச் செய்திகளை வெளியிடாமல் இருப்பதற்கு அந்தப் பத்திரிகைகள் மீது சபாநாயகர் அவர்களே, தாங்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது எச்சரிக்கை கொடுத்திருக்கிறார்கள். "எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார் என்று கொடுத்துவிட்டால்" என்று சொல்கிறார்கள். அதற்கும் எதிர்க்கட்சித் தலைவர் தயாராக இருப்பார்கள். அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

அடுத்தபடியாக, முதல் அமைச்சர் அவர்கள் எங்களுடைய உப தலைவர் அவர்களை அவமானப்படுத்தியிருக்கிறார், குற்றம் சாட்டியிருக்கிறார் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். கோர்ட்டில் பேசுகிறார், சட்டசபைக்கு வரவில்லை என்றால் என்ன அர்த்தம்? (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : "நவசக்தி"-யில் வந்திருக்கிறது). கோர்ட்டில் பேசுகிறார், கோட்டையில் பேசவில்லை என்றால் என்ன அர்த்தம்? (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 'நவசக்தி'-யைக் கேளுங்கள்). சாதாரணமாகப் பேசுவது வழக்கம், எம்.எல்.ஏ.-க்கள் வருவதில்லை, அவர்கள் வருகிறார்கள், இவர்கள் வருவதில்லை, என்று பேசுவது வழக்கம். ஆனால், இது முறையல்ல. இதற்கெல்லாம் முறை ஒன்று வேண்டும், அமைச்சர்களாக இருந்தாலும் சரி, அங்கத்தினர்களாக இருந்தாலும் சரி. இல்லாவிட்டால், எந்தவிதமான நிலையும் இருக்க முடியாது. இப்பொழுது இருக்கும்படியான பிரச்சினை என்னவென்றால், சட்டமன்றத்தில் அமைச்சராக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரியே, ஒரு அங்கத்தினர் "நான் நேரிடையாக கேட்டேன், அவர் அப்படிப் பேசினார்" என்று சொல்கிறபொழுது என்ன முறையைக் கையாள வேண்டும் என்பதற்கான தீர்ப்பைத் தாங்கள் கொடுக்கவேண்டும். சபாநாயகர் அவர்களே, எங்களைப் பாதுகாக்கவேண்டும். நாங்கள் அனாதைகள். உங்களுடைய பாதுகாப்பு எங்களுக்குத் தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு அமைச்சர் அவர்கள் பேசுகின்ற கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் மட்டிலும் இருந்திருப்பார் என்றும், அவர்களுடைய ஒரு வாதத்தை மட்டும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதும் முடியாது. வெளியே நடைபெறுகிற விவகாரங்களுக்கெல்லாம் பேரவைத் தலைவர் பொறுப்பேற்றுக்கொண்டு, அங்கத்தினர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்பது முடியாத காரியம். எந்தப் பேரவைத் தலைவராலும் முடியாது. இப்படிப்பட்ட செய்திகள் பத்திரிகைகளில் வரும்பொழுது, அது தவறு என்றால், அந்தப் பத்திரிகையிலே

1969 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

வருத்தம் தெரிவித்துப் பிரசுரித்துவிட்டால், அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது கைவிடப்படுகிறது என்ற முறையை நாம் பின்பற்றுகிறோம். அப்படி விடுவதால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வளர்கின்றன. இப்படித் தவறான செய்திகளைப் பத்திரிகைகளில் போட்டிருந்தால், பத்திரிகைகள்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கட்சித் தலைவர்கள், பேரவைத் தலைவர் எல்லோரும் கூடி ஒரு முடிவு எடுப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். இப்பொழுது பத்திரிகையின் மீது நடவடிக்கை எடுக்கும்பொழுது பத்திரிகை ஆசிரியர் " அமைச்சர் இவ்வாறு கூறினர், எங்களுடைய நிருபர் கேட்டார், அதன்படி பிரசுரம் செய்தேன் " என்று சொல்லிவிட்டால், என்ன நடவடிக்கை எடுக்கபடும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவா பாயிண்டு ஆப் ஆர்டர் ?

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆகவே அமைச்சர் அவர்கள் மீதும், பத்திரிகை மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல.

3. நடைமுறைக் கேள்விகள்

(அ) என்.சி.சி. அணியை மீண்டும் துவக்குவதுபற்றி மத்திய அமைச்சருடன் நடந்த பேச்சுவார்த்தைபற்றி அவைக்கு முன்னதாக தகவல் அளிக்காமை.

DR. H. V. HANDE : On a point of order, pertinent point of order, Sir. For the past three days, day before yesterday, yesterday and today the Assembly has been sitting. In Hindu, Indian Express and yesterday's 'Mail', it had been published that with regard to starting of N.C.C. in Madras, a meeting had taken place between the Union Deputy Minister and our Chief Minister and Education Minister and that a statement on the same would be issued on Friday morning. Till now we do not have any light on that statement. This issue is a very important one. It is absolutely essential, that when the House is in session, the House should be taken into confidence and information should first be given to the House. We are happy that the meeting had taken place and we are going to have N.C.C. back in Madras. If the Hon. Chief Minister could let us know what has happended we will be very happy to know all about the same.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. கிருஷ்ண அவர்கள் என்னையும், கல்வி அமைச்சரையும் சந்தித்து, என்.சி.சி. சம்பந்தமாகத் தமிழக அரசினுடைய

எண்ணத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை எங்களிடம் தெரிவித்திருப்பதை அவரே பத்திரிகைகளில் செய்தியாகக் கொடுத்திருக்கிறார்கள். சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் நாங்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அந்தச் செய்தியைக் கொடுப்பது முறையல்ல என்ற காரணத்தினால் எந்தச் செய்தியும் பத்திரிகைகளுக்கு நாங்கள் அளிக்கவில்லை. பத்திரிகை நிருபர்கள் அவர்களைச் சந்தித்த நேரத்தில் மாண்புமிகு திரு. கிருஷ்ணா அவர்கள் அந்தச் செய்தியைத் தந்திருக்கிறார்கள். எங்களைச் சந்தித்த விவரத்தையும், மத்திய அரசு அதற்கு ஒப்புக் கொண்ட விவரத்தையும் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து நிருபர்கள் என்னிடம் வந்து விளக்கம் கேட்டார்கள். நாளையதினம் இது பற்றி சட்டமன்றத்தில் அறிக்கை வைக்கப்படும் என்று நான் கூறியது உண்மை. ஆனால், அப்படி ஒரு அறிக்கை வைப்பதற்குத் தயங்குவதற்குக் காரணம், திரு. கிருஷ்ணா அவர்கள் அதை மத்திய அரசு ஒத்துக்கொண்டதாக எங்களிடம் கூறிச் சென்றாலும், உடனடியாக அங்கிருந்து கடிதம் வரும் என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கடிதம் வராமல் அதன் மீது ஒரு அறிக்கை வைப்பது முறையல்ல என்ற காரணத்தினால் அந்த அறிக்கை வைக்கப்படவில்லை. கடிதம் வராமல் இருந்துவிடாது. நிச்சயம் வரும். எதிர்பார்த்த கடிதம் வராமல் அறிக்கை வைப்பது முறையல்ல. கடிதம் வந்த பிறகு அறிக்கை வைப்பது தான் முறை. இந்தப் பிரச்னையில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்கின்ற அளவில் நாம் மகிழ்ச்சி அடைவோமாக!

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, வெற்றி என்னவென்று சொன்னால் கொஞ்சம் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு மத்திய அரசு அமைச்சர் திரு. கிருஷ்ணா அவர்கள், தமிழக அரசின் சார்பில் எடுத்துச் சொல்லப்பட்ட, என்.சி.சி. படையில் என்ன நிலை அனுஷ்டிக்கப்படவேண்டும் என்று கோரப்பட்ட கொள்கைகளை மத்திய அரசு ஒத்துக்கொண்டது என்று குறிப்பிட்டார்கள். அது தான் இன்னும் கடிதம் மூலம் வரவில்லை. இங்கு அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது இந்தப் பேரவையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. என்.சி.சி.-யில் இந்தி கட்டளைச் சொற்கள் கூடாது. இந்திக் கட்டளைச் சொற்கள் இருக்குமானால், அதை வலியுறுத்துவார்களேயானால், என்.சி.சி. படை கலைக்கப் படும் என்கின்ற அளவில் இங்கு எடுத்துக் கூறப்பட்டது. இப்பொழுது ஓராண்டுக் காலமாக அவர்கள் இந்திக் கட்டளைச் சொற்கள் இருக்கவேண்டும் என்று வாதாடினார்கள். நானும், மற்ற அமைச்சர்களும் மத்திய அரசு அமைச்சர்களோடு அதைப்பற்றி வாதாடியிருக்கிறோம். இறுதியாக அவர்கள் இந்திக் கட்டளைச் சொற்கள் இருக்காது. அதற்குப் பதிலாக ஆங்கிலக் கட்டளைச் சொற்கள் தான் இருக்கும் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மற்ற விவரங்களெல்லாம் கடிதம் வந்தபிறகு தெரிவிக்கப்படும்.

1969 செப்டம்பர் 13]

திரு. கே. விநயகம்: சார், ஆன் எ மாட்டர் ஆப் கிளாரிபிகேஷன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் மத்திய அரசிடமிருந்து கடிதம் வரவில்லை. இன்னும் அறிக்கை வைக்கப்படவில்லையே?

THIRU K. VINAYAKAM : Please allow me.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களே, அங்கிருந்து முறையாகக் கடிதம் வந்த பிறகுதான் அறிக்கை வெளியிட வேண்டும் என்று கூறியிருக்கிறார். அப்படிக் கூறியிருக்கிற நேரத்தில், அறிக்கை வெளியிடத் தயக்கம் இருக்கிற நேரத்தில், இதைப் பற்றி மேலும் பேசி விவாதத்திற்கு உள்ளாக்குவது நல்லது அல்ல. அவை முன்னவர் அவர்கள் இப்பொழுது ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

(ஆ) எலி நாற்றம்.

திரு. கே. விநயகம்: ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். இரண்டு மூன்று நாட்களாகச் சட்டசபை நடக்கிறது. இங்கே அங்கத்தினர்கள் மாத்திரம்தான் வரலாம் என்ற சட்டம் இருக்கிறது. ஆனால், அங்கத்தினர்கள் அல்லாத ஒரு சில எலிகள் இங்கு உலாவிக் கொண்டு வருகின்றன. நானும் பார்த்தேன். உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களும் பார்த்தார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விநயகத்தைத் தேடி அது வருகிறது போலும்!

திரு. பி. ஜி. கருத்திருமன்: விநயகத்தைத் தேடி பெருச்சாளி தான் வரும். எலி வராது.

THIRU K. VINAYAKAM : I am still in possession of the House. Nobody has got any right to interfere when I am speaking.

அந்த எலிகள் இறந்து போனவைகள். அதுதான் இப்பொழுது பேச்சு. நாற்றம் வருகிறது. ஆளும் கட்சிக் கொறடா அவர்கள்கூடச் சொன்னார்கள். அதை அப்புறப்படுத்திவிட்டு, அப்புறம் சட்டசபையை நடத்துங்கள்.

It is emanating a dirty smell, you must come and sit down here. (Laughter.)

திரு. எ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, என் கண்ணுக்கு, எலிகள் படவில்லை. விநயகரின் வாகனம் எலி, மூஞ்சூறு. ஒரு வேளை அது அவர் காலுக்கு அடியில் எங்கேயாவது இருக்கலாம். அதைக் கவனித்து அப்புறப்படுத்த உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

4. அரசினர் தீர்மானங்கள்.

(அ). விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 41 (3)-வது விதியின்கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைப்பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் எழுப்பக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்." என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தங்கப்பன் இடத்தில் இல்லை. ஆதலால் அவருடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படவில்லை? அடுத்து, திரு. வி. கே கோதண்டராமன் அவர்களுடைய தீர்மானம்.

(அ) வேலூர் மத்தியச் சிறையில் கைதிகள் மஞ்சள் காமாலை வயிற்றுக் கடுப்பு முதலிய தொத்து நோய்களால் பீடிக்கப் பட்டது குறித்தும், உடனடி நடவடிக்கைகள் குறித்தும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன :—

'வட ஆர்க்காடு மாவட்டம், வேலூர் மத்திய சிறையில் உள்ள கைதிகள் மஞ்சள் காமாலை, வயிற்றுக் கடுப்பு முதலிய தொத்து வியாதிகளால் பீடிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்படுவதால், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது'.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, வேலூர் மத்தியச் சிறையில் உள்ள கைதிகள் அண்மையில் குடற் காய்ச்சலினாலும் பின்னர் மஞ்சள் காமாலை நோயினாலும் பீடிக்கப்பட்டனர்.

இந்தக் குடற் காய்ச்சல் நோய் 28—7—1969 அன்று முதன் முதலாக ஒருவருக்கு ஏற்பட்டது. இந்நோயாளி சிகிச்சைக்காக வேலூர், அரசு பெண்ட்லண்டு மருத்துவ மனைக்கு உடனடியாக மாற்றப்பட்டார். பின்னர், மேலும் சிலருக்கு இந்த நோய் ஏற்பட்டது. மொத்தத்தில் அறுபத்தி நான்கு பேர்கள் நோயுற்றனர். இவர்களில் இருபத்தி நான்கு நோயாளிகள் அரசு பெண்ட்லண்டு மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். எஞ்சிய நோயாளிகள் சிறை மருத்துவ மனையிலேயே சிகிச்சை பெற்றனர். பெண்ட்லண்டு மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்ட நோயாளிகளுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், இரண்டு கைதிகள் 8–8–1969 தேதியன்று இறந்து விட்டனர்; மற்றொரு கைதி 11–8–1969 தேதி அன்றும், நான்காவது கைதி 18–8–1969 தேதியன்றும் இறந்தனர்.

1969 செப்டம்பர் 13] [திரு. செ. மாதவன்]

இக்கொள்ளை நோய் பரவியிருப்பதை உடனடியாக அறிந்ததும், மாவட்டச் சுகாதார அதிகாரி சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டு, எல்லாக் கைதிகளுக்கும், பணியாளர்களுக்கும் காலரா நோய்த் தடுப்பு ஊசி போட்டு "ஸல்ஃபா குனடைன்" மாத்திரைகளை வழங்கினர். நோய்த் தடுப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. எல்லாச் சாக்கடைகளிலும் கழிப்பிடங்களிலும் டி.டி.டி. மருந்து தெளிக்கப்பட்டதுடன் சுண்ணாம்புப் பொடியும் தூவப்பட்டது. கொதிக்க வைத்த குடிநீர் கைதிகளுக்குக் கொடுக்கப்பட்டது. சிறைத் துறைத் தலைவர் நேரடியாகக் கட்டளையிட்டதன் பேரில், இந்நோயாளிகள் உண்மையிலேயே காலரா நோயினால் பாதிக்கப்பட்டனரா என்பதற்குப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. நல்வினையாக, அவர்களுக்கு அத்தகைய நோய் எதுவுமில்லை. கைதிகள் சிறையிலும் சிறைக்கு வெளியேயும் நடமாடுவதைத் தடுக்கும்பொருட்டுச் சிறை ஆரோக்கியமற்ற இடம் என்று அறிவிக்கப்பட்டது. ஏனைய அறுபது கைதிகளும் குணப்படுத்தப்பட்டு விட்டார்கள்.

மஞ்சள் காமாலை நோய் 13—8—1969 தேதியன்று முதன் முதலாக ஒருவருக்கு ஏற்பட்டது. இந்நோயாளி வேலூர் பெண்ட்லண்ட் மருத்துவ மனைக்கு உடனடியாகச் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அடுத்து 38 நோயாளிகள் சிறை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றனர். இந்நோய் பரவவொட்டாமல் எல்லா நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மொத்தத்தில் 39 கைதிகள் பாதிக்கப்பட்டனர். 11—9—1969 தேதிய நிலவரப்படி அரசு பெண்ட்லண்டு மருத்துவ மனையில் குணப்படுத்தப்பட்ட ஒருவரைத்தவிர 23 கைதிகள் குணப்படுத்தப்பட்டுச் சிறைச்சாலை மருத்துவ மனையிலிருந்து அனுப்பப்பட்டனர். சிறை மருத்துவ மனையில் 15 கைதிகள் மஞ்சள் காமாலை நோய்க்காகச் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நோய் யாருக்கும் கடுமையாக இல்லை. இந்நோயின் காரணமாக யாரும் மரணமடையவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இப்படி மஞ்சள் காமாலை, வயிற்றுக்கடுப்பு முதலிய வியாதிகள் திடீரென்று ஆரம்பிப்பதற்குக் காரணம் என்ன என்று நிபுணர்களைக்கொண்டு ஆராய்ச்சி செய்யப்பட்டதா? குடிக்கத் தண்ணீர் இல்லை என்பது மட்டுமல்லாமல், சுகாதாரமே பாதிக்கப்பட்டிருப்பதால் இது ஏற்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமைச்சர் கூறுகிறார்கள். மத்தியச் சிறையில், ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்குமிடத்தில், நல்ல தண்ணீர் இல்லாததோடு, மருத்துவ வசதியும் இல்லாமல், அவர்கள் வெளியிலே வந்து சிகிச்சை பெற முடியாத சூழ்நிலையும் இருப்பதால், மிகப் பெரிய அளவில் கண்காணிப்பு இருக்க வேண்டாமா? இனிமேலாவது இப்படி வியாதிகள் ஏற்படாத அளவில் சூழ்நிலைகளை உண்டாக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய மாநிலத்திலுள்ள சிறைச்சாலைகள் உன்னதமான முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை நானே அனுபவித்திருக்கிறேன். கனம் அங்கத்தினருடைய அனுபவம்பற்றி எனக்குத் தெரியாது. சுகாதார முறையில் இவை நடத்தப்பட வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். முயற்சிகள் எடுக்கப்படாமல் இல்லை. ஆனால், இப்படிப்பட்ட வியாதிகள், சிறைச்சாலையில் மட்டுமல்லாமல், பல பகுதிகளிலும் வருகின்றன. அதற்கான முன்னெச்சரிக்கையான காரியங்களும் செய்யப்படுகின்றன. அதற்குப் பின்னும், கண்காணிக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : கனம் அமைச்சர் கூறினார்கள், தான் சிறைச்சாலையில் இருந்து அனுபவம் பெற்றவர் என்று. அமைச்சர் இருந்ததைவிட இருபது மடங்கு அதிகமான அனுபவத்துடன் நான் சொல்லுகிறேன். வெள்ளையன் காலத்தில் சிறைகள் எப்படி இருந்தனவோ, அதே நிலையில்தான் காங்கிரஸ் ஆட்சியிலும் இருந்தன. அதேபோன்றுதான் இன்றைக்கும் கைதிகள் நடத்தப்படுகிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் கேளுங்கள். குற்றம் சாட்டும் பணிகளை இப்பொழுது செய்யக்கூடாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இனிமேலாவது குடிக்க நல்ல தண்ணீர், இவற்றைத் தயவுசெய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிறைகள் மோசமாக நடைபெறுகின்றன என்பதற்கு மறுத்துச் சொன்னேன். வசதிகளைப் பற்றிச் சொல்லுகிறார்கள். தண்ணீர், மருத்துவ வசதி, இவை அளிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று முன்னரே கூறினேன். நம்முடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்டபிறகு, முக்கியமாகக் கழிவுநீரை அப்புறப்படுத்த, எல்லாச் சிறைச்சாலைகளிலும், 'செப்டிக் டாங்குகள்' ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனால், அதிகமாக வசதிகளைப் பெருக்கிச் சிறைச்சாலைகளை, பங்களாக்களாக ஆக்க வேண்டும் என்று அங்கத்தினர் விரும்பமாட்டார்கள் என்ற நம்பிக்கை உண்டு. முடிந்தவரையில் வசதிகளைச் செய்து கொடுக்கிறோம்.

(ஆ) மதுரை நகரில் உணவுப் பங்கீட்டு முறையில் அரிசியின் அளவு குறைக்கப்பட்டது குறித்து.

DR. H. V. HANDE : I wish to call the attention of the Hon Minister for Food and Commercial Taxes to a matter of urgent public importance, namely, the recent cut in rice ration from 1200

1969 செப்டம்பர் 13] [Dr. H. V. Aande]

grams per week to 800 grams per week in the City of Madurai, and the need to restore the cut in view of the fact that Madurai is the second biggest city in the State of Tamil Nadu.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மதுரை நகரில் சட்டபூர்வப் பங்கீட்டு முறை அமலில் இல்லை. குடும்பக் கார்டு முறைதான் அமலிலுள்ளது.

சட்டபூர்வப் பங்கீட்டுப் பகுதியில் வெளிச்சந்தையில் அரிசி விற்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே, அப்பகுதியில் வாழும் மக்களுக்குத் தேவைப்படும் அரிசி முழுவதையும் வழங்குகின்ற பொறுப்பை அரசு மேற்கொண்டுள்ளது. இதை முன்னிட்டு, வயது வந்த ஆள் ஒருவருக்கு வாரத்திற்கு 1,400 கிராம் அரிசி வழங்கப்படுகிறது.

குடும்பக் கார்டுமுறை அமலிலுள்ள பகுதிகளில் வெளிச் சந்தையில் அரிசி விற்கத் தாராளமாக அனுமதிக்கப்படுகிறது. அப் பகுதி மக்கள் வெளிச்சந்தையில் அரிசி வாங்கிக் கொள்ளலாம். வெளிச் சந்தையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படும்போதோ, விலை சற்று ஏறுமுகமாக இருக்கும்போதோ, அரசு குடும்பக் கார்டு முறையின் கீழ் அரிசி வழங்கி மக்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிப்பதுதான் குடும்பக் கார்டு முறையின் நோக்கம். குடும்பக் கார்டு பெற்றுள்ளவர்கள் வெளிச்சந்தையிலும் தாராளமாக அரிசி பெற்றுக்கொள்ள முடியுமாதலால், அவர்களுக்கு ஆண்டு முழுவதும் அரசினர் அரிசி வழங்க வேண்டுமென்ற அவசியமோ சட்டபூர்வப் பங்கீட்டுப் பகுதியில் வழங்கப்படும் 1,400 கிராம் விகிதத்தில் அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்ற அவசியமோ கிடையாது. இந்த அடிப்படையில் தான் அறுவடைக் காலங்களிலும், அரிசிப் புழக்கம் தாராளமாக இருக்கும்போதும் குடும்பக் கார்டுகளின் மூலமாக அரிசி வழங்குவது குறைக்கப்படுகிறது. சில சமயங்களில் அரிசி வழங்குவது நிறுத்தவும் படுகிறது. வெளிச்சந்தை நிலைமையை அனுசரித்தும், விலைவாசிகளையும் அரசாங்கக் கையிருப்பையும் மனதிற்கொண்டும் வழங்கும் அரிசியின் அளவைக் கூட்டிக் குறைக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

26—5—1969-க்கு முன் மதுரை நகரில் குடும்பக் கார்டு முறையில் வயது வந்த ஆள் ஒருவருக்கு வாரமொன்றுக்கு 1,200 கிராம் வீதம் அரிசி வழங்கப்பட்டு வந்தது. 26—5—1969 முதல் வழங்கப்படும் அரிசியின் அளவு 800 கிராமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மதுரை நகரில் மட்டுமன்றி மாநிலம் முழுவதும் எங்கெங்கு குடும்பக் கார்டு முறை அமலிலுள்ளதோ அங்கெல்லாம் குடும்பக் கார்டுமூலம் அரசு வழங்கும் அரிசியின் அளவு குறைக்கப்பட்டது.

தற்போது தஞ்சாவூர் மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களிடையே தாராளமாக அரிசி எடுத்துச் செல்லலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளதை இப்பேரவை அறியும். மாவட்டங்களுக்கிடையே இருந்த அரிசிப் போக்குவரத்துத் தடையை நீக்கியதால்,

மதுரை போன்ற பற்றுக் குறைப் பகுதிகளில் அரிசி தாராளமாகக் கிடைக்கின்றது. எனவே, தற்போது குடும்பக் கார்டுமூலம் வழங்கப்படும் அரிசியின் அளவை அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை.

DR. H. V. HANDE: Sir, from the explanation given by the Hon. Minister it is obvious that, even though the quantity has been reduced, there has not been any practical difficulty because rice is coming in the open market. Is it a fact that a few persons including two municipal councillors undertook a fast on this issue?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தது உண்மை. எந்த நோக்கத்திற்காக உண்ணாவிரதம் இருந்தார்கள் என்பதைக் கேட்டால் அவர்களே சொல்வார்கள். அரசாங்கத்தின் கையிருப்பு நிலைமையை உத்தேசித்து 800 கிராமாகக் குறைக்க வேண்டுமென்பதை மாவட்ட ஆட்சி தலைவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மதுரையைப் பொறுத்த மட்டில் நிலைமை செம்மையாகவும் சீராகவும் இருக்கிறது. எந்த நோக்கத்திற்காக உண்ணாவிரதம் இருந்தார்கள் என்று நாம் அதற்கு ஒரு நோக்கம் கற்பித்துக் கிளர்ச்சி எதுவும் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(இ) தமிழ்நாடு உயர்நீதிமன்றக் கட்டிடங்களில் வழக்குரைஞர்களுக்கு அளிக்கப்பட்ட அறைகளிலிருந்து வெளியேற்றப்பட்டதும் தங்குவதற்கு அறைகளின்றி அவர்களுடைய அல்லலும்.

THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Sir, under rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the plight of Advocates of the Tamil Nadu High Court for want of chambers in view of their eviction from the High Court Buildings.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I wish to make the following statement:—

The High Court has furnished the following information:—

For some time past, it has been found difficult to have proper accommodation for the offices of the High Court in view of the large number of institution of cases and large volume of records being produced into court. Provision had to be made for keeping in safe custody the records received in connection with election cases, namely, ballot papers, etc. Consequent on the increase in the number of Judges, additional court halls had to be provided for the Judges and the Master and additional chambers for the Judges had also to be provided. This resulted in resumption of chambers which had been allotted to Law Officers of the Government. As a result, the Law Officers of the Government had to be provided with alternative accommodation. The Law Officers also had been requesting for additional accommodation for their officers. There was also increase in the

number of Law Officers and accommodation had to provided for then too. Hence the chamber accommodation provided in the main High Court building, which had been temporarily allotted to senior Advocates, had to be resumed. With a view to provide alternative accommodation to Senior Advocates who had been given accommodation in the main High Court building, some law chambers in the Advocates block had to be resumed from some advocates.

The High Court has provided alternative accommodation as far as possible and it is also considering proposals for the construction of Law chambers.

6. அரசினர் மசோதாக்கள்.

மு.ப. 11–00

(அ) 1969-ம் ஆண்டு, சிவில் நடைமுறை சட்டக்கோவை (தமிழ்நாடு திருத்த) மசோதா.

THE HON. THIRU S. MADHAVAN : Sir I move—

that leave be granted to introduce the Code of Civil Procedure (Tamil Nadu Amendment) Bill, 1969.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

4. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி).

(ஆ) கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர் சிக்கல்கள்குறித்து திரு. கணபதியாப் பிள்ளை விசாரணைக் குழுவின் அறிக்கைமீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. இராம. அரங்கண்ணல்: பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு மாத காலத்தில் நல்லதொரு பிரச்சினையைப்பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்து, தெளிவான விளக்கத்தை நமக்கெல்லாம் வழங்கியிருக்கிற திரு. கணபதியா பிள்ளை கமிஷனை நான் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட பிரச்சினையில் ஒரு கமிஷனை நியமித்து அதன் வாயிலாக உண்மைகளைப் பெறவேண்டுமென்ற ஒரு முடிவினை எடுத்த திராவிட முன்னேற்றக் கழக அரசினைப் பாராட்டுகிறேன். அரசின் நடவடிக்கையைக் கண்டு நான் மகிழ்கிறேன். இந்தக் கமிஷனுடைய அறிக்கையைப்பற்றி, இந்தக் கமிஷனுடைய நியமனம்பற்றிப் பேசப்பட்ட நேரத்தில், கூட்டணியில் இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சி இழுத்த இழுப்பிற்கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் செல்வதாகக் குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டன. ஆனால் யாருடைய கட்டாயத்திற்காகவோ அல்லது

யாரையாகிலும் திருப்தி செய்ய வேண்டுமென்பதற்காகவோ இந்தக் கமிஷன் நியமனம் செய்யப்படவில்லை, அறிக்கை சமர்ப் பிக்கப்படவில்லை.

கீழத் தஞ்சையைப் பொறுத்தவரையில் கூலிப் பிரச்சினை என் பது பெரியதொரு பிரச்சினை. இதில் தீர்வு காண முடியாத நிலைமை இருந்தது என்பது நமக்கெல்லாம் நன்கு தெரியும். கீழத் தஞ்சை யைப் பொறுத்தமட்டில் 12 ஏக்கருக்கும் மேலாக நிலம் வைத்திருக் கும் மிராசுதார்களின் எண்ணிக்கை 7,500 பேர்கள். ஆனால் அவர் களுடைய நிலங்களில் பணியாற்றுகின்ற விவசாயத் தொழி லாளர்கள் சுமார் 2 லட்சத்து 40 ஆயிரம் பேர்கள் இருக்கலாம். கீழத் தஞ்சையிலுள்ள மக்கள் தொகை கிட்டத்தட்ட எட்டு அல்லது ஒன்பது லட்சம் இருக்கும். திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தமட்டில், அது கம்யூனிஸ்ட்கள் பக்கமா அல்லது செல்வந்தர்கள் பக்கமா அல்லது மிராசுதார்கள் பக்கமா அல்லது தொழிலாளர்கள் பக்கமா என்பது அல்ல; சமுதாய நீதியைக் கடைப்பிடித்து, சமுதாயத்திலுள்ள மக்களுக்கு நியாயமான நீதி வழங்க வேண்டும் என்ற கொள்கையைக் கடைப் பிடித்து வருகிறது. அந்த நீதிக்கு எந்த 'இசம்' என்று வேண்டுமானாலும் பெயர் வைத்துக்கொள்ளட்டும். நம்முடைய முன்னாள் முதல மைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியபடி, 'ஏழைகளுக்காக நீதி வழங்குவதும், இயலாதவர்களுக்கு நீதி வழங்குவதும், சமுதா யத்தின் அடித்தளத்தில் வாயில்லாப் பூச்சிகளாக இருக்கின்றவர் களுக்கு நீதி வழங்குவதும்தான்' இந்த அரசின் நோக்கமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசிய சுதந்திராக் கட்சித் தலைவர் 'இப்போது ஆறு தாலுக்காக்கள் கம்யூனிஸ்டுகளின் தாலுகாக்க ளாகிவிட்டன' என்று குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தமட்டில் எந்த அரசியல் கட்சியாக இருந் தாலும் கம்யூனிஸ்டுக் கட்சியாக இருந்தாலும் ஒரு கட்சி தன்னு டைய சொந்த வலுவினால், சொந்தக் கொள்கையினால்தான் வளரும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறோம். அந்தக் கட்சியும் அப்படித் தான் நம்பிக்கை கொண்டிருக்கும். கம்யூனிஸ்டுகள் கூட்டணியில் சேர்ந்துகொண்டு, கூட்டாக இருக்கின்ற வலிமையைப் பயன் படுத்தி, திராவிட முன்னேற்றக் கழக அரசை ஏமாற்றித், தங்களை வளர்த்துக் கொள்கிறார்கள் என்று பொதுவாகப் பேசப்படுகிறது. கம்யூனிஸ்டுகள் அவ்வளவு சுலபமாக எங்களை ஏமாற்றிவிட முடியாது. நாங்களும் ஏமாளிகள் அல்ல; அந்த அளவிற்குக் கம்யூனிஸ்டுத் தோழர்களும் இருக்கமாட்டார்கள் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டு பார்த்தால், கூலி உயர்வு பிரச் சினை எல்லா இடங்களிலும் இல்லை. 'ஆர்கனைஸ்ட் லேபரர்ஸ்' இருக்கின்ற நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி போன்ற தாலுக்

காக்களில்தாம் இந்தப் பிரச்சினை பெரியதாக இருக்கின்றது. கூலி உயர்வுப் பிரச்சினையில் 'இந்த அரசாங்கம் மிராசுதார்களுக்கு நன்மை செய்தது, தொழிலாளர்களுக்கு நன்மை செய்தது, கம்யூனிஸ்டுகளுக்கு நன்மை செய்தது, ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டது' என்ற பேச்சுக்களுக்கு இடங் கொடுக்காமல், ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷன் எல்லாத் தரப்பு மக்களுக்கும் நீதி வழங்கியிருக்கிறது. கூலி உயர்வு செய்ய வேண்டுமென்று கமிஷன் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்னதாகவே, நம்முடைய அரசாங்கம் ஏழை விவசாயிகளும் சிறு சிறு விவசாயிகளும் பயன் அடையக் கூடிய விதத்தில் ஒவ்வொரு மூட்டைக்கும் இரண்டு ரூபாய் விலையை உயர்த்தித் தந்திருக்கிறது. இதனுடைய நோக்கம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொழிலாளர்களும் நல்ல கூலி பெற்று வாழவேண்டும். அதேபோல உற்பத்தியாளர்களும் நல்ல வருவாய் பெறவேண்டும் என்று அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்தக் கமிஷனைப் பொறுத்தமட்டில் நாம் ஒன்றை மறந்துவிடக் கூடாது. மற்ற மாவட்டங்களில் இருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும், கிழத் தஞ்சையில் இருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்தக் கமிஷன் சரியாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. மற்ற இடங்களில் பத்து மாத காலத்திற்கு விவசாயக் கூலிகளுக்கு வேலை இருக்கிறது என்று சொன்னால் கீழ்த் தஞ்சையில் இருக்கிறவர்களுக்கு ஆறு மாதம், ஏழு மாத காலத்திற்குத்தான் வேலையிருக்கிறது. இந்தக் காலத்தில் அவர்கள் சம்பாதிப்பது 700 ரூபாய். இதை வருடம் முழுவதற்கும் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. மற்ற மாவட்டங்களில் இருக்கிறவர்கள் இதைவிட அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள். ஒரு விவசாயக் குடும்பம் வாழ்க்கை நடத்தக் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஆயிரம் ரூபாயாவது இருக்க வேண்டும். ஆகவே துண்டு விழும் 300 ரூபாய்க்கு எங்கே போவது என்று சங்கடப்படுகிறார்கள் என்பதைக் கமிஷன் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இன்னும் ஒன்றினை நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் முன்பு பண்ணையாள் முறை இருந்து வந்தது. அந்த முறை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து இன்னும் ஐந்து பத்தாண்டுக் காலத்தில் அறவே அற்றுப்போகும் நிலையை அடைந்திருக்கிறது. திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் சாணிப்பால் ஊற்றி, சாட்டை அடி கொடுத்து விவசாயக் கூலிகளை அடக்கி வைத்திருந்த நிலையை நன்றாகச் சுட்டிக் காட்டினார். இப்போதுதான் சிறு சிறு உரிமைகளைப் பெற்று வருகிறார்கள். இப்படி ஆதித் திராவிடப் பெருங்குடி மக்கள் உரிமையைப் பெற்று முன்னேறி வருகிறார்கள் என்று சொன்னாலும், நாம் எல்லாம் பாராட்டுகிற அளவு முன்னேறவில்லை.

நேற்றைய தினம் சிதம்பரம் உறுப்பினர்கூடக் கோபத்தோடு பேசினார்கள். நமக்கேகூட வருத்தமாக இருக்கிறது. அது ஒரு சமுதாயப் பிரச்சினை. பள்ளிக்குச் செல்லவேண்டிய ஐந்து வயதுப் பிள்ளை மாடு மேய்க்கிறது என்றால் காரணம் என்ன? பள்ளிக்குச் செல்லும் வயதுடையவர்கள் வேலையில் அமர்த்தப்படக்கூடாது. கட்டாயம் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்று நாம் சட்டம் செய்திருக்கிறோம். இருந்தும் அந்த அந்தப் பகுதியில் உள்ள அந்த அந்த சமுதாயத்தைச் சேர்ந்த பெரியவர்கள் கண்டிப்பாக அவர்களது பிள்ளைகள் பள்ளிக்குச் செல்ல வழி செய்யவேண்டும். என்னுடைய சொந்த ஊரில் பதினைந்தாண்டுகளுக்கு முன்னால் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்த ஒரு ஆதித் திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்தவர் இன்றைய தினம் வசதியாக இருப்பது திரு. தனுஷ்கோடிக்குத் தெரியும். இன்றைய தினம் அந்த ஆதித் திராவிட குடும்பத்தைச் சேர்ந்தவரது பிள்ளை பெரிய எஞ்ஜினியராக விளங்குகின்ற அளவு கடந்த பதினைந்தாண்டுகளில் ஆதித் திராவிட சமுதாயம் முன்னேற்றம் கண்டு வருகிறது. ஆகவே, இன்றைய தினம் ஆதித் திராவிட சமுதாயத்தினரிடையே உள்ள அரசியல் வாதிகள், சமூகத் தொண்டர்கள் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கல்வித் துறையில் முன்னேற்றம் அடைய, பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைய நல்ல உருப்படியான யோசனைகளைச் சொல்ல வேண்டும். அரசியல் வாதிகளுக்குப் பொது வாழ்வு என்பது மக்களுக்குத் தொண்டாற்ற இருக்கிறதே தவிர, அதன் காரணமாக தேவையில்லாத கிளர்ச்சிகளைத் தூண்டிவிட வேண்டும் என்பதில்லை. அப்படிப்பட்ட எண்ணத்தைத் தமிழ்நாடு இனிமேல் ஏற்றுக் கொள்ளாது.

இன்னொரு புகார் சொல்லப்படுகிறது. கீழ்த் தஞ்சையில் இருக்கிற கம்யூனிஸ்டுகள் ராணுவ முறையில் செஞ்சட்டைப் படைகளை வைத்திருக்கிறார்கள், அந்தப் படைகளை வளர்த்து நக்சல்பாரிகளைப் போல கீழ்த் தஞ்சைப் பகுதியில் புரட்சியை ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நிச்சயமாக அத்தகைய நிலையை உருவாக்க முடியாது. அவர்களுடைய செல்வாக்கு 28 சத விகிதம் உள்ள ஆதி திராவிட மக்கள் மத்தியில் இருந்தாலும், மிராசுதாரர்கள் சங்கம் இரண்டும் பலமாக இருப்பதோடன்றி பொதுமக்கள் அத்தனை பேரும் நல்ல காரியங்களுக்கு ஆதரவாக இருக்கிறார்களேதவிர காரணமற்ற—வேண்டுமென்றே சிருஷ்டிக்கப்படுகிற கிளர்ச்சிக்கு இரையாகத் தயாராய் இல்லை. திரு. படேல் உள்துறை அமைச்சராக இருந்தபோது கம்யூனிஸ்டு இயக்கம் வேரூன்றியது. அதற்குப் பிறகு அந்தக் கட்சியினர்களுடைய செயல்களே அவர்களை வேரூன்ற முடியாது செய்துவிட்டது. இப்போதுதான் கொஞ்சம் பரவுகிறது என்று சொன்னாலும் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையை நடத்திச் செல்கிறவர்கள் பலாத்கார முறையில் இறங்காது, ஆக்கபூர்வமான செயலிலேயே ஈடுபடுகிறார்கள் என்பதனை அறிந்து பெருமைப்படுகிறேன்.

1969 செப்டம்பர் 13] [திரு. இராம. அரங்கண்ணல்]

கணபதியா பிள்ளை கமிஷன் சிபார்சு செய்துள்ள கூலியைக் கொடுப்பதன்மூலம் அந்த மாவட்டத்து விவசாயக் கூலிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திவிட முடியாது. விவசாய வேலை இல்லாத காலங்களில் அவர்களுக்கு மாற்று வேலை கிடைக்கச் செய்து ஆண்டு பூராவும் வேலை கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும். தென்னை மரங்கள் நிறைய இருக்கின்றன. கேரளாவில் உள்ளதுபோல் தேங்காய் பட்டைகளில் இருந்து கயிறு தயாரிப்பது, கீற்றுப் பின்னுவது போன்ற உப தொழில்களை வளர்க்க வேண்டும். மேலும் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் பொதுத் தொண்டர்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தொழில் நடத்த முன்வந்தால் ரூ. 5,000 வரை உதவி தருவதாக அறிவித்துள்ளதையும் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். குறிப்பாக அச்சகம் வைக்கலாம், காப்பி ஓட்டல் வைக்கலாம், டீ ஓட்டல் வைக்கலாம், இப்படிச் சிறு சிறு தொழில் நடத்த அவர்கள் முன்னுக்கு வர ஆக்கப்பூர்வமான யோசனைகளைச் சொல்ல வேண்டும்.

அடுத்து, ஆதி திராவிட விவசாயக் கூலிகள் வாழ்கின்ற வீடுகள் அனைத்தும் வீடுகள் என்றே சொல்ல முடியாத அளவு இருப்பதைக் கமிஷன் சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆகவே, சேரிகளை அறவே போக்கிவிட்டு அவர்களுக்கும் மற்றவர்கள் வாழ்கின்ற பகுதியிலேயே வீடுகள் அமைத்துத் தரவேண்டும். இதற்கு அரசு பண உதவியும் அளிக்கிறது, கூட்டுறவு இலாக்காமூலமாக இதற்கு உதவி அளிக்க இருப்பதை அவர்களிடம் சொல்லி இதைப் பயன் படுத்திக் கொள்ளச் செய்யவேண்டும். நம் அரசு கமிஷனைப் போட்டது என்பது ஒரு சாராருக்கு உதவுவதற்காக அல்ல. சமுதாயப் பிரச்சினைக்கு எப்படி முடிவு கட்டுவது என்பதற்காகவே நியமிக்கப் பட்டது.

இன்னும் ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். கீழ்த் தஞ்சைக்கு மட்டும்தானா இது, எல்லா இடத்திற்கும் கொண்டுவரக்கூடாதா என்று சொன்னார்கள். எங்கங்கே பிரச்சினை ஏற்படுகிறதோ, அங் கங்கே கமிஷனையே போட்டுக் கொள்ளலாம். தமிழ்நாடு பூராவுக் கும் ஒரே சட்டம் இருக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. முன்பு தஞ்சை பண்ணையார் சட்டம் கொண்டுவந்ததைப்போல, இப் போது இது கொண்டுவரப்படுகிறது. வேண்டுமானால் மேல் தஞ் சைக்கு ஒரு கமிஷன், இராமநாதபுரத்திற்கு ஒரு கமிஷன், மிராசு தாரர்களுடைய பிரச்சினையைப் பரிசீலிக்க ஒரு கமிஷன் என்று போடலாம். ஆகவே, இப்போது நமக்கு நல்ல சிபாரிசுகளை அளித் துள்ள கணபதியா பிள்ளை கமிஷனைப் பாராட்டி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஹேமாவதி அணைத்திட்டம் பற்றி ஒரு மணி நேர விவாதம் வேறு இருக்கிறது. இப்போதே 11-20 ஆகிறது. ஆகவே இருக்கிற நேரத்திற்கு ஒரு திட்டமிட்டு விவாதத்தை நடத்திச் சென்றால் நன்றாக இருக்கும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : 1 மணிக்குள் இவற்றை முடித்து விட்டு 1 மணி முதல் 2 மணிவரை ஹேமாவதி அணைத் திட்டம் பற்றிய விவாதத்தை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு மணிக்குள் முடிக்கவேண்டு மென்றால் எப்போது விவாதம் முடியும்? மசோதா வேறு இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : மசோதாவில் ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றும் இல்லை என்று சொல்ல முடியாது. நிறைய திருத்தங்கள் வந்திருக்கின்றன.

திரு. கே. விநாயகம் : மாலையில் வேண்டுமென்றால் உட்காருவது, அல்லது இன்னொரு நாள் நடத்துவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை அலுவல் ஆய்வுக் குழுவில் நேற்றே, இன்றையதினம் 1½ மணியுடன் அவையின் அலுவல்களை முடிக்கத் திட்டமிட்டிருக்கிறோம். திட்டமிட்டபடி நடக்க வேண்டும்.

திரு. கே. விநாயகம்: பில்லில் என்ன இருக்கிறது, கிளாஸ் பாஸ் பண்ண வேண்டியதுதானே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்படியிருந்தாலும் அது 1½ மணிக்கு வந்துவிடும், அதற்கு மேலே முடியாது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: ஒரு மணிக்குள் பில்லை முடித்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுவதற்கு உறுப்பினர்கள் இருக்கிறார்கள், அதற்குள் முடியாது என்று நினைக்கிறேன்.

திரு. பி.ஜி. கருத்திருமன்: நான் பேசுகிறேன், பிறகு அமைச்சர் அவர்கள் பேசட்டும். சீக்கிரம் முடித்து விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவர்கள் பேசவேண்டு மென்று சொல்கிறார்கள், திரு. சங்கரய்யா அவர்கள் பேசவேண்டு மென்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அப்படியென்றால் நீங்கள்தான் சொல்ல வேண்டும், வேறு ஒன்றும் செய்ய முடியாது.

திரு. கரு. சீமைச்சாமி: எங்கள் கட்சியிலே பேசவேண்டு மென்று இருக்கிறார்கள், எதிர்க்கட்சித் தலைவர்மட்டும் பேசிவிட்டு முடிக்க வேண்டாம். ஏனென்றால் இது முக்கியமான பில். என்ன என்ன பரிகாரங்கள் என்று சொல்வதற்கு டைம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் இப்போது பேசுவார்கள்.

திரு க. ர. நல்லசிவன் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைக்குச் சபைமுன் வந்திருக்கக்கூடிய விவசாயக் கூலி மசோதாவையும், திரு. கணபதியா பிள்ளை கொடுத்திருக்கிற அறிக்கையையும் உண்மையிலேயே வரவேற்க வேண்டியதுதான். திரு. கணபதியா பிள்ளை கொடுத்திருக்கிற அறிக்கையானது நடு நிலைமையிலே நின்று அங்கே இருக்கிற பிரச்சினைகளையெல்லாம் பரிசீலனைசெய்து அறிக்கையிலே நல்லமுறையிலே விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஏறத்தாழ அந்தக் கருத்தையொட்டியே இந்தப் புதிய மசோதாவையும் சபைமுன் வைத்திருக்கிறார்கள். இந்த மசோதாவினை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். உண்மையிலேயே மாநிலம் பூராவும் நியாயமாகக் கூலி கொடுக்கிற நிலையிலே என்ன கூலி கிடைக்குமோ, அந்தக் கூலி அளவுதான் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே ஆண் களுக்கு 3 ரூபாய் அல்லது 6 லிட்டர் நெல்லும் 1¼ ரூபாயும் என்றும் பெண்களுக்கு ஒன்றே முக்கால் ரூபாயும் அல்லது 5 லிட்டர் நெல்லும் 25 பைசாவும் கொடுக்கப் போவதாகக் குறிப்பிட் டிருக்கிறார்கள். பெண்களுக்கு நெல்லோடு சேர்த்துக் கொடுக்கக் கூடிய தொகை 25 காசாக இருப்பது மிகவும் குறைவாக இருக் கிறது. இதை அதிகமாக உயர்த்த வேண்டுமென்று நினைக்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்கள் கூலியை நிர்ணயித்து இருக்கி றோம். இதிலே நீர்ப்பாசனம் உள்ள பகுதிகளிலே அதாவது 4 மாதம், 6 மாதம் அல்லது 9 மாதங்களுக்குக் கூலி கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. நீர்ப்பாசனம் இல்லாத இடங்களிலே எவ்வளவு நாளைக்குக் கூலி கிடைக்கும் என்று சொல்லமுடியாமல் இருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவிலே 6 தாலுகாக்களுக்கு இந்தச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை உடனடியாக நீர்ப்பாசனம் எங்கெல்லாம் ஆறுமாதத்திற்குக் குறை யாமல் நடக்கிறதோ, அந்தப் பகுதிகளுக்காவது விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயக் கூலிகள் என்று சொல்லக்கூடியவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், பின்தங்கிய ஜாதியைச் சேர்ந்தவர்கள் தான் பெருவாரியாக இருக்கிறார்கள். பொருளாதார அடிப்படை யிலே அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய முறையிலே இந்தச் சட்டம் வந்திருக்கிறது. எனவே இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன் என்பதை மீண்டும் மீண்டும் தெரி வித்துக் கொள்கிறேன்.

தஞ்சைப்பகுதிகளாக இருந்தாலும் வேறு எந்தப் பகுதிகளாக இருந்தாலும் வருடம் பூராவும் வேலை கிடைப்பது என்ற பிரச்னைக்கே இடம் கிடையாது. ஒரு சில பகுதிகளில் 3 மாதம், 4 மாதம், 6 மாதம், அதிகமாகப் போனால் 8 மாதங்களுக்குத்தான் வேலை இருக்கும் என்று சொல்ல முடியும். எனவே இதற்கு ஒரு

மாற்று வழி கண்டுபிடித்தாகவேண்டும். விவசாயத்தோடு இணைந்த மற்றக் கைத்தொழில்களைத் தமிழகம் பூராவும் பரப்பு வதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரப்போவதாக, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு சொன்னார்கள், சொல்லியிருக்கிறார்கள். கூடிய விரைவிலே அதைச் சட்டமாகக் கொண்டுவருவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மாதிரியான சட்டம் கொண்டுவருவதன்மூலம் தான் இந்தப் பிரச்சினையை அடியோடு தீர்க்க முடியும். ஒன்று சட்டப்பூர்வமாக இதைச் செய்தாக வேண்டும், இல்லாவிட்டால், பலாத்காரமான முறையிலே இதைச் செய்யவேண்டிய சூழ்நிலை நாட்டிலே உருவாகிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் சர்க் கார் கவனத்திலே கொண்டு அதைக் கொண்டுவரவேண்டும். சிலர் பேசினார்கள்—எந்த நேரத்திலே வேண்டுமானாலும் அவர்கள் வேலைக்கு வரலாம் போகலாம் என்று வைத்துக்கொள்ளவேண்டும், டைம் குறிக்கக்கூடாது என்று சொன்னார்கள். . . .

திரு. டி. எஸ். ஆதிமூலம் : பலாத்காரமாக நிலங்களை எடுத்துக் கொள்ளக்கூடிய நிலைமை இருப்பதாக அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்களே, இது முறையான பேச்சா? சர்க்கார் இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ளாமல் இப்படிச் சொல்லலாமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. ர. நல்லசிவன் : இன்றைய தினம் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சட்டப்பூர்வமாக இந்தக் காரியத்தைச் செய்யாவிட்டால் துப்பாக்கிமுனையிலே செய்யப் போகிறார்களே அந்தச் சூழ்நிலை உருவாகிறதே அதைத் தான் சொல்கிறேன், அதற்கு நானா பொறுப்பு? இந்தச் சர்க்கா ரானது அந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் இடம் இல்லாமல் நிலச் சீர்திருத்தச் சட்டம் விரைவிலே கொண்டுவரவேண்டும். முன் பிருந்த சட்டமானது பயனில்லாதது. சரிபாதியோ அல்லது அதற்குக் குறைவான அளவோ என்று உயர்ந்த பட்சம் ஒன்று நிர் ணயித்து உடனே அதற்காகச் சட்டம் கொண்டுவர வேண்டும், அதன்மூலம்தான் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இதை நான் மிரட்டியோ அல்லது வேறு நிலைமையிலோ சொல்லவில்லை. யதார்த்தமாக உள்ள நிலைமையைத்தான் சொல்கிறேன். நாங்கள் அடிப்படையிலேயே பலாத்காரத்தில் நம்பிக்கையில்லாதவர்கள். சாத்வீகமான முறையில் தேசத்தைப் பாதுகாக்கவேண்டுமென் பதிலே நம்பிக்கை கொண்டவர்கள், பலாத்காரத்தை வெறுப்ப வர்கள். எனவே அதற்காக நான் சொல்லவில்லை. இதிலே குறிப் பிட்டிருக்கின்ற கூலியானது இன்றைய நிலைமையிலே நியாயமான கூலி. இந்தக் கூலி வருடம் பூராவும், 365 நாட்களும் கிடைப்ப தற்கு, மனிதர்களாக அவர்கள் வாழ வேண்டுமென்றால், வருடம் பூராவும் அவர்கள் இந்தக் கூலியைப் பெறக்கூடிய அளவுக்கு இந்த

அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத்தை வரவேற்று என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, இப்பொழுது விவாதத்தில் இருக்கும்படியான இந்த கணபதியா பிள்ளை அறிக்கை, அது சம்பந்தப்பட்டு இருக்கும்படியான இந்த மசோதா இந்த இரண்டு விவாதங்களும் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மசோதாவுக்கு முன்னாலே அவர்களுடைய அறிக்கை விவாதம் நடைபெறுகிறது. அவர்களுடைய அறிக்கை எப்படிப்பட்ட அறிக்கை என்று கூறுவதற்கு முன்னாலே விவசாயம் நம்முடைய நாட்டிலே, குறிப்பாகத் தமிழ் நாட்டிலே, எந்த நிலையிலே இருக்கிறது என்று விளக்கிச் சொன்னால் நல்லது என்று நினைக்கிறேன். எல்லாருக்கும் விவசாயத்தின்மேல் ஒரு கண் இருக்கிறது. பூமியை எல்லாம் ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும், இது எல்லாம் ஆண்டவன் கொடுத்தது என்று எல்லாம் பேசுவதை நானும் வரவேற்கிறேன், பிரசங்கத்திற்கு இது எல்லாம் நல்லதாகத்தான் இருக்கும்.

விவசாயத்தைப் பொறுத்தமட்டில் ஆறு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதி விவசாய பூமி நிறைய வைத்துக்கொண்டு ஊரிலேயே இல்லாமல் பட்டணத்தில் இருக்கும்படியான பகுதி. இவர்கள் ஆப்சன்டி லாண்ட் லார்ட்ஸ். இரண்டாவது பகுதி, பெரிய மிராசுதாரர்கள், ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமியை வைத்துக் கொண்டு கிராமங்களில் தர்பார் செய்துகொண்டிருக்கும்படியானவர்கள். மூன்றாவது பகுதி, பூமியை வைத்துக்கொண்டு சாகுபடி பூராவையும் தாங்களே கவனித்துக் கொண்டிருப்பவர்கள்—பர்சனல் கல்டிவேஷன். நான்காவது பகுதி, குத்தகைக்குச் சாகுபடி செய்வதோடுகூடச் சொந்த நிலமும் வைத்துக்கொண்டு சாகுபடி செய்யக்கூடியவர்கள். ஐந்தாவது பகுதி, எந்தவிதமான சொந்தப் பூமியும் இல்லாமல் குத்தகைக்குச் சாகுபடி செய்கின்றவர்கள். ஆறாவது பகுதி, இந்த ஐந்து பகுதிகளிலும் இருக்கும்படியான விவசாயத் தொழிலாளர்கள். இந்த ஆறு பகுதிகள்தான் விவசாயத்தில் இருக்கும்படியான பகுதிகள். மு. ப. 11-30

சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்த பிறகு முதல் இரண்டு பகுதிகளும் தானாகவே போய்விட்டன. எங்கோ இருப்பவர்கள் பூமியை வைத்துக்கொண்டிருக்கும்படியான நிலைமை இல்லை. ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர் என்று நிலத்தை வைத்துக் கொண்டிருக்கும் லாண்ட் லார்டுகளும் இல்லை. சட்டப்படி 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் தான் இருக்க முடியுமேதவிர பாக்கி ஒன்றும் இருக்க முடியாது. அமைச்சர் அவர்கள் பிரசங்கம் செய்தார்கள், நிலச் சீர்திருத்தச் சட்டத்திலுள்ள ஓட்டைகளை அடைக்க நான்தான் வந்திருக்கி

றேன் என்று தனி அவதாரமாகப் பேசுகிறார்கள், முதலமைச்சர் அவர்கள், எந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தையும் கொண்டுவரப் போவதில்லை, பயப்படாதீர்கள் என்று பேசுகிறார்கள். பெரிய அளவு நிலம் வைத்திருப்பது மாதிரியும் பெரிய பணக்காரர்களாக இருப்பது மாதிரியும் பேசி மக்களிடத்திலே குழப்பத்தை உண்டாக்கப் பார்க்கிறார்கள்.

நான், நிலச் சீர்திருத்தத்தைப் பரிபூரணமாக ஆதரிக்கிறேன். அதோடு மாத்திரமல்லாமல், நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நாங்கள் கொண்டுவந்ததன் காரணமாகத்தான் உற்பத்தி பெருகியிருக்கிறது என்று சொல்ல முடியும். கொஞ்சம் கொஞ்சம் நிலம் வைத்துக்கொண்டிருப்பதன் காரணமாகத்தான் அதிகமாகப் பாடுபட்டு உற்பத்தியைப் பெருக்க அடிப்படையாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பெரிய முதலாளிகள், நிறைய நிலம் வைத்திருப்பவர்கள் தங்களுடைய சொத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்றால் தொழிலாளர்களை நல்ல நிலையில் வைத்துக்கொண்டால்தான் முடியும் என்பதை எச்சரிக்கையாகக் கூற விரும்புகிறேன். தொழிலாளர்களுக்குத் தகுந்த ஊதியத்தைக் கொடுக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தொழிலாளர்களும் கிடைக்கும் ஊதியத்திற்குத் தகுந்த மாதிரி உழைக்கவேண்டும். கம்யூனிஸ்டுக் கட்சியினருக்கு ஒன்றுமே வேண்டாம், எல்லாவற்றையும் ஆக்கிரமித்துக் கொள்ளலாம் என்பது அவர்களுடைய சித்தாந்தம். உழைப்புக்குத் தகுந்த ஊதியம், ஊதியத்திற்குத் தகுந்த உழைப்பு என்பதுதான் எங்களுடைய சித்தாந்தம். ஆனால் தி.மு.க.வுக்கு அந்தப் பக்கம் கம்யூனிஸ்டு சித்தாந்தம், இந்தப் பக்கம் காங்கிரஸ் சித்தாந்தம் என்று சொல்லிக் கொண்டு, ஒரு தனிப்பட்ட சித்தாந்தத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திரு. அரங்கண்ணல் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். தேங்காய் நாரில் இருந்து ரப்பர் எடுக்கிறோம் என்று தேர்தல் மானிபெஸ்டோவிலே சொன்னார்கள். அந்தத் திட்டத்தை ஏன் அமல்படுத்தவில்லை என்று கேட்டால் வாய்மூடி இருக்கிறார்கள். இவர்கள் கொடுத்த திட்டம் ஒன்றையாவது இவர்களால் செய்ய முடிந்ததா? கடல் ஆமை பிடிக்கும் திட்டம், கசாப்புக் கடை வைக்கும் திட்டம், கடல் பாசியில் இருந்து அல்வா பண்ணும் திட்டம் இவற்றையெல்லாம் அமல்படுத்துங்களேன். இவையெல்லாம் பேரறிஞர் மறைந்தவர் கொடுத்த திட்டங்கள். இதே சட்டசபையில் எதிர்க் கட்சியில் இருந்தபோது கூறிய திட்டங்கள் . . .

திரு. என். சங்கரய்யா : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். கணபதியா பிள்ளை அறிக்கையின்மீது விவாதம் நடைபெறுகின்றதா ? அல்லது திட்டத்தைப்பற்றிய விவாதம் நடைபெறுகின்றதா ? இவ்வாறு பேசுவது எதிர்க்கட்சித் தலைவருக்கு முறைதானா?

1969 செப்டம்பர் 13]

திரு. பி. ஜி. கருத்திருமன்: கம்யூனிஸ்டு கட்சியைப்பற்றியும் சொல்ல வருகிறேன். திரு. கணபதியா பிள்ளை என்ன சொல்லியிருக்கிறார்? விவசாயிக்கு ஐந்து மாதங்கள்தான் வேலை இருக்கிறது, ஏழு மாதங்களுக்கு வேலை இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். பெரிய நீதிபதி சொல்லி இருக்கிறார். அப்படி வேலை இல்லாதவர்களுக்காகப் போட்ட திட்டத்தை நிறைவேற்றுங்களேன். மனம் உருக, 'பார்த்தீர்களா? ஐந்து மாதந்தான் வேலை இருக்கிறது' என்று கூறுகிறார். நீதிபதியைக் குற்றம் சொல்லுவதற்கில்லை. யார் யார் எந்த எந்த வேலையைச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்ய வேண்டும். சமையல் செய்கிறவன் சங்கீதம் பாடப் போகலாமா? சங்கீதம் பாடுகிறவன் கொல்லத்து வேலை செய்ய முடியுமா நீதிபதிக்குக் கோர்ட்டில் வேண்டுமானால் நீதி கொடுக்கத் தெரியும். திரு. சீமைச்சாமி அவர்கள் சொன்னதை நான் பரிபூரணமாக ஆதரிக்கிறேன். இரண்டு எஞ்சினியர்கள் சேர்ந்து ஆற்றில் பிரவாகம் போய்க்கொண்டிருக்கும்போது எப்படி ஆற்றைக் கடப்பது என்பதற்கு ஆவரேஜ் ஆக ஐந்து அடி இருக்கிறது என்று சொல்லி ஆற்றைக் கடக்க முயற்சித்ததுபோல்தான் கணபதியா பிள்ளை ரிப்போர்ட் இருக்கிறது. ஒரு எக்கருக்கு ஒரு ஆளுக்கு இரண்டே முக்கால் ரூபாய் வீதம் 9 ஆட்களுக்கு ரூ. 24.75-க்குள் உழுதுவிட முடியும் என்று கூறுகிறார். நஞ்சை புளியம்பட்டியில் ஆயிரம் எக்கரையும் கொடுத்து 25,000 ரூபாயையும் கொடுத்து விடுகிறேன், நீதிபதி அவர்களை உழச் சொல்லுங்கள். நீதிபதி அவர்கள் கொடுத்த ரிப்போர்ட் முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. 'Ploughing without bullocks' 13-வது பக்கத்தில் 3 ரூபாய் என்று இருக்கிறது; 11-வது பக்கத்தில் 2¾ ரூபாய் என்று இருக்கிறது. விஷயம் தெரிந்தா எழுதி வைத்திருக்கிறார்? படித்தவரா? அறிக்கையிலேயே முன்னுக்குப் பின் முரண் இருக்கிறதே.

	RS.	P.
Ploughing 9 (men) at..	2	75
Ploughing where bullocks and ploughs are provided by the labourer (men).	5	25

சமையல் செய்கிறவன் சங்கீதம் பாடினால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது. அப்படிக் கொடுக்கப்பட்ட ரிப்போர்ட்டை இந்தச் சர்க்காரும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஐம்பது ரூபாய் கொடுக்கவேண்டிய இடத்திலே 25 ரூபாய் குறைவாக இருக்கிறது. இருபத்தைந்து ரூபாயிலே மூன்று உழவு செய்து நடவு செய்ய வேண்டுமென்றால் உண்மையான விவசாயி ஏற்றுக்கொள்ள மாட்டான். இந்த ரூபாய்க்கு உழுவதாக இருந்தால் எத்தனை எக்கர் வேண்டுமானாலும் கொடுக்கிறேன். பத்து ரூபாய் போனஸ் வேண்டுமென்றாலும் கொடுக்கிறேன். உழ முடியுமா?

எட்டு மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறார். இது 'பிராக்டிகல் இம்பாசிபிலிடி'. காலையில் 7 மணிக்கு மாட்டை ஓட்டிக்கொண்டு போனால் ஒரு மணிக்குத்

திரும்பி விடுவான். அனுபவம் இல்லாமல் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். நல்ல கூலி கொடுக்க வேண்டும், தகுந்த வேலை செய்ய வேண்டுமென்பதை நான் ஆதரிக்கிறேன். இந்த ரிப்போர்ட் விவசாயிக்காகக் கொடுத்த ரிப்போர்ட் அல்ல, கண் துடைப்பு ரிப்போர்ட். உண்மையான விவசாயி யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதை அரசியல் காரணத்திற்காக வேண்டுமானால் ஏற்றுகொள்ளலாம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: விவசாயிகளா, விவசாயத் தொழிலாளர்களா?

திரு. பி. ஜி. கருத்திருமன்: கோவை மாவட்டத்தில் இந்தப் பிரச்சினை வரவில்லையே. நான் முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இப்போது சிபார்சு செய்யப்பட்டிருக்கிற கூலி விகிதத்தைவிட அதிகப்படியான கூலியை பரம்பரை பரம்பரையாகக் கோவை மாவட்டத்தில் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆகவேதான் அங்கு தகராறு என்பதே கிடையாது. அதனால் தான் அங்கு உற்பத்தி பெருகியிருக்கிறது.

ஹரிஜனங்கள்தான் விவசாயத்தின் முதுகெலும்பாக இருப்பவர்கள். உற்பத்தியை அதிகரிப்பதில் முக்கியமான பங்கு எடுத்துக் கொள்பவர்கள் அவர்கள்தான். நந்தனார் சரித்திரம் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாததல்ல. வேதியர் ஜோராக இருந்திருக்கிறார். நந்தனை அடிமையாக நடத்தியிருக்கிறார். அப்படி அந்த மக்களை அடிமைகளாக, மிகக் கேவலமாக, மிக மோசமாக நடத்தி வந்த அந்தப் பகுதியிலிருந்துதான் வந்திருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். அவர்களைப் பார்த்து நான் பரிதாபப்படுகிறேன். அந்த இடத்திற்கு இப்படி ஒரு ஏற்பாட்டைக் கொண்டு வந்திருப்பதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்த ஏற்பாட்டிற்கு நன்றி. ஆனால் அப்படி வருவதற்கு எது முன்னோடி என்று பார்க்க வேண்டும். நாங்கள் சொல்லித்தான் இது வந்திருக்கிறது என்று கம்யூனிஸ்டுகள் சொல்லி வருவதுபற்றி முதலமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். தி.மு.க. அரசுதான் இதைக் கொண்டுவந்திருக்கிறது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆக, கூட்டணியில் பிளவு வந்து விட்டதா இல்லையா? உழைப்புக்குத் தக்க ஊதியம் கொடுக்க வேண்டும், ஊதியத்திற்குத் தக்க உழைப்பும் இருக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். (குறுக்கீடு). பெரிய அறிவாளிகள் இருக்கிற இடத்தில் அப்படித்தான் இருக்கும். முட்டாள்கள் இருக்கும் இடத்தில் அப்படி வருவது கிடையாது. எங்கெங்கு சிறப்பாக இருக்கிறதோ, அங்கு அபிப்பிராய பேதங்கள் இருக்கத்தான் செய்யும். அதற்குப் பரிகாரம் காண்பதுதான் விவேகம்.

கீழ் வெண்மணிச் சம்பவத்தை ஒட்டித்தானே இந்த அறிக்கை வந்தது? ஏழை விவசாயிகளுக்காகவா கொண்டுவந்திருக்கிறீர்கள். 42 பேர்கள் எரிக்கப்பட்டார்கள். அந்தச் சூழ்நிலையில் உரு

வானதுதான் இந்த அறிக்கை. கம்யூனிஸ்டுகள் கூட்டம் போட்டார்கள். நாங்கள் ஆறு லிட்டர்கள் வாங்கித் தருவோம் என்று சொன்னார்கள். அதற்காக எழுதிய ரிப்போர்ட் இது. வோட்டு எங்களுக்கு என்றால் ஆறு லிட்டர் வாங்கியே தீருவோம் என்று சொன்னார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. நாங்கள் ஏழை பங்காளர்கள் அதற்காகத்தான் இதைக் கொண்டுவந்திருக்கிறோம் என்று சட்டசபையில் சொல்லலாம். அவர்கள் சவால் விட்டார்கள், ஊர் ஊராகச் சொன்னார்கள், ஆறு லிட்டர் வாங்கித் தருவோம் என்று. இதில், 54 லிட்டர் வந்தால் 6 லிட்டர் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. பாடுபட்டு உற்பத்தியைப் பெருக்குபவனுக்குத் தண்டனை. உழைத்து நன்கு உற்பத்திசெய்து அதிகமாக உற்பத்தியைப் பெருக்கினால், 60 கலம் விளைவித்தால் 7 கலம் கொடுத்தாக வேண்டும். ஒரு சோம்பேறி விவசாயி 20 கலம் விளைவித்தால் 2 கலம் கொடுத்தால் போதும். ஆக, சோம்பேறி, விவசாயம் தெரியாதவன், விவசாயத்தைக் கவனிக்காதவன் கம்மியாகக் கூலி கொடுத்துத் தப்பித்துக் கொள்கிறான். ஆக, கஷ்டப்பட்டு 60 கலம் உற்பத்தி செய்பவனுக்குத் தண்டனையா ? ஆறு லிட்டர் கொடுக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. 'வைட் ட்ருக்ட்' செய்து கொண்டு போவார்கள். பார்த்தீர்களா, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேண்டாமென்று சொல்லிவிட்டார் என்று. நல்ல முறையில் வேலைசெய்து தகுந்த கூலியை, நல்ல கூலியை எடுத்துக் கொள்ளட்டும். கோவை மாவட்டத்தில் அது அமலில் இருக்கிறது. 'காண்ட்ராக்ட் லேபர்' ஆக விட்டு விடுவோம். சீக்கிரமாக வேலை செய்தால் அதிகபடியாகக் கிடைக்கும்.

எட்டு மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். 'கோ ஸ்லோ பாலிஸி' என்கிறார்கள் கம்யூனிஸ்ட்கள். அறிவாளை வைத்துக் கொள்ளுங்கள், அறுக்க வேண்டாம் என்கிறார்கள்

திரு. என். சங்கரய்யா : பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த ரிப்போர்ட்டைப்பற்றிப் பேச வேண்டுமேதவிர கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி அவதூறுகள் கூறுவதற்காக இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தக் கூடாது. அப்படியென்றால் ஒரு மணி நேரம் விவாதம் நடத்தப்பட வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எனக்குச் சொல்ல உரிமை இருக்கிறது. அவர்களது திருவிளையாடல்களைச் சொல்லுவதற்குத்தானே சட்டசபை?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன்: எங்கள் சங்கத்தில் உள்ளவர்களுக்குத்தான் அறுவடைக்குக் கொடுக்க வேண்டும், வெளி ஊர்களிலிருந்து ஆட்களைக்கொண்டு வரக்கூடாது என்று சொல்கிறார்கள்.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் : தஞ்சை ஜில்லாவில் எந்த முறை அமலில் இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியுமா ?

திரு. பி. ஜி. கருத்திருமன்: 'பழையன கழிதலும் புதியன புகுதலும் கால வழுவல' என்பதுபோல் அதைவிட நன்றாகப் போக வேண்டும். இன்னும் நன்றாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்ல எனக்கு உரிமை இல்லையா என்று கேட்கிறேன். அது கம்யூனிஸ்ட்களுக்குள்ள தனி 'ப்ரான்டா' என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கீழ்த் தஞ்சையில், கோவை மாவட்டத்தில் இருந்து வரும் முறைதான் வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விரும்புகிறார்களா என்பதை அவர்கள் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: எங்கள் மாவட்டத்திலிருந்து போய் அங்கு விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். வேண்டுமானால் அங்கு போய்க் கணக்கு எடுத்துப் பாருங்கள். எவ்வளவோ விஷயங்கள் அவர்களுக்குத் தெரியாது, அதில் இது ஒன்று. கோவை மாவட்டத்தில் இருந்து போய் அங்கு விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். பட்டுக்கோட்டையில் சில பேர்கள் இருந்தார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எனக்கு எதுவுமே தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். எல்லாம் தெரிந்த திரு. கருத்திருமன் எங்கெங்கு கோவை மாவட்டத்திலிருந்து போய் இம்மாதிரி வேலை செய்துகொண்டிருக்கிறார்கள், அவர்கள் கோவை மாவட்டத்தில் உள்ள முறையைத்தான் அனுஷ்டிக்கிறார்களா என்பதை, எல்லாம் தெரிந்த திரு. கருத்திருமன் அவர்கள் சொல்ல வேண்டுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: எங்கள் ஊர்க்காரர்கள் குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள். மழை பெய்துகொண்டிருக்கும் போது களத்தில் போட்டுப் பிரிக்க முடியுமா? ஆகவே, நாம் ப்ராக்டிக்கலாக இருக்கவேண்டும். நான் ஆறு விட்டா பற்றிச் சொல்லவில்லை. இந்த ரிப்போர்ட்டில் ஆண்களுக்கு எட்டு மணி நேர வேலை என்றும், பெண்களுக்கு ஏழு மணி நேர வேலை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த மசோதாவில் இந்த மணி நேரம் பற்றிச் சொல்லப்படவேயில்லை. ஏன் அதைப்பற்றிக் குறிப்பிடவில்லை? அதை ஏன் இந்த மசோதாவில் புகுத்தவில்லை? இதுதான் அனுபவக் குறைவு என்று சொல்கிறேன். 11-ம் பக்கத்தில் ரூ. 2¾ என்றும், 13-ம் பக்கத்தில் ரூ. 5¼ என்றும் போடப்பட்டிருக்கிறது. இந்த எட்டு மணி நேர வேலை என்பது முடியுமா என்று பார்க்க வேண்டும். அனுபவ சாத்தியமாக இருக்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் நன்றாக இருக்க வேண்டும், அவர்களது வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும், உழைப்பவர்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் கொடுக்க வேண்டும், இவற்றை நான் பரிபூர்ணமாக ஆதரிக்கிறேன். அதற்கு எங்கள் ஒத்துழைப்பைக் கொடுக்கத் தயார். என் பண்ணையை எடுத்துக் கொண்டால், அதை முன்னின்று நடத்திச் செல்வது ஒரு ஹரிஜன சகோதரர். அவருக்கு நான் பூமி கொடுத்திருக்கிறேன், தானமாகக் கொடுத்தி

ருக்கிறேன். அருமையாகச் செய்து கொண்டிருக்கிறுர். எங்கள் பாட்டனுர் காலத்தில் அவர்களை வீட்டில்கூட விட மாட்டார்கள். நான் வந்ததும் அவர்கள் என் வீட்டில் சகஜமாகப் பழகக் கூடிய நிலைமை இருக்கிறது. நம்பிக்கையாக அவர் வேலை செய்து வருகிறுர்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முதல் அமைச்சர் அவர்கள் நந்தனுர் பிறந்த, அடிமைப்படுத்தப்பட்ட மாவட்டத்திலிருந்து வந்தவர் என்று மட்டும்தான் திரு. கருத்திருமன் அவர்கள் சொன்னுர்கள். இப்போது அவர்கள் குடும்பத்திலுள்ள பாட்டன் பாட்டி பரம்பரையினர் ஆதித் திராவிட மக்களை, ஹரிஜன மக்களைக் கொடுமைப்படுத்தி வந்தார்கள், அடிமைப்படுத்தி வந்தார்கள், அந்தக் குடும்பத்திலிருந்துதான் வந்திருக்கிறேன் என்று சொன்னதற்காக நன்றி.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அவர்கள் தவறு செய்ததை மாற்றி நான் இப்படி நடந்து கொண்டிருக்கிறேன். அது 60 வருடங்களுக்கு முன்னுல் இருந்த நிலை. அது கூடாது என்றுதான் சொல்கிறேன். ஹரிஜனப் பிரச்சினை மட்டும் அல்ல இது. பொருளாதாரப் பிரச்சினை. சாதாரணமாக ஹரிஜனங்கள், திருவண்ணுமலைக்கு இடைத் தேர்தல் சமயத்தில் சென்றபொழுது, ஒரு கிராமத்தைப் பார்த்தேன், ஹரிஜனங்களைவிடப் பாதிக்கப்பட்ட மக்கள். மிகவும் கீழ்த்தரமான பொருளாதாரத்தில் இருப்பதைப் பார்த்திருக்கிறேன். இந்தப் பிரச்சினை, ஹரிஜனங்கள், ஹரிஜனங்கள் அல்லாதவர்கள் பிரச்சினை என்று தயவுசெய்து கருத வேண்டாம். இந்த நிலையில் எப்படி நடத்த முடியும்? வாழ்க்கைத்தரத்தை எப்படி உயர்த்திக் கொடுக்க முடியும்? இரண்டு விதத்திலே நாம் கொடுக்க முடியும். வேலை வாய்ப்புக்களை அதிகமாகக் கொடுக்கும்படியான காரணத்தினுலே முடியும்.

கம்யூனிஸ்டுகள் சொல்லுகிறுர்கள் டிராக்டர்களாலே உழ வேண்டாம் என்று சொல்லுகிறுர்கள். நல்ல வேளையாக முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டுகிறேன். அவர்கள் வேறு ஒரு இடத்திலே சொல்வதைப் பார்த்துப் பாராட்டியிருக்கிறேன். டிராக்டர்களினுல் அதிகப்படியான வேலை வாய்ப்புக் கொடுக்க முடியும், அதனுல் வேலை வாய்ப்புக் குறையவே குறையாது என்று விவசாயம் தெரிந்தவர்கள் பேசுவார்கள். பத்து எக்கராக்களில் டிராக்டர்களைக்கொண்டு உழுதால், பாக்கிப் பேர்கள் மற்ற வேலைகளைப் பார்க்கலாம். டிராக்டர் வேண்டாமென்று சொன்னுர்கள். இதை முதலமைச்சரவர்கள் விட்டுவிடக்கூடாது. தீவிரமாக இந்தக் காரியத்தைச் செய்து, டிராக்டர்கள் உபயோகப்படுத்துவதை அதிகமாகத் தீவிரப்படுத்த வேண்டும்.

இம்மாதிரி நிலையிலே, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நிலையிலே சுமுக உறவு இருக்க வேண்டும். திரு. சீமைச்சாமி அவர்கள் சொன்னுர்கள். கணவனுக்கும் மனைவிக்கும்

இருக்கும்படியான ஒரு உறவு என்று. அந்த உறவு நல்லது அல்ல. கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கமுடியாது. தகப்பன் மகன் நிலையிலே இருக்க முடியும். (குறுக்கீடு). என்னுடைய நிலையைக் கேட்க வேண்டாம், அது நன்றாகத்தான் இருக்கிறது. உலகத்திலே இருக்கும்படியான உறவைச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். தந்தையும் மகனும் இருக்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். சேர்த்து வைத்த சொத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலையிலே, முதலாளிகளும் தொழிலாளர்களும் இருக்க வேண்டும். எங்கோ இருக்கும் சட்டத்தைகொண்டு விவசாயிகளுக்குப் போடக்கூடாது. சர்க்கார் இந்தத் திட்டத்தை, சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். இதை அமல் நடத்துவதில் சர்க்காருக்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன. நியாயமான முறையில் அறுவடை நடத்த வேண்டுமென்று சொல்லும்பொழுது, கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள்? போலீஸ் வரக்கூடாது என்று சொன்னால் என்ன அர்த்தம்? நாங்களே எல்லாம் செய்து கொள்ளுகிறோம், போலீஸ் எதற்கு என்று சொல்லுகிறார்கள். போலீஸ் வந்தால் என்ன? நன்றாக வேலை செய்யக்கூடியவர்கள் ஏன் போலீசைக் கண்டு பயப்பட வேண்டும்?

திரு. என். சங்கரய்யா : நிலப் பிரபுக்கள் பக்கம் வருவதால், அதை வேண்டாமென்று சொல்லுகிறோம்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: **The cat is out of the bag.** நான் சொல்லுகின்ற குற்றச்சாட்டை மறந்து விடுகிறார்கள். நான் அதற்கெல்லாம் பயப்படப் போவதில்லை. விவசாயத்திற்கு 5 ஏக்கராக்களை, கம்யூனிஸ்ட் கட்சிக்காரனாலும் சரி, டி.எம்.கே-க்காரனாலும் சரி கொடுத்து, இந்த 'காஸ்ட் ஆஃப் கல்ட்டிவேஷன்' படி செய்து அதற்குப் பிறகு விலையைப் பார்த்து திருப்திப் படுவார்களா? ஒருவர் பிரசங்கம் செய்தார்—எனக்கு 100 வீடுகள் இருந்தால் ஏழை எளிய மக்களுக்கு 99 வீடுகளைக் கொடுத்து விடுவேன், எனக்கு 100 ஏக்கரா நிலங்கள் இருந்தால் ஏழை எளியவர்களுக்குப் பிரித்துக் கொடுத்து விடுவேன் என்று சொன்னாராம். அப்பொழுது கூட்டத்திலிருந்த ஒருவர், உங்களுக்கு என்ன இருக்கிறது? என்று கேட்டவுடன், "எனக்கு இரண்டு ஆடுகள் இருக்கின்றன" என்றார். உடனே அவர், அந்த இரண்டு ஆடுகளில் ஒரு ஆட்டை கொடுத்து விடுங்களேன் என்று சொன்னபொழுது, அதுதான் கொடுக்க முடியாது என்று சொன்னார். அதைப்போல், கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதைப்போல், "எனக்கிருந்தால் கொடுத்து விடுவேன்" என்று சொல்வது. கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கும்படியானவர்கள் எந்த இடத்திலாவது கொடுக்கப்பட்ட காரியத்தைச் சரியாக செய்திருக்கிறார்களா? சொல்லட்டுமே. விவரமாக, இந்த இடத்திலே, இந்த உற்பத்தியைப் பெருக்கிவிட முடியும், செய்து விட முடியும், கூலிகளைக் கொடுத்திருக்கிறோம் என்று நமது முதலமைச்சரவர்கள் சொல்லுவார்களா? இப்பொழு

திருக்கும் கூலிகளைவிட, அதிகமாக, 30 வருஷங்களாக நான் கொடுத்துக்கொண்டிருக்கிறேன், என்று நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். தஞ்சாவூர் மிராசுதாரர் தனிச் சமாச்சாரம். உழைப்பிற்குத் தகுந்த மாதிரி நாம் நடந்துகொள்ள வேண்டும். மனிதனை மனிதனாக நடத்த வேண்டும். உழைப்பிற்குத் தகுந்த மதிப்புக் கொடுக்க வேண்டும். அப்படியில்லாத சமயத்தில் இப்படிப்பட்ட குழப்பங்கள் வந்துகொண்டுதான் இருக்கும். இந்த நிலையை முன்பே உண்டு பண்ணியிருந்தால், கம்யூனிஸ்ட்களின் வாலாட்டம் ரொம்ப நாட்களுக்கு முன்பு அறுக்கப்பட்டிருக்கும்.

திரு. என். சங்கரய்யா: கம்யூனிஸ்ட்களின் வாலாட்டம் அறுக்கப்பட்டிருக்கும் என்று சொல்வதை அனுமதித்தால் உடனே அதற்குப் பதில் சொல்ல உரிமை வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அந்தப் பேச்சில் இடைமறிப்பதற்கு அமைச்சர்களுக்கு மாத்திரம்தான் உரிமை உண்டு. சட்டசபையில் உள்ள வேறு எந்த உறுப்பினருக்கும் அந்த உரிமை கிடையாது என்பது உறுப்பினர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில் 'பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன், பாயின்ட் ஆஃப் ஆர்டர், பாயின்ட் ஆஃப் பெர்ஸனல் எக்ஸ்பிளனேஷன்' என்று இதுமாதிரி எழுந்து பேச முடியுமே தவிர, ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது மற்ற உறுப்பினர்கள் அவ்வப்போது குறுக்கிட்டுக்கொண்டேயிருந்தால் கூட்டத்தை எப்படி நடத்துவது? இன்னும் 'பில்' பாஸ் பண்ண வேண்டியிருப்பதால் நீங்கள் பேசுவதற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்பு கொடுத்தால் பேசிக் கொள்ளுங்கள். எனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்பொழுது இடைமறித்துப் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சி அல்லாத உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில் ஏதாவது ஒரு குற்றச்சாட்டை காங்கிரஸ் கட்சி மீது சொன்னவுடனே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் உள்பட கொதித்தெழுந்து அப்படி, காங்கிரஸ் கட்சி என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது என்றெல்லாம் உடனடியாக மறுத்திருக்கிறார்கள். அதே உரிமையைத்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் கேட்கிறார்கள். பொதுவாக, இந்த அறிக்கையின் மீது பேசுகின்ற நேரத்திலே, கம்யூனிஸ்ட் கட்சியை இழுக்கத் தேவையில்லை. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் போகிற போக்கைப் பார்த்தால், ஏதோ இந்த அறிக்கையே கம்யூனிஸ்ட் கட்சிக்காகத்தான் வந்தது போலவும், கூலி உயர்வே கம்யூனிஸ்ட் கட்சியால்தான் தரப்பட்டது என்று சொல்லக்கூடிய முறையிலே சொல்லிக்கொண்டு போவார்கள் போல் தெரிகிறது. பொதுவாக, மக்கள் நல அரசு செய்யக்கூடிய காரியத்தைத்தான் செய்திருக்கிறது. அதை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. என். சங்கரய்யா: கம்யூனிஸ்ட்களின் வாலாட்டம் என்று குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தை சட்டமன்றத்தில் பயன்படுத்தக்கூடிய வார்த்தைதானா? அந்த வார்த்தையை வாபஸ் வாங்கச் செய்ய வேண்டும். அதைப்பற்றித் தலைவரவர்களுடைய முடிவு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: துணைச் சபாநாயகர் அவர்களே, முதலமைச்சரவர்கள் தலையிட்டுச் சொன்னார்கள். சாங்கிரசைப் பற்றிப் பேசும்பொழுது . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வாலாட்டம் என்பது பார்லிமெண்டரி வார்த்தை.

திரு. என். சங்கரய்யா: அப்படியென்றால், காங்கிரஸ்காரர்கள் 20 வருஷங்களாக வாலாட்டிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது அவர்கள் வால் அறுந்து போய்விட்டது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: எங்களுடைய வால் அனுமார் வால் மாதிரி. இது இரவல் வால் இல்லை. நல்ல வால்தான். பக்தியுள்ள அனுமானின் வால். இராவணனிடம் ஆட்டிய வால்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: துணைச் சபாநாயகரவர்களே, இம்மாதிரி ஒரு விவாதத்திலே நான் முன்பு பேசும்பொழுதுசான், காங்கிரஸ் கட்சியைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னேன். அதற்கு, எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், "அதை நிரூபிக்க முடியுமா"? என்று கேட்டு, நான் "நிரூபிக்கிறேன்" என்று சொல்லி, "கமிட்டி அமைப்பு" என்று அப்படியெல்லாம் ஒரு காரியம் நடந்தது. எனவே, இப்பொழுது, வாலாட்டுகிறார்கள் என்பதை அவர்கள் நிரூபிக்க முடியுமா? அதற்குப் பொறுப் பேற்றுக் கொள்கிறார்களா என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: துணைச் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இருக்கும்படியான பிரச்சினையை நான் ஏற்கனவே விளக்கிக்கொண்டிருக்கும் சமயத்தில் சில தோழர்கள் குறிப்பிட்டார்கள், இந்த அறிக்கை கம்யூனிஸ்ட்களினுடைய போராட்டத்திற்காகத்தான் வந்தது என்று சொன்னால், அது தவறு என்று சொல்லத்தான் அந்த அடிப்படைத் தத்துவத்தைச் சொல்லிக் கொண்டிருந்தேன். சேமநல சர்க்காராக இருக்கக்கூடியவர்கள், மக்களுடைய, விவசாயிகளுடைய குறைகளை, பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியவர்கள் ஏற்கனவே இருந்த சர்க்கார் நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். நல்ல பணிகளுக்கு உறுதுணையாக நாங்கள் இருக்கிறோம், இருந்து வருகிறோம். எங்களுடைய கொள்கை, ஆட்சியிலே யார் இருக்கிறார்கள் என்பது பிரச்சினை அல்ல. யார் நல்ல காரியத்தைச் செய்கிறார்கள் என்ற பிரச்சினை தான். ஏழை எளிய மக்களுக்கு நல்ல வாழ்வு கொடுக்கும் காரியங்

களில் எங்களுடைய ஆதரவு மட்டுமல்லாமல் உறுதுணையாக இருந்து ஒத்துழைக்கத் தயாராகயிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதைப் பொறுத்தவரையிலே 1953-லே தஞ்சாவூர் பண்ணையாள் ப்ரொட்டக்ஷன் ஆக்ட் கொண்டு வரப்பட்டது, பிறகு நிலச் சீர்திருத்தம் கொண்டு வந்தோம். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற அளவிலே கொண்டு வந்தோம். அதைத் தொடர்ந்து இப்பொழுது விவசாயி களுக்கு நியாயமான கூலி அடிப்படையாக இருக்கும்படியான சட்டத்தைக் கொண்டு வந்து, காங்கிரஸ்காரர்கள் கொண்டு வந்த சட்டத்திற்கு அனுசரணையாக இருக்கும் சட்டத்தை, அது இந்த கட்சி அல்ல, எந்தக் கட்சி கொண்டுவந்தாலும் அந்த சர்க்காருக்கு நாங்கள் நிச்சயமாகப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்வதோடு மட்டும் அல்ல, தொடர்ந்து காரியத்திலே செய்ய வேண்டுமென்பதற் காக, இதற்காக உங்கள் கூட்டணியிலே இருக்கும் கம்யூனிஸ்ட் தோழர்களுக்குத் தயவுசெய்து இடம் கொடுக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இது அவர்களால் வந்தது அல்ல. அவர்கள் சும்மா பூச்சாண்டி காட்டுகிறார்கள், பயப்படாதீர்கள் என்று சொல் வதற்காக இதை ஆதரிக்க ஆசைப்படுகிறேன். ஆகவே, நான் சொல் வதெல்லாம் என்னவென்றால், இதைத் திட்டவட்டமாகக் கொண்டு வரவேண்டும்.

இன்னும் சில சொல்ல ஆசைப்படுகிறேன். வேஜ் போர்ட் இருக் கிறது என்று சொல்லுகிறோம், சட்ட திட்டம் எல்லாம் போட்டிருக் கிறோம். அதையெல்லாம் அமல் செய்கிறார்களா? தொழிலாளர் களுக்குக் கூலி இவ்வளவு என்று சட்டப்படி நிர்ணயித்திருக்கி றோம். சட்டம் போட்டிருக்கிறோம். ஆனால், எத்தனையோ பேர் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள், ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிறார் கள். பத்திரிகைத் தொழிலாளர்களுக்கெல்லாம் வேஜ் போர்ட் இருக்கிறது. சில பத்திரிகைகள் ஒரு இடத்திலும் வேஜ் போர்ட் (குறுக்கீடு) இதை அமல் நடத்துகிற மாதிரி வேஜ் போர்ட் குறிப் பிட்டவைகளையும் சர்க்கார் அமல் நடத்த வேண்டுமென்றுதான் கேட்கிறோம். எத்தனையோ பத்திரிகைகள் இலட்சக்கணக்காக வெளியிடுகிறார்கள். ஆனால், கையிலே ஒன்றும் இல்லையென்று சொல் கிறார்கள். அது எப்படி வருகிறது, எப்படிப் போகிறது என்று தெரியவில்லை. (குறுக்கீடு) இத்தனை லிட்டர் கொடுக்க வேண்டு மென்று சொல்கிறார்கள். இதை அமுல் நடத்தப் போகிறேன் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே இன்டஸ்ட்ரீசிலே வேஜ் போர்ட் நியமித்து இருக்கிறார்களே, அது சொல்லியபடி இந்த சர்க்கார் நடந்துகொண்டு வருகிறார்களா? அதன் சிபார்சுகளை அமல் நடத்தப்படாமல் இருப்பதைப் பார்த்துக்கொண்டு வருகிறீர்கள். (குறுக்கீடு) மெட்ராசிலேயே கேட்கிறேன். சில பத்திரிகைகள் இருக்கின்றன. அந்தப் பத்திரிகைகளிலே வேஜ் போர்ட் நிர்ண யித்த பிரகாரம் சம்பளம் கொடுக்கப்படுகிறதா? ஏழைத் தொழி லாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்

ந.ப. 2-30

களை, அவர்கள் வெளியே போவதற்கும் வழியில்லை, ரூ. 200 என்று கையெழுத்து வாங்கிக்கொண்டு, ரூ. 100 தான் கொடுக்கப்படுகிறது. பெரிய பதவியிலே இருக்கிறார்களாம், கேட்டால் கட்டி உதைக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், பார்த்தீர்களா, காங்கிரஸ்காரர்கள் செய்து விட்டார்கள் என்று பாரா பாராவாக வருகிறது பத்திரிகையிலே. முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு முன்னாலேயே இந்தி ஒழிந்துவிட்டது என்று போடுகிறார்கள். முதலிலே பிடித்து உள்ளே போட வேண்டாமா இவர்களையெல்லாம், இது மாதிரியான தவறான செய்தியை போடுபவர்களை? இப்பொழுது 'தினத்தந்தி', 'மாலை முரசு' பத்திரிகைகளெல்லாம் வருகின்றன. இவர்கள் ஏழைக் கூலிகளுக்குக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், தொழிலாளர்கள் பெட்டிசன் எல்லாம் கொடுத்தார்கள். நாங்கள் 'தினத்தந்தி', 'மாலைமுரசு' பத்திரிகைகளிலே இருக்கிறோம், எங்களவர் முக்கியமான பதவிகூட வகிக்கிறார்கள், நீங்கள்தான் கூலியைப்பற்றியெல்லாம் கேட்க வேண்டுமென்று என்னைக் கேட்டார்கள். ஆகவே, இதில் முதலமைச்சர் திட்டவட்டமான பூரணமான நடவடிக்கை எடுப்பார்கள் என்ற பூரணமான நம்பிக்கை எனக்கிருக்கிறது.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். 'தினத்தந்தி,' 'மாலைமுரசு' இவைகளிலுள்ள எல்லா உரிமைகளையும் தொடர்புகளையும் அறுத்துக்கொண்டு விட்டதாக இந்த அவையில் பல தடவை நமது கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், அவர்களை இப்படி இழுக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: கூட்டுறவுத்துறை அமைச்சர் அறுத்தால் அறுத்துக்கொண்டே போகட்டும். நான் பெயரொன்றும் சொல்லவில்லை. இருப்பதாகச் சொல்கிறார்கள். 'தினத்தந்தி' ஆபீசிலே நான் கண்ணாலே பார்த்தேன். எத்தனை எத்தனையோ தொடர்புகளை அறுத்துக் கொண்டிருக்கலாம், புதிய புதிய தொடர்புகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம். (குறுக்கீடு) எனக்கு எத்தனை ஏகரா பூமி, சொத்து இருக்கிறது என்ற விவரங்கள் எல்லாம் சொல்லப் போகிறேன். மனைவி, மகன் அவர்களுடைய சொத்து விவரம் எல்லாம் சொல்லப் போகிறோம் அல்லவா? முதலில் நாம் சுத்தமாக இருக்க வேண்டும். அமைச்சரவர்கள் சுத்தமாக, சிறப்பாக இருக்க வேண்டுமென்று ஏன் சொல்கிறோம்? நான் சொல்கிறேன். இந்தச் சட்டசபையிலே, 20 வருஷமாக அரசியலிலே இருந்திருக்கிறேன், நான் ஏதாவது துர் வினியோகம் செய்திருக்கிறேன் என்று ஒரு தகவல் நிரூபிக்கப்பட்டாலும்கூட அரசியலை விட்டு விலக தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) எல்லோரும் அப்படித்தான் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கணபதியா பிள்ளை அறிக்கைக்கும் திரு. கருத்திருமன் அவர்கள் சொத்து விவரத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

திரு. பி. ஜி. கருத்திருமன்: இதிலே சொத்து விவரம் வருகிறது, ஆதலாலே நான் சொல்லுகிறேன். எனக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது என்று பார்த்தால் 12½ ஏக்கர்கூட கிடையாது. 8 ஏக்கர் 90 சென்ட்தான் எனக்கு இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்களிடம் சொல்லிக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை நன்ருக அமல் நடத்த வேண்டும்; நடத்த வேண்டும் என்ருல் லிட்டரரி சென்சில் இருக்கக்கூடாது. குத்தகை என்னும்படியான நிலையிலே கான்ட்ராக்ட் லேபருக்கு கொடுக்க வேண்டும். இந்த இடத்திலே தொழிலாளிகள் யாராக இருந்தாலும் கூட கொடுக்க வேண்டும். வெளியிலேயிருந்து தொழிலாளிகள் வர சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். அமைச்சரவர்கள், இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே இருக்கிற ஓட்டை உடைசல்களை ஒழிக்க போகிருேம் என்று சொன்னர்கள். வாஸ்தவம்தான். எத்தனையோ பேர் இத்தனை ஏக்கருக்கு இத்தனை மாடுகள் என்று ஆயிரக்கணக்கான மாடுகளை வைத்திருக்கலாம். அதே சமயத்திலே இன்னெரு விஷயத்தையும் சவனிக்க வேண்டும். மிலிட்டரியில் இருந்து திரும்பி வந்தால் பூமியை எடுத்துக் கொள்ளலாம் என்ற உரிமை அவர்களுக்கு இருக்க வேண்டும். படித்த மாணவர்கள், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கும்போது, கிராமத்திற்கு வந்து பூமியிலே சொந்த சாகுபடி செய்யும்படியான நிலைமை இருக்கும் என்ருல்—100 ஏக்கர் என்று சொல்லவில்லை—5 ஏக்கர் இருந்தால் அதில் அவர்கள் நேரடியாக விவசாயம் செய்வதற்கு வாய்ப்புக் கொடுக்கும்படியான நிலை கண்டிப்பாக இருக்கவேண்டும். ஆகவே, வெளியிலேயிருந்து வந்த படித்த மாணவர்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முன் வந்தால், எந்தவிதமான பாதகமும் அவர்களுக்கு இல்லாமல் இருக்க வேண்டும்.

உழுபவனுக்கும் ஒரு சீலிங் இருக்க வேண்டும். உழுபவன் 50 ஏக்கர் வரைக்கும் உழலாம், ஆனல் நிலச் சொந்தக்காரன் 30 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கக் கூடாது என்று சொன்னல் அது நியாயமல்ல. அவனுக்கு 1½ ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேலே உழுவதற்கு உரிமை இருக்கக் கூடாது. அந்த வகையிலே இந்த அறிக்கை பூரணத்துவம் பெறவில்லை.

ஏழை விவசாயிகளுக்கு ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்பதை ஓரளவு நாங்கள் ஒத்துக் கொள்கிருேம். இதிலே கூட ஒரு சில தவறுகள் இருக்கின்றன என்று சொல்ல ஆசைப்படுகிறேன். ரூ. 3 கூலி, இல்லாவிட்டால் 6 லிட்டர் நெல்லும் 1¼ ரூபாயும் என்று இருக்கிறது. ரூ. 3-ல் 1¼-ஐ கழித்து விட்டால், மீதி 1¾ ரூபாக்கு 6 லிட்டர் நெல் கிடைக்குமா? (குறுக்கீடு) கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யட்டும். (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன்,

சர்க்கார் கொடுக்கட்டுமே, வெளியில் இருக்கும்படியான மார்க்கெட்டில் ரூ. 2½ அளவில் விற்கிறது. எங்கு வேண்டுமானாலும் அரிசி போகட்டும் என்று அவர்களே சொல்கிறார்கள். பதுக்கலைப் பிடித்து விட்டோம், 6 இலட்சம் அரிசி கோயம்புத்தூரிலே பிடித்து விட்டோம் என்றும் சொல்கிறார்கள். அரிசி எங்கு வேண்டுமானாலும் கொண்டு போகலாம் என்று சொல்கிறார்கள். பிறகு எப்படி

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எங்கிருந்தும் எடுத்துக் கொண்டு போகலாம் என்று எந்தவிதமான சர்க்கார் உத்தரவும் கிடையாது. மாவட்டங்களிடையே உள்ள தடை எடுக்கப்பட்டது. வேறு மாநிலங்களுக்கு கடத்திச் செல்ல முயற்சி எடுத்தால், அதை சர்க்கார் கண்டிப்பாகத் தடுத்துத்தான் தீரும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: மாவட்டங்களிடையே போகவேண்டியதில்லை. ஓப்பன் சந்தையிலேயே வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். 6 லிட்டர் ரூ. 1¾-ல் கிடைக்கிறதா? 6 லிட்டர் நெல் ரூ. 3½ ஆகிறது. மிராசுதார்களைப்பற்றிப் பேசவில்லை. சாதாரண 2 எக்கர் நிலம் வைத்துள்ளவர்கள் ரூ. 3 கூலி கொடுத்து விடுகிறார்கள். 5 லிட்டர் என்று சொல்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் எடுத்துப் பார்த்தால் அனுபவத்தில் சாத்தியம் இல்லை.

8 மணி நேரம் என்று க்வாண்டம் ஆப் ஒர்க் இருக்க வேண்டும் என்றால் அதை யார் நிர்ணயம் செய்வது? அவரே சொல்லியிருக்கிறார். இது எந்த ஊரிலும் நடக்காது. ஒரு எக்கர் பூமியை 13½ ரூபாயிலே நடப்பு விடுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை சினிமாவிலே தான் பார்த்திருக்கிறேன். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சினிமாவிலே ஜாஸ்தி கொடுக்கிறார்கள்). ஆமாம் ஜாஸ்தி. ரூ. 13½-லே ஒரு எக்கர் நட முடியும் என்று சொன்னால்...

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஆமாம், என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லுங்கள். இது பரவாயில்லை, அல்லது இதைக் குறைக்க வேண்டும், அல்லது இதைச் சேர்க்க வேண்டுமென்று சொன்னால் பரவாயில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: 6 லிட்டர் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். ரூ. 3 அல்லது 6 லிட்டர் கொடுப்பதற்குப் பதிலாக ரூ. 3 ஊதியமாகக் கொடுத்தாலும் சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டும். நீங்கள் ப்ரொக்யூர் செய்து ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை வேண்டாமென்று நான் சொல்லவில்லை. நீங்கள் ப்ரொக்யூர் செய்து கொடுத்து விட்டுப் போங்கள். ரூ. 3 கொடுத்து விடுங்கள். 6 லிட்டர், 5 லிட்டர், 4 லிட்டர் என்று . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கூலியாக நெல் கொடுக்கக் கூடாது, பணம்தான் கொடுக்க வேண்டுமென்று கூறுகிறீர்களா?

திரு. பி. ஜி. கருத்திருமன்: கூலியாக, நெல் அறுவடை சமயத்திலே கொடுக்கப்பட வேண்டும்—இடத்திற்குத் தகுந்த மாதிரி. ஏழை விவசாயிக்கு ரூ. 3 அல்லது 6 லிட்டர் என்று ஏன் போட்டீர்கள்? நான் அதைத்தான் கேட்கிறேன். ரூ. 3 கொடுப்பதில் ஆட்சேபணை கிடையாது . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நெல்லை வைத்துக் கொண்டு ரூ. 3 கொடுப்பேன் என்று சொன்னால், அதைப்பற்றி விசாரிப்பதற்காக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: 10 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் நெல்தான் கொடுக்க வேண்டும். 1½ ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், ரூ. 3 கூலி கொடுக்க வேண்டும். நான் ஏழை விவசாயிகளைப்பற்றித்தான் சொல்லுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிச் சொல்கிற நேரத்தில், அவர்கள் கூறுவது உண்மை என்று நிரூபிக்கப்பட்டால், அது ஏற்றுக் கொள்ளப்படும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: யார் நிரூபிப்பது? விவசாயி, ஏழை விவசாயி ஒரு வருஷம் சாப்பாட்டிற்கு நெல் வைத்துக் கொண்டிருப்பான். தோழர்கள் சொல்லலாம் "புகுந்து எடு" என்று. விவசாயிகளிடத்தில் நெல் இல்லை என்று சொல்ல முடியாது. ஒரு வருஷத்திற்கு வேண்டிய நெல்லை வைத்துக்கொண்டுதான் இருப்பார்கள். நான் சொல்வதெல்லாம் சிக்கலைப் போக்குவதற்குத்தான் சொல்கிறேன். அறுவடை காலத்தில் நெல் கொடுப்பது தான் நியாயம். உழவடி சமயத்தில், நடவு நடுகிற சமயத்தில், பாக்கி வேலைகள் செய்கிற சமயத்தில் ரூபாயாக கொடுக்க வேண்டும். அறுவடை சமயத்தில் நெல்லாகத்தான் கொடுத்தாக வேண்டும், ரூபாயாக கொடுக்கக்கூடாது.

கொள்முதல் விலையை ஏன் ஏற்றவில்லை? ரூ. 2 என்று சொல்கிறார்கள். அது போதுமா? இது நியாயமா? நீங்களே யோசித்துப் பாருங்கள். (குறுக்கீடு) நான் மறக்கவில்லை. கடைசியில் சொன்னால்தான் ஞாபகம் இருக்கும். முதலில் சொன்னால் ஒரு வேளை அமைச்சர் அதை மறந்து விடலாம். இரண்டு ரூபாய் ஏற்றச் சொல்லி எப்பொழுது திரு. ஜெகஜீவன்ராம் கடிதம் எழுதினார்? எப்பொழுது ஏற்றச் சொன்னார்? நீங்கள் ரூ. 10 ஏற்றிக் கொடுங்கள். நான் போராடத் தயாராக இருக்கிறேன். மணியைப் பார்த்து என்ன பயன்? இது அடிப்படை பிரச்னை. மணியைப் பார்த்தால் எனக்குக் கொள்முதல் விலை வந்துவிடுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எனக்கு ஒரு சந்தேகம். இன்று ஹேமாவதி அணையைப்பற்றி ஒரு விவாதம் வைத்திருக்கிறோம். நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் இதைப்பற்றி முடிவு

செய்திருக்கிறோம். இதற்கு இடையிலே இந்த விவாதத்திற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் கூற வேண்டும். பதில் சொன்னதற்குப் பிறகு இதை ஒட்டிய மசோதா நிறைவேற வேண்டும். அதற்குப் பிறகு இதைப்பற்றி விவாதம் என்றால், ஒரு வேளை அணையைக் கட்டி முடித்தாலும் முடித்து விடுவார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தூங்கிக் கொண்டிருந்தால்தான் அவர்கள் அணையைக் கட்டி முடித்து விடுவார்கள். தூங்காமல் விழித்துக்கொண்டு "கருமமே கண்ணாயினர்" என்று நாலடியார் சொல்லியதுபோல, அக்கறையோடு செயலாற்ற வேண்டும். இதோ நான் முடித்து விடுகிறேன். கொண்டுவரப்படவிருக்கும் நியாயக் கூலி மசோதாவைப் பரிபூரணமாக காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன். ஏழை அரிசனங்களுடைய கூலிப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

கூலிப் பிரச்சினை மட்டுமல்ல. விவசாயிகள் இருக்கும்படியான வீடுகள் பிரச்சினை ரொம்பவும் முக்கியம். எந்தெந்த இடத்தில் வீடுகள் இருக்கின்றனவோ அந்த இடத்தை அவர்களுக்கு பட்டா செய்துகொடுக்க வேண்டும், அதற்கான சட்டத்தை உடனடியாகக் கொண்டு வரவேண்டும். அதை ஆதரிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இன்னொருவர் பூமியை வைத்துக்கொண்டு தவறான காரியங்களுக்கு உபயோகப்படுத்துகிற நிலை இருக்கக்கூடாது. அவர்களுக்கு இருப்பதற்கு வீடு வேண்டும், வேலை செய்வதற்கு வாய்ப்பு வேண்டும். மனிதனுக்கு நாட்டில் சம அந்தஸ்து வேண்டும். சமூகத்தில் ஒரு புரட்சி செய்யும்படியான இதை ஒட்டிய மசோதாவை நான் பரிபூரணமாக ஆதரிக்கிறேன். ஏழை விவசாயிகளுக்கு கொள்முதல் விலையை நல்ல விலையாகக் கொடுக்கும்படியான நிலையை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தவேண்டும். அதற்கான உத்தரவாதம் கொடுக்க வேண்டும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்பொழுது பல முறை கம்யூனிஸ்டு கட்சியைப்பற்றி குறிப்பிட்டு, பலவிதமான அவதூறான குற்றச் சாட்டுகளைப் பொழிந்தார்கள். இடையிலே குறுக்கிட வேண்டாம், உரையை முடித்த பிறகு தன்னிலை விளக்கம் கொடுக்கலாம் என்று தலைவர் அவர்கள் சொன்னார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தன்னிலை விளக்கம் என்பது தனிப்பட்ட ஓர் உறுப்பினரைப்பற்றிக் கூறினால்தான்.

திரு. என். சங்கரய்யா: கம்யூனிஸ்டு என்று குறிப்பிட்டு, இங்குள்ள தோழர்கள் என்று குறிப்பிட்டு அவர் பேசினார். ஆகவே தான் நான் விளக்கம் கொடுக்க விரும்புகிறேன்.

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்காக நீங்கள் அந்தக் கட்சியைப் பற்றிப் பேசுவது என்றால் அது தன்னிலை விளக்கம் ஆகாது.

திரு. என். சங்கரய்யா : கட்சியைப் பற்றி பேசவில்லை. அவர்கள் சொல்லியதற்குப் பதில் விளக்கம் கொடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாக கட்சியைப் பற்றிக் கூறினால் தன்னிலை விளக்கம் கொடுப்பது முறையல்ல. தனிப்பட்ட ஓர் உறுப்பினரைப்பற்றிக் கூறினால்தான் தன்னிலை விளக்கம் கொடுக்கலாம்.

திரு. என். சங்கரய்யா : கம்யூனிஸ்ட் கட்சி தங்களுடைய நியாயமான கோரிக்கையைத் தெரிவிக்கிறது. நியாயமான கோரிக்கைகளை தி.மு.க. ஆட்சி ஏற்றுக் கொள்கிறது. யாரையும் ஏமாற்றும் நிலை கிடையாது. நியாயமாகச் சொல்வதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. இதற்கிடையிலே இரண்டு கட்சிக்கும் பிளவு ஏற்படுத்துவதற்கு காங்கிரஸ் கட்சி வாலாட்டம் செய்தால், அந்த வாலாட்டம் வெற்றி அடையாது என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு ஸ்தாபனத்தைப்பற்றி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக நடைபெறுகிற இந்த விவாதத்தின் இறுதி கட்டமாகச் சில வார்த்தைகள் சொல்லி, இதை முடித்து விடலாம் என்று நான் கருதுகிறேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நீண்டதோர் பிரசங்கத்தை நடத்தினார்கள். அந்தப் பிரசங்கத்திற்கு உள்ளே புகுந்தால், எவ்வளவோ மாதிரியான காரியங்களெல்லாம் இருக்கும். இருந்தாலும், அவர்கள் கடைசியில் சொன்ன இரண்டு, மூன்று வார்த்தைகள், அதாவது "பொதுவாக இந்த அறிக்கையையும், இந்தக் கருத்துக்களை ஒட்டி இங்கு வருகிற மசோதாவையும் ஆதரிக்கிறேன்" என்று கூறியதை மட்டும் நான் ஏற்றுக்கொண்டு, அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொண்டு நான் மேலே போகலாம் என்று கருதுகிறேன். இந்த இரண்டு நாட்கள் விவாதத்திலே இந்த அறிக்கையில் அமல்படுத்துகிற முற்போக்கான கருத்துக்களைப்பற்றியும், இதையொட்டி வருகிற மசோதாவைப்பற்றியும் நல்லவகையான கருத்துக்களை நல்ல உணர்வோடு பல உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களைக் கூறியதற்கு நான் நன்றி செலுத்துகிறேன். பல சந்தேகங்கள் கிளப்பப்பட்டன. அந்த சந்தேகங்களைப் பொறுத்தவரையிலும் அரசாங்கத்தின் கொள்கையை மட்டும் நான் சொல்லி, மேலே போவது

நலமாக அமையும். இப்பொழுது இருக்கிற நேர நெருக்கடியை உத்தேசித்து, முக்கியமான குறிப்புகளுக்கு மாத்திரம் நான் பதில் சொல்லி, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

எல்லோரும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கூலி கொடுக்கிற நேரத்தில் தானியமாகத் தான் கொடுக்கவேண்டும், நெல்லாகத் தான் கொடுக்கவேண்டும் என்று கூறப்பட்ட ஏகோபித்த கருத்தை நான் வரவேற்கிறேன். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேண்டுமானால் பணமாகக் கொடுக்கலாம் என்று ஏதோ ஒரு சிந்தனை செய்ய ஆரம்பித்தார்களே தவிர, அது முழுமையான சிந்தனை அல்ல. நடைமுறையில் தஞ்சை மாவட்டத்தில் அறுவடை காலத்தில் பெரும்பாலும் இம்மாதிரியாக நெல்லாகக் கொடுப்பது தான் வழக்கம். அதைத்தான் எல்லோரும் விரும்புகிறார்கள். அது தான் முறை. அதுதான் இந்த மன்றத்தின் ஏகோபித்த கருத்து. இருந்தாலும், அதை ஒரு ரிஜிட் ரூலாக செய்துவிடக்கூடாது, சில வேளைகளில் பிரத்தியட்சமாக அனுபவத்தில் ஒரு சில நிலைமைகள் வரலாம். அதற்காகத்தான் கொஞ்சம் பணமும் கொடுக்கப்படலாம் என்று போடப்பட்டிருக்கிறது. ஆகவேதான், ஒரேயடியாக, தானியமாகத்தான் கொடுக்கவேண்டும் என்று போடப்படவில்லை.

மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் திரு. சிவசுப்பிரமணியம் அவர்களும், திரு. கிட்டப்பா அவர்களும் சிதம்பரம் தாலுகாவிற்கும் இப்படிப்பட்ட ஒரு மசோதாவை விஸ்தரிக்கவேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்தில் நியாயம் நிறைய இருக்கிறது. சிதம்பரம் தாலுகாவிலுள்ள சூழ்நிலையும், விவசாயப் பிரச்சினையும், ஏறக்குறைய தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ளதைப் போன்றதுதான். சிதம்பரம் தாலுகா கொள்ளிடக் கரையில் அமைந்திருக்கிறது. அங்கு இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து, அந்த நிலைமைகள் எந்த அளவுக்கு இருக்கின்றன, இப்பொழுது வரப்போகிற இந்தச் சட்டத்தை அந்தத் தாலுகாவிற்கும் விஸ்தரிக்கலாம் என்பதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதை மட்டும் நான் கூறிக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. மார்டின் அவர்கள் பேசும்பொழுது போலீஸ்காரர்கள், சட்டம் ஒழுங்கைப் பற்றி சொன்னார்கள். சட்டம் ஒழுங்கைப் பற்றிப் பேசும்பொழுது நீதிபதிகள், ஜுடிஷியல் ஆபீசர்ஸ் நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதெல்லாம் சொந்தமான வியாச்சியங்கள் என்று சொல்வதற்கில்லை —சுரண்டல்காரனுக்கும், சுரண்டப்படுகிறவனுக்கும் இடையே இருக்க வேண்டிய நியாயமான, நீதியான காரியங்கள். பெரிய பணக்காரர்கள், வசதி உள்ளவர்கள்தான் நீதி மன்றத்தின் நீண்ட படிக்கட்டுகளில் ஏறி இறங்க முடியும்.

1969 செப்டம்பர் 13] *[திரு. கே. ஏ. மதியழகன்]*

அடுத்து, திரு. மார்டின் அவர்கள் சொன்னார்கள், தாசில்தார் சொன்னால்தான் போலீஸ்காரர் தலையிடலாம் என்று இருக்கிறது, அது தவறு இல்லையா, அதனால் கெடுதல் வராதா என்று கேட்டார்கள். அவர்கள் வழக்கறிஞர். அப்படிச் சட்டத்தில் இல்லை. இப்பொழுது கூட எங்காவது கொள்ளை நடக்கிறது என்றால், எந்தத் தனி மனிதனும், போலீஸ் உதவியைப் பெற உரிமை இருக்கிறது. அதை எந்த மந்திரிமாரும், இந்தச் சட்டமன்றமே கூட தடுத்துவிட முடியாது. இங்கே தஞ்சாவூருக்கு இருக்கும் ஏற்பாடு, போலீஸ்காரர்கள் அத்துமீறி நடக்கக்கூடாது என்பதற்காக, இந்த விசேஷ தாசில்தார் சொன்னால்மட்டும் தலையிடலாம் என்று செய்து கொண்டு இருக்கிற ஏற்பாடு. இந்த ஏற்பாடு இருக்கும்போதே கூட, ஒரு தனிப்பட்ட மிராசுதார், போலீஸ்காரனைக் கூப்பிடலாம். அவர்கள் சொன்னபடி, இந்த ஏற்பாட்டின் அனுபவங்களை ஒட்டிக் காரியங்களைச் செய்யலாம் என்பதை திரு. மார்டினுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாய நிபுணர்களான அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று திரு. சுப்பையா முதலியார் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அனுபவம் உள்ளவர்கள். நண்பர் திரு. சுப்பையா அவர்களும், திரு. ஞானசம்பந்தன் அவர்களும், தஞ்சையில் இருக்கும் நிலைமைகளைக் குறிப்பிட்டு, நாம் ஒரு முக்கியமான கட்டத்திற்கு வந்திருப்பதைப் பாராட்டினார்கள். அதற்கு நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் பல உறுப்பினர்களும்—பெயர்களைத் தனித்தனியாகச் சொல்ல வேண்டாம் என்று நினைக்கிறேன்—எடுத்துச் சொன்னார்கள்—வெளியிலிருந்து ஆட்களைக் கொண்டுவருவது பற்றி. இரண்டு மூன்று கருத்துக்கள் சொல்லப்பட்டன. நண்பர் திரு. சிமைச்சாமி அவர்கள் சொன்ன கருத்து எனக்குக் கவர்ச்சியாக இருந்தது. இராமநாதபுரத்திலிருந்து ஆட்கள் போகக்கூடாது என்றால், வேறு வேறு மாநிலங்களுக்குச் சென்று சண்டை போடலாமா, பம்பாயில் சண்டை போடலாமா என்று கேட்டது நகைச்சுவையாகத் தோன்றினாலும், உண்மை தான். இது என்ன 'ஒன் வே ட்ராபிக்' போன்றதா என்று சொன்னார்கள். இந்த நிலை இன்றைக்கு இல்லை. இதெல்லாம் வருவது கூலியால்தான். அதனால்தான் தகராறுகள் வருகின்றன. உள்ளூர் ஆள் ஆறு லிட்டர் கேட்கிறான் என்றால், இராமநாதபுரத்திலிருந்து 3¼ லிட்டருக்கு வருகிறான் என்பதும் ஒரு காரணமாக இருக்கும். ஆகவே, நாம் செய்ய இருக்கும் மசோதாவின் மூலம் ஒரு பெரிய பிரச்சினையே அடிபட்டுப் போகிறது. அங்கத்தினர்கள் கூர்ந்து கவனித்தால் தெரியும். உள்ளூரில் உள்ளவர்களுக்கு உரிமை உண்டு. அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டிய உரிமை இருக்கிறது. அப்படிப்பட்ட உரிமை இருப்பதால், இது வருகிறது. யாரும் வரக்கூடாது என்றால், தேசத்தில் கன்யாகுமரியிலிருந்து

இமாலயம் வரை யாரும் வராமல் தடையே, வேலியே போட்டு விடுவது என்பதல்ல. யார் வேண்டுமானாலும் எந்த வியாபாரமோ, வேலையோ எங்குவேண்டுமானாலும் செய்யலாம் என்று நாம் வைத்துக்கொண்டிருக்கும் நிலையில், இது எழவில்லை. ஆகவே, சில பேர், வெளி மாவட்டங்களிலிருந்து வருகிறார்கள், குறைந்த கூலிக்கு, என்பது ஒரு காரணம். எல்லாவற்றையும் ' யூனிபர்மாக " ஆக்கி விட்டால், இராமநாதபுரத்துக்காரருக்கும் அந்தக் கூலியைத்தான் கொடுத்தாக வேண்டும். அப்பொழுது இந்தப் பிரச்சினையே கூட எழவில்லை. எழாது. யாரும் தடுக்க முடியாது, அரசாங்கத்தால் கூட இராமநாதபுரத்திலிருந்து யாரும் வரக் கூடாது என்று தடுக்க முடியாது. சட்டத்தில் அப்படித் தடையில்லை. சட்டத்தில் இருந்தால் அது அரசியல் சட்டப்படியேகூட தவறானதாக ஆகும். ஆகவே அந்தப் பிரச்சினைக்கு வழியில்லை.

இன்னொரு கருத்தை நம்முடைய மாயவரம் உறுப்பினர், திரு. கிட்டப்பா அவர்களும், நம்முடைய சீர்காழி உறுப்பினர் திரு. மணி அவர்களும், மற்ற நண்பர்களும் சொன்னார்கள். மடங்கள், ஆதீனங்கள், கோவில்கள் இவற்றின் நிலங்களைப் பற்றி ஒரு முக்கியமான கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அதைப் பற்றி திரு. கணபதியா பிள்ளை அவர்களும் தெளிவாகவே எடுத்துச் சொல்லி, சிபாரிசுகூடச் செய்திருக்கிறார்கள். இப்பொழுது கோவில்கள், மடங்கள் இவற்றிற்கு ஏராளமான நிலங்கள் சொந்தமாக இருக்கின்றன, அவை பப்ளிக் டிரஸ்ட் ஆக்டின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இதிலெல்லாம் துர்விநியோகம் நடைபெற்று, பல காரியங்கள் நடைபெறுகின்றன என்று இந்த அறிக்கையிலேகூட ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

" During the enquiry the Commission had reason to estimate approximately that nearly cone-eighth of all the leases given by the Devasthanams, maths and charitable institutions were bogus leases. "

என்று சொல்லியிருக்கிறார்கள். இது பெருமையான வார்த்தை அல்ல. ஒரு கவுரவமான கமிட்டியிடம், இப்படி குத்தகைச் சீட்டுக்கள் போலி என்ற அளவில் சொல்லியிருக்கிறார்கள். அதோடு கமிஷன் சில நல்ல யோசனைகளையும் அரசாங்கத்திற்கு தெரிவித்திருக்கிறார்கள். ஏறக்குறைய 17,000 ஏக்கரா அளவிற்கு கோவில்கள், மடங்கள், தம்பிரான்கள், இவர்களிடம் இருக்கின்றன. இவற்றை பப்ளிக் டிரஸ்ட் ஆக்டின்படி பயிரிடலாம் என்றும், உச்சவரம்பு சட்டப்படி ஒரு டெனன்ட் ஐந்து ஏக்கருக்கு மேல் வைத்துக் கொள்ளக்கூடாது என்று இருந்தாலும், 635 குத்தகைதார்கள் 5 ஏக்கருக்கு மேல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் விரிவாகச் சொல்லியிருக்கிறது. அதிகமான நிலங்கள் இருப்பதாகவும் ஆராய்ச்சியில் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவற்றைத் தடுக்க, பப்ளிக் ட்ரஸ்ட் ஆக்டிலே உள்ள நல்ல விதிமுறைகளை அமல்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கி

ருர்கள். பொதுவாக ஒரு யோசனையையும் சொல்லியிருக்கிருர்கள். கோவில், மடம், ஆதீனம், அறநிலையங்கள் இவர்களுடைய நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்கவும், இன்னும், அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கவும் வழிவகைகாண, வருவாய் வாரியத்து நிபுணர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்து, பப்ளிக் டிரஸ்ட் ஆக்டையே திருத்தச் சொல்லி யோசனையை வலியுறுத்திச் சொல்லியிருக்கிருர்கள். அதைச் சொல்லிவிட்டு, ஒரு பெரிய கண்டனத்தையும் தெரிவித்திருக்கிருர்கள்.

"The present managements of the trust are not, possibly with a few honourable exceptions, anxious about carrying out the avowed policy underlying the Public Trusts Act. They are more anxious naturally about the chances of collecting the income which they get by leasing out their lands more easily, and without difficulty."

என்று சொல்லியிருக்கிருர்கள். அரசாங்கத்தின் கருத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கம் மடங்கள், கோவில்கள், ஆதீனங்கள் இவைகள் சம்பந்தமான சட்டத்தை நல்ல வகையில் அமுல் நடத்தத் தீவிர முயற்சிகள் எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதற்காக விசேஷ அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று இந்த அறிக்கை பரிந்துரை செய்திருக்கிறது. அதிகாரிகளை அதிகமாக நியமித்து, ஆபீசர்களைத் தனியாக இதற்கென்று நியமித்து சீக்கிரமாகவே, இந்த நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுக்க வாய்ப்புக்களை ஏற்படுத்துவோம் என்பதையும் சொல்ல விரும்புகிறேன். நாம் பப்ளிக் டிரஸ்ட் ஆக்டை திருத்தி, நிலமற்ற விவசாயிகளுக்குக் கோயில் நிலங்களையும், மடாலயங்களின் நிலங்களையும் கொடுத்து, உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வகை 12-30 மு.ப.
யில் ரெவின்யூ துறையில் ஒரு புரபோஸல் இருக்கிறது. இம்மாதிரி செய்தால் உணவு உற்பத்தி பெருகும்; அதே நேரத்தில் மடாலயங்களுக்கு வருமானமும் அதிகரிக்கும். ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் பப்ளிக் டிரஸ்ட் ஆக்டை திருத்தி அமைக்கலாம் என்பதுபற்றி ரெவின்யூ துறை ஆராய்ந்து வருகிறது. இதுபற்றி விரைவிலே நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள், இது சமுதாயப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, வெறும் கூலிப் பிரச்சினை அல்ல என்பதை விளக்கிப் பேசினர்கள். நாம் ஏற்படுத்த விரும்புகின்ற பசுமைப் புரட்சிக்கு இது உறுதுணையாக இருக்கும் என்று கூறினர்கள்.

அடுத்தபடியாக நம்முடைய ஊரைச் சேர்ந்தவரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. கருத்திருமன் அவர்கள் பல விவரங்களை எடுத்துப் பேசினர்கள். ஆண்டாண்டு காலமாக ஏற்பட்டு வருகின்ற அனுபவங்களிலிருந்து இந்தக் கூலிப் பிரச்சினைக்கு முடிவு

கண்டிருக்கிறோம். நாம் வெறும் கணக்குப் போடுவதில்லை. அந்த ஊரிலே இருக்கிற நிலைமைகளை வைத்துத் தயாரித்தது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது தருமம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழைகள், குடியானவர்கள் இவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கும் முயற்சி நம் எல்லோருக்கும் கிடைத்ததற்காக நாம் பெருமைப்பட வேண்டும். இந்த மன்றத்தில் நாம் உறுப்பினர்களாக இருக்கின்ற நேரத்தில் இந்த முயற்சி நடைபெறுவதற்காக நாம் நன்றி தெரிவித்துக்கொள்ளவேண்டும். அதோடு, இந்த மன்றம் சீக்கிரமாக இந்த மசோதாவை நிறைவேற்றித் தரும் என்ற நம்பிக்கையுடன், என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :—

"கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர்கள் சிக்கல்களைக் குறித்த திரு. எஸ். கணபதியா பிள்ளை விசாரணைக் குழுவின் அறிக்கை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

7. அறிவிப்பு.

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாயக் கூலி மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாயக் கூலி மசோதாவை சட்டப் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் மசோதாக்கள் (தொடர்ச்சி).

(ஆ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாயக் கூலி மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 20/1969).

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I beg to move—

'that the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Bill *, 1969 (L.A. Bill No. 20 of 1969) be taken into consideration.'

In December 1968, the Government of Tamil Nadu appointed a Commission of Inquiry under the Commissions of Inquiry Act, 1952 (Central Act LX of 1952), for the purpose of making enquiry into the problems of agricultural labour in East Thanjavur district, the relationship between agricultural labourers and their employers

* **Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 21st August 1969.**

and relevant issues, and for submitting suitable recommendations. The Commission has since submitted its report. The Commission has made certain recommendations *inter alia* for the fixation of fair wages for the agricultural labourers during the cultivation season and harvest time in the taluks of Nannilam. Nagapattinam, Mannargudi, Thiruthuraipoondi, Mayuram and Sirkali.

The Government have carefully considered the recommendations of the Commission and taking into consideration the local conditions prevailing, have decided to adopt a uniform rate of fair wages for all kinds of work during the cultivation season. The Government have also acepted the rates of wages recommended by the Commission for harvest. The Government have also decided to set up the necessary machinery for the enforcement of the payment of fair wages. It has however been considered that it is not necessary for the present to make any provision for the rates of wages for ploughing where ploughs and bullocks are provided by the agricultural labourer.

To give effect to these decisions, the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Ordinance, 1969 (Tamil Nadu Ordinance 4 of 1969) was promulgated by the Governor.

The Bill seeks to replace the said Ordinance.

The Commission has suggested that the rates of wages once fixed should be reviewed by a committee once in three years. The Government has accepted the suggestion and accordingly it has been provided in the Bill that the proposed Act will remain in force for a period of three years, that is, up to and inclusive of 4th August 1972.

I request the House to accept the motion.

DR. H .V. HANDE : Sir, I move—

"That the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Bill, 1969 (L.A. Bill No. 20 of 1969) be referred to a Select Committee consisting of......................Members of the Assembly (names of Members to be furnished later)."

I shall be very brief, because a lengthy discussion has taken place on the Ganapatia Pillai report. The most important point that I want the House to bear in mind is this. The Government are bringing forward the Bill in an atmosphere in which the whole district of Thanjavur is surcharged with emotion. There is fright and fear in the minds of the small pattadars. In the Thanjavur District, especially in the eastern part, there is now a huge section with blue and khaki uniform. Formerly the uniform was of some other colour. I do not know to what party they belong. Unless we have authentic information, we will not be able to find out who is responsible for it. But the whole Thanjavur District, especially the eastern part, is surcharged with emotion. In this context of

emotion the Government are bringing forward this Bill as a corollary or consequence of the Ganapatia Pillai report, which again is a consequence of another unfortunate incident, the Kilvenmani incident, which every section of the House would condemn. It is not as if the consensus of opinion of the various parties has been taken and this Bill brought forward. That is why I say that this Bill should be referred to a Select Committee so that we would be in a position to find out what exactly the position there is.

There are a number of villages in the district. I have myself gone to a few villages and met a few landholders owning three acres and five acres. I had sat in their houses and talked to them. I discovered that there was a certain fright in their mind. They were scared and they did not like even my coming to their place to be made known. They were afraid and said "படையைக் கொண்டுவந்துவிடுவார்கள்".
They were scared to that extent. Friends may laugh at me and say that this man is unnecessarily raising an alarm. The persons are given military training with lathis and pistols. Unfortunately this is going on there and a situation may develop which will go entirely out of the hands of the persons who started it. The Hon. Speaker also may wonder what the atmosphere surcharged with emotion has to do with this Bill. This Bill is going to give to the Ganapatia Pillai report a statutory form. So I request the Ministry to refer this Bill to a Select Committee. No doubt they are going to pass the Bill. I know the fate of the Bill. I want the Chief Minister to give consideration to the serious threat to law and order in East Thanjavur.

We have been told that this is a pro-labour Bill. My contention is that this is an anti-labour Bill. I can prove this very easily. Taking the Buckingham and Carnatic Mills for example, a worker there requires six or seven rupees per day. For a man to eke out his normal livelihood in Madras City, he definitely requires six or seven rupees. Minimum wages must be there. My own party in Bhubaneswar in Orissa has passed the minimum wages resolution. How far is it right to put this into practice is a matter for consideration. If every worker in the Buckingham and Carnatic Mills were to be paid six or seven rupees, the whole mill will collapse and it is likely that a vast section of the labourers, whom we want to help will be thrown out of employment.

Now there are people

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்பது திருத்தம். உள்ளே இருக்கிற மொத்த விளக்கங்களையும் பேச வேண்டுமென்று சொன்னால் எப்படிப் பேச முடியும்?

DR. H. V. HANDE : Sir, I have not spoken on the Report of Thiru Ganapatia Pillai. I am talking on behalf of the party. I am not digressing at all. My request to the Chair is to allow me to finish my speech

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் திருத்தம் மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்பது. இது அவசரமாக வந்திருக்கிறது, நிதானமாக வர வேண்டும் என்பது ஒன்றை எடுத்து விளக்கினலே போதும். விரிவான விளக்கங்களை எடுத்துச் சொன்னல் எப்படி குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க முடியும்?

DR. H. V. HANDE : Sir, I will be very, very brief. I request the Hon. Speaker not to disturb the trend of my thought.

Now I have proved conclusively and to the best of my ability that this Bill is an anti-labour Bill because the people owning less than five acres will be affected. Recently in reply to my supplementary question, the Hon. Minister for Finance has stated that there are nearly 6 lakhs of people who own less than 5 acres in the Thanjavur district. In East Thanjavur there are about 1 1/2 or 2 lakhs of people owning less than 5 acres, and they are scared by this Bill. It is impossible for them to employ labour and that point has not been made in this House so far. Now under the frightening condition, they cannot be employed economically. As my hon. Friend, Thiru Kariamanickam Ambalam has pointed out, if the small farmers have to pay wages in kind and cash and also employ them for a particular period, they will have to starve and they may not even have seeds to sow. Is this Bill going to help them. The Hon. Minister while replying to the debate on the report of Thiru Ganapatia Pillai has stated that the Bill would help promote production. I say this is anti-production Bill, and I can prove it. You can take it that production will suffer. That is my contention.

Then, a number of persons have been scared and they are coming to the Madras City. They could not stay in their place because of the physical threat to them and of the labour problem there. I can prove it but for want of time I do not want to say more on the subject.

Then, the question is, if the small farmers are asked to pay regular wages to the farm labourers, they will have to go to the pawnbrokers for money and after some time they will become insolvent.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தத்தை ஒட்டிப் பேச வேண்டும் என்பது பேரவைத் தலைவரின் ஆணை. இந்த ஆணையை மீறிப் பேசுவதை நான் அனுமதிக்க முடியாது.

DR. H. V. HANDE : Sir, on a point of order. Please listen to my point of order. Do you allow me freedom to explain my point of view viz., that this Bill should be referred to the Select Committee? Are you going to allow me freedom to speak my viewpoint or are you going to cut down any freedom?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் திருத்தத்தை ஒட்டித் தான் பேச வேண்டும். எல்லா விளக்கங்களையும் கொடுக்க வேண்டியதில்லை.

DR. H. V. HANDE : The Hon. Speaker cannot dictate to the Members what speeches they should make

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இன்னதுதான் பேச வேண்டும் என்று சொல்லவில்லை. பொறுக்குக் குழுவுக்கு ஏன் போகவேண்டும் என்பதற்கான காரணங்களை மட்டும்தான் சொல்ல வேண்டும் என்கிறேன்.

DR. H. V. HANDE : I will prove that this is connected with the Bill and I want that this Bill should be referred to the Select Committee. If the Hon. Speaker says that I should not speak on that aspect of the matter, it would become a very, very serious privilege issue. You cannot dictate my speech

THIRU RAMA ARANGANNAL : Sir, this man . .

DR. H. V. HANDE : Who are you

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் ஒருவர் முறை தவறி நடந்துகொண்டால், அதைப் பேரவைத் தலைவருக்கு சுட்டிக் காட்டி, இது முறையா என்று கேட்கலாமே தவிர மற்றொருவர் நிதானம் இழந்துவிடக் கூடாது. இந்த அவையில் ஓர் உறுப்பினர் ஒன்றைக் கேட்க, அவர் கேட்டது சரியில்லை என்றால் அதை என் கவனத்திற்கு கொண்டு வராது, டாக்டர் ஹாண்டே அவர்கள் அவரை பார்த்து 'நீ யார்?' என்று கேட்டது முறை அற்றது. அவர் அதைத் திரும்பப் பெற வேண்டும்.

DR. H. V. HANDE : Sir, I withdraw it. Please also request him to withdraw it.

திரு. இராம. அரங்கண்ணல்: நானும் அதைத் திரும்பப் பெறுகிறேன். ஆயினும், தாங்கள் தீர்ப்பு வழங்கிய பிறகு ஓர் உறுப்பினர் திரும்பத் திரும்பத் தங்கள் தீர்ப்பையே எதிர்த்துக் கேட்க உரிமை உண்டா? அப்படிக் கேட்க அனுமதிப்பது இந்தப் பேரவைத் தலைவரின் கௌரவத்தைப் பாதிக்காதா? அவாது பாரம்பரியம் என்ன ஆகும் என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மிக அமைதியான முறையில் கணபதியா பிள்ளை கமிஷனின் அறிக்கை மீது விவாதம் நடந்தது. அதன் மீது விரிவான முறையில் விவாதம் நடந்து விட்டதால், மசோதாவை சீக்கிரமாக முடித்து விடலாம் என்கிற திட்டப்படிதான் தாங்களும் அந்த அறிக்கைமீது அதிக நேரம் விவாதம் நடைபெற அனுமதித்தீர்கள். அவ்விவாதம்

1969 செப்டம்பர் 13] [திரு. மு. கருணாநிதி]

முடிந்து, அதற்கு அமைச்சரும் பதில் சொல்லிய பிறகு, இம்மசோதாவிற்கு அதிக நேரம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டதன் காரணமாகத்தான் ஹேமாவதி அணைக்கட்டு திட்டம்பற்றி விவாதிக்க ஒரு மணி நேரம் ஒதுக்கியிருக்கிறோம். இன்று மேலவைக்கு இந்த மசோதா செல்லவேண்டியிருக்கிறது.

இதற்கிடையில் மாண்புமிகு டாக்டர் திரு. ஹாண்டே அவர்கள் நீண்ட நேரம் பேச வேண்டும். பெரிய விளக்கங்களை அளிக்க வேண்டும் என்றால் அவருக்கு அந்த உரிமை இருக்கிறது. ஆனால் நேரத்தைச் சுட்டிக் காட்டி விவாதத்தை, கொடுத்துள்ள திருத்தத்திற்கு ஏற்றவாறு சுருக்கிக் கொள்ளும்படி தாங்கள் கோருகிற போது, "நீங்கள் ஒன்றும் டிக்டேட் செய்ய வேண்டாம்" என்று அவர்கள் குறிப்பிட்டது இதுகாறும் நாம் கட்டிக் காத்து வருகிற பேரவையின் பண்பாட்டுக்கும், மரியாதைக்கும் உகந்ததாக ஆகாது என்று டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரவைத் தலைவருக்கு நிரம்ப உரிமை இருக்கிறது. ஒவ்வொருவரும் இவ்வளவு நேரம் தான் பேச வேண்டுமென்று இப்போதே அறிவித்துவிடுவார்களேயானால் அந்த நேரத்தை மீறி யார் பேசினாலும் தடுத்து நிறுத்த பேரவைத் தலைவர் உரிமை படைத்தவர்கள். அந்த முறையை மேற்கொள்ள வேண்டுமென்று பேரவைத் தலைவரைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் "நீங்கள் யார்?" என்று கேட்டார்கள். பேரவை விதிமுறை அவருக்குத் தெரியாது இருக்க முடியாது. 'நீங்கள் யார்?' என்று கேட்க சட்டம் இடமளிக்கவில்லை. ஒரு திருத்தத்தைக் கொடுத்துவிட்டு எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றால் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட காரியத்தை பேரவையில் நாம் முடிக்க முடியாது. இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்பதற்கு எந்தக் காரணங்களைக் குறிப்பிட்டால் போதுமோ அதை மட்டும் குறிப்பிட்டால் போதுமானது. அவரே முதலில் குறிப்பிட்டு விட்டார். கமிஷன் போட்டது, கமிஷன் போடுவதற்குக் காரணமான சம்பவம், ஆகவே இது அவசரமாக வருகிறது, நிதானமாகப் பரிசீலித்துக்கொண்டு வரவேண்டும் என்கிற இந்தக் காரணங்களே போதுமானவை. மேலே எல்லா விளக்கங்களையும் கொடுப்பது என்றால் சரியல்ல என்று பேரவைத் தலைவர் குறிப்பிட்டதற்கு 'டிக்டேட் செய்ய நீங்கள் யார்?' என்பது பேரவைத் தலைவரை அவமதித்தது என்பது மட்டும் அல்ல. இந்தப் பேரவையையே அவமதிப்பது தன்னைத்தானே அவமதித்துக் கொள்வது என்பதாகத்தான் இருக்கிறது. சட்டப் பேரவை அனுபவம் பெற்றவர், பல ஆண்டுகள் மேலவையில் இருந்தவர் ஆகிய டாக்டர் ஹாண்டே இப்படி முறை தவறிப் போவது நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆக, இனி இந்த மசோதாவின் ஒவ்வொரு பிரிவுக்கும் 2 நிமிடங்கள்தான் என்கிற முறையில் காலத்தை வரையறுக்கிறேன்.

DR. H. V. HANDE : I am almost finished. I fully respect your sentiments and I obey them. As far as the speeches are concerned, it will be better if the Hon. Speaker does not tell us what we should do. That is why I was hurt. Whatever decisions you give, I am willing to obey.

As far as this Bill is concerned, my only important request to the Hon. Chief Minister would be this. Let us have a Select Committee consisting of some M. L. As. Let us visit East Thanjavur, meet some important people there, landlords, tenants, etc., hear their viewpoints and their grievances. Let the Select Committee calmly consider all the problems and come to a solution. If that is done, I am sure this Bill will definitely undergo some changes. I am confident about it. It will not be in the same form in which it will now go in the Statute Book. I am sure the Hon. Minister, who now wants the Bill to go in toto into the Statute Book in its present form, would accede to my request.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்களுடைய வாதம் எல்லாம் இதை பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டும் என்பது தான். இந்த விவகாரம் பெரிய விவகாரமாக இருக்கலாம். தஞ்சை விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினை பெரிய பிரச்சினை என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இந்த மன்றத்தின் முன்னாலே இப்போது வந்திருப்பது சிறிய விஷயம்தான். (திரு. டி. எஸ். ஆதிமூலம் : இது சிறிய விஷயமா ?) கவனியுங்கள், நீங்கள் ஏற்கனவே பேசி முடித்து விட்டீர்கள், தயவுசெய்து உட்கார்ந்துகொண்டே பேச வேண்டாம். விவசாயத் தொழிலாளர்களுக்கு என்ன கூலி கொடுப்பது என்பதுதான் இப்பொழுது இருக்கிற விவகாரம் எல்லாம். இது எல்லாம் கமிஷனுக்குப் போய் அவர்கள் விஸ்தாரமாக இதைப் பற்றி ஆராய்ச்சி செய்து, அது சரியாகவும் இருக்கலாம் அல்லது தவறாகவும் இருக்கலாம், அவர்கள் சிபாரிசு செய்து இருக்கிற நேரத்திலே இந்த மசோதா அதையொட்டி கொண்டுவரப்பட்டிருக்கிறது. அறுவடையின்போது, நடவின்போது, சாகுபடியின்போது அவர்களுக்கு என்ன கூலி கொடுப்பது என்பதுபற்றி ஏற்கனவே ஒரு அவசரச் சட்டம் போடப்பட்டிருக்கிறது. அதற்குச் சட்ட வடிவம் கொடுக்கிறோம் இப்பொழுது, அவ்வளவுதான். விளக்கமாக அவர்கள் பார்த்து இருக்கிறார்கள், விவாதித்து இருக்கிறார்கள், நேரடியாகப் பார்த்து முடிவு செய்யப்பட்ட காரியம் என்பதினாலே அவர்கள் இப்பொழுது கொடுத்திருக்கிற திருத்தம் அவசியமில்லை என்பது அரசினுடைய கருத்து. ஆகவே இந்தத் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன். ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை என்று கூறி அமர்கிறேன்.

1969 செப்டம்பர் 13]

DR. H. V. HANDE : In view of the serious law and order situation caused by the volunteer force. I press my amendment.

டாக்டர் ஹாண்டே அவர்களுடைய திருத்தம் பேரவையி னுடைய முடிவுக்கு விடப்பட்டு, நிராகரிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" தமிழ் நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாயக் கூலி மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 20/69) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

" பிரிவு 2 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்."

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move the following amendment :—

" In Clause 2 of the Bill, wherever reference to the word 'Madras' occurs in the citation of any Act, (including the citation by number of any Act) substitute the word 'Tamil Nadu'.

THIRU K. RAMA MOORTHI : There is an amendment of mine for Clause 1 also.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிளாஸ் 1 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

THIRU K. RAMA MOORTHI : Sir, I move the following amendment to clause 2 :—

..... (i) In sub-clause (1), after the word " means ", for the word 'a' substitute the word 'any' (ii) In item (b) of sub-clause (1) delete the words 'or for cleaning house'.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஏற்கனவே சர்குலேசன் ஆகியிருக்கிறது. எனவே 'மூவ்' மாத்திரம் பண்ணிவிட்டுப் பிறகு பேசுங்கள்.

THIRU K. RAMA MOORTHI : Sir, I move my amendment.

(i) In sub-clause (1), after the word " means ", for the word " a ", substitute the word " any ".

(ii) In item (b) of sub-clause (1), delete the words " or for cleaning...............house. "

(iii) In item (a) of sub-clause (6), delete the word " and " occurring at the end and add the following :—

" But does not do manual labour on the lands so owned by such person and ".

(iv) For the proposed sub-clause (7), substitute the following :

" (7) " The District Munsif Court " means the District Munsif Court having jurisdiction over the area. "

The amendment was duly seconded.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் திருத்தத்தின் மேல் ஒன்றும் பேசப் போவதில்லையா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒன்றும் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : இரண்டாவது பிரிவுக்கு நான் திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். 'அக்ரிகல்சரல் லேபரர் மீன்ஸ் எ பெர்சன்' என்பதற்குப் பதிலாக 'எனி பெர்சன்' என்று போட வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாக முடித்து விடுங்கள்.

THIRU K. RAMAMOORTHI : I wil be short and brief. 'எ' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'எனி' என்ற வார்த்தையைப் போடவேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதிலே விவாதத்திற்கு அதிகமாக இடமில்லை என்று நினைக்கிறேன். இலக்கணப்படி அது முழுமை பெறத்தக்க அளவிலே அமைச்சரவர்கள் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். என்ன காரணத்திற்காக இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அதை முழுமைப்படுத்துகிற அளவிலேதான் இது இருக்கிறது. எனவே கவுரவப் பிரச்சினையாக இதை எடுத்துக் கொள்ளாமல் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

In item (b) of sub-section (1), the words " or for cleaning... house ".

என்னுடைய அடுத்த திருத்தம்—விவசாயக் கூலிகள் யார் என்பதாக இதிலே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது, அந்த விளக்கத்திலே

a person engaged in the household work of the landowner or for cleaning cattleyard, or for storing manure at the backyard of the house; என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய திருத்தம் விவசாயியினுடைய மாட்டுத் தொழுவத்தைச் சுத்தப்படுத்துகின்றவர்களும், விவசாய உரத்தைத் தயாரிக்கின்றவர்களும் விவசாயத் தொழிலாளர்கள் என்று பாவிக்கப்பட வேண்டும், இப்படிப்பட்ட தொழில்களிலே ஈடுபடுகின்ற வீட்டிலே தொழிலிலே ஈடுபடுகின்ற தொழிலாளர்களை விவசாயத் தொழிலாளர்களாகக் கருத வேண்டும் என்பதாகும். அரசினரைப் பொறுத்தவரையிலும் அவர்கள் விவசாயக் கூலிகள் என்று சாதாரணமாக விவசாயம் நடத்துகின்ற

வர்களைத்தான் இந்த மசோதாவிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வேலைகள் இன்றியமையாத வேலைகள் என்பது மட்டுமல்ல, விவசாயத்தோடு தொடர்புகொண்ட வேலைகள். ஆட்டையும், மாட்டையும் வேலைக்குப் பயன்படுத்துகிறோம் என்றால் அதைப் பாரமரிக்கின்ற, வைத்து விவசாயத்தில் ஈடுபடுத்துகின்ற தொழிலாளர்களையும், விவசாயத் தொழிலாளர்கள் என்று எடுத்துக் கொள்ளவேண்டும். வேறாக எடுத்துக் கொள்வது தவறாகும். விவசாயமே உரத்தின் அடிப்படையில்தான் இருக்கிறது. அதனைப் பற்றி மேன்மையாகப் பேசுகிறோம். எனவே விவசாயத்திற்கு ஆணி வேர் போன்று இருக்கக்கூடிய உரத்தைச் சேகரிக்கின்ற அந்தத் தொழிலாளர்களை விவசாயத் தொழிலாளர்கள் அல்ல என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது. அந்தத் துறையிலே உள்ளவர்களையும் விவசாயத் தொழிலாளர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலே இந்தப் பிரச்சினையை அணுகினால் விவசாய தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்புக் கிடைக்குமோ, என்ன ஊதியம் கிடைக்குமோ அது அவர்களுக்கும் கிடைப்பதற்கு வழி ஏற்படும். இந்த வேலைகளைச் செய்கிற கூலிகள் யார் என்றால் பெரும்பாலும் அவர்கள் விவசாயக் கூலிகள்தான். அதே கூலிகள்தான் நடவு நேரத்தில் சென்று நடவு செய்கிறார்கள். அறுவடை நேரத்தில் அறுவடை செய்கிறார்கள். ஆகவே, அவர்கள்தான் இந்த தொழில்களையெல்லாம் அவ்வப் பொழுது செய்கிறார்கள். அவர்கள் வேலையை நிலத்தில் வைத்துக் கொண்டாலும் வீட்டில் வைத்துக் கொண்டாலும் விவசாயத் தொழிலாளர்களாகவே கருதப்படவேண்டும். அதுதான் என்னுடைய திருத்தம். இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு—அந்த வேலைகளைச் செய்கிறவர்கள் மற்ற வேலைகளைச் செய்கிறவர்களைவிட தரத்தில் குறைந்தவர்கள் என்று நினைத்துக் கொண்டு இந்தப் பிரச்சினையை அணுகக்கூடாது. அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கும் இதிலே கொடுக்கப்படுகிற சலுகைகள் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த திருத்தம்—

In item (a) of sub-clause (6), delete the word "and" occurring at the end and *add* the following :—

"But does not do manual labour on the lands so owned by such person and".

இந்தத் திருத்தம் மிக மிகத் தேவையான திருத்தமாகும். எங்களுடைய தலைவர் பேசுகின்ற நேரத்தில் இதைத்தான் சொன்னார்கள். விவசாயக் கூலி, விவசாய நிலம் படைத்த விவசாயிகள் என்ற அளவிலே இந்த மசோதா பிரச்சினையை அணுகுகிறது. நிலம் படைத்தவர்களும் அவர்களுடைய நிலத்திலே விவசாய வேலைகளைச் செய்கிறார்கள். இரண்டு மூன்று ஏக்கர் வைத்திருக்கிற என்னைப் போன்ற சாதாரண விவசாயிகள் நிலத்திலே இறங்கி வேலை செய்யும் நிலைமை இருக்கிறது. ஏர் வேலை செய்கிறோம், நடவு

நடுகிறோம், அறுவடை கூடச் செய்கிறோம். தகப்பனர் பெயரில் நிலம் இருக்குமானல் தகப்பனருடைய நிலத்தில் நான், என்னுடைய மனைவி, மற்றவர்கள் வேலை செய்வதைத் தடுப்பதற்கில்லை. தகப்பனரும் குடும்பத்தில் இருக்கிறர் என்றல் அவருக்கான கூலி ஒதுக்கீட்டுக்கு எவ்வித வழிவகையும் செய்யப்படவில்லை. அவர்களுக்கான கூலியையும் கணக்கில் கொள்ளவேண்டும். அப்படிச் கொண்டால்தான் நாளைய தினம் விவசாய வருமான வரி, ப்ரொக்யூர்மென்ட் ஆகியவற்றிலே விவசாயிக்குப் பாதுகாப்பு ஏற்படும்; அப்போதுதான் சிறு விவசாயிக்குப் பாதுகாப்பு ஏற்படும்: ஆகவே இதைச் சிறு விவசாயிகளுடைய உயிர்ப் பிரச்சினையாகக் கருதி அரசு கவுரவப் பிரச்சினையாகப் பாராது என்னுடைய இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்த திருத்தம்—

For the proposed sub-clause (7), substitute the following :—

" (7) The District Munsif Court " means " the District Munsif Court having jurisdiction over the area ".

இதிலே ஒரே ஒரு பிரச்சினைதான். ரெவின்யூ கோர்ட்டுக்குப் பதிலாக நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிற டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுக்கு அதிகாரம் தரவேண்டும். ரெவின்யூ இலாகாவில் உள்ளவர்களைப் பல வேலைகளுக்கும் பயன்படுத்துகிறர்கள். மேலதிகாரிகள் வந்தாலும், அமைச்சர்கள் வந்தாலும் முன் ஏற்பாடுகளையும், அனுப்பி வைத்த பிறகு பின் ஏற்பாடுகளையும் அவர்கள் தான் செய்ய வேண்டியிருக்கிறது. தாசில்தார்கள், டெபுடி தாசில்தார்கள் அவற்றைச் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்குப் பல்வேறு வேலைகள் இருக்கும் சூழ்நிலையில் வழக்குகளை விசாரிக்கும் பொறுப்பையும் அவர்களிடம் ஒப்படைத்தால் அவர்களுக்கு விசாரிப்பதற்கு நேரமே இருப்பதில்லை. அவர்கள் போதுமான கவனம் செலுத்த முடிவதில்லை. சாதாரண டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுக்குப் போனல் கால தாமததாமதமாகும். ரெவின்யூ கோர்ட்டில் துரிதமாக தீர்வு காண முடியும் என்ற ஒரே காரணத்தைத்தான் சொல்ல முடியும். நான் சொல்லிக் கொள்வது எல்லாம் சட்டத்தை எந்த அளவுக்குத் திருத்தமுடியுமோ திருத்தி, டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டுகளிலே இத்தனை நாட்களுக்குள்ளாக வழக்குகளிலே முடிவு எடுக்க வேண்டுமென்று போட வேண்டுமே தவிர, அதற்காக சிக்கலை ஏற்படுத்துகின்ற நிலை இருக்கக் கூடாது. ஆகவே, என்னுடைய இந்தத் திருத்தத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் நான்கு திருத்தங்களைக் கொடுத்திருக்கிறர்கள். முதல் திருத்தம் **a person** என்பதா அல்லது " any person " என்பதா என்ற பிரச்சனை.

1969 செப்டம்பர் 13] [திரு. கே. ஏ. மதியழகன்]

'x', 'y' என்ற இரண்டு எழுத்துக்களை அதிலே சேர்ப்பதாக இருக்குமே தவிர, விவசாயத் தொழிலாளர்களுக்கு இலாபம் எதுவும் கிடைத்து விடப் போவதில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அந்த இரண்டு எழுத்துக்களை இவர் சேர்த்துக் கொண்டால் என்ன தப்பு?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அடுத்து., 'அக்ரிகல்கால் லேபரர்' என்பதிலே மாட்டுத் தொழுவத்தில் செய்யக்கூடிய வேலை களை எல்லாம் சேர்த்துக் கொள்ளக்கூடாதா என்று கேட்டார்கள். அக்ரிகல்சுரல் லேபர்' என்பதிலே ஒரு கொள்கையைக் கடைப் பிடிக்கிறோம். அந்த நிலையிலே இந்தத் திருத்தத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன். மூன்றாவது திருத்தம் விளக்கமாக இல்லை. அதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

நான்காவது திருத்தம், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளின் கீழ் கொண்டு வரவேண்டும், ரெவின்யூ கோர்ட்டுக்குக் கொண்டு போகக் கூடாது என்பது. விவசாயத் தொழிலாளர்கள், நில உரிமை யாளர்களுடைய சிக்கல்கள் தீருவதிலே காலதாமதம் ஏற்படக் கூடாது என்று ஒரே காரணத்தால்தான் பிரத்தியேகமான ஏற்பா டாக ரெவின்யூ கோர்ட் அமைக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களே வழக்கறிஞர்; எவ்வளவு கட்டுகள் அவரிடம் இருக்கும் என்பது அவர்களுக்கே தெரியும். 'ஜஸ்டிஸ் டிலேய்டு இஸ் ஜஸ்டிஸ் டினேடு'. காலதாமதம் இல்லாமல் இருந்திருக்குமானால் இந்த வாசகமே வந்திருக்காது. ஆகவே, இதனுடைய அவசரத் தன்மையை முன்னிட்டு, உணவு உற்பத்தியை அடிப்படையாக வைத்து இதிலே பிரச்சனைகள் எழுகின்றபோது உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் ரெவின்யூ கோர்ட்டுகளிலே இவை தீர்க்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை என்று கூறி அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய திருத்தம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது. பேரவை முன்னுள்ள கேள்வி :

"In clause 2 of the Bill, wherever reference to the word 'Madras' occurs in the citation of any Act (including the citation by number of any Act), *substitute* the word "Tamil Nadu".

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, **நிறைவேற்றப் பட்டது.**

THIRU K. RAMAMOORTHI : As far as my amendment to sub-clause (7) is concerned, if the Revenue Minister can give an undertaking that the revenue courts will dispose of cases within a specified time, I will not press my amendment.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைச் செய்யலாம். இதற்கு வாக்குறுதி அளிக்க வேண்டுமென்பதில்லை. அவசாமாகச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் தனியான கோர்ட்டுகள் நிறுவப்பட்டிருக்கின்றன.

THIRU K. RAMAMOORTHI : Sir, in view of the sentiments expressed by the Hon. Minister, I do not press my amendment.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2 திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. இராமமூர்த்தி அவர்கள் இரண்டாவது பிரிவுக்கு இந்தப் பிரிவிற்கு கொடுக்கப் பட்டது போன்ற திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆகவே, இந்தத் திருத்தத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

பிரிவு 4 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 5 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

திரு. என். சங்கரய்யா : சபாநாயகர் அவர்களே, பிரிவு 5-க்கு நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை முன்மொழிகிறேன்.

"Delete the words 'Fair Wages' and *substitute* the words the wages fixed in this Bill and *add* the folowing at the end :

'Wherever wages higher than those fixed in this Bill are in practice, those higher wages will continue in such places'.

திரு. கோ. பாரதி மோகன் : இதை நான் வழிமொழிகிறேன்.

திரு. என். சங்கரய்யா : இந்தப் பிரிவிலே இவ்வளவு 'ஃபேர் வேஜஸ்' என்று போடப்பட்டிருக்கிறது. விவசாயத் தொழிலாளர் களைப் பொருத்தவரை இதைக் குறைந்த பட்ச சம்பளமாகக் கருது கிறேன். கணபதியா பிள்ளை ரிப்போர்ட்டிலே நிர்ணயிக்கப்பட்டி

1969 செப்டம்பர் 13] [திரு. என். சங்கரய்யா]

ருக்கும் சம்பள விகிதங்கள் நியாயத்திற்கும் குறைவானவையாகவே இருக்கின்றன என்று அவர்களே எழுதியிருக்கிறார்கள். குறைந்த பட்ச சம்பளமா, நியாயமான சம்பளமா என்ற சர்ச்சையில் இறங்காமல் நாங்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தின்படி 'ஃபேர் வேஜஸ்' என்று போட்டு விட்டால் சர்ச்சை எழாது. குறைந்த பட்ச நியாயமான கூலி என்றால் இரண்டு பேருக்கும் திருப்தி அளிக்கும்.

ஆகவே, "பேர் வேஜஸ்" என்பதை எடுத்துவிட்டு "இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள விகிதம்" என்று போடும்படி கேட்கிறோம். அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதை விட அதிகமாக எங்கேயாவது சம்பளம் இருந்தால் அந்தச்சம்பள விகிதம் இங்கும் நீடிக்கும் என்றிருக்கவேண்டும். சாதாரணமாக தொழில் நிறுவனங்களில் உள்ள தொழில் அதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்படும் ஒப்பந்தங்களில் இப்படிப் பட்ட ஷரத்து சேர்க்கப்படுவது இயற்கையே. அந்த ஒப்பந்தத்திற்கு மேற்கொண்டு அதிகப்படியான வசதிகள் இருந்தால் அந்த அதிகப்படியான வசதிகள் இதனால் பாதிக்கப்பட மாட்டா என்ற ஷரத்து இருக்கும். சில இடங்களில் சம்பளம் போக சில வசதிகள் செய்து கொடுக்கிறார்கள். அவை கிடைப்பதில் பாதகம் ஏற்படக்கூடாது. ஆகவேதான் இத்திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, 'ஃபேர் வேஜஸ்' என்பது என்றைக்குமே பேர் என்பதல்ல. வார்த்தையில் ஏதோ அபாயகரமான நிலை இருப்பதாக மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களோ அல்லது மற்றக் கட்சி உறுப்பினர்களோ நினைக்க வேண்டாம். யூனிஃபார்மாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இப்படிக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நாம் வார்த்தைகளுக்குள் புகவேண்டியதில்லை. ரிப்போர்ட்டில் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஒரு கமிட்டி அமைத்து வேஜஸ் பற்றி 'ரெவ்யூ' செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாக் காலங்களுக்கும் இந்த ஃபேர் வேஜஸ் ஒன்றாக இருக்கும் என்பதில்லை. இந்த வார்த்தையில் அவ்வளவு அழுத்தம் இல்லை. ஆகவே, இதை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: விவசாயத் தொழிலாளர்களின் நலன்களையொட்டி இது சட்டமாக்கப்படுவதன் காரணமாக தெளிவாக இருக்கவேண்டும் என்பதால் இத்திருத்தத்தை நான் வற்புறுத்துகிறேன்.

திரு. என். சங்கரய்யா அவர்களுடைய திருத்தம் பேரவையினுடைய முடிவுக்கு விடப்பட்டு, நிராகரிக்கப்பட்டது.

பிரிவு 5 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 6.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 6 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU N. SANKARAIAH : Sir, I move—

(i) In sub-clause (1) after the words 'Conciliation Officer' add the words 'fee of cost and without the payment of any fees'.

(ii) In sub-clause (2), after the words 'the landowner' add the words 'either at the village or at a village nearest to the place of the applicant'.

(iii) Add at the end of sub-clause (2) the following :

'The appllicants can authorise agents to appear for them and to present their case before the Conciliation Officer'.

திருத்தங்கள் வழிமொழியப்பட்டன.

திரு. என். சங்கரய்யா : இத்திருத்தத்தின் மூலம் மிக முக்கியமான ஒரு விஷயத்தை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கன்ஸிலியேஷன் ஆபீசருக்குக் கொடுக்கப்படும் மனுக்களுக்கு free of cost and without the payment of any fees என்றிருக்கவேண்டுமென்று திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சம்பளம் கிடைக்காமல் போனதற்காக கன்ஸிலியேஷன் ஆபீசருக்குக் கொடுக்கும் மனுக்களுக்கு எந்தவிதமான கட்டணமும் இருக்கக்கூடாது என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதர காரியங்களுக்காகக் கொடுக்கப்படுகிற மனுக்களுக்கு ஒரு ரூபாய் கட்டணம் இருக்கலாம், ஆனால் சம்பளம் கிடைக்கவில்லை என்பதற்காக புகார் செய்யவேண்டுமானால் அதற்குக் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்களின் நன்மைக்காக நாம் இந்தச் சட்டத்தைச் செய்கிறோம். ஒரு சில ரூபாய் பாக்கிக்காக கன்ஸிலியேஷன் ஆபீசரிடம் மனுச் செய்யும்போது ஒரு ரூபாய் கட்டணம் கட்ட வேண்டுமென்றால் இந்தச் சட்டத்தின் பலனே கிடைக்காமல் போய்விடும். இதனால் அரசாங்கத்திற்கும் அதிக நிதி கிடைக்கப் போவதும் இல்லை. ஆகவே எந்த விதமான கட்டணமும் இருக்கக்கூடாது. இப்படி சம்பள பாக்கிக்காக மனு செய்யும்போது என்று சொல்வது நியாயமான கோரிரிக்கையாகும்.

அடுத்து, கன்ஸிலியேஷன் ஆபீசர் தாசில்தார் அந்தஸ்தில் உள்ள ஒரு அதிகாரி, விவசாயத் தொழிலாளி ஒருவர் ஒரு மனு கொடுத்தால் அந்தத் தொழிலாளரின் கிராமத்திற்கோ அல்லது அதற்கு அருகாமையில் உள்ள கிராமத்திற்கோ சென்று விசாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தால்தான் விவசாயத் தொழிலாளர்

1969 செப்டம்பர் 13] [திரு. என். சங்கரய்யா]

களுக்கு மனுக்கள் கொடுப்பதில் உற்சாகம் இருக்கும். அப்படி யில்லாது அந்த அதிகாரியின் அலுவலகத்திற்குத்தான் செல்ல வேண்டுமென்றால் அவ்விடம் மிகத் தொலைவில் இருந்தால் சம்பளம் கிடைக்காமல் இருந்தாலும்கூட, அங்கு சென்று வர கஷ்டமாயிருக் கிறது என்று இருந்து விடுவார்கள். அதனால் அவர்களுக்குப் பாதகம் ஏற்படும். ஆகவே மனு செய்தவருடைய கிராமத்திற்கோ அல்லது அதற்கு வருகாமையில் உள்ள கிராமத்திற்கோ, சென்று விசாரணை செய்யவேண்டுமென்பது எங்கள் திருத்தம். அதை ஏற்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: முதல் திருத்தத்தைப் பொறுத்து—

Under rule 7 of the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Rules, 1969, no court-fee is payable on applications to the Conciliation Officers under sub-clause (1) of clause of the Bill. என்று இருக்கிறது. In view of this, the amendment is not necessary.

கட்டணம் கொடுக்கவேண்டியதில்லை என்று விதிமுறைகளில் தெளிவாக இருப்பதால், ஸ்டாம்ப் கட்டணம் என்றில்லாததால், இந்தத் திருத்தத்திற்கு அவசியமில்லை. அவரது நோக்கத்தை அது பூர்த்தி செய்கிறது. ஆகவே அதை வற்புறுத்தவேண்டியதில்லை.

அடுத்த திருத்தம், கன்ஸிலியேஷன் ஆபீசர் ஒவ்வொரு இடத் திற்கும் சென்று விசாரணை செய்யவேண்டுமென்பது. அது நடை முறையில் சாத்தியமாக இராது. ஆகவே அதையும் ஏற்றுக்கொள்வ தற்கில்லை.

மூன்றாவது திருத்தத்தைப் பொறுத்தவரையில் விதிமுறைகளில் போடப்பட்டிருக்கிறது.

As regards the suggestion for authorising the agents to appear on behalf of applicants, necessary provision has already been made in Rule 8 of the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Rules, 1969. So the amendment is not necessary.

திரு. என். சங்கரய்யா: கட்டணம் சம்பந்தமாகவும், ஏஜெண்ட்கள் அனுமதிக்கப்படுவது சம்பந்தமாகவும் விதிமுறைகளில் ஏற்பாடு செய்வதாக உறுதி கூறுவதினால் அவற்றை வற்புறுத்தவில்லை. கிராமங்களுக்குச் சென்று விசாரிப்பதற்கு, விதிமுறைகள் வகுக்கும் போது சாத்தியமான அளவிற்கு விவசாயத் தொழிலாளர்கள் கொடுக்கக்கூடிய மனுக்களை விசாரிக்க அவர்கள் இருக்கும் இடத் திற்கோ அல்லது அருகாமையில் உள்ள இடத்திற்கோ சென்று விசாரிக்க நிர்வாக ரீதியான கட்டளைகளை இடுவார்கள் என்ற நம்பிக்கையில் அதையும் நான் வற்புறுத்தவில்லை.

திரு. என். சங்கரய்யா அவர்கள் திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

பிரிவு 6 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 7.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 7 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

திரு. என். சங்கரய்யா: என் பெயரில் உள்ள திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

(i) Add the following at the end of sub-clause (2) (i) (b) :—

'If any landowner wilfully removes or causes to be removed the harvested paddy or any portion thereof from the thrashing floor in contravention of the provisions of this clause, the Conciliation Officer can impose and collect a fine not exceeding half of the amount payable by the landowner to the labourer and pay the same also to the labourer concerned'.

(ii) Add the following at the end of sub-clause (2) (ii) :—

'If any landowner wilfully violates the provisions of this sub-clause, the Conciliation Officer can impose a fine not exceeding one half of the amount of wages payable by the landowner to the labourer and pay the same also to the concerned labourer or labourers'.

திரு. கோ பாரதிமோகன் : இத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

THIRU A. K. SUBBIAH : Sir, I move—

Add the following sub-clauses at the end :

'(4) Notwithstanding anything contained in this Act, wherever the wages now prevailing either for harvest or for any other work are greater than what has been fixed under this Act, such wages shall continue to prevail.

(5) The Conciliation Officer or the person authorised, notwithstanding anything contained in sub-sections (1) to (3) of this section shall recover in kind or in cash as per Section 7 (4) of the Act.'

திரு. சோ. அழகர்சாமி : இத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment standing in my name—

"Add the following proviso at the end of sub-clause (3) :

"Provided that the Conciliation Officer or the person authorised should exercise the power to enter upon any land or into any building only after obtaining the permission of the Judicial Magistrate".

1969 செப்டம்பர் 13]

THIRU S. SIVASUBRAMANIAN :—I second the amendment.

திரு. என். சங்கரய்யா : அறுவடை காலத்தில் நிலச்சொந்தக்காரர்கள் அல்லது நில உடைமையாளர்கள் வேண்டுமென்றே விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய பகுதியைக் கொடுக்காமல் இந்தச் சட்ட விதிக்கு முரணாக, களத்து மேட்டிலிருந்து அகற்றிச் சென்றால், அது வேண்டுமென்று தொழிலாளர்களுக்குக் கூலி கிடைக்காமல் செய்வதாக, தாமதப்படுத்தி இழுத்தடிக்கவேண்டும் என்பதற்காக, அப்படிச் செய்து அதன் மூலம் அவர்களைப் பணிய வைக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக வேண்டுமென்றே செய்யப்படுவதாகும்.

ஆகவே, இந்தக் கூலி கொடுக்க வேண்டுமென்று சொல்லி, கொடுக்காவிட்டால், அதில் எந்தவிதமான நிர்ப்பந்தமும் இல்லை என்று அவர்களுக்குத் தெரிந்தால், இதை நிறைவேற்ற அவர்கள் முன் வரமாட்டார்கள். ஆகவே, இந்தப் பிரிவிலே வேண்டுமென்று, அறுவடைக் காலத்தில், விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் களத்துமேட்டிலிருந்து அகற்றப்பட்டால், கன்ஸிலியேஷன் ஆபீசரே தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டியதில் ஒரு பாதி அளவுக்குத் தொகை அபராதம் விதிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, பில்லில் இந்தப் பிரிவுக்குக் கொடுக்கப்பட்ட திருத்தம். அறுவடை அல்லது சாகுபடி காலத்திலே கூலி கொடுக்க முடியாது என்று வேண்டுமென்றே அவர்கள் மறுத்தால் அவ்வாறு மறுத்தவர்களிடத்தில் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டியதில் பாதித் தொகையை இந்த கன்ஸிலியேஷன் ஆபீசர் அபராதம் விதித்துக் கொடுத்தால்தான் இந்தச் சட்டம் கண்டிப்பாக இருக்கும். அதனால் முதலிலேயே கொடுத்து விடலாம் என்ற நிலை ஏற்படும். இந்தத் திருத்தம் உறவைச் சுமுகப்படுத்தி, யாரும் தவறு செய்யாமல் இருக்க உதவி செய்யும். எனவே, இந்தத் திருத்தத்தை அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, என்னுடைய திருத்தம், உப பிரிவு 3-க்குக் கீழே, உப பிரிவு 4, உப பிரிவு 5 என்ற இரண்டு பகுதிகளையும் சேர்க்க வேண்டுமென்று சொல்லுகிறது. அதற்குக் காரணம், இதற்கு முன்னால், இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால், சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நியாயமான ஊதியத்தை விட, அதிகமாகப் பெருமளவு இடங்களில் விவசாயத் தொழிலாளர்கள் பெற்று வருகிறார்கள். அம்மாதிரி இடங்களில் இந்தச் சட்டம் தான் செல்லும் என்ற முறையில் இருக்கக்கூடாது. அம்மாதிரி அதிகமாக, சட்டத்தைவிட அதிகமாக, நடைமுறையில் இருந்து வரும் இந்தக் கூலி விகிதம் தொடர்ந்து அங்கே இருக்க வேண்டுமென்பது ஒரு பகுதி.

அடுத்தபடியாக, சமரச ஆபிசர் அந்த வழக்கை நடத்தி விசாரணை செய்யும் நேரத்தில், முன்னல் அமலில் இருக்கும் அதிகப் படியான ஊதியத்தைப் பெற்றுவரும் பிரதேசத்தைக் கணக்கில் எடுத்து, சமரச அதிகாரி இந்த வழக்கைப் பார்க்க வேண்டு மென்பதுபற்றி நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். 1, 2 உப பிரிவுகளுக்கிடையிலே 3 உப பிரிவுக்கு இடையிலே 4-ஐயும், 5-ஐயும் சேர்க்க வேண்டுமென்று சொல்லுகிறேன். அப்படிச் சேர்ப்பதினுல், பெரும்பகுதி விவசாயத் தொழிலாளர்கள் சட்டத்திலே குறிப்பிட் டதைவிட அதிகமாக ஊதியம் பெறும் பிராந்தியங்களிலே பலன் ஏற்படும் என்பதற்காக இந்தத் திருத்தத்தை நான் கொடுத்திருக் கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இப்பொழுது 7-வது பிரிவின் 3-வது உப பிரிவுக்கு நான் கொடுத்திருக்கும் என்னுடைய திருத்தம் மிகமிகத் தேவையானதும், விவசாயிகளுக்குப் பாதுகாப் புத் தர வேண்டிய இன்றியமையாததுமாகிய திருத்தமாகும்.

விவசாயப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, இன்று நாம் ஒரு பிரமையில் இருக்கிருேம். விவசாயக் கூலிகள் என்றுல் மிக, மிக ஏழைகள், வாழ வகையற்றவர்கள் என்றும், விவசாயிகள் என் ருல் எல்லோருமே நிலம் படைத்த பெரிய மிராசுதார்கள், 100 ஏக்கர், 200 ஏக்கர் என்று வைத்திருப்பவர்கள் என்றும் எண்ண முடையவர்களாக இருக்கிருேம். இந்த இரண்டிலேயும் இடம் பெருமல், இடையிலே ஒரு பெரும் பிரிவு, மிகக்குறைவான நிலத்தை வைத்துக்கொண்டு, மானத்திற்காக, வாய்க்கும் வயிற்றுக்கும் இடையே வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு பிரிவு இருப்பதை மறந்து விடுகிருேம்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், கூலிப் பிரச்சினை யைப் பொறுத்தவரையிலும், நான் நம்முடைய மாண்புமிகு உறுப் பினர் திரு. சங்கரய்யா அவர்கள் சொல்லிய கருத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். கூலி கொடுக்காமல் வேண்டு மென்றே நெல்லை விவசாயி எடுத்துச் சென்று விட்டால், அபராதம் விதிக்கலாம்; அபராதம் விதிப்பதற்கு வகை செய்வது சரியென்று ஒப்புக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்திலே, இந்தச் சட் டத்திலே இன்று இடம் பெற்றிருக்கிற, இந்த கூலி கொடுக்காமல், அந்த நெல்லை எடுத்துச் சென்று விட்டால், அந்த நெல் நிலத்திலே யிருந்தாலும், வீட்டிலேயிருந்தாலும், வேறு கட்டடத்திலேயிருந் தாலும் அந்த அதிகாரி சென்று கைப்பற்றலாம் என்று வழிவகை செய்யும் அளவிலே இடம் பெற்றிருக்கிறது.

ஒன்றை மட்டும் நான் சொல்லிக் கொண்டு முடிக்கிறேன். நாம் எந்த அளவுக்கு, எத்தனை தீவிரமாக சட்டம் போட்டாலும், நமக் கெல்லாம் மிகவும் நன்ருகத் தெரியும். பெரும் பணக்காரர்களை, வசதி படைத்தவர்களை அல்லது மற்றவர்களுடைய ஆதரவு

1969 செப்டம்பர் 13] [திரு. க. இராமமூர்த்தி]

கிடைத்தவர்களைச் சட்டம் ஒழுங்காக நெருங்குவது இல்லை. பெரும்பாலும் அந்தச் சட்டம் சாதாரணமானவர்கள், கோர்ட்டிற்குச் செல்ல முடியாதவர்கள், ஏழைகள் தங்களுடைய குறைகளை வெளியே சொல்ல முடியாதவர்கள், இப்படிப்பட்டவர்களை அணுகுகிறது. கொஞ்சமாக 2 ஏக்கரா, 3 ஏக்கரா, 4 ஏக்கரா, 5 ஏக்கரா என்று நிலம் வைத்திருப்பவர்கள் இந்த நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே கூலியைக் கொடுக்காமல் சென்று விடுகிறார்கள் என்ற நிலை ஏற்பட்டால் அப்படிச் சென்றாரா, இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டியவர் கன்ஸிலியேஷன் ஆபீசர். ஆனால் அந்த ஆபீசர் அந்த முடிவு செய்வதற்கு முன்னாலே, முடிவு செய்யும் வரையிலும் அந்த நெல்லை உடனடியாகக் கைப்பற்ற அவரே நேரில் சென்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில், வேட்டைக்காரன்புதூரில் நடைபெற்ற நிகழ்ச்சியை மனத்திலே கொண்டு, எவ்வளவு பெரிய விபரீதங்களுக்குப் பின்னாலே இடம் கொடுத்துவிடும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். என்னுடைய வேண்டுகோள் எல்லாம், இந்தப் பிரிவை நிறைவேற்றும் நேரத்திலே, சாதாரணமாக சூதாடிக் கொண்டிருந்தால், திருட்டுச் சொத்தை மறைத்து வைத்துக்கொண்டிருந்தால், அப்படிப்பட்ட வீட்டில் போலீசார் திடீரென உள்ளே சென்று எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. அந்த அளவுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. அப்படிச் சட்டத்திற்குப் புறம்பாகக் காரியம் செய்பவர்கள் வீட்டுக்குள்ளே கூட நுழையக்கூடாது என்ற அளவிலே பாதுகாப்பு இருக்கிறது, வழி வகை செய்யப்பட்டிருக்கிறது சட்டத்திலே. ஆனால் இந்த விவசாயிகளுக்கு அப்படி ஒரு பாதுகாப்பு இல்லை இந்தச் சட்டத்திலே. இப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பு இருந்தால்தான், சிறிய விவசாயிகள் பாதுகாப்பான நிலையிலிருந்து பயிர் செய்ய முடியும், உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆகவே, அந்த அளவிலே என்னுடைய திருத்தம் இந்த அதிகாரி ஒரு விவசாயின் வீட்டிலோ அல்லது கட்டடத்திலோ அல்லது நிலத்திலோ நேரடியாக நுழைந்து நெல்லைக் கைப்பற்றுவதற்கு முன்னாலே அங்கிருக்கும் மாஜிஸ்ட்டிரேட்டிடம், அந்தப் பகுதி எந்த மாஜிஸ்டிரேட்டிற்கு உட்பட்டதோ, அவரிடம் அனுமதி பெற்று இதைச் செய்யலாம் எனத் திருத்தம் இருக்கிறது. அமைச்சரவர்கள் அது தேவையில்லை, என்னுடைய அதிகாரிகளே அந்த அதிகாரத்தை வைத்துக்கொள்ளவேண்டுமென்று நினைத்தால், சப்-கலெக்டருக்கோ அல்லது ஆர்.டி.ஓ.-வுக்கோ அந்த அளவிலே இருக்கின்ற ஒரு மேல் அதிகாரியைக் கலந்து கொண்டு செய்யும் நிலையில் இந்தப் பிரச்சினை நல்ல முறையில் தீர்க்கப்படும், விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இருக்கும் என்று கூறி என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, இந்தத் திருத்தங்கள் ஏன் வரவேண்டுமென்பதற்கு இரண்டு பேரும் இரண்டு கோணங்களிலே கொடுத்திருக்கிறார்கள். நண்பர் திரு.

இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம் எல்லா இடத்திலும் ரொம்ப அபாயகரம் நிகழ்ந்திருப்பது போலவும், எல்லா அதிகாரி களுமே துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதுபோலவும் தெரிவித் தார்கள். வேட்டைக்காரன்புதூர் நிகழ்ச்சி என்று சொன்னார்கள். வேட்டைக்காரன்புதூரைப்பற்றி முழுமையாகப் படித்துப் பார்க்க வில்லை என்று கருதுகிறேன். அப்படி நடக்கவில்லை என்றுதான் விவரமான அறிக்கையில் விளக்கமாகி இருக்கிறது. எப்படியிருந் தாலும், கன்ஸிலியேஷன் ஆபீசரும், அவரும் ஒரு அதிகாரிதான், நீதிபதி மாதிரி அதிகாரிதான், இந்தக் காரியத்திற்கு நியமிக்கப்பட் டிருப்பவர்கள்தான். அவர்கள் மேலும் நம்பிக்கை வைக்க வேண்டும். அதாவது, இந்த அதிகாரி தப்பாக நடந்து கொள்வார், எனவே, இன்னொரு நீதிபதியாக இருப்பவர் கையெழுத்துப் போட் டால்தான் ரொம்ப நியாயம் வந்துவிடும் என்று சொல்ல முடியாது. மனித நாணயத்திலும் நம்பிக்கை வைக்க வேண்டும். இவர்கள் அப்படி வேண்டுமென்று எங்கும் போய்விடுவதற்காக இந்த விதி முறைகள் ஏற்பட்டவை அல்ல. எங்கெங்கு தப்பாக நடக்கிறதோ, அங்குதான் இந்தக் காரியங்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள தாசில்தார், அவரும் நீதிபதிதான், அதிலே இருக்கிறார்கள். கன்ஸீ லியேஷன் ஆபீசர் நீதிபதிதான். தாசில்தார் மரியாதை உள்ள அதிகாரிதான். எந்தவிதமான சந்தேகமும் கொள்ளத் தேவை யில்லை. அப்படியிருந்தாலும், அதற்கு மேலே டிஸ்டிரிக்ட் கோர்ட் டுக்கு அப்பீல் இருக்கிறது. அதற்கெல்லாம் வாய்ப்புகள் இருக்கிற காரணத்தினால், அதை நாம் ஒத்துக்கொள்ளத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

அடுத்து, இங்கிருக்கும் திரு. சங்கரய்யா அவர்களும் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். உள்ளே எடுத்துக்கொண்டு போகக்கூடாது என்று சொன்னார்கள். எடுத்துக் கொண்டு போகின்றவர்கள் மீது அபராதம் விதிக்க வேண்டுமென்று திருத்தம் கூறுகிறது. இன்னும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்களும் 3-வது பிரி வுக்குக் கீழே 4, 5 என்று போடவேண்டுமென்று சொல்கிறார்கள். இங்கிருப்பதிலேயே அதிகாரம் இருப்பதாக என்னுடைய கருத்து.

' The Conciliation Officer, or the person authorised shall have all such powers as are necessary to effect the payment of the fair wages to the agricultural labourer including the power to enter upon any land on which or into any building in which the harvested paddy is kept

பிற்பகல் 1-30 என்றும் இருக்கிறது. அவர்கள் கொடுக்காவிட்டால், அதை வசூல் செய்வதற்கான, வேறு ரெவினியூ இன்ஸ்பெக்டர் மூலமாக, அதிகாரி கள் மூலமாக, அதிகாரங்கள் இங்கு விளக்கமாகக் கொடுக்கப்பட்ட காரணத்தினால், அதையும் மிகைப்படுத்த வேண்டியதில்லை. அதற் காக அபராதம் போட வேண்டுமென்று ஒரு மசோதாவில் சேர்ப் பது அவ்வளவு சரியாக இருக்காது. அதை வசூலிப்பதற்கான

வாய்ப்புகள், வசதிகள், அதிகாரங்கள், கொடுக்கப்பட்டிருப்பதாலே இந்த திருத்தங்களை வற்புறுத்தத் தேவையில்லையென்று பணிவன் புடன் வேண்டிகொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : இந்த திருத்தத்தினுடைய நோக்கமே யாரும் இதை மறுக்காமல், விவசாயத் தொழிலாளிக்குக் கொடுக்க வேண்டிய கூலியைக் கொடுக்கவேண்டுமென்பதுதான். இப்பொழுது இருப்பதிலேயே போதுமான வலு இதற்கு இருக்கிறது, கன்சிலியேஷன் ஆபீஸர்கள் மூலமாக இது உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்று கூறி இருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு விதி முறைகள் தயாரிக்கும் நேரத்திலே, இந்தக் கூலியை யாரும் மீறாமல் கொடுப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்படுவதன் மூலம் இந்த திருத்தத்தினுடைய நோக்கம் நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு இந்த திருத்தத்தினை நான் வற்புறுத்தவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, என்னுடைய திருத்தம் இந்த சட்டம் வருவதற்கு முன்னாலேயே, குறிப்பாகச் சொல்லப்போனால், மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி தாலூகாக்களிலே சட்டத்திலே குறிப்பிட்ட ஊதியத்தை விட அதிகமாக இன்றையதினம் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இன்றையதினம் அவர்கள் சட்டப் பிரகாரம் வாங்கினால், குறைந்து போய்விடும் என்று கூறுகிறேன். அந்தப் பிரதேசத்திலே இருக்க கூடியவர்கள் பெரிய அளவுக்கு இதை நம்புபவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, சட்டத்திலே, 4 உப பிரிவிலே நான் சொல்லிய மாதிரி போடுவதாலே தற்சமயம் வாங்கும் அதிக அளவு ஊதியம் பாதிக்கப்படாது என்று நான் நினைக்கிறேன். ஆகவே, இதை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மிக அழகாக கன்சிலியேஷன் ஆபீசர்களுடைய நாணயத்தை நம்பவேண்டுமென்ற விளக்கத்தைத் தந்தார்கள். போலீஸ் அதிகாரியை நம்ப மாட்டோம் என்று சொல்கிறோம். மாஜிஸ்டிரேட் உத்தரவைப் பெற்றுத்தான் அவர்கள் வேலையைச் செய்யவேண்டு மென்று சொல்கிறோம். அதேமாதிரி இங்கே இல்லையென்ற ஒரே ஒரு குறைதான். இருந்தாலும்

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : போலீஸ்காரர் என்பவர் நிர்வாக அதிகாரி. மாஜிஸ்டிரேட் என்பவர் நீதி ஸ்தலத்தில் இருக்கிற அதிகாரி. இங்கே இருப்பவர் தாசில்தார் என்று குழப்பிக் கொள்ளக்கூடாது. சமரச அதிகாரி, கன்சிலியேஷன் அதிகாரி தானே தவிர, அவருடைய அந்தஸ்து தாசில்தார் அந்தஸ்து. அவரும் நீதிபதிதான். அந்த நீதிபதி உடையை அவருக்கும் மாட்டிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மனித நாணயம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. போலீஸ்காரர்கள் என்றால் நீதி நிர்வாகத்தில் இருக்கக் கூடாது, தனியாக இருக்க வேண்டும் என்பது அரசியல் சட்டத்திலே இருக்கிறது. அந்தக் காரணத்தாலே தான் அங்கு அப்படி இருக்கிறது.

THIRU K. RAMAMOORHY : Sir, I do not press my amendment.

திரு. என். சங்கரய்யா அவர்கள் திருத்தமும் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் திருத்தமும் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெறப்பட்டன.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

பிரிவு 7 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 8.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

பிரிவு 8 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்.

திரு. என். சங்கரய்யா : பிரிவு 8--க்கு என் பெயரிலுள்ள திருத்தத்தை முன்மொழிகிறேன்.

Add the following at the end of sub-clause (1) :—

'The Revenue Court will sit at the Tahsildar's headquarters nearest to the village of the applicant. The applicant can authorise agents to appear on his behalf. The application to the Revenue Court can be made without any fee.'

திரு. கோ. பாரதிமோகன் : நான் இத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திரு. என். சங்கரய்யா : இந்தத் திருத்தம் ஏற்கனவே அரசாங்கத்தின் சார்பில் கூறப்பட்டதைத்தான் கூறுகிறது. ரெவினியூ கோர்ட்டுக்குச் செல்பவர்கள் ஏஜெண்டுகளை அமர்த்திக் கொள்ளலாம் என்று, அதாவது வக்கீல்களை அமர்த்திக் கொள்ளலாம் என்று திருத்தம் கூறுகிறது. இந்தக் கோர்ட்டுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் ஆர். டி. ஓ. ஆபீஸிலே உள்ள அதிகாரிகளாக இருக்கிறார்கள். ஆகவே, மக்களுக்கு நெருக்கமாக அவர்களைக் கொண்டு வரவேண்டுமென்றால், தாசில்தார் தலைமைக் காரியாலயங்களிலேயே மேல் விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்பொழுதுதான் விவசாயத் தொழிலாளிகளுக்கு ஓரளவு சௌகரியமாக இருக்கும். இல்லாவிட்டால் ஆர்.டி.ஓ. தலைமையலுவலகத்துக்குச் சென்று மேல்முறையீடு செய்யவேண்டி இருக்கும். இந்த ரெவின்யூ கோர்ட்டுகள் எவ்வாறு செயல்பட வேண்டுமென்று சொல்கிற நேரத்தில் கூடுமான அளவு விவசாயிகளுக்கு மேல் முறையீடுகளை அவர்களுக்குப் பக்கத்திலே உள்ள இடங்களில், ஏற்பாடு செய்தாலும் கூட இன்றைக்கு நியாயமாக இருக்கும். ஆகவே, இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் முதலிலேயே சொன்னேன், இந்த மாதிரி வேறு பிரதிநிதிகளை, 'ஆதரைஸ்டு ஏஜண்டுகளை' நியமிப்பதற்கு 8-வது விதி முறைப்படி வகை செய்கிறது என்று நான் சொன்னேன்.

'The applicant can authorise agents to appear on his behalf.' என்பது திருத்தம்.

இதிலே இடைஞ்சல் இல்லை. 8-வது ரூல்படி அந்த வாய்ப்பு இருக்கிறது. அடுத்த திருத்தம்.

'The application to the Revenue Court can be made without any fee.' என்பது.

கோர்ட் ஃபீ என்பதைப்பற்றி வக்கில்களுக்குத் தெரியும். ஆகவே, இந்தத் திருத்தம் தேவையில்லை. 'மெட்ராஸ் கோர்ட் ஃபீஸ் அண்ட் வால்யூவேஷன் ஆஃப் ஸூட்ஸ் ஆக்ட்டிலே இது இருக்கிறது. அதுவும் ரூ. 1 தான் போடப்பட்டிருக்கிறது. நாமினல் ஆகத்தான் போடப்பட்டிருக்கிறது. விவசாயிகளும் அதைப் பெரிதுபடுத்த மாட்டார்கள். அது மரியாதையாகவும் இருக்கும் என்பது ஒரு காரணம். அது பெரிய பளு அல்ல என்ற வகையிலே இருக்கலாம். நாமும் பங்கு பெறுகிறோம் என்று அவர்களுக்குத் தோன்றும். வழக்கு மன்றங்கள், அவைகளினுடைய மரபுகள் இவைகளுக்காகத்தான் இது இருக்கிறது. இதனால் அரசாங்கத்திற்கும் நிரம்ப இலாபம் வரப்போவதில்லை. அவர்களுக்கும் ஒன்றும் பாரம் இல்லை. விவசாயப் பெருமக்கள் பெருமையாகத்தான் இதைக் கருதுவார்கள். ஆகவே, இந்தத் திருத்தத்தையும் வற்புறுத்த வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சங்கரய்யா அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறார்களா ?

திரு. என். சங்கரய்யா : ரெவினியூ கோர்ட்டுகளுக்குக் கட்டணம் கட்ட வேண்டுமென்ற ஒரு திருத்தத்தை மட்டும் நான் வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பகுதியை மட்டும் வற்புறுத்த முடியாது.

திரு. என். சங்கரய்யா : வேறு சில சிக்கல்கள் இருப்பதாலே இதை வற்புறுத்துகிறேன்.

திரு. என். சங்கரய்யா அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிராகரிக்கப்பட்டது.

பிரிவு 8 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 9 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

திரு. ஆ. கு. சுப்பையா : என் பெயரில் கொடுத்துள்ள திருத்தத்தை முன்மொழிகிறேன்.

For clause 9, substitute the following, namely :—

"9. Revision by High Court. The Revenue Court shall be deemed to be a Court subordinate to the High Court for the purposes of section 115 of the Code of Civil Procedure. 1908 (Central Act V of 1908) and its orders shall be liable to revision by the High Court under the provisions of that Section."

திரு. சோ. அழகர்சாமி : இத்திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, என்னுடைய திருத்தம் இந்த மாவட்டக் கோர்ட்டுகள் தேவையில்லையென்று சொல்லியிருக்கிறது. இது ஹைகோர்ட்டாகத்தான் இருக்கவேண்டும். இதற்குக் காரணம் என்னவென்றால், இதற்கு முன்னாலே இருக்கக்கூடிய சட்டங்களிலே கூட, பண்ணையாள் பாதுகாப்பு சட்டத்திலே கூட, ரெவின்யூ கோர்ட்டு தீர்ப்பு முடிந்த பிறகு, ஹைகோர்ட்டுக்குத் தான் வருகிறது. ஹைகோர்ட்டிலே சட்டங்கள்பற்றி ஆராயக் கூடிய ஒரு நிலைமைதான் இருக்கிறது. மாவட்ட கோர்ட்டு என்று சொன்னால் தீர்ப்பளித்த பிறகு மாவட்ட கோர்ட்டு 2, 3 மாதங்களில் பைசல் செய்கிறது என்று சொன்னால் விவசாயத் தொழிலாளிகளுக்குச் சாதகம் கிடைக்காத நிலைமை ஏற்படும் என்கிற ஐயப்பாடு இருக்கிறது. ஆகவேதான் ரிவிஷன் கோர்ட்டு ஹைக் கோர்ட்டாக இருப்பது நல்லது என்ற திருத்தத்தினைக் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : சபாநாயகர் அவர்களே, திரு. சுப்பையா அவர்கள் திருத்தத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அதாவது, சாதாரணமாக லேபர் சட்டங்களிலே முதல் அப்பீல் முடிந்தவுடனே இரண்டாவது அப்பீலுக்கு வகை செய்யப்படவில்லை. ஆனால் இன்றைக்கு ரெவின்யூ கோர்ட்டு, மேல் முறையீடைக் கவனிக்கலாம் என்பது அமுலுக்குக் கொண்டு வரப் படுகிறது. ஆகவே 9-வது பிரிவை எடுத்துவிடலாம். விவசாயிகளுக்குக் கூலித் தகராறு வந்தால், அதற்கு ஒரு கன்சிலியேஷன் ஆபீசர், அதற்குப் பிறகு ரெவின்யூ கோர்ட்டு என்று வைத்திருக்கும்போது சிவில் லிட்டிகேஷன் அப்பீலுக்கு டிஸ்டிரிக்ட் கோர்ட்டு வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே, தொழில் தகராறு சட்டங்

களிலே நான் கூறியவாறு இருக்கிறது. நான் ஒரு திருத்தம் கொடுத்தேன். அது நெகடிவ்வாக இருப்பதால் சர்குலேட் செய்ய வில்லை. இந்த 9-வது பிரிவையே எதிர்த்துப் பேச வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே டிஸ்டிரிக் கோர்ட் தேவையில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் கொடுத்த திருத்தம் உயர்நீதி மன்றத் திற்குப் போகவேண்டுமென்பது. அது தொழிலாளர்களுக்குக் கெடுதல் என்று எவ்வளவு தூரம் நாம் திரு. இராமமூர்த்தி அவர்க ளோடு வாதாடிக்கொண்டிருந்தோம்? இந்தக் காரியங்களெல்லாம் தாமதம் இல்லாமல் சீக்கிரம் முடியவேண்டும் என்பது தான் நோக்கம். ஹைகோர்ட்டுக்குப் போனால் வழக்குகளுடைய நிலைமை என்ன, எவ்வளவு தாமதம் ஆகும் என்பது தெரியும். இந்தக் காரி யங்களிலெல்லாம் அப்படித் தாமதம் ஆக்கக்கூடாது என்பதற் காகத்தான், தொழிலாளர்களுக்கு உதவி பண்ணுவதற்காகத்தான், இம்மாதிரி வைத்திருக்கிறோமே தவிர, வேறு ஒன்றுமில்லை. யாருடைய நலனுக்காக இந்தத் திருத்தத்தை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்களோ, அவர்களுக்கே இது பாதகமாக இருக்கும். நில்ச்சுவான்தார்கள் வசதியாக நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டு களில் பல ஆண்டுகளுக்கு ஏறி இறங்கிக்கொண்டிருப்பார்கள். இதை அனுபவத்தில் பார்த்திருக்கிறோம். புதுக்கோட்டையில் பார்த்திருக்கிறோம். மற்ற இடங்களிலும் பார்த்திருக்கிறோம். ஆகவே, டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் இருப்பதுதான் நல்லது. இதற்கு ஆட்சேபணை எழுப்பிய திரு. சங்கய்யா அவர்கள் டிஸ்டிரிக்ட் கோர்ட்டு என்பது இரண்டாவது அப்பீல் கோர்ட்டாக அமைக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னார். கன்சிலியேஷன் கோர்ட்டு ஒரு வழக்கு மன்றமாகி விடுகிறது. இரண்டாவதாக ரெவின்யூ கோர்ட்டு. அதில் ஏதாவது தவறு இருந்தால்தான் டிஸ்டிரிக்ட் கோர்ட், அதிலும் கூட ஸ்டே கொடுக்கும் அதிகாரம் கூடாது என்றெல்லாம் வரம்பு கட்டியிருக்கிறோம்.

ஸ்டே ஆஃப் அபரேஷனுக்கு டிஸ்டிக்ட் கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று போட்டிருக்கிறோம். ஆரம்பத்தில் சொன்னபடி விரைவாக முடிவு காண்பதற்காகத்தான் வழிவகை செய்யப்பட் டிருக்கிறது. ஒரு தனியான ஜஸ்டிஸ் என்று சொல்வதைக் காட்டிலும் சோஷல் ஜஸ்டிஸ், சமூக நீதி என்ற அடிப்படையில் நம்முடைய சட்டங்கள் அமைந்தால் தான் புதுமையான நிலைமை யைப் பெறமுடியும். அந்த வகையில் எந்த நோக்கத்திற்காக திரு. சுப்பையா அவர்கள் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந் திருக்கிறார்களோ. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இப் பொழுது இந்தப் பிரிவிலுள்ள நிலைமையே வழியாக இருக்கு மாதலால், ஹைகோர்ட், அப்பீல் கோர்ட்டாக இருக்கலாம் என்ற

திருத்தத்தை வற்புறுத்தத் தேவையில்லை என்று கூறி, இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள் கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : 9-வது பிரிவை எடுத்து விடவேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்தேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிய பிறகு, அதை 'வித்டிரா' செய்து கொள்கிறேன்.

திரு. சுப்பையா அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதி யோடு திரும்பப்பெறப்பட்டது.

பிரிவு 9 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 10 முதல் 13 வரை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 14

பேரவையின் முன்னுள்ள கேள்வி---

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 14 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்படவேண் டும்".

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, நான் 14-வது பிரிவுக்குக் கொடுத்திருக்கிற கீழ்க்கண்ட திருத்தத்தைப் பிரேரே பிக்கிறேன்.

Delete sub-clause (2) (*c*) and re-number clause (*d*) and (*e*) as (*c*) and (*d*)."

திரு. சோ. அழகர்சாமி : இந்தத் திருத்தத்தை நான் வழி மொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : அப்பீல் செய்வதற்காகக் கட்டணம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு நாளைக்கு ரூ. 3 சம்பளம் வர வில்லை என்பதற்காக வழக்காடுகிற தொழிலாளிகள், அப்பீலுக்குப் போகும்பொழுது கட்டணம் செலுத்தவேண்டுமென்றால், அவர்கள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள். ஆகவே தான் அவர்கள் இனமாக அப்பீல் செய்வதற்கு அவர்களுக்கு உரிமை வழங்க வேண்டும், அந்தப் பகுதியை எடுத்துவிட வேண்டும் என்று சொல் கிறேன். இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, what applies for applications will also apply for appeals. So the amendment is not necessary.

திரு. ஆ. கு. சுப்பையா : நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பையா அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 14 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 15 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

அட்டவணை 1.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

" அட்டவணை 1 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும் ".

திரு. என். சங்கரய்யா : அட்டவணை 1-க்கு எங்கள் பெயரால் கொடுக்கப்பட்டுள்ள பின்வரும் திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

In Schedule I, after item 6, add the following as item 7 :—

" 7. All Taluks of West Thanjavur and Chidambaram Taluk of South Arcot District ". '

திரு. சோ. அழகர்சாமி : நான் இதை வழிமொழிகிறேன்.

THIRU K. RAMAMURTHI : Sir, I move the following amendment :—

" Delete Schedule I and re-number Schedule II as Schedule I ".

THIRU S. SIVASUBRAMANIAN : Sir, I second the amendment.

திரு. ஆ. கு. சுப்பையா : என் பெயரிலுள்ள கீழ்க்கண்ட திருத்தத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

' In Schedule I, after item 6, add the following taluks :—

" 7. Kumbakonam. 8. Papanasam. 9. Thanjavur. 10. Puthukkottai. 11. Orathanadu. 12. Aranthangi ".

திரு. சோ. அழகிரிசாமி : நான் இத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திரு. என். சங்கரய்யா : இது ஒரு முக்கியமான திருத்தம். கணபதியா பிள்ளை கமிஷன் அறிக்கை தருகிற நேரத்தில், அந்தக் கமிஷன் கிழக்குத் தஞ்சாவூர் பிரச்சினையைப் பற்றி ஆராய்வதற்கு

என்று ஏற்படுத்தப்பட்டாலும், பொதுவாக தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் இன்று ஏறத்தாழ இதே போன்று நிலைமைகள் இருக்கக்கூடிய காரணத்தினால், அதில் ஒரு பகுதியாகிய மேற்குத் தஞ்சாவூருக்கும், அதைப் போல தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் தாலுகாவிற்கும் இந்தச் சட்ட அமுலை விஸ்தரிக்க வேண்டும் என்ற திருத்தத்தை நாங்கள் கேட்டிருக்கிறோம். ஒரே மாவட்டத்தை இரண்டாகப் பிரிவினை செய்து கிழக்குத் தஞ்சாவூரிலுள்ள நிலைமைகளை ஆராய்ந்து, அங்குள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு மட்டும் இந்தச் சட்டத்தை அமுல் செய்தால், இவ்வாறு ஒரு பகுதிக்கு மட்டும் இது அமுலில் இருக்கும் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. எப்படியும் இதை மேற்குத் தஞ்சாவூருக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்ற நிலை ஏற்படுகிறபொழுது, இந்தச் சட்டத்தை நிறைவேற்றக்கூடிய நேரத்திலேயே, அதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, மேற்குத் தஞ்சாவூருக்கும் இதை விரிவுபடுத்துவது மிகவும் நியாயமாக இருக்கும்.

அதே போலத்தான் சிதம்பரம் தாலூகா உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, இந்தச் சட்டத்தை சிதம்பரம் தாலுகாவிற்கும் அமுல்படுத்தவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். எற்கனவே தஞ்சாவூர் மாவட்டத்தில் சட்டம் கொண்டுவந்தபொழுது, தஞ்சாவூர் தாலுகாவிற்கு மிகவும் அருகாமையில் உள்ள, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நிலைமைகளெல்லாம் ஏறத்தாழ இருக்கக்கூடிய சிதம்பரம் தாலுகாவிற்கும் குத்தகை விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இந்தச் சட்டத்தையும் அரசாங்கம் "பை நோடிபிகேஷன்" அறிவிப்பு மூலம் இந்த மாநிலத்தில் எந்தத் தாலுகாவிற்கும் விஸ்தரிப்பதற்கு அதிகாரம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது எதைக் காண்பிக்கிறது என்றால், கிழக்குத் தஞ்சாவூர் போல மற்ற இடங்களிலும் நிலைமைகள் இருக்கலாம், அந்த இடங்களுக்கு இந்தச் சட்டத்தைப் பிரயோகிக்கவேண்டியிருக்கும் என்பதைத் தான் காண்பிக்கிறது. மேற்குத் தஞ்சாவூர், தென் ஆற்காடு, சிதம்பரம் தாலுகாவிலுள்ள விவசாயத் தொழிலாளிகள் சார்பாக, முதல் அமைச்சர் அவர்களிடத்திலும், ரெவின்யூ அமைச்சர் அவர்களிடத்திலும் இந்த மசோதா சபையின் விவாதத்திற்கு வரும் முன்பே, இதைப்பற்றி மகஜர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, மேற்குத் தஞ்சாவூர், தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரம் தாலுகா ஆகிய இடங்களுக்கும் இந்தச் சட்டத்தை விரிவு படுத்தவேண்டும் என்பது பற்றி அரசு ஆழ்ந்து பரிசீலித்து, அந்த இடங்களுக்கும் இந்தச் சட்டத்தை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : திரு. சங்கரய்யா அவர்கள் சொன்ன விஷயங்கள் அத்தனையும் எனக்கு உடன்பாடு உண்டு. நானும் அதை ஜில்லா முழுவதிலும் விஸ்தரிக்கவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். திருத்தத்தில் "புதுக்கோட்டை" என்று

போட்டிருக்கிறது. அது "பட்டுக்கோட்டை" என்று இருக்க வேண்டும். இதற்கு முன்னால் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் 1952-ம் வருஷத்தில் தஞ்சை மாவட்டம் முழுவதற்கும் கொண்டு வரப்பட்டது. விவசாயத் தொழிலாளர்கள் இந்த 6 தாலுகாக் களில் மட்டும் இல்லை. ஜில்லா முழுவதிலும் தான் விவசாயத் தொழிலாளிகள் இருக்கிறார்கள். அங்கே பெரிய பண்ணைகள் இருக் கின்றன. பூண்டி, கபிஸ்தலம் போன்ற பெரிய பண்ணைகள் இருக் கின்றன அந்தப் பக்கத்தில். அங்கு இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் அந்த அளவுக்கு ஒன்று சேர்ந்து ஊதியத்தைக் கேட்கக்கூடிய அளவுக்கு நிலைமை உருவாக இல்லை. எங்கு ஒன்று பட்டிருக்கிறார்களோ அவர்கள் ஊதியம் வேண்டும் என்று கிளர்ச்சி செய்து ஊதியத்தை சன்னம் சன்னமாக 10 ஆண்டு களாக உயர்த்தியிருக்கிறார்கள் என்று நீதிபதி கணபதியா பிள்ளை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே 6 தாலுகாக்களுக்கு மட்டும் இந்தச் சட்டத்தை இப்பொழுது கொண்டுவந்துவிட்டு மற்ற 6 தாலுக்காக்களை ஒதுக்கி விடுவது ஒரு கண்ணில் வெண்ணெயும் மற்றொரு கண்ணில் சுண்ணாம்புமாக வைத்துக் கொண்டு பார்ப்பதுபோல்தான். தஞ்சை ஜில்லா முழுவதற்கும் இந்தச் சட்டத்தை விஸ்தரிக்க வேண்டும்.

தஞ்சாவூரை அடுத்த சிதம்பரம் தாலுகா ஒரு காலத்தில் தஞ்சா வூரோடு சேர்ந்து தான் இருந்தது. தஞ்சாவூர் ஜில்லாவில் இருக் கக்கூடிய விவசாய தொழிலாளிகளுக்கு இருக்கக்கூடிய வாழ்க்கை நிலைமைகள் அத்தனையும் சிதம்பரம் தாலுகா விவசாயத் தொழிலா ளர்களுக்கும் தான் பொருந்தும். ஆகவே தான் சிதம்பரம் தாலு காவிற்கும் இதை விஸ்தரிக்கவேண்டும் என்று திரு. சங்கரய்யா அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இரண்டு பேர் களும் கொடுத்திருக்கிற திருத்தங்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்வது நல்லது என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: கனம் சபாநாயகர் அவர் களே, இப்பொழுது அங்கத்தினர்கள், திரு. என். சங்கரய்யா அவர் களும், திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும் கொடுத்திருக்கும் திருத் தத்தை ஒட்டி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஏற்கனவே இருக்கும் சட்டங்கள் பூராவும், பக்கத் திலுள்ள வட்டாரங்களில் போலவே, நான் நேற்று எடுத்துக் காட் டியதுபோல், சிதம்பரம் தாலுகாவிலும் அமல் படுத்தப்படு கின்றன. ஆகவே, இந்தச் சட்டத்தையும் சிதம்பரம் தாலுகா விற்கும் அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன். ஏனென்றால், நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, சிதம்பரம் தாலுகா தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்திருந்ததுதான். போராட்டத்தின் காரணமாகத்தான், புரட்சியின் பிறகுதான் இதைக் கொண்டுவரவேண்டும் என்று இராமல், இப்பொழுதே, இந்தச் சட்டம் செய்யும் நேரத்திலேயே, எங்கள் தாலுகாவிற்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதுதான்

விவசாயிகளுக்கும் நலமாக இருக்கும். இப்பொழுதே அமைச்சர் ஒரு வார்த்தை சொல்லிவிட வேண்டும், பின்னாலே இல்லாமல், இப்பொழுதே இந்தச் சட்டத்தை சிதம்பரம் தாலூகாவிற்கும் விஸ்தரித்து விடுகிறேன் என்று அமைச்சர் சொல்லிவிட்டால், நலமாக இருக்கும். இப்பொழுது சிதம்பரம் விவசாயிகள் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள், சட்டசபையில் என்ன நடக்கிறது என்று தங்களுக்கும் கிடைக்குமா என்று அவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கும் போது, நான் சிதம்பரம் தாலூகாவிற்கும் விஸ்தரித்து விடுகிறேன்" என்று அவர்கள் சொல்லிவிடவேண்டும் என்று சபாநாயகர் அவர்களே உங்கள் மூலம், அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

THIRU K. RAMAMOORTHI : My amendments for Clause 1 and Schedule I are inter-linked. Hence, I will have my speech when my amendment to Clause 1 comes up for discussion. I have moved the present amendment because it is inter-linked with my amendment to Clause 1.

MR. SPEAKER : Is the hon. Member pressing the present amendment?

THE HON. THIRU K. A. MATHIALAGAN . He says both are same.

THIRU K. RAMAMOORTHI : I want to make one submission. I have given an amendment for Clause I also. My present amendment and the other one are inter-linked. If my amendment to Clause 1 fails, and my amendment to Schedule 1 is passed, it will have no effect. So I request that I may be given time. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் திருத்தத்தை வற்புறுத்துகிறீர்களா? முதல் பிரிவுக்கு உள்ள திருத்தத்தைப் பின்னால் எடுத்துக் கொள்ளலாம்.

THIRU K. RAMAMOORTHI : In the fond hope that my amendment to Clause 1 will be accepted, I am pressing my present amendment.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய திருத்தம் ஒரு நல்ல திருத்தம், வரவேற்க வேண்டிய திருத்தம். சிதம்பரம் உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் கூட, கம்யூனிஸ்ட் கட்சியின் திருத்தத்தை —முதன் முதலாக அவர்கள் செய்வது—ஆதரித்திருக்கிறார்கள். ஒரு நல்ல சகுனம்

திரு. என். சங்கரய்யா : இதுவும் கம்யூனிஸ்டுகளுடைய வாலாட்டம் இல்லை என்பதை நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள் கவனிக்க வேண்டும்.

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பன்னிரண்டு மணி விவாதத்தை இப்பொழுது இரண்டு மணிக்குக் கொண்டு வருகிறார்கள். அது இருக்கட்டும். இது பொதுவாக ஒரு நல்ல திருத்தம். இதன் கருத்தைப் பொறுத்தவரையில், அரசாங்கத்திற்கு ஆட்சேபணையில்லை. நான் விவாதத்திற்குப் பதில் கொடுத்தபோது கூட, திரு. சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டதைச் சொல்லி, இன்றைக்கு கிழக் தஞ்சையில் அமலுக்கு வருகிறது. மற்ற இடங்களில் உள்ள நிலைமைகளுக்குத் தக்கவாறு, நாளாவட்டத்தில், கொண்டுவரலாம் என்று சொன்னேன். இதன் நியாயத்தை அரசு உணர்ந்திருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில்தான் சிதம்பரம் இருந்தது. அது எனக்கும் தெரியும். கொள்ளிடம் கரை விவசாயிகளுடைய நிலை, பக்கத்து சீர்காழி விவசாயிகளின் நிலை போன்றதுதான். சிதம்பரமும், சீர்காழி போன்றதுதான். நடுவே கொள்ளிடந்தான் இருக்கிறது- கடலூரில் சேர்த்து விட்டார்கள். அதே மாதிரிதான் கம்யூனிஸ்ட் நண்பர்கள் மேற்குத் தஞ்சைக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். திரு. இராமமூர்த்தி அவர்களும் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். கம்யூனிஸ்டுகள் மாவட்டம் பூராவிற்கும் கேட்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய இராமமூர்த்தி அவர்கள், தமிழ் நாடு முழுவதும் அமல்படுத்த வேண்டும் என்கிற அதிதீவிரமான திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி ஒரு காலம் வரும் என்று நம்புகிறேன்.

மசோதாவின் இரண்டாவது பிரிவிலேயே இருக்கிறது. இப்பொழுது இரண்டாவது பிரிவின் (பி) என்ற உட்பிரிவில் திரு. சிவசுப்பிரமணியம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன், மந்திரி இப்பொழுதே அறிவித்துவிடவேண்டும் என்று கேட்டார்கள் இப்பொழுது இல்லையென்றாலும், சட்டமானதிலிருந்து எந்த நேரத்திலும், இதை வேறு இடங்களுக்கும் கொண்டு வரலாம் என்று ஏற்கனவே போட்டிருக்கிறோம்.

The Government may by notification direct that the provisions of this Act shall come into force in any other area on such date as may be specified in such notification and different dates may be appointed for different areas என்று இதிலேயே இருக்கிறது

Government may by notification direct that the provisions of this Act shall come into force in any other area including Chidambaram or "Mel Thanjavur" (மேல் தஞ்சாவூர்) or any other part which Thiru Ramamurthy envisages.

ஆகவே இதில் போட்டிருப்பது போல, திருத்தத்தின் உள்சாரம் தான் அரசாங்கத்தின் கருத்து. ஆனால், முதல் கட்டமாக, இந்தப் பிரச்சனை கிழக்குத் தஞ்சாவூரில் இருப்பதால், அதை முதலில் கூறி, பின்னால் மற்ற இடங்களுக்கு வேண்டுமானால் கொண்டு வரலாம் என்று போட்டிருக்கிறது. ஆனால், அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளுகிறோம். அப்படிப்பட்ட நிலைமைகள் வரும்

போது, சாத்தியக் கூறுகள் இருந்தால், தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறி, இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திருத்தத்திலே இருக்கும் கருத்தை ஏற்றுக் கொண்டிருப்பதற்கு நன்றி, கம்யூனிஸ்ட் கட்சி மதிப்புக் கொடுக்கிறது. ஆனாலும், அவர்கள் சார்ந்திருக்கும் இயக்கம் இந்தச் சட்டம் மற்றப் பகுதிகளுக்கும் விரிவு படுத்தப்படவேண்டும் என்று திருத்தத்தை வற்புறுத்தவேண்டும் என்று கூறுகிறார்கள். ஆகவே, விவசாயத் தொழிலாளர்களுடைய நலனைக் கவனத்தில் கொண்டு, இந்தத் திருத்தத்தை வற்புறுத்துவதன் காரணமாக சீக்கிரம் ஒரு முடிவு எடுக்க உதவியாக இருக்கும் என்ற காரணத்தால் இதை வற்புறுத்துகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில், திருத்தத்தை ஏற்றுக் கொள்வதுதான் நியாயமாக இருக்கமுடியும் என்பதால், நான் திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

THIRU K. RAMAMOORTHI : Sir, I press my amendment.

திரு. என். சங்கரய்யா, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. க. இராமமூர்த்தி ஆகியவர்களின் திருத்தங்கள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிராகரிக்கப்பட்டன.

அட்டவணை 1 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

அட்டவணை 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"அட்டவணை 2 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

திரு. ஆ. கு. சுப்பையா : என்னுடைய கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன் :—

For Part I, substitute the following namely :—

"*Part I*

Men.

All kinds of work during cultivation season including maramathu—8 litres of paddy and Rs. 1.25 per day.

Women.

All kinds of work during cultivation season including maramathu—6 litres of paddy and 0.50 paise per day.

For ploughing where bullocks and ploughs are provided by the agricultural labourer—Rs. 5.25 per plough."

(ii) In part II, for the words 'fifty-four' substitute the words 'forty-eight'.

ILLUSTRATION

In Illustration to Part II,—

For the figures '5,400' and '4,800' substitute the figures '4,800' and '4,200'.

திரு. சோ. அழகர்சாமி : நான் இத்திருத்தங்களை வழிமொழிகிறேன்.

திரு. என். சங்கரய்யா பேரவைத்தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்.

Part I

Men.

For the figures and words "Rs. 300 or six litres of paddy plus Rs. 1.25 p. per day" substitute the words and figures "seven litres of paddy plus Rs. 2.00 per day."

Women.

For the words and figures "Rs. 1.75 p or five litres of paddy plus 0.25 p. per day", substitute the words and figures "six litres of paddy plus Re. 1.00 per day."

Part II

For the words "six litres", subsitute the words "eight litres" and for the words "fifty-four litres", substitute the words "fifty-six litres."

திரு. கோ. பாரதிமோகன் : நான் இத் திருத்தங்களை வழிமொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிட்டிருக்கும் ஊதியம் குறைவு என்றுதான் சொல்ல முடியும். அதற்குக் காரணம் முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், நான் சொல்லியிருக்கும் முறையில் தான் அறிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. நான் சொல்லியிருப்பதற்கும், நீதிபதி கணபதியா பிள்ளை சொல்லியிருப்பதற்கும் அதிக வித்தியாசம் இல்லை. அந்த முறையில் எட்டு லிட்டர் கொடுக்கவில்லையென்று சொன்னால் பணமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சட்டத்திலே மூன்று ரூபாய் பணம் கொடுக்க வேண்டும் அல்லது நெல்லாகவும், பணமாகவும் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பது சிக்கலைத்தான் ஏற்படுத்தும். பொதுவாக விவசாயப் பகுதிகளிலே தானியமாகத்தான் கூலி கொடுப்பது பழக்கம். இந்தப் பழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருவது. தற்போது நிலப்பிரபுக்கள் மூட்டை நெல்லை 30, 35, 40 பி.ப. 2–00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ரூபாய் என்று விற்றுவிட்டு, பணமாகத்தான் கூலி கொடுப்பேன் என்று சொல்லி, தொழிலாளர்களை ஏமாற்றக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, விவசாயத் தொழிலாளர்களுக்குத் தானியமாகவே கூலி கொடுக்க வேண்டும். இந்தச் சட்டத்திலே ஒரு விஷயம் விடப்பட்டிருக்கிறது. விவசாயத் தொழிலாளி சாகுபடிக் காலம், அறுவடைக் காலங்களில் மட்டுமல்ல, மற்றபடி இரண்டு மூன்று மாதங்கள் மராமத்து வேலைகளும் செய்ய வேண்டியிருக்கிறது. இது சட்டத்தில் விடப்பட்டிருக்கிறது. மராமத்து வேலைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த முறையில் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, அறிக்கையிலே 6 லிட்டர் நெல்லும் 1 ரூபாய் 25 பைசாவும் என்றிருக்கிறது- என்னுடைய திருத்தம் என்னவென்றால், ரூபாய் என்று போடப்பட்டிருப்பதை நீக்க வேண்டும். இத்தனை லிட்டர் நெல், இத்தனை ரூபாய் என்று இணைக்கப்பட்ட வேஜ் ஆகத்தான் இருக்கிறது. திரு. கணபதியா பிள்ளை அவர்கள், சாகுபடி காலத்தில் கூலிகளைப் பற்றிய அறிக்கையின் 15-வது பக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

The present practice is that for work unconnected with harvest, wages are paid usually two-third, or three-fourth in kind and the remainder in cash. என்று

ஆகவே, தஞ்சாவூர் மாவட்டத்தில் இன்றைக்குக் கொடுக்கப்படக்கூடிய கூலியில் மூன்றில் இரண்டு பங்கு, நான்கில் மூன்று பங்கு தானியமாகக் கொடுக்கப்படுகிறது. பாக்கி பணமாகக் கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு இந்த மன்றத்திலே ஏதாவது ஒரு விஷயத்திலேயாவது கருத்தொற்றுமை ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், ஒரே ஒரு விஷயத்தில்தான் கருத்தொற்றுமை ஏற்பட்டிருக்கிறது. அதாவது இந்தக் கூலியானது தானியமாகக் கொடுக்கப்படவேண்டுமென்பதிலே பல்வேறு கட்சிகளிலே உள்ளவர்களிடையே கருத்தொற்றுமை காணப்பட்டது. நாம் ரூபாய் 'அல்லது' என்று போட்டால், சட்டத்தின் உண்மையான தன்மையை மதிக்மையை மதிக்காத நிலப் பிரபுக்கள் "ரூபாயாகத்தான் கொடுப்போம்" என்று சொல்வார்கள். ஆகவே, 'அல்லது' என்று போட்டிருப்பது கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரிய சர்ச்சையை உண்டாக்குவதற்கு வழி செய்யும்.

திருவாரூர் ஒப்பந்தத்தையாவது ஏற்றுக் கொள்ளுங்கள். திருவாரூரிலே செய்யப்பட்டது மாவட்டக் கலெக்டர், மிராசுதார்கள் வாய்மொழியாக செய்யப்பட்ட ஒப்பந்தமாகும். ஆண்களுக்கு 6 லிட்டர் நெல்லும் ரூபாய் 1¼ என்றும் பெண்களுக்கு 5 லிட்டர் நெல்லும் 25 காசுகளும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்று நாம் தானியமாகக் கொடுக்க வேண்டுமென்பதை கட்டாயப்படுத்தாததால், ரூபாய்தான் கொடுப்பேன், என்று

1969 செப்டம்பர் 13] [திரு. என். சங்கரய்யா]

நிலச் சொந்தக்காரர்கள் சொன்னால் என்ன செய்வது? இன்றைய நிலைமையில் தானியத்தை கட்டாயப்படுத்தி வாங்க முடியாது. அரசாங்கம் நிர்ணயித்திருக்கக்கூடிய விவசாயக் கூலி ரூபாய்தான் கொடுப்பேன் என்று நிலப்பிரபுக்கள் சொன்னால் என்ன செய்வது? விவசாயத் தொழிலாளர்கள் வேலை செய்வதே தங்களுக்குத் தானியம் வேண்டுமென்பதற்காகவேதான். அவா களும் சாப்பிட வேண்டும், வாழ வேண்டும். அப்படியிருக்கின்ற நிலவரத்தில் ரூபாய் பெற்றுக் கொள்ளுங்கள் என்று நிலப் பிர புக்கள் அட்டகாசம் செய்தால் என்ன செய்ய முடியும்? இந்த அறிக்கையால் கிழக்குத் தஞ்சாவூரில் என்ன நன்மைகள் ஏற்படும் என்று நாம் கருதுகிறோமோ, அதற்கு நேர்மாறாக நிலப்பிரபுக்கள் இதை வைத்துக்கொண்டு பெரிய சச்சரவுகளைக் கிளப்புவார்கள். நெல்லாகவும், பணமாகவும் இணைக்கப்பட்ட கூலியாகக் கொண்டு வர வேண்டும் என்று சொல்லப்பட்டது. அறுவடை அல்லாத சாகு படி வேலைக்கு வரும்போதுதான் இந்தப் பிரச்சினை வருகிறது. இந்தச் சிக்கலை அரசு மிக்க கவனத்தோடு உணர்ந்து பார்க்க வேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூலி சம்பந்தப்பட்ட விஷயத்தில், ஆண்களுக்கு ஆறு லிட்டர் என்பதற்குப் பதிலாக ஏழு லிட்டர் தானியமும் ஒரு ரூபாய் இருபத்தைந்து பைசா என்பதற்குப் பதிலாக இரண்டு ரூபாய் என்று கொடுக்க வேண்டும். பெண்களுக்கு 5 லிட்டர் தானி யம் என்பதற்குப் பதிலாக ஆறு லிட்டர் தானியமும், 25 பைசா என்பதற்குப் பதிலாக ஒரு ரூபாய் என்றும் கொடுக்கப்பட வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்திலே ஐந்து எக்கர் வைத்திருக் கக்கூடிய நிலவுடைமைக்காரருக்கு நிகர வருமானம் கணிசமான அளவில் உயர்ந்திருக்கிறது. டபிள் கிராப் பயிரியல் ஐந்து ஏக்கர் வைத்து இருக்கும் நிலவுடைமையாளருக்கு வரக்கூடிய நிகர வருமானம் 2,553 ரூபாய். இதில் 6¼ சதவீதம் ரிடர்னாக 1,093 ரூபாய் போக பாக்கி 1,460 ரூபாய். மானேஜ்மெண்ட் ரெம்யூன ரேஷன் என்ற வகையில் மாதம் ஒன்றுக்கு 45 ரூபாய் விதம் எட்டு மாத காலத்திற்கு 360 ரூபாய் ஆகிறது. இந்த 1,460 ரூபாயில் 360 ரூபாயைக் கழித்தால் நிகர வருமானம் 1,100 ரூபாய் எல்லா விதமான செலவினங்களுக்கும் போக இருக்கிறது. தற்போது விவ சாயத்திலே அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளின் விளைவாக விளைச்சல் அதிகமாகியிருக்கிறது. இருபது கலம் நெல் விளைந்த இடத்தில் இப்போது அறுபது கலம் நெல் விளைகிறது குறிப்பாக திருவாரூர் ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டி ருக்கிறது. மேலும் பத்து சதவீதம் உயர்வு கொடுக்கிறோம் என்று சொன்னாலும் அது பிரதிபலிக்கவில்லை. பத்து சதவீத உயர்வு என்பது ஏற்படவில்லை. எங்களுடைய திருத்தம் மிக நியாயமான தாக இருக்கிறது.

விவசாயத் தொழிலாளர்கள் என்று சொல்லப்படுபவர்கள். குடை பிடித்துக்கொண்டு, காரிலே சுற்றிக்கொண்டு, நகரங்களில் பங்களாக்களில் வாழ்பவர்கள் அல்ல. தஞ்சாவூரில் ஐந்து எக்கர் வைத்திருக்கும் நிலப்பிரபுக்கள் சாதாரணமாக கூலிக்கு ஆட்கள் வைத்துக்கொள்வதில்லையென்று கணபதியா பிள்ளை கமிஷன் குறிப்பிட்டிருக்கிறது. அப்படி வேலைக்கு ஆட்களை அமர்த்திக் கொள்ளாத நிலையில் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். தொழிலாளர்களுக்கு அதிகப்படியான கூலி கொடுக்க வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 43-வது ஆர்டிகிளில் குறிப்பிட்டிருக்கிறபடி விவசாயத் தொழிலாளர்கள் உரிமைகளை ஊர்ஜிதம் செய்ய வேண்டும். இதை நாம் எல்லோரும் சிபாரிசு செய்து விவசாயத் தொழிலாளர்களுக்கு உறுதுணையாக இருப்போம் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய திருத்தங்களை வரவேற்பதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒன்பது லிட்டர், பத்து லிட்டர் என்று கொடுக்க வேண்டிய அவசியம் பற்றி திரு. சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டார்கள். திரு. கணபதியா பிள்ளை அவர்கள் கம்யூனிஸ்டாகி, கணக்குகளைச் சரியாக எழுதியிருக்கிறார்கள். முதலில் என் கண்களில் அது தோன்றவில்லை. நிலத்தில் நெல் விளைப்பவர்களுக்கு, அவர்கள் வாழ்க்கைக்கான ஊதியத்தை யோக்கியமாகக் கொடுக்க முடியாத போது, நிலச் சொந்தக்காரர்கள் மட்டும் அந்த நெல்லை எடுத்துப் போக, தருமப்படி என்ன உரிமை இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'So long as a living wage is not assured to the agricultural worker, the owner of the land is not entitled morally to claim any **part of** the residual income.'

திரு சங்கரய்யா அவர்கள் கூட அவ்வளவு தீவிரமாகப் பேசவில்லை.

'My conclusion is that a living wage is not now secured to the East Thanjavur worker and the average income now earned in the industry of agriculture by the typical five acres owning landholder is capable of bearing the additional burden of an increase in the wage rates which I propose to recommend.'

என்றெல்லாம் ரொம்ப வற்புறுத்தி எழுதியிருக்கிறார்கள். நாம் இன்றைக்கு இதை ஒரு காலகட்டமாகத் துவக்கமாக வைத்திருக்கிறோம். திருவாரூர் ஒப்பந்தம்போல இருக்க, எல்லா ஊர்களிலும் ஒரே மாதிரியான நிலைமை இல்லை. கோட்டையூர் பகுதியிலே ஏழு எட்டு கூட இருக்கலாம். பல காரணங்களுக்காக யூனிஃபார்மிடி வேண்டும் என்பதற்காகச் செய்திருக்கிறோம். இடத்திற்கு இடம், ஊருக்கு ஊர் வித்தியாசப்படுகிறது.

இன்றைக்கு இந்தக் கமிஷன் நல்லமுறையில் சிபாரிசு செய்திருக்கிறது. இதுவும் மாறக் கூடியதுதான். காரணம் இந்தக் கூலி விகிதம் 1972-ஆம் வருடம் இந்தத் தேதி வரை என்றுதான் போட்டிருக்கிறோம். ஆகவே கருத்துக்களின் அடிப்படையில் அவர்களுடைய திருத்தத்திற்கு எந்தவித ஆட்சேபமும் தெரிவிக்க நான் விரும்பவில்லை. அவர்கள் உட்கார்ந்திருக்கிற இடத்தில் நான் உட்கார்ந்து இருந்தால் இப்போது எத்தனை திருத்தங்கள் கொடுத்திருப்பேனோ தெரியாது. இப்போதுள்ள நிலை நடைமுறைக்கும் லட்சியத்திற்கும் இடையே ராஜி பேசவேண்டியதாகத்தான் இருக்கிறது. நாம் இப்போது கொண்டுவந்திருக்கிற மசோதா நம்முடைய நீண்ட யாத்திரைக்கான முன்னோடி தான் என்று சொல்லி, திருத்தங்களை வற்புறுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : நான் என்னுடைய திருத்தங்களைப் பற்றி முன்பே விளக்கமாகச் சொன்னேன். உழவுக் கூலி விடப்பட்டிருக்கிறது. அறுவடை விஷயத்தில் 9 இல் ஒரு பாகம் என்பதற்குப் பதிலாக 8 இல் ஒரு பாகம் என்ற திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எங்களுடைய திருத்தங்களின் கருத்துக்கள் வரவேற்கத்தக்கவை என்று கூறியதற்கு நன்றி-பாராட்டுகிறேன். ஆயினும் விவசாயத் தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டிய கடமை இருப்பதன் காரணமாக, இப்போதுள்ள நிலை அவர்களைப் பாதிக்கிறது என்ற காரணத்தினால் திருத்தத்தை வற்புறுத்துகிறேன் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்களுடைய திருத்தமும், திரு. என். சங்கரய்யா அவர்களுடைய திருத்தமும் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிராகரிக்கப்பட்டன.

அட்டவணை—2 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 1 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

திரு. என். சங்கரய்யா : நான் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை முன்மொழிகிறேன்:

(i) In sub-clause (3) of clause 1, add the following at the end :

"The State Government can, by notification, revise the schedule of wages annually, before the commencement of the agricultural season in accordance with the trend of the cost of living index relevant to the area concerned."

(ii) In sub-clause (1) for the words "Fair Wages Act, 1969" substitute the words "Payment of Wages Act, 1969".

(iii) Delete the word 'fair' wherever it occurs in the Bill.

திரு. கோ. பாரதிமோகன் : நான் இந்தத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

THIRU K. RAMAMOORTHI : Sir, I move the amendment standing in my name :—

(i) In item (a) of sub-clause (2) delete the words "in the taluks in the Thanjavur District specified in Schedule".

(ii) Delete item (b) of sub-clause (2).

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. என். சங்கரய்யா : என்னுடைய திருத்தம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த திருத்தமாகும். இந்த மசோதாவின்படி இப்போது நிர்ணயிக்கப்படுகிற கூலி விகிதம் 3 ஆண்டுகளுக்கு முளை அடிக்கப்படுகிறது. எதிர்பாராத வகையில் அடுத்த ஆண்டே விவசாயத்தொழிலாளர்களுடைய வாழ்க்கைச் செலவு உயர்ந்துவிடுமானாலும் மூன்று வருஷத்திற்கு இப்போது நிர்ணயிக்கப்படுகிற கூலி விகிதத்தை மாற்ற முடியாது போகும்.
Principles of Natural Justice
என்கிற நியதிக்கே இது முரணானது. தொழிலாளர்களுக்கு விலைவாசி உயர்வுக்கு ஏற்ற பஞ்சப்படி அளிக்கும் திட்டத்தை இந்த நாடே ஏற்றுக்கொண்டிருக்கிறது. வருஷா வருஷம் உயர்வு கொடுக்க வேண்டுமென்று நான் கோரவில்லை. இந்தத் தீர்மானத்தின் நோக்கம் எதிர்பாராத முறையில் விலைவாசி குறைந்தால் அந்தக் குறைவுக்கு ஏற்ப வேறுவிதமாக மாற்றுவதற்குக் கூட ஆட்சேபனையில்லை. ஆனால் நிச்சயமாகக் குறையப் போவதில்லை. ஆகவேதான் நான் கோருவது அரசாங்கம் அந்த அதிகாரத்தை எடுத்துக் கொள்ளட்டும். ஒவ்வொரு ஆண்டும் சாகுபடி ஆரம்பிக்கிற காலத்தில் உள்ள விலைவாசியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கு ஏற்ற கூலி விகிதத்தை அறிவிக்கலாம். தண்டோரா மூலமாகத் தெரிவிக்கலாம். இது மிகவும் நியாயமான திருத்தம்.

அடுத்தபடியாக இதை ஃபேர் வெஜஸ் ஆக்ட் என்று போட்டிருக்கிறோம். ஏற்கனவே இருந்த குறைந்த பட்ச கூலிக்கும் குறைவாகத்தான் இப்போது நிர்ணயித்திருக்கிறோம். ஆகவே இதை நியாயக் கூலிச் சட்டம் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இதை வைத்தே இப்போதுதான் நியாயக் கூலி நிர்ணயிக்கப்பட்டது. மேலும் கொடுக்க முடியாது என்று மறுக்க முடியும். ஆகவே இதைக் குறைந்த பட்ச கூலிச் சட்டம் என்று சொல்லுவது பூரண உடன்பாடு, அல்லது சம்பளப் பட்டுவாடாச் சட்டம் என்று

போட்டுவிடுவது சரியாக இருக்க முடியும். ஆகவே Delete the word "fair" wherever it occurs in the Bill என்ற என்னுடைய திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: என்னுடைய இரண்டு திருத்தங் களும் மசோதா உடனடியாகத் தமிழகம் முழுமைக்கும் கொண்டு வர வேண்டுமென்ற அடிப்படையில் அமைந்திருக்கின்றன. மற்றோர் பிரிவுக்கு நான் கொடுத்திருந்த திருத்தத்தின்மேல் அமைச்சர் பதில் அளிக்கிற நேரத்தில் கொள்கை அளவில் என் கருத்தை ஏற்றுக் கொள்வதாகச் சொன்னதற்கு நன்றி. ஒன்றைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். இது தேவையான மசோதா என்றாலும் கூட சில பிரிவுகள் சிக்கலை ஏற்படுத்தக்கூடும் என்ற அச்சத்தை நான் தெரி வித்தேன். இது இப்போது ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் கொண்டு வரப்படுவதால் நடைமுறையில் என்ன சிக்கல்கள் ஏற் படுகின்றன என்பதைச் சிறிது காலம் பொறுத்திருந்து பார்க்க லாம் என்று சொன்னார்கள்.

இந்த மசோதா தமிழகம் முழுமைக்கும் உடனடியாகக் கொண்டு வந்தால் உண்மை தெளிவாகும். கீழ்த் தஞ்சையில் இருக்கிற விவ சாயக் கூலிகளுக்கு இப்போது நாம் நிர்ணயிக்கிற கூலி விகிதம் குறைவாக இருக்குமானால் குறைவான கூலியை நாம் நிர்ணயிக்க வேண்டிய அவசியம் இல்லை. மற்ற பகுதிகளில் இருக்கிற கூலி விகிதத்தைவிட இங்கே அதிகமாக இருக்குமானால் மற்ற பகுதியில் உள்ளவர்களைவிட இவர்கள் ஒன்றும் அதிகமாக வேலை செய்துவிட வில்லை. தமிழகம் முழுமைக்கும் ஒரேமாதிரியான கூலிவிகிதத்தை நிர்ணயித்துவிடலாம்.

இன்னொரு பொருளாதாரப் பிரச்சினையும் இருக்கிறது. கூலி விகிதம் உயர்வதற்கு ஏற்றபடி—சாகுபடிச் செலவு உயர்வதற்கு ஏற்றபடி விவசாயிகள் பயிரிடுகின்ற பொருள்களுக்கு நல்லவிலை கொடுக்க நாமே நம்மை இதன்மூலம் கட்டுப்படுத்திக்கொள்கிறோம். இன்றையதினம் நிர்ணயித்திருக்கிற ப்ரொக்யூர்மெண்ட் விலை குறைவு என்பதை உணர்ந்து விலையைக் கூட்டித்தரவேண்டிய நிலைமைக்கு வருகிறோம். ஆகவே இது விவசாயக் கூலிகளுக்கான மசோதா என்றாலும்கூட விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற அத்தனை பேர்களுக்கும் நன்மை தருகிற மசோதா, விவசாயத்தை ஊக்கு விக்கின்ற மசோதா ஆக அமையும். ஆகவே, இதைத் தமிழகம் முழுமைக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்ற என் திருத்தத்தை ஏற் றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்துத்தான். இந்த மசோதாப்படி மூன்று ஆண்டுகளுக்கு அதாவது

It shall remain in force up inclusive of the 4th day of August 1972 என்று போடப்பட்டிருக்கிறது. இதை ஒவ்வொரு வருஷத்திற்கும்

என்று போட்டு மாற்றவேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தக் கருத்தை நான் ஒத்துக்கொள்ளவில்லை. மூன்று ஆண்டுகளுக்கு இருக்கட்டும் என்று கமிஷன் சொன்ன சிபாரிசை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எனவே அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. ஃபேர் வேஜஸ் என்று இருப்பது வேறு. அது இடத்திற்கு இடம் காலத்திற்கு காலம் மாறுகிற ஒன்று. ஃபேர் என்ற வார்த்தைக்குள் அதிகம் ஒளிந்துகொண்டிருப்பதாக நான் கருதவில்லை. எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இப்பொழுது இல்லை. ஒரே மாதிரியாக இருக்கிறது என்று கம்யூனிஸ்ட் நண்பர்கள் சொல்கிறார்கள். திருவாரூரிலே ஒன்றிரண்டு இடங்களிலே இருக்கலாம். ஆனால் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை. (திரு. எ. பாலசுப்பிரமணியன்: யூனிஃபார்ம் வேஜஸ் ஆக்ட் என்று போட்டு விடலாமே). ஃபேர் என்பதிலே அதிகமாக ஒன்றும் இல்லை. இன்னும் அதிகமாக வற்புறுத்தலாம். அரசியலுக்காக வற்புறுத்தலாம். அரசாங்கத்திற்குக் குடியானவர்கள்மீது, விவசாயத் தொழிலாளர்கள் மீது அதிகமான அக்கறை இருக்கிறது. அந்த அக்கறையைச் சந்தேகிப்பதற்கு நியாயம் இல்லை. எழுத்துக்களிலே அப்படி இருக்கிறது என்று சொன்னால் அது சரியல்ல. அவர்களுக்கு விவசாயத்தைப்பற்றி எந்த அளவுக்குத் தெரியுமோ அந்த அளவுக்கு எங்களுக்கும் தெரியும். நாங்களும் விவசாயிகள் தான். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாய ஊரிலே பிறந்தவர்கள்தான். இருபது ஆண்டுக் காலமாக இருக்கிற பல்வேறு வகையான பிரச்சினைகளை நாங்கள் அறிவோம். முதல் அமைச்சர் அவர்கள் திருவாரூரிலே இருக்கிற நேரத்திலே நாங்கள் சந்திக்கச் சென்றால் அவர்கள் கீவளூருக்கு, சிக்கலுக்கு விவசாயிகள் மத்தியில் பேசச் சென்றிருக்கிறார்கள் என்று சொல்வார்கள்—சிக்கல் என்றால் ஊர்தான், வேறு ஒன்றுமில்லை. ஏதோ தருமபுர ஆதீனம் மாதிரி தாங்கள்தான் வாங்கிக்கொடுக்கிறோம் என்று அவர்கள் கருதிக்கொண்டிருக்கத் தேவையில்லை. அவர்கள் சொன்னார்கள் அவர்கள் பிடியில் அவர்கள் இருக்கிறார்கள் என்று. இவர்கள் சொன்னார்கள் அவர்கள் பிடியில் இருக்கிறார்கள் என்று. அவர்களும் தப்பு. இவர்களும் தப்பு. இந்த நாட்டினுடைய தொழிலாளர்களின் நியாயமான நலன்களுக்காக இந்த அரசாங்கத்திற்கு இருக்கிற அக்கறை இந்த மன்றத்திலே இருக்கிற எல்லாத் தரப்பினருக்கும் இருக்கிற அக்கறையைவிடக் குறைந்ததல்ல. மூன்று ஆண்டுகளுக்கு என்று இருக்கிற வரம்பு இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். அது சரியல்ல. 6 லிட்டர், 7 லிட்டர் என்று மன்னார்குடியிலே கோட்டூரிலே இருக்கலாம். அதை வைத்துக் கொண்டு பேசுவது சரியல்ல. மற்றப் பிராந்தியங்களிலே இதை விஸ்தரிப்பதற்கு, எந்த நேரத்திலும் அப்படிச் செய்வதற்கு இந்தச் சட்டத்திலே இடம் இருக்கிறது. நோடிபிகேஷன் மூலம் செய்யலாம் என்று இருக்கிறது. நான் மட்டும் 9 லிட்டர் கேட்டேன் என்று சொல்லிக் கொள்ளலாம். All roads lead to Rome

1969 செப்டம்பர் 13] [திரு. கே. ஏ. மதியழகன்]

எல்லாப் பாதைகளும் ரோமாபுரிக்குச் செல்கிறது என்று சொல்வதைப்போல் எல்லாப் பாதைகளும் அங்கேதான் வரும். மன்னார்குடிக்குப் போகிறேன், சிதம்பரத்திற்குப் போகிறேன், புளியம்பட்டிக்குப் போகிறேன் என்று நிலைமையிருந்தால் நல்லதல்ல எல்லாம் மனித வாழ்க்கை லட்சியத்திற்குத் துணை போகிறோம் என்பதைத் அங்கேதான் வருகிறார்கள். எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. அவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமென்று பாடுபடுகின்ற அரசாங்கத்தை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நீங்கள் இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்குப் பிறகும் குறைந்த பட்சச் சம்பளம், நியாயச் சம்பளம், வாழ்க்கைச் சம்பளம் என்பதுதான் எங்களுடைய கருத்துக்கள். குறைந்தபட்சச் சம்பளத்தை நியாயச் சம்பளம் என்று ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் சொன்ன கருத்திற்கு நாங்கள் உடன்படவில்லை. இதில் ஒன்றும் அரசியல் இல்லை. மனிதவாழ்க்கை லட்சியத்திற்கு துணைபோகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு நான் திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

திரு. என். சங்கரய்யா அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிராகரிக்கப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு இடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர் நியாயக் கூலி மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 20/69), திருத்தப் பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

8. குறுகிய கால விவாதம்.

காவிரி ஆற்றில் மைசூர் மாநில அரசு புதிய அணைகள் கட்டும் முயற்சி, குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. பி. ஜி. கருத்திருமன், திரு. க. ர. நல்லசிவன், திரு. எ. ஆர். மாரிமுத்து, திரு. எ. பாலசுப்பிரமணியன், திரு. ஆ. கு. சுப்பையா, டாக்டர் எச். வி. ஹாண்டே, ஹாஜி ம. மு. பீர் முஹம்மது ஆகியோர்

" காவிரி ஆற்றில் தமிழக அரசைக் கலக்காமல் மத்திய அரசின் அனுமதியின்றி மைசூர் மாநில அரசு புதிய அணைக்கட்டுகள் கட்டும் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதைப்பற்றி விவாதிக்க வேண்டும்" என்று கேட்டிருக்கிறார்கள். ஏழு பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது மணி 2½. மூன்றரை மணிக்குள் விவாதம் முடிய வேண்டும். (திரு. கே. விநாயகம் :சாப்பாடு) இப்பொழுது முடியாது. ஒவ்வொருவருக்கும் 8 நிமிடங்கள்கூட வராது, ஐந்து நிமிடங்கள்தான் வரும் அதற்குள் முடித்துக் கொள்ளவேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பத்து நிமிடங்கள் கொடுக்க வேண்டும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : இப்பொழுதே இந்த விவாதத்தை முடித்துவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எட்டு நிமிடங்களுக்குள் ஒவ்வொருவரும் முடித்துவிடவேண்டும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மிகக் குறுகிய நேரத்திலே அதிகப்படியான விஷயங்களைச் சொல்ல வேண்டி இருக்கிறது. கொஞ்சம் வேகமாகப்பேசவேண்டியிருக்கிறது. காவிரி ஆறு தொன்றுதொட்டு தமிழகத்திற்கு வளம் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டு வந்திருக்கக் கூடிய ஒன்று. காவிரியாற்றின் தண்ணீர் இங்கே வருவது குறைக்கப்படுமானால் அதனாலே தமிழகத்தினுடைய வளமே பாதிக்கப் பட்டு, விவசாயம் பாதிக்கப்பட்டு பெரும் கஷ்ட நஷ்டத்திற்கு இங்குள்ள மக்கள் ஆளாவார்கள் என்ற பயத்தைக் கொண்டுதான் இங்கே இந்த விவாதம் நடத்தப்படவேண்டுமென்று நாங்கள் கேட்டு இருக்கிறோம். ஆகவே மைசூர் மாநில மக்கள் வேறு, தமிழக மக்கள் வேறு என்ற எண்ணம் தமிழகத்திலே இருக்கிற யாருக்கும், எந்தக் கட்சிக்கும் இல்லை. இதுவரையில் சாகுபடி செய்துகொண்டு வரப்படுகின்ற நிலங்கள் பாதிக்கப்படக்கூடாது. மைசூர் மாநிலம், தமிழகம் இரண்டும் இந்தியாவின் அங்கங்கள். யாரும் பாதிக்கப்படக்கூடாது. ஆகவே, இங்குள்ளவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற அளவிலே நாம் விவாதத்தைத் தொடங்கியிருக்கிறோம். நதி எங்கே உற்பத்தியாகிறதோ, அங்கே உள்ளவர்களுக்குத்தான் தண்ணீர் சொந்தம் என்று சொல்வது தவறு. அது ஓடி எங்கு முடிகிறதோ, அது வரையிலுள்ள எல்லோருக்கும் அந்த தண்ணீர் பயன்பட வேண்டும் என்பதுதான் முறை. அதுதான் சர்வதேச நியதி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குறிப்பாக, சிந்து நதி நம் பகுதியில் உற்பத்தியானாலும் பாகிஸ்தானுக்குத் தண்ணீர் கொடுக்கிறோம். நம் பகுதியில் உற்பத்தியாகிறது என்பதற்காக சிந்து நதியை அடைப்பதற்கு நமக்கு உரிமை கிடையாது. மைசூர் மாநிலத்தில் உற்பத்தியானாலும் கூட

1969 செப்டம்பர் 13] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

தமிழகத்திற்குத் தண்ணீர் வருவதை அடைத்துக் கொள்ள அவர்களுக்கு உரிமை கிடையாது. இதுசம்பந்தமாகத் தொடர்ந்து ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1892-ம் ஆண்டில் முதல ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. அதன்படி மைசூர் மாநிலம் நமமுடைய அனுமதி இல்லாமல், மத்திய சர்க்கார் அனுமதி இல்லாமல எந்த அணையும் கட்டக்கூடாது. கண்ணம்பாடி அணை கட்டுவதற்கு முன்னுல் கூட எஸ். டி. கிரிபித் என்பவருடைய ஆர்பிட்ரேஷனுக்கு அனுப்பப்பட்டது. 1914-ம் ஆண்டில் அவார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அவார்டை சென்னை சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. அதன்பேரில் செகரடரி ஆப் ஸ்டேட்சுக்கு சென்னை சர்க்கார் அப்பீல் செய்திருக்கிறுர்கள். இம்மாதிரி அப்பீல் செய்ததன் மூலம் தாமதம் ஏற்பட்டு பின்னர் பேச்சு வார்த்தை மூலமாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. 1924-ல் ஒப்பந்தம் முடிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தப்படிதான் கண்ணம்பாடி அணைக்கட்டு கட்டியிருக்கிறுர்கள். மைசூர் மாநில அரசு இதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். தமிழகத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் அவர்கள் எதையும் செய்யவேண்டும். 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு முன்னுல் சாகுபடி செய்த நிலங்களைப் பற்றிப் பேச்சு கிடையாது. புதிதாக எவ்வளவு கொண்டுவரப்படுகிறது என்பதுதான் ஒப்பந்தத்தின் ஷர்த்து. சென்னையில் மூன்று லட்சத்து ஓராயிரம் ஏக்கர் சாகுபடியும் மைசூரில் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ஏக்கர் சாகு படியும் செய்யலாம் என்பது ஒப்பந்தம். மூன்று லட்சத்து ஓராயிரம் என்பது இப்போதுள்ள டியூட்டியை வைத்து. தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் பழைய நீர்ப்பாசனப் பகுதியில் 40 டியூட்டி. ஒரு கியுசெக்சுக்கு 40 ஏக்கர் நிலம் தண்ணீர் பாய்ச்சலாம். சி.எம்.பி. பகுதியில் 70 டியூட்டி கொடுத்திருக்கிறுர்கள். அந்தக் கணக்குப்படி ஐந்து லட்சத்துச் சொச்சம் ஏக்கர் தண்ணீர் பாய்ச்ச உரிமை தமிழகத்திற்கு இருக்கிறது. ஆகவே, நம்முடைய ஒப்பந்தத்தை மீறி மைசூர் மாநில அரசு அணைகள் கட்டுவதற்கான முன் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருப்பது நம்முடைய நிலையைப் பாதிக்கும் என்று கருதுகிறேன். அவர்கள் அணை கட்டுவது பற்றி யோசிப்பது வேறு. ஆனுல் அவர்கள் சட்ட மன்றத்தில் அறிவிக்கப்பட்டபடி மத்திய அரசைப் பற்றியோ, தமிழக அரசைப் பற்றியோ கவலைப்படாது ஒருதலைப் பட்சமாக முடிவு எடுத்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பது தவறுனது என்று கூற விரும்புகிறேன்.

மைசூர் மாநில மக்கள் அங்கிருக்கும் தண்ணீரைப் பயன் படுத்திச் சாகுபடி செய்ய வேண்டாமென்பது எங்கள் கருத்து அல்ல. அங்குள்ள மக்களும் வாழ வேண்டும். ஆனுல் நம்முடைய ஒப்பந்தம் மீறப்படக்கூடாது. அந்த ஒப்பந்தத்தின் காரணமாக நாம் பல கோடிக்கணக்கான ரூபாய்களை இங்கே செலவழித்திருக்கிறோம்; அணைகள் கட்டியிருக்கிறோம். நிலங்களைச் செப்பனிட்டு சாகுபடி செய்துகொண்டிருக்கிறோம். இதற்குப் பாதகம் ஏற்படும் வகையில் அங்கே புதிதாக அணை கட்டுவது தவறு என்றுதான் கூற

விரும்புகிறேன். தமிழ்நாடு அரசு அதிகப்படியான நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வந்திருக்கிறது என்று கூறலாம். அந்த ஒப்பந்தப்படி அமராவதி, பவானி போன்ற இடங்களில் அணைகளைக் கட்டிக்கொள்ள அனுமதி இருக்கிறது. மொத்தமாகச் சேர்த்து தண்ணீர் உபயோகிக்கும் கொள்ளளவு மைசூர் மாநிலம் 45,000 மிலியன் கன அடி தண்ணீரும் நம்முடைய மாநிலம் 93,005 மிலியன் கன அடி தண்ணீரும் உபயோகிக்க உரிமையுண்டு. ஆகையால் அந்த அணையை அவர்கள் கட்டுவதன் மூலம் 45,000 கன அடி தண்ணீர் அவர்கள் உபயோகிக்கலாம் என்பதை மீறக்கூடாது. அவர்கள் அணை கட்டுவதற்கான நிலையைப் பார்க்கும்போது நம்முடைய நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது. அது தஞ்சை மாவட்ட மக்களிடத்தில் ஒரு பய உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. உபரி தண்ணீரை உபயோகிப்பதாக இருந்தால் மத்திய சர்க்கார், மைசூர் மாநில அரசு, தமிழக அரசு கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்து உபரித் தண்ணீரைப் பயன்படுத்த அணை கட்டுவது பற்றிக் கவலை இல்லை. நம்முடைய உரிமை பாதிக்கப்படக்கூடாது. மைசூர் மாநிலத்தில் உற்பத்தியாகின்ற காரணத்தால் அந்தத் தண்ணீர் முழுவதையும் அவர்களே பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அங்கே பேசப்பட்ட கருத்து தவறானது. ஏதோ ஒருவருக்கொருவர் விரோதம் இருப்பது போல் பேசுவது தவறு. எந்தப் பகுதியில் உற்பத்தியாகிறதோ அவர்களுக்கு இருக்கிற உரிமையை விட, சங்கமம் ஆகிற பகுதியில் இருகின்றவர்களுக்கு முழு உரிமை உண்டு, முன் உரிமையும் உண்டு. சங்கமப் பகுதிகளில்தான் அதிகப்படியான விவசாயம் ஏற்பட்டிருக்கிறது. கடைசியில்தான் டெல்டா பகுதி ; அவர்களுடைய உரிமை எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது. மைசூர் மாநிலத்துடன் மூன்பு செய்து கொண்ட ஒப்பந்தம் 1974-ம் ஆண்டுடன் காலாவதி ஆகிறது. ஆகவே, அந்த ஒப்பந்தத்தைப் பற்றி மறு பரிசீலனை செய்து புதிய ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகுதான் மைசூர் அரசு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கூறி அதற்கான வழிவகைகளைக் காணவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, இப்போது விவாதத்தில் இருக்கும் தீர்மானம் குறித்து என்னுடைய ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன். 1924-ம் ஆண்டு தமிழ்நாடு அரசும், மைசூர் அரசும் காவிரி நீர் சம்பந்தமாகச் செய்து கொண்ட ஒப்பந்தம் 1974-ம் ஆண்டு முடிவடைய இருக்கிறது. இதற்கிடையில் மைசூர் அரசு காவிரியில் வந்து விழுகின்ற உப நதிகளில் தண்ணீரை மறித்து அவர்களுடைய ராஜ்யத்திற்குப் பாசன வசதி செய்து கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அம்மாதிரி செய்வதன் மூலம் தமிழ்நாடு மட்டும் பாதிக்கப்பட மாட்டாது ; இந்தியாவையே அது பாதிக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். தமிழ்நாடு உணவு உற்பத்தியில் முன்னணியில் நின்று கொண்டிருக்கிறது. தமிழ்நாடு உணவு உற்பத்தி செய்து மற்ற மாநிலங்களுக்கு உணவு அளித்துக் கொண்

1969 செப்டம்பர் 13] [திரு. ஆ. கு. சுப்பையா]

டிருக்கிறது. அத்தகைய தமிழ் நாட்டிலே இத்தகைய நிலைமை ஏற்பட்டால் என்ன ஆகும் என்று பார்க்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் தற்போது 15 லட்சம் ஏக்கரா வரை சாகுபடி ஆகிக் கொண்டிருக்கிறது. அந்த அளவுக்குக் காவிரி நீர்ப்பாசனம் வரு கிறது என்பதை நாம் அறிவோம்.

காவேரி நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்தி வந்தும்கூட இன்றைய தினம் தண்ணீர்ப் பஞ்சம் தஞ்சையில் இருந்து கொண்டிருக்கிறது. போதுமான தண்ணீர் இல்லாமல் காலத்தில் விவசாயம் செய்ய முடியாததொரு நிலைமை தஞ்சை மாவட்டத்தில் இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக வேண்டி பூமிக்கு அடியில் உள்ள நீரை எடுத்து விவசாயம் செய்யவேண்டுமென்று பெருத்த முயற்சி செய்தாலும்கூட மற்ற மாவட்டங்களை விட அதிக ஆழத்தில் தண்ணீர் இருக்கிறது என்று சொல்லப்படுவதன் காரண மாக கீழே இருக்கிற தண்ணீரை எடுக்க முடியாத ஒரு நிலைமை தஞ்சை மாவட்டத்தில் இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது.

இன்று இரு ராஜ்யங்களுக்கும் இடையே ஒரு பெரிய விவகாரம் ஏற்பட்டு இரு ராஜ்ய மக்களுக்கிடையே மனக்கசப்பு ஏற்படாத அளவிற்கு இதை ஒரு தேசியப் பிரச்னையாக மத்திய அரசு பார்க்க வேண்டும். அப்படி இதை ஒரு தேசியப் பிரச்னையாகப் பார்ப்பதன் மூலமாகத்தான் இன்று ஏற்பட்டுள்ள விவகாரங்களைத் தீர்க்க முடியும். சமீபத்தில் நம் அரசும் கேரள அரசும் உட்கார்ந்து பேசி தமிழகத்திற்கும் கேரளத்திற்கும் இடையே உள்ள தண்ணீர் விவ காரத்தை முறையாகப் பைசல் செய்து கொண்டோம். அது குறித்து இரு ராஜ்ய மக்களும் பாராட்டுகிறார்கள். அதேபோல் மைசூர் அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் இடையே உள்ள இந்தத் தண்ணீர் விவகாரத்தைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று சொன் ஞல் மத்திய அரசு இதில் உடனடியாகத் தலையிடவேண்டும். அப்படி மத்திய அரசு தலையிடுவதன் மூலமாகத்தான் இரு ராஜ்ய நலன் களும் பாதிக்கப்படாமல் இரு ராஜ்யங்களுக்கும் பாசன வசதி கிடைக்கக்கூடிய அளவிற்கு, ஒரு மாநிலமும் பாதிக்காத அளவிற்கு ஒரு சமரசத் தீர்வு காண்பதற்காக வேண்டி மத்திய அரசு சும்மா வாளாவிருக்காமல் உடனடியாக இரு மாநில முதல் அமைச்சர்களை யும், இரு மாநிலங்களிலும் இருக்கக்கூடிய நீர்ப்பாசன பொதுப் பணித்துறை அமைச்சர்களையும் அழைத்து வைத்து சமரசம் பேசி 1974-ல் காலாவதியாகும் கெடுவை இன்னும் ஒரு 50 ஆண்டுகளுக் காவது நீடிக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தை செய்வதன் மூல மாகத்தான் தமிழ் நாட்டில் அதிகப்படியான உற்பத்தி செய்து இந்தியாவிற்கு உணவு அளிக்கக்கூடிய ஒரு நிலைமையை தமிழ்நாடு ஏற்படுத்த முடியும்.

மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில்தான் இன்றையதினம் அதிகமாக விளைந்து கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் பெருவெள்ளம் எல்லாம் ஏற்பட்டு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இங்கு அப்படியொன்றும் இல்லாமல் நல்ல

விதமாகப் போய் கொண்டிருக்கிறது. மைசூர் மாநில அரசு பகைமை உணர்ச்சியோடு அல்லது வேண்டுமென்றே காவிரியில் வருகிற தண்ணீரைத் தடுப்பது என்பது நியாயமான காரியமாக இருக்கமுடியாது. ஆகவே இரண்டு ராஜ்யங்களுக்கும் இடையே விவகாரங்கள் இல்லாமல் இருக்கக்கூடிய முறையில் மத்திய அரசு தலையிட்டு ஒரு சமரசம் செய்து இப்பிரச்னையைத் தீர்த்து வைக்கக் கூடிய முறையில் ஏகோபித்த ஒரு தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி அவர்கள் இதில் தலையிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவன்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தில் காவிரிப் பிரச்னையைத் தவிர மீதியுள்ள நீராதாரங்களில், அந்த அணைகளில் எல்லாம் தண்ணீர் போதுமான அளவு கிடையாது. பெரியாறு, வைகை, பவானி, அமராவதி என்று இப்படி எந்த ஆற்றை எடுத்துக் கொண்டாலும் போதுமான தண்ணீர் அங்கு கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகளில் கிடையாது. இன்று நமக்கு உயிரூட்டக்கூடிய, நம்பிக்கை ஊட்டக்கூடிய ஒரு பெரிய நதித் திட்டம் இந்த காவிரி யாகத்தான் இருக்க முடியும். இந்தக் காவிரி ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில் 1924-ம் ஆண்டு ஒப்பந்தப்படி ஒப்பந்தம் 1974-ம் ஆண்டில் முடிந்து விடுகிற காரணத்தினுல் புது ஒப்பந்தம் ஏற்படு வதற்கு முன்னதாக பல காரியங்களை முடித்துக் கொள்ளவேண்டும் என்ற மனப்போக்கில் புதிய நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டி யிருக்கிறது என்று நினைக்கிறேன்.

காவிரி உற்பத்தியாவது மைசூரில். அது பெருவாரியான அளவில் பாசனம் கொடுப்பது தமிழ்நாட்டில். இது இங்கு மட்டு மல்ல. இந்தியாவில் உள்ள எந்த நதியை எடுத்துக்கொண்டாலும் இந்த நிலைமைதான். கங்கை உற்பத்தியாவது ஒரு இடத்தில், அதனுல் அதிகப்படியான அளவில் பாசன வசதி பெறுவது இன்னொரு இடமாகும். இப்படித்தான் சிந்து, பிரம்மபுத்திரா போன்ற நதிகள் உற்பத்தியாவது ஒரு மாநிலத்தில், அதனுல் பயன் பெறுவது பிற மாநிலங்கள் என்ற நிலைதான் இருக்கிறது. இது இயற்கை. ஒரு நதியை அது உற்பத்தியாகிற இடத்தில் தேக்கி அதே இடத்தில் அணை கட்டி நிச்சயமாகப் பாசனத்திற்குக் கொண்டுவரமுடியாது. அப்படிச் செய்தாலும் குறைந்த அளவு பூமிக்குத் தான் பாசன வசதி செய்து கொடுக்க முடியுமே தவிர அதிகப்படியான பூமியைப் பாசன வசதி பெறச் செய்யமுடியாது. இதை உணர டெக்னிக்கல் எக்ஸ்ப்பர்ட்டாக இருக்கவேண்டிய தில்லை. சாதாரண அறிவு உள்ளவர்களால் கூட இதை உணர்ந்து கொள்ள முடியும். காவிரி மைசூர் மாநிலத்தில் 3 லட்சம் ஏக்கர் களுக்குத் தான் பாய்கிறது. தமிழ்நாட்டில் 15 லட்சம் ஏக்கர் களுக்குமேல் பாய்கிறது என்ருல் அது இயற்கையின் அமைப்பும், நாம் முன்பு செய்துகொண்ட ஒப்பந்தமுமாகும். தமிழ்நாடு வேண்டுமென்றே எதையும் செய்யவில்லை.

1969 செப்டம்பர் 13] [திரு. க. ர. நல்லசிவன்]

உறுப்பினர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நொய்யலில் சில திட்டங்கள் போடப்பட்டு இருந்தன. அத்திட்டங்கள் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன. மைசூர் அரசாங்கம் அவற்றை ஆட்சேபித்ததன் காரணமாக அவை மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டன. நமக்கிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை நாம் எந்தவகையிலும் புறக்கணித்ததாகத் தெரியவில்லை. தமிழ்நாட்டிற்குள்ள வசதிகள் மிகக் குறைவு. காவிரி ஒன்றுதான் இருக்கிறது. மைசூருக்கு காவேரி இருக்கிறது. துங்கபத்திராவை முழுமையாக அனுபவிக்கக்கூடிய வசதி இருக்கிறது அவர்களுக்கு. நான் பொறாமைப்பட்டுச் சொல்லவில்லை. அவர்கள் கிருஷ்ணாவில் பங்கு பெறுகிறார்கள். அதற்காக இதை இங்கே மட்டும் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. முன்பிருந்த சர்க்கார் அந்த ஒப்பந்தத்தை மீறியிருப்பதாக தகவல் இல்லை. 1974-ல் ஒப்பந்தம் முடிவடையப் போகிறது. அதற்குள் எல்லாவற்றையும் செய்து முடிக்கவேண்டும் என்பதுதான் அவர்கள் எண்ணம். நாம் கேரளாவோடு உட்கார்ந்து பேசி ஒரு குறிப்பிட்ட அளவு தண்ணீரை கொடுத்திருக்கிறோம் அல்லவா. பவானி பகுதியிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு தண்ணீர் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 1974-ம் ஆண்டோடு நாம் செய்து கொண்டிருக்கிற 1924-ம் ஆண்டைய உடன்பாடு முடிவடைகிறது என்ற தவறான கருத்தை அடிப்படையாக வைத்து மாண்புமிகு உறுப்பினர்கள் பேசத் தேவையில்லை. ஏனென்றால் 1974-ம் ஆண்டோடு இந்த ஒப்பந்தம் முடிவு அடையப் போவதில்லை. 1974-ம் ஆண்டில் ஒரு மறுபரிசீலனைதான். அந்த மறுபரிசீலனையில் 'லிமிட் க்ளோஸ்' பாதிக்கப்படாத அளவில் மறுபரிசீலனை செய்து 'சர்ப்ளஸ் வாட்டர்', அதிகப்படியாக வருகிற தண்ணீரை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதுதான் 1974-ல் வருகிற ஒப்பந்தம். ஆகவே இது சம்பந்தமாக குழப்பமான கருத்துக்களை வெளியிட வேண்டாம். 1974 லோடு ஒப்பந்தம் தீர்ந்து விடப்போவதில்லை. அது என்றைக்கும் நிரந்தரமான ஒப்பந்தம். அதை மைசூர் அரசு தவறாகப் புரிந்து கொண்டிருப்பார்களானால் அவர்களுக்கும் உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களுக்கும் இதைப் பதிலாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவன்: நன்றி. நடைபெறும் நிகழ்ச்சிகள் அப்படி எண்ணத் தோன்றுவதாக இருக்கின்றன. தஞ்சை, திருச்சி, தென்ஆர்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்கள் காவிரியின் பலனை நேரடியாகப் பெற்று வருகின்றன. தமிழ்நாட்டுக்கு ஒட்டு மொத்தமாக அதன் பலன் கிடைக்கிறது. பல தொழிற்சாலைகள் அதைச் சுற்றி இருக்கிறது. ஆகவே, சிறு குறைகள் ஏற்பட்டாலும் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி, நீர்ப்பாசன ஆதாரங்கள் இவை எல்லாம் கெட்டுவிடும் என்பதற்காகத்தான் இதை அழுத்தமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. 1836-ல் திருச்சி ஜில்லாவில்

[திரு. க. ர. நல்லசிவன்] [1969 செப்டம்பர் 13

விளாத்தலைமேல் அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது. அதிலிருந்து ஹேமாவதி, கபினி, லட்சுமணதீர்த்தம் ஆகியவற்றிற்கு தண்ணீர் கொடுத்ததாக கல்வெட்டு இருப்பதாகத் தெரிகிறது. சமீபத்தில் ஹேமாவதி கபினி, லட்சுமணதீர்த்தம் பொறுத்தவரையில் அஸ்தி வாரம் போட்டிருப்பதாகச் செய்தி வருகிறது.

மீதி உள்ளவைகளிலே, அதாவது இந்த "டெக்னிக்கல் கமிட்டி ஆன் தி காவேரி பேசின் ப்ராஜக்ட்' க்குப் பின்னால்தான் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இந்தப் பெரிய விவாதமே கிளம்பியிருக்கிறது. கமிட்டி போட்டுச் செய்திருக்கிறார்கள். எப்படியிருந்த போதிலும் ஒப்பந்த முறையிலே செய்து கொள்ளப்பட்டதில் ஆட்சேபணை கிடையாது, ஆனால் ஒரேயொரு வார்த்தைதான் ஆட்சேபணையில் வருகிறது. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப் படாத இன்னும் இருக்கக்கூடிய 20 திட்டங்களையும் நாங்கள் நிறை வேற்றுவோம் என்று அவர்கள் சட்டசபை நடவடிக்கைகளில் பதில் சொல்லும்போதுதான் பயம் ஏற்படுகிறது. இந்த அரசாங்கம் இந்த பிரச்னை வெளியிலே வந்தவுடனேயே முதலமைச் சரவர்களும் மராமத்து அமைச்சரவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுத்துத் தீவிரமாக முயற்சியெடுத்ததை உண்மையிலேயே பாராட்டுகிறேன்.

அதுமாத்திரம் அல்ல, இன்னும் இந்தப்பிரச்னையைப் பொறுத்த வரையிலே மிகவும் ஆழமான கண்ணோட்டத்தோடு இருக்க வேண்டும், ஜாக்கிரதையாக மத்திய சர்க்காரை அணுகவேண்டும். இரண்டாவதாக, மத்திய சர்க்காரை வற்புறுத்தி இதன்மீது 3 பேரும் அதாவது ஒன்று, மைசூர் அரசாங்கம், இரண்டு தமிழ்நாடு அரசாங்கம், மூன்று மத்திய சர்க்கார் இவர்களுடைய பிரதிநிதிகள் உட்கார்ந்து தெளிவான முடிவெடுக்க வேண்டும். இரண்டாவதாக நமக்குள்ளே ஒருவருக்கொருவர் நம்பிக்கையில்லாவிட்டாலும் வேறு மாநிலங்களிலிருந்து இன்ஜினியர்களை, டெக்னிக் தெரிந்தவர்களை வைத்து மறுபடியும் புனர் பரிசிலனை செய்து ஒருவருக்கொருவர் விவகாரம் இல்லாமல் செய்து கொள்ளப் பார்க்கலாம். அதிலும் நம்பிக்கையில்லாவிட்டால், வெளிநாட்டிலேயிருந்து என்ஜினியர்களைக் கொண்டுவந்து முயற்சிகளை எடுத்துக்கொள்ளுங்கள். ஆகவே, இந்தக் காரியத்தைத் தெளிவாக, திட்டவட்டமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவரவர்களே, கர்நாடக மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகின்ற காவிரி நதியில் கர்நாடக மாநில அரசு தங்களுக்கிருக்கின்ற உரிமை என்று கூறிக்கொண்டு அவர்கள் பெரிய அணைக்கட்டுகளைக் கட்டுவதற்கு முயற்சிப்பது அவர்களுக்கு வேண்டுமானால் உரிமைப் பிரச்னையாக இருக்கலாம் ஆனால் நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் அது உயிர்ப்பிரச்னை என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உரிமை எந்த அளவுக்கு அவர்களுக்கு இருக்

1969 செப்டம்பர் 13] [ஹாஜி ம. மு. பீர் முஹம்மது]

கிறது என்று நாம் எண்ணிப் பார்க்கும் நேரத்திலேதான் அந்தத் தனியார் திட்டத்தை அடிப்படையாக வைத்து கர்நாடக மாநில சட்டமன்றத்திலே விவாதிக்கப்பட்ட அந்த நேரத்தில் அங்கிருக்கும் முதலமைச்சரவர்கள் ஏற்கெனவே தொடங்கியுள்ள ஹேமாவதி, காபினி, சுவர்ணமுகி திட்டங்கள் 1974-க்குள் பூர்த்தியாகி விடும் என்றும் கூறியுள்ளார்கள். இந்தத் திட்டம் ஏற்கெனவே தொடங்கிவிட்டது என்றால், நம்முடைய மாநில அரசுக்கு அது தெரியாது தொடங்கப் பட்டு திட்டம் நிறைவேறிக்கொண்டிருக்கிறதா அல்லது தொடங்கியிருக்கிறதா என்று கூறுவதே, பிரச்னையை அவர்கள் நெருக்கடிக்கு ஆளாக்க வேண்டுமென்ற அடிப்படையில் கூறுகிறார்களா என்பதை மத்திய அரசை வைத்துக்கொண்டு தீவிரமாக அதனுடைய நடவடிக்கையின் மூலம் கவனிக்க வேண்டிய சூழ்நிலையை நம்முடைய தமிழ்நாட்டு அரசுக்கு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

1924-ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கும் மைசூருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் 4500 கோடி கன அடி தண்ணீரை தேக்கி வைத்துக்கொள்ள உரிமை உண்டென்று அங்கிருக்கின்றவர்கள் விவாதிக்கிறார்கள். ஆனால் சட்டமன்ற விவாதத்தில் 4500 கோடி கன அடித் தண்ணீரைத் தேக்கி வைக்க உரிமையில்லை; 1000 கோடி கன அடி தண்ணீரைத்தான் தேக்கி வைக்க முடியும் என்று ஒரு உறுப்பினர் கூறியிருக்கிறார். ஆகவே, கர்நாடக மாநில அரசைப் பொறுத்தவரையில், அவர்களுக்குள்ள உரிமை எவ்வளவு என்பதில் அங்கே நடந்திருக்கும் விவாதங்களின் அடிப்படையை வைத்துப் பார்க்கும்பொழுது குழப்பமாக இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அடிப்படையாக வைத்து இவ்வளவு கன அடித்தண்ணீரை அவர்கள் தேக்க வைத்துக் கொள்ளலாம் என்பதை நம்முடைய அரசு மிகக் கவனத்தோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கர்நாடக மாநில அரசு காவிரி நதியின் மீது எந்தத் திட்டத்தையும் மேற்கொள்ளும்பொழுது நீரோட்டம் குறைந்து போய் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீர்வரத்து குறைந்து தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கும்படி விடக்கூடாது, அப்படி விட்டால் நம்முடைய நாட்டினுடைய உணவுப் பிரச்னையான உயிர்ப் பிரச்னை மிகவும் கெட்டுவிடுவதோடு நாட்டிலே பொதுவாக அமைதியே கெட்டுவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இதை நம்முடைய அரசு மத்திய அரசுக்கு எந்த முறையில் எல்லாம் எடுத்துக் கூற முடியுமோ அந்த முறையிலேயெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு முயற்சிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் இந்தப் பிரச்னைக்காக டெல்லிக்குப் போய்விட்டு வந்து அறிக்கையில் கூறியுள்ளபடி, தமிழ்நாடு அரசாங்கத்தின் சம்மதத்தைக் கேளாது கர்நாடக மாநில அரசு காவிரி ஆற்றில் தன்னிச்சையாக அணைத் திட்டங்கள் நிறைவேற்றத் தீர்மானித்திருப்பதால் ஏற்பட்ட கவலை

தரும் நிலையை பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களும், இந்திய மத்திய அரசு பாசன மின் சக்தி அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்களும் நன்குணர்ந்துள்ளனர். இவ் விஷயத்தை கவனித்து ஆவன செய்வதாகக் கூறினர் என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் கூறியிருந்தாலும் நம்முடைய உயிர்ப் பிரச்சினையான இந்தப் பிரச்னையில் வெகு விரைவில் ஒரு நல்ல முடிவு கர்நாடக அரசும், தமிழ்நாடு அரசாங்கமும், மத்திய அரசும் சேர்ந்து பேசுவதால் ஏற்படக்கூடிய நிலையை நம்முடைய அரசு ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு படுத்திக் கொள்ளுகிறேன்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, நம் முன்னுலிருக்கும் பிரச்னை சட்டப் பிரச்னை அல்ல. அவர்களுக்கு உரிமை உண்டா, நமக்கு உரிமை இருக்கிறதா, உரிமை இல்லையா என்று உரிமைப் பிரச்னையாகப் பார்த்தால் இது காணுது. இது அரசியல் பிரச்னை. இந்திய மக்களின் ஒருமைப்பாட்டை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் மொழி, பேச்சு, தேசிய இணக்கம், இந்திய மக்களின் வரலாற்று ரீதி, ஒற்றுமை இதைப் பேணிக் காக்க வேண்டிய அரசியல் பிரச்னையின் அங்கமாக, பகுதியாக இந்தப் பிரச்னைகளை அணுகுவதுதான் சரியாகயிருக்கும் என்பது என்னுடைய கட்சியின் கருத்து. உரிமை இருக்கிறது, உரிமை இல்லை என்ற வட்டத்திலே பார்த்துப் பயன் இல்லை. இன்று அணைவரும் பேசிவரும், கே. எல். ராவ் அவர்களே ஆரம்பித்து வைத்திருக்கும் கங்கை காவிரி இணைக்கும் திட்டம் வருகிறது. அந்தத் தண்ணீர் யாருக்குச் சொந்தம்? கங்கைக்குச் சொந்தமா, கோதாவரிக்குச் சொந்தமா அந்தத் தண்ணீர்? அந்தத் தண்ணீர் ஒற்றுமைக்கு ஒரு மிகப் பெரிய சின்னமாக அமையும். ஆகவே, அந்த விஷயத்தை விட்டு, மக்கள் அனைவருடைய ஒட்டு மொத்தமான முன்னேற்றத்திற்கு, சமத்துவத்திற்கு அங்கீகரிப்பு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதற்குத் துணை போகும், ஒத்துழைப்பு தரும் காரியமாக அதைப் பார்க்க வேண்டுமென்பது என்னுடைய கட்சியின் அபிப்பிராயம்.

குறிப்பாக தமிழக மக்கள், கன்னட மக்கள் இவர்களிடையே நீண்ட காலமாக இருந்து வரும் நல்லுறவு மேலும் வளர வேண்டும், நீடிக்க வேண்டும். அதை நீடிப்பதற்கு நம்மாலான அளவுக்கு நாம் உதவி செய்ய வேண்டுமென்ற கண்ணேட்டத்தோடு பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட விஷயங்களில் திடீரென்று மைசூர் அரசு ஏன் மத்திய சர்க்காரோடு கலந்து கொள்ளாமல், நம்மிடமும் கலந்து கொள்ளாமல் இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லும் நேரத்தில்தான் அரசியல் வந்துவிடுகிறது.

கெட்ட அரசியல் வந்துவிடுகிறது என்று நான் ஐயப்படுகிறேன். பேச்சு வார்த்தைகளுக்கு இடமே அளிக்காமல் மத்திய சர்க்காரை கலந்துகொள்ளாமல் இப்பொழுது என்ன அவசரம் வந்துவிட்டது? நிஜலிங்கப்பாவின் கோபமா? அவர் சம்பந்தப்பட்ட மாநிலம்,

1969 செப்டம்பர் 13] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

அவர் சம்பந்தப்பட்ட மாநிலத்தில் இருக்கக்கூடிய அரசு திடீரென்று மத்திய அரசைக் கலந்துகொள்ளாமல் திடீரென்று வேண்டுமென்றே ஏன் செய்ய வேண்டும்? சிலபேர் வாலாட்டம் என்று பேசினார்கள். வாலறுந்து போனதால் இப்படிப்பட்ட நிலைக்கு வந்திருக்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது.

கன்னட மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் சண்டை இல்லை, இருந்தது இல்லை, இருக்கப்போவதில்லை. சில அரசியல் கட்சிக்காரர்கள், அவ்வப்பொழுது அந்த மாநில மக்கள், இந்த மாநில மக்கள் என்று தூண்டிவிடுவது வேலையாகிவிட்டது. மைசூர் மாநில சட்டசபை தலைவரே தண்டவாளத்தில் உட்கார்ந்து கொள்கிறார் எல்லைப்பிரச்னை என்று. இப்படி மக்களுக்கிடையே விரோத உணர்ச்சியை தூண்டிவிடக்கூடிய நிலை தோன்றுகிறது. அப்படிப்பட்ட நிலையைத் திருத்திக்கொள்ள முன்வரவேண்டும். அதற்கு மத்திய சர்க்கார் துணையாக இருக்க வேண்டும். அவ்வாறுதான், நாம் இந்த விஷயத்திலே பரிசீலிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் விவேகம் காட்டப்படவேண்டும்.

முதலமைச்சரவர்கள் தெளிவாக்கிவிட்டார்கள். ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தின்படி 1974-க்குப் பின்னாலே ஏதோ நமக்குப் புதிய ஆபத்து வந்துவிடப் போவதில்லை, ஒப்பந்தம் நீடிக்கும். மேலும் உள்ள உபரித் தண்ணீர் அதிகமாகக் கிடைப்பது, நமக்கும் கிடைக்க வேண்டும், கன்னட மக்களுக்கும் கிடைக்க வேண்டும். அவர்களுக்கும் நஞ்சை வளமாக மாறவேண்டும், தமிழ்நாட்டிலும் நஞ்சை நிலங்களாக மாறி நமக்கு உணவுப் பிரச்னை இல்லாத நிலை ஏற்படவேண்டும். அப்படி பரஸ்பர உதவியோடு இந்தப் பிரச்னையில் அணுக வேண்டும். அரசியல் விவேகம் இருக்க வேண்டும். இரண்டு மாநிலங்களுக்கும் ஒற்றுமை இருக்கவேண்டும். கேரள மக்களுக்கும் நமக்கும், ஆந்திர மக்களுக்கும் மைசூர் மக்களுக்கும் ஒற்றுமை என்று இப்படி இந்திய மக்களின் ஒற்றுமையைப் பார்க்க வேண்டும். உரிமை, கடமை, சட்டம், ஒப்பந்தம் என்று மட்டும் போடுவதாயிருந்தால் திருப்தி அடைய முடியாது என்று சொல்லி, மத்திய சர்க்கார் தடுத்து நிறுத்தி, சுமுகமாகத் தீர்வு கண்டு, ஒற்றுமை மேலும் பெருகவும், கன்னட மக்களுக்கு எந்தவிதமான குறைவும் ஏற்பட்டுவிடாமல் இதற்கு முடிவு காண வேண்டுமென்று என்னுடைய கட்சியின் சார்பில் வற்புறுத்திக்கூறிக்கொண்டு அமர்கிறேன்.

DR. H. V. HANDE : On behalf of the Tamil Nadu Legislature Swathantra Party, we view with great concern the decision of the Mysore Government to go ahead and to implement certain projects on the rivers Kabini and Hemavathi against the agreement of the two Governments of Madras and Mysore entered into during the year 1924. The Chief Minister of Mysore appears to have said that Government was accelerating work on the Kabini and Hemavathi projects, while it had taken up the Suvarnavathi project also. பி.ப. 3-00

He was sure that Suvaranavathi project would be completed by 1970 and he assured the House that the Hemavathi and Kabini reservoirs would store water by 1974. Through this House I request and I beseech all opposition parties in Mysore and the ruling party there to see that this is not reduced to a regional warfare but elevated to a higher sphere namely, the welfare of the people of Mysore State and Tamil Nadu. Here I would like to briefly touch upon one or two important points.

I have an extract from Mysore gazetteer. On 18th February 1924 an agreement was concluded between Madras and Mysore Governments in connection with Krishnarajasagar dam and reservoir. The Arbitration having proved infructuous, protracted negotiations followed, which ended in the Agreement. The Reservoir is to be of a storage capacity of not higher than 112 feet above the sill of the under-sluices or 124 feet above the bed of the river. The extent to which fresh irrigation can be carried on in Mysore under the Cauvery and its tributaries and in Madras under the Cauvery-Mettur project, was fixed. That agreement, as our Chief Minister said, would be renewed by 1974. In the event of a dispute between the two Governments touching the interpretation, operation or carrying out of this agreement, the matter was to be referred for settlement to arbitration, or if the Governments so choose, to the Government of India. After the agreement, we have now the Central Water and Power Commission. In this connection I will read out from a book which contains all agreements in South India. In Mysore No. LV on page 264 the agreement is referred to. In para II it is stated as follows :—

"The Mysore Government shall not, without the previous consent of the Madras Government, or before a decision under Rule 4 below, build (a) any 'New Irrigation Reservoirs' across any part of the thirteen main rivers named in the Appended Schedule A or across any stream named in Schedule B."

It is further stated in para III as follows :—

When the Mysore Government desires to construct any "New Irrigation Reservoir" or any new anicut requiring the previous consent of the Madras Government under the last preceding Rule, then, full information regarding the proposed works shall be forwarded to the Madras Government and the consent of that Government shall be obtained previous to the actual commencement of work."

This agreement was concluded a long time ago during the British Regime. The Schedule A contains the rivers Lakshmanathirtha, Kabini, Pongula (Swarnavathi) and tributary Hemavathi. Most inmportant is Hemavathi. There is then 'Yagasi' up to Belur bridge. The agreement is signed by Mr. P. Hawkins, Secretary, P.W.D. and Mr. A. R. Banerjee, Dewan of Mysore. It is dated 18—2—24.

1969 செப்டம்பர் 13] [Dr. H. V. Hande]

Since time is limited, I shall touch upon one or two points only. This should not be reduced to a sort of warfare between the two Governments. They should come together sit across a table and come to decisions. Let there be full co-operation between the people of Tamil Nadu and Mysore State, about the possibility of exploiting the river Cauveri. I hope our views will reach Mysore. We have got only one river namely Cauveri. All our projects especially in Thanjavur (our granary) depend on Cauvery river. If the quantity of water in Cauvery is reduced, it will be a dangerous proposition. Whereas Mysore have plenty of advantages, natural resources, to exploit, we have nothing except Cauveri. I am sure Mysore Government will view this sympathetically and come to a suitable agreement with us. I suggest that the Chief Minister of Tamil Nadu should express unanimous concern of this House and have straightaway a dialogue with the Chief Minister of Mysore. It will be very easy to talk to him. Bangalore and Madras are connected by phone. He can dial and have a talk with the Chief Minister of Mysore. Mysore Government has earmarked Rs. 50 crores for this project and for this current year, Rs. 10 crores have been allotted. The work may start at any time.

There is another point. Whenever there is a controversy, the usual convention is that the lower riparian right should have precedence over the upper riparian right. That is the principle of natural justice. The tendency of most of the opposition parties in any State seems to play up some regional force against the ruling party. I hope we, in Tamil Nadu (all opposition parties here) will strengthen the hands of our Chief Minister in coming to a suitable solution of this problem with Mysore. I beseech of all opposition parties and ruling party in Mysore. Let us not make this an emotional issue. Let there be no surcharge or emotion on this, which touches the food problem of the entire South India. Thank you.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, இப்பொழுது அவை முன் எல்லாக் கட்சிகளும் ஏகமனதாகச் சேர்ந்து கொண்டு வந்த ஒரு பொருள் விவாதத்திலே இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே எல்லோரும் ஒருமித்த கருத்தில்தான் இருக்கிறோம். அதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. இருந்தாலும் கூட சில நண்பர்கள்.

> ‘நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
> உண்மை அறிவே மிகும்’

என்பதற்கேற்ப பேசினார்கள். அதைப்பற்றி சபாநாயகரிடம் நான் சொல்லவேண்டியதில்லை. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த என்னுடைய அருமை நண்பர் ஏதோ முன்னே வாலாட்டம் என்று சொன்னார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அந்த கம்யூனிஸ்ட் கட்சி மைசூரிலே இருக்கிறது. அவர்கள் மைசூர் சர்க்காருக்குத் தேசிய ஒற்றுமையைப் பற்றி ஆலோசனை சொல்வார்களானால்

மிகவும் நன்றாக இருக்கும் என்ற ஆலோசனையை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் கட்சியைப் பொறுத்தமட்டிலும் எனக்கு ஏதாவது ஒரு சக்தி, திறமை இருக்குமானால் நிச்சயமாக இந்த சர்க்காருக்காக மட்டுமல்ல, இந்த மக்களுக்காக பரிபூரணமாக பிரயோஜனப்படுத்துவேன் என்ற வாக்குறுதியை மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எந்தக் கட்சி ஆளுகிறது, எந்தக் கட்சி இருக்கிறது, யாருக்கு பெருமை என்பதல்ல. இது மக்களுடைய பிரச்சினை. தமிழக மக்களுடைய பிரச்சினை. இதில் எனக்கு இரண்டு வித தொடர்பு உண்டு. என்னுடைய மூதாதையர் பிறந்த கன்னட தேசத்திலேயிருந்து வந்தவன் நான். அப்பேர்பட்ட நல்லவர்கள் இது மாதிரி (குறுக்கீடு) காவேரியும் அங்கிருந்து தான் வருகிறது, நானும் அங்கிருந்து வந்தவன்தான். ஆகவே, நான் இதற்கும் சொந்தமானவன், அதற்கும் உரிமை இருக்கிறது. இரண்டு சர்க்காரும் இதைக் கேட்பார்கள் என்று நம்புகிறேன்.

ஒரே ஒரு விஷயம். இப்பொழுது காவிரி ஆற்றிலே இருக்கும் படியான தண்ணீர் 100-க்கு 100 பங்கு உபயோகிக்கப்படுகிறது "cent per cent of the waers of cauveri has been utilised." என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். அப்படி இருக்கும்போது அணை கட்டு கிறோம் என்று சொன்னால் அது மனிதாபிமானமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். நமது சர்க்கார் இருக்கிறது, பலம் இருக்கிறது என்று பேசி பிரயோஜனம் கிடையாது. இப்பொழுது காவிரித் தண்ணீரை 100 சதவிகிதம் பிரயோஜனப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் மேலே அணை கட்டிக் கொள்ளட்டும், ஆனால் கீழே தண்ணீர் வராது என்பதை அவர்கள் உணரவேண்டும். அதிகமாக பிளட்ஸ் வந்தால் எவ்வளவு தண்ணீர் வரும் என்று கணக்கெடுத்தார்கள். 1921-ம் வருடம், 1931-ம் வருடம், 1961-ம் வருடம் அப்பொழுதெல்லாம் வெள்ளம் வந்தபோது 2 இலட்சம் க்யூசெக்ஸ் தண்ணீர் வந்தது. வெறொன்றும் கணக்கு கிடையாது. ஆகவே தான் பாரதியார் அவர்கள் பாடினார்கள் :

" வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம் "

அதே மாதிரி கங்கை காவேரி இணைப்பு எந்த வருஷம்? 1974-ல் அல்ல; 2074-ல் நடக்குமா என்பது எனக்குத் தெரியாது. முதல் அமைச்சர் அவர்கள் விவரங்களை நன்கு ஆராய்ந்து தெரிவித்திருக்கிறார்கள். 1974-ல் ஒப்பந்தம் முடிந்து, புதுத் திட்டம் என்பது இல்லை. அதற்கு மேல் உபரித் தண்ணீர் இருந்தால், அதை எப்படி உபயோகப்படுத்த முடியும் என்பதைத் தான் ஆராய வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்காக நான் அவரை மிகவும் பாராட்ட வேண்டும். அந்த நிலையை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இன்னொரு விஷயம். 1924-ம் வருஷத்தில் இருந்த அரசியல் சூழ்நிலை வேறு. இன்று 1969-ல் இருக்கும் அரசியல் சூழ்நிலை வேறு. 1924-ல் மைசூர் ராஜா இருந்தார். இப்பொழுது மைசூர் ராஜா

இருக்கிற இடமே தெரியவில்லை. 1947-ல் சுதந்திரம் பெற்றோம். 1950-ல் அரசியல் நிர்ணயச் சட்டத்தை நாம் உருவாக்கினோம். இப்பொழுது இந்தியா ஒரு சுதந்திர நாடாக, ஒரு ஐக்கிய நாடாக, தேசீய ஒருமைப்பாட்டு நாடாக விளங்கிக்கொண்டிருக்கிறது. 1924-ம் வருஷத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை பற்றி இப்பொழுது எடுத்துப் பேசுவது கூட நல்லது அல்ல. இப்பொழுது தேசீய ஒருமைப்பாடு இருக்கும்படியான நிலையிலே, எந்த ஆறு எந்த இடத்திலே உற்பத்தியானாலும் சரி, இந்தியா ஒரே நாடு, காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையிலுள்ள மக்கள் அனைவருக்கும் சொந்தம். ஒருமைப்பாடு வளரவேண்டும் என்று சொல்கிறோம். நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சமயத்தில் பேசியிருக்கிறேன்.

கான்ஸ்டிட்யூஷனில் ஏதாவது தவறு செய்து இருப்போமானால், அதைத் திருத்தவேண்டும். இப்பொழுது அரசியல் நிர்ணய சட்டத்திற்கு 21 திருத்தங்கள் வந்துவிட்டன. இந்தத் திருத்தம் ஒரு முக்கியமான திருத்தம். ஒருமைப்பாடு பற்றி பேசுகிறோம். தேசீய ஐக்கியத்தைப் பற்றிப் பேசுகிறோம். ஒரே மாநிலத்தில் உற்பத்தியாகி, அந்த மாநிலத்தில் மட்டும் ஓடி நிற்கிற ஆறு எதுவும் இந்தியாவில் கிடையாது. ஒரு மாநிலத்தில் உற்பத்தியாகி, மற்ற இடங்களிலும் ஓடி, கடைசியில் சமுத்திரத்தில் போய் விழுகின்ற ஆறுகள் தான் இருக்கின்றன. எவ்வளவு தூரம் அந்தத் தண்ணீரை நாட்டிலுள்ள மக்களுக்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற நிலையிலேதான் பார்க்கவேண்டும். அப்படியில்லாமல், மேலே பிடித்து வைத்துக்கொள்வேன் என்று சொன்னால், அது இந்திய தேசீய ஒருமைப்பாட்டுக்கு நிச்சயம் நல்லது அல்ல என்பதை பக்கத்து மாநில மக்கள் உணர்வார்கள் என்று நினைக்கிறேன். உணர்ச்சிவசப்பட்டு பேசாமல், உணர்ச்சியைக் காட்டி குழப்பாமல், சில பேர்கள் சில வேளைகளில் பேசுவது போல் 'அதெல்லாம் தவறு என்று நினைக்கிறேன், இதைச் செய்தால் நாங்கள் அதைச் செய்வோம்' என்றெல்லாம் பேசாமல், உட்கார்ந்து சுமுகமாகப் பேசி முடிக்கவேண்டும். இது விஷயத்தில் முதல் அமைச்சர் அவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தமிழகத்திலுள்ள எல்லா மக்களும், எந்தவிதமான அபிப்பிராய பேதமும் இல்லாமல், நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என்ற நிலையிலே கேட்டுக் கொள்வோம்.

அணைக்கட்டு கட்டிவிட்டு, இருக்கும்படியான இடங்களிலெல்லாம் தண்ணீரை பூர்த்தி செய்துகொண்டு தான் ஒரு முடிவுக்கு வருவது என்பது தவறு. மைசூர் சட்டசபையில் 'நாங்கள் பணம் இருந்தால் கட்டிவிடுவோம், பணம் இல்லாததினால் தான் கட்டாமல் இருக்கிறோம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரும் பணம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே பிரதம அமைச்சருடனும், மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சருடனும் கூடிப் பேசி, உடனேயே, 1974-ம் ஆண்டுக்குள்ளாக என்று இல்லாமல், இந்த வருஷமே இதுபற்றி ஒரு இறுதி

யான முடிவுக்கு வரவேண்டியது மிகவும் அவசியம். என்னுடைய பூரணமான ஒத்துழைப்பும், காங்கிரஸ் கட்சியினுடைய பூரண மான ஒத்துழைப்பும் சர்க்காருக்கு நிச்சயம் இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு சந்தேகம். கேரளாவோடு தமிழ் நாடு அரசினர் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தில் பவானித் தண்ணீரைக் கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டிருக் கிறார்கள். இதில் கொஞ்சம் தாராள மனப்பான்மை காட்டியிருக் கிறார்கள். தியாகத்தை செய்திருக்கிறார்கள். விஞ்ஞான ரூபத்தில் தண்ணீரை மிச்சப்படுத்திக் கொள்வார்கள் என்று அவர்கள் தப்புக் கணக்குப் போட்டு விடக்கூடுமோ என்ற ஒரு சந்தேகம் இருக்கிறது. விஞ்ஞான கருத்துக்களைப் புகுத்தி பவானித் தண்ணீரை மிச்சப்படுத்திவிடுவார்கள் என்ற தப்பு அபிப்பிராயம் அவர்களுக்கு ஏற்பட்டுவிடுமோ என்ற ஒரு பயம் எனக்கு இருக் கிறது. அதிகமாக தண்ணீர் இருக்கிறதோ, உபரித் தண்ணீர் இருக்கிறதோ என்று அவர்கள் எண்ணக்கூடும் என்ற பயம் இருக் கிறது. எந்த நிலையில் இருந்தாலும், முடிந்தவரைக்கும் தண்ணீரை முழுவதும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். பற்றாக்குறை இருக் கும்படியான நிலை இருக்கிறது என்பதை அவர்களுக்கு பூரணமாக எடுத்துக் காட்டவேண்டும். அந்த நிலையில் இருந்து இந்த விஷ யத்தை விவாதிக்கவேண்டும்.

ஒப்பந்தத்தைச் செய்துவிட்டார்கள். இதற்கு முன்னால் இருந்த சர்க்காரும் சில ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறார்கள். சில ஆறுகளை விட்டுக்கொடுத்தார்கள். இதையெல்லாம் நன்றாக ஆலோ சனை செய்யவேண்டும். பொன்னியின் செல்வன் என்று விராப்பாக கூறப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் 14 லட்சம் ஏக்கரா விவசா யத்தில் இருக்கிறது. உயர்ந்த நிலையில் இருந்துகொண்டு, மைசூரி லுள்ளவர்கள் தாங்கள் தர்மகர்த்தாக்கள், தானம் செய்கிறோம் என்று சொன்னால்கூட, நாம் அதை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம். இங்கு இருக்கிற மக்களுடைய உரிமையை மத்திய சர்க்கார் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்து கொள்வது மட்டுமல்ல. மத்திய சர்க்கார் டைரக்ஷன்ஸ் கொடுக்க வேண்டும்.

சட்ட அமைச்சர் கூட இப்பொழுது சொல்லிக்கொண்டிருந் தார்கள். ஏதாவது விவாதம் வந்தால், உட்கார்ந்து பேசலாம் என்று சொன்னார்கள். உட்கார்ந்து பேசுவது என்றால், அணை யைக் கட்டிவிட்டு உட்கார்ந்து பேசுவது என்பது அல்ல. இது அவர்கள் இடத்திலுள்ள அணை. அதற்கு மத்திய சர்க்கார் பணம் கொடுக்க இருக்கிறது. மத்திய சர்க்கார் என்ஜினியர்களும், தமிழக சர்க்கார் என்ஜினியர்களும், மைசூர் சர்க்கார் என்ஜினியர் களும் சேர்ந்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்று என்னுடைய கட்சியின் சார்பாக சொல்லிக் கொள்கிறேன். இந்தக் காவேரித் தண்ணீர் பிரச்னை மைசூர், தமிழ் நாட்டில் இருக்கும் படியான மக்கள் பிரச்னை. தமிழக மக்களின் சார்பாக, எங்கள்

கட்சியின் சார்பாக, இந்த சர்க்காருக்கு நாங்கள் பரிபூரண ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். சர்க்கார் எடுக்கும்படியான எந்த நடவடிக்கையாக இருந்தாலும் அதற்கு நாங்கள் பரிபூரண ஆதரவு தருகிறோம். எங்களுடைய செல்வாக்கு என்று இருக்குமானால், அதை பரிபூரணமாக உங்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை விவசாய மக்களுடைய சார்பாக, உற்பத்தி செய்யும்படியான உழவர்கள் சார்பாக, முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர், ஸார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கன்னடியர். ஆகவே, கன்னட தேசத்திற்குப் போய் அமைச்சர் பேசுவதாக இருந்தால், நம்முடைய சர்க்காருடைய தூது கோஷ்டியில் இவரையும் ஒரு மெம்பராக சேர்த்துக்கொள்வது நல்லது என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல.

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசுக்கும், மைசூர் அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள சிக்கலைக் குறித்து அனைத்துக் கட்சியின் தலைவர்களும் இந்த மன்றத்தில் விவாதிக்கவேண்டும் என்று கூறியதற்கிணங்க இந்த விவாதம் மிகச் செம்மையாக நடைபெற்றிருக்கிறது. அனைவரும் மிகுந்த எச்சரிக்கையோடு விவாதங்களை நடத்தியிருக்கிறார்கள். உணர்ச்சிக்கு முதல் இடம் தராமல், உண்மைக்கு முதல் இடம் தந்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்பட, இந்த விவாதத்தில் பங்கு கொண்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

இதிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொஞ்சம் காவிரியிலிருந்து பவானிக்குப் போனார்கள். எப்பொழுதுமே அவர் ரொம்பவும் பவானி பக்தர். அந்த பூஜை செய்யாவிட்டால், அவர்களுக்கு மன நிறைவு ஏற்படாது. எங்கே மைசூர் அரசே நம்மோடு வாதம் செய்ய அவர்களுக்கு புள்ளிவிவரம் கிடைக்காதோ என்பதற்காக, என்ன இருந்தாலும் கொஞ்சம் கன்னடப் பற்று அவர்களுக்கு. பவானி பற்றிய ஒரு குறிப்பை தந்திருக்கிறார்கள். இந்த பவானி பற்றிய குறிப்பு பத்திரிகைகளிலே வெளிவருமானால், மைசூர் அரசினர் 'ஒரு நல்ல வாய்ப்பினை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நமக்குத் தந்தார்' என்று, அதைப் பயன்படுத்திக் கொள்ள தவற மாட்டார்கள் என்று கருதுகிறேன். எப்படியோ பிறந்த இடத்திற்கு கொஞ்சம் நல்லது செய்வது என்ற இந்த அற்புத காரியத்தை அவர்கள் செய்ததற்காக நான் அவர்களுடைய சாதுரியத்தை பாராட்டுகிறேன். ஆனால் இந்த விஷயம் விவாதிக்கப்படுகிற இந்த நேரத்தில் அது முற்றிலும் அவசியம்

இல்லாத ஒன்றுகும் பரம்பிக்குளத்தைப் பற்றி அவர் குறிப்பிட்ட காரணத்தினால் பவானித் தண்ணீரை நாம் கொடுத்துவிட்டோம் என்கிற பழிச் சொல்லிலிருந்து விடுபட நான் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது.

பவானியிலிருந்து எடுக்கப்படுகிற தண்ணீரை விட அதிகமாக நாம் ஆனைமலை ஆற்றிலிருந்து தண்ணீரைப் பெறுகிறோம். ஏதோ கேரள அரசை நம் அரசு ஏமாற்றி விட்டது என்றோ, அல்லது கேரள அரசு நம் அரசை ஏமாற்றிவிட்டது என்றோ இல்லாமல், மனிதாபிமானத்தோடு பிரச்சினைகளை ஆராய்ந்து, இரண்டு மாநில அரசுகளும், இந்தப் பிரச்சினையை அணுகி பரம்பிக்குளம்-ஆளியாறு நீர்ப் பங்கீடு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டிருக்கிறோம். திரு. கே. எல். ராவ் அவர்கள்—அவர்கள் கட்சி நோக்கோடு எதையும் அணுகுபவர் அல்ல. இந்த ஒப்பந்தத்தைப்பற்றி இது ஒரு அருமையான ஒப்பந்தம் என்றும், மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இது இருக்கவேண்டும் என்கிற அளவிலும் பெருமையோடு பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே, அந்த அளவில் பரம்பிக்குளம் ஆளியாறு ஒப்பந்தம் பற்றி விளக்கத்தை முடிக்க விரும்புகிறேன்.

இங்கே பேசப்பட்ட ஒரு கிணைந்த கருத்துக்களை, இன்னின்ன கருத்துக்கள் தான் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்து, ஒட்டு மொத்தமாக இப்பொழுது சட்ட மன்றத்தினுடைய விளக்க வேண்டுகோளாக மத்திய சர்க்காருக்கும், மைசூர் மாநில சர்க்காருக்கும் அளிக்கும் வகையில் சில விவரங்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் காவிரிப்பாசனம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கரிகாலன் கல்லணை கட்டியதும், காவிரியின் கரையைப் பலப்படுத்தியதும், வரலாற்றுச் சான்றுகளும் தமிழ் நாட்டுக்குக் காவிரியின் மேல் இருந்த உரிமைக்கு சான்றுகளாகும். (Prescription right) 19-ஆம் நூற்றாண்டின் கடைசியில் மைசூர், பல நீர்ப்பாசனத் திட்டங்களைத் தொடங்கிய பொழுது சென்னை மாநில அரசு தனது மறுப்பினை தெரிவித்தது. அந்த மறுப்பின் காரணமாக 1892-ஆம் ஆண்டு ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டின் அனுபந்தத்தில் கண்டுள்ள காவிரியும் அதன் உபநதிகளும், பெண்ணை, பாலாறு, துங்கபத்திரா போன்ற 15 நதிகளில் மைசூர் அரசாங்கம் நீர்த்தேக்கங்கள் கட்டுவதினால் அந்த நீர்த்தேக்கங்களைப் பற்றி முழுமையான புள்ளி விவரங்களையும் சென்னை அரசுக்குக் கொடுத்து அதன் முழு சம்மதத்தையும் பெற்ற பிறகே கட்டலாம் என்று 1892-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் 2-வது, 3வது பிரிவுகளில் கூறப்பட்டுள்ளது.

மைசூர் அரசு தமிழகத்தில் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் காவிரிப்பாசனத்தைப் பாதிக்கின்ற வகையில் மேலும் சில நீர்த்தேக்கங்களைக் கட்ட முற்பட்டபோது அன்றிருந்த சென்னை அரசும் மைசூர் அரசும் 1924-ம் ஆண்டு ஒரு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

1969 செப்டம்பர் 13] [திரு. மு. கருணாநிதி]

அது, குறிப்பாக மைசூர் அரசு கிருஷ்ணராஜ்சாகர் அணைத் திட்டம் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதற்கு ஏற்படுத்திய ஓர் உடன்பாடாகும்.

அந்த உடன்பாட்டின்படி 45 ஆயிரம் மிலியன் கனஅடி (45 TMC) கொள் அளவுள்ள கிருஷ்ணராஜ் சாகர் அணை கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் அதே சமயத்தில் தமிழகத்தில் தொன்று தொட்டு இருந்து வந்த பாசனத்தோடு மேற்கொண்டு "காவிரி மேட்டூர் பிராஜக்ட் (CMP), திட்டத்தின் கீழ் 3.01 லட்சம் ஏக்கர் புதியதாகப் பாசனம் ஏற்படுத்தவும் மேட்டூர் நீர்த்தேக்கம் கட்டவும் வழிவகை செய்யப்பட்டது.

இதை அன்னியில் மேற்கொண்டு மைசூர் அரசாங்கம் காவிரியிலும் அதன் உபநதிகளாகிய ஹேமாவதி, லட்சுமணதீர்த்தா, கபினி, சுவர்ணவதி, யாகச்சி போன்ற நதிகளில் நீர்த்தேக்கங்களைக் கட்ட வேண்டும் என்றால், தமிழக அரசுக்கு அந்த நீர்த் தேக்கங்களைப்பற்றிய முழு புள்ளி விபரங்களையும் தரவேண்டும்.

அம்மாதிரி நீர்த்தேக்கங்களை கட்டும்போது தமிழகத்திற்குச் சேரவேண்டிய தண்ணீரின் அளவு குறையக்கூடாது. அந்தத் தண்ணீரின் அளவு ஜூன் மாதத்தில் இருந்து ஜனவரி மாதம் முடிய வருடத்தில் 8 மாதங்களுக்கு ஒவ்வொரு மாதத்திலும் எந்த அளவு தண்ணீர் வந்து சேரவேண்டும் என்று தெளிவாக உடன்பாட்டில் குறிப்பிட்டுள்ளது. மீதியுள்ள 4 மாதங்களிலும் கோடைக் காலப் பயிருக்காக எவ்வளவு தண்ணீர் விட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

தண்ணீரின் அளவைத் திருச்சி மாவட்டத்தில் உள்ள மேல் அணைக்கட்டில் அளந்து பார்த்து நமக்குக் கிடைக்க வேண்டிய அளவு, தண்ணீர் வந்து சேருகிறதா என்றுபார்த்துக் கொள்ளவும் வழி வகுக்கப் பட்டு இருக்கிறது.

இந்த உடன்பாடு, மைசூர் அரசு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேற்படாமல் புதிய நீர்த் தேக்கங்களைக் கட்டிக்கொள்ள வழி வகை செய்கிறது என்பது உண்மை. ஆனால், அவர்கள் தமிழக அரசுக்கு முழு விபரங்களையும் தராமல் தமிழகத்தின் நீர்ப்பாசனத்திற்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள நீரின் அளவுக்குக் குந்தகம் ஏற்படாமல் இருக்கிறதா என்று பார்க்காமல் எந்தத் திட்டங்களையும் மேற்கொள்ளக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வளவு இருந்தும் மைசூர் அரசு ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, சுவர்ணவதி போன்ற நதிகளில் நீர்த்தேக்கங்களைக் கட்டத் தொடங்கியிருக்கிறது. இது, தமிழ் நாட்டின் நீர்ப் பாசனத்தைப் பாதிக்கும் என்பதற்கு ஐயமே இல்லை.

ஆகவேதான் 1968-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் அன்று பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த நானும் மைசூர் மாநில முதல்வர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்களும், மத்திய அமைச்சர்

திரு. கே. எல். ராவ் அவர்களும், டெல்லியில் விவாதம் நடத்தினோம். அந்த விவாதத்தின்போது, திரு. வீரேந்திர பட்டீல் அவர்களும், திரு. கே. எல். ராவ் அவர்களும், தமிழ் நாட்டுக்கு 1924-ஆம் ஆண்டு உடன்பாட்டின்படி உத்திரவாதம் அளிக்கப்பட்ட தண்ணீரின் அளவு கொடுக்கப்பட வேண்டும் என்று ஒப்புக் கொண்டார்கள். அதாவது தமிழகத்திற்கு உத்திரவாதமளிக்கப்பட்ட தண்ணீரின் அளவைத் தராமல் அவர்கள் தங்களின் புதிய நீர்த்தேக்கங்களில் தண்ணீரைத் தேக்கக்கூடாது என்று வலியுறுத்தி கூறினேன். அதற்கு ஒரு தண்ணீர் தேக்க முறை (Impounding formula) நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று சொன்னேன். அதனையும் திரு. வீரேந்திர பட்டீல் ஒப்புக் கொண்டார்கள்.

டெல்லி விவாதம் முடிந்த பிறகு மத்திய அரசும், நமது மாநில அரசும், பல தடவை எழுதிக் கேட்டும் மைசூர் அரசு நமக்கு முழுத் தகவல்களையும் தராதது மட்டுமின்றி, சரியாகப் பதில் கூட அனுப்பவில்லை.

திட்டக் குழுவும், மத்திய நீர்ப்பாசன மின்விசை வல்லுநர் குழுவும், ஹேமாவதி போன்ற எந்தத் திட்டத்திற்கும் அனுமதி அளிக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில் இந்தப் பேரவையின் உறுப்பினர்கள், மைசூர் அரசு கட்ட இருக்கும் ஹேமாவதி போன்ற திட்டங்கள், தமிழகத்தின் பாசனத்தைப் பாதிக்கும் என்று ஐயப்படுவது முறையேயாகும். ஆனால் இந்தப் பிரச்சினையை எப்படி சுமூகமான முறையில் தீர்க்க முடியும் என்பதுதான் இன்று நம் முன் உள்ள கேள்வி. இது ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினை. ஆகையினால், மத்திய அரசுதான் இதில் தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டும் என்பதும் முறையாகும். எனவே அவர்கள் தலையிட்டுத் தீர்த்து வைப்பார்கள் என்று நம்புகிறேன். ஏற்படுத்தப்படுகிற எந்த உடன்பாடுகளையும் மதிக்க வேண்டும் என்பது சாதாரண ஒரு நியதியாகும். அது இல்லையென்றால்; சமூகம் ஏது? அரசு ஏது? மைசூர் மாநில மக்களிடம், தமிழக மக்களுக்கோ, தமிழக அரசுக்கோ என்றுமுள்ள நட்புறவு இதனால் பாதிக்கப்பட மாட்டாது என்றும், பாதிக்கக்கூடாது என்றும் நாம் அனைவரும் கருதுகிறோம். ஆனால், மைசூருக்கும் தமிழக அரசுக்கும் இடையில் 1892, 1924-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மீறி, மைசூர் அரசு புதிய நீர்த்தேக்கங்களை கட்ட முற்பட்டுள்ளது. இது சரியும் அல்ல, முறையும் அல்ல. அவர்கள் மறுபரிசீலனை செய்து உடன்பாட்டில் கண்டுள்ள ஷரத்துக்களின்படி புதிய நீர்த்தேக்கங்களைக் கட்டலாம். அதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. உடன்பாட்டிற்குப் புறம்பாகச் செல்லவேண்டாம் என்கிறோம், மைசூர் அரசு உடன்பாட்டை மதித்து நடக்குமானால் இரு அரசுகளுக்குமிடையில் இன்று நிலவும் நல்லுறவு மேலும் வலுப்படும். அண்மையில் நமது பொதுப்

பணி அமைச்சர் அவர்கள், டெல்லியில் திரு. கே. எல். ராவ் அவர்களையும் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களையும் சந்தித்து நமது அரசின் சார்பில் உள்ள நியாய வாதங்களை வலி யுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அவர்களும் உடனடியாக கவனம் செலுத்துவதாக உறுதி கூறியிருக்கின்றனர். இதுவரையில் கடைப் பிடிக்கப்பட்ட 'காலத்தாழ்வை' மேலும் தொடர்ந்து கடைப்பிடிக் காமல் மத்திய அரசு உடனடியாக இதில் தலையிட்டு, மைசூர் அரசு, தொடர்ந்து கட்டிக்கொண்டுவரும் 'ஹேமாவதி' போன்ற நீர்த் தேக்கங்களை தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த மன்றத்தின் சார்பாக வேண்டுகோள் விடுக்கிறேன். மன்றத்தில் உள்ள எல்லாக் கட்சிகளின் சார்பிலும் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையை உணர்ந்து, மைசூர் மாநில அரசு தமிழகத்தின் நியாயமான உரிமைக் குரலுக்கு மதிப்பளிக்க முன்வர வேண்டு மென்று மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டு செயலாற்றப் படும் நேரத்தில்—அந்தக் கொள்கைக்கு வலுவளிக்கும் வகையில் இந்திய அரசு, உடனடியாகச் செயல்பட்டு, இந்த இரு மாநிலங் களுக்கிடையில் எழுந்துள்ள சிக்கலைத் தீர்த்திட முன்வர வேண்டு மென்று வலியுறுத்திக் கூறிக்கொண்டு, இந்த அளவோடு விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுறுகின்றன. நாள் குறிப்பிடாமல் பேரவையை இப்பொழுது ஒற்றிவைக்கிறேன்.

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது. பி.ப. 3-30

9. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

135. Notification issued with G.O. Ms. No. 3683, Home, dated the 16th December 1968 in regard to exemption from payment of tax in respect of vehicle bearing registration number MSQ 7645 belonging to Thiru Leside J. Shehan, United Nations Development Programme, care of Central Institute of Plastics Engineering and Tools, Guindy, Madras. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

136. Notification issued with G.O. Ms. No. 1478, Home, dated the 13th June 1969, in regard to exemption from payment of tax in respect of the scooter bearing registration number MSQ 2080, belonging to the Vivekananda Rock Memorial Committee, Madras. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

137. Notification issued with G.O. Ms. No. 1477, Home, dated the 13th June 1969 in regard to exemption from payment of tax in respect of the Truck-Trailer bearing registration number MDY 1702 belonging to the Vivekananda Rock Memorial Committee, Madras. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

138. Notification issued with G.O. Ms. No. 1944, Home, dated the 6th July 1968 in regard to exemption from payment of tax in respect of the Truck-Trailer bearing registration number MDY 1702 belonging to the Vivekananda Rock Memorial Committee, Madras [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

B. Reports, Notifications and other papers.

66. Notification issued with G.O. Ms. No. 995, Public Works (Electricity), dated the 20th June 1969 in regard to an amendment to the Madras State Electricity Board (Term of Office, Reappointment, Remuneration, Allowances and other conditions of service of Chairman and Members) Rules, 1958, published at pages 363–364 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 20th August 1958, under Electricity (Supply) Act, 1948 (Central Act LIV of 1948).

67. List of Unstarred Questions and Answers from Nos. 13 to 44.

@68. Note on Drought Relief Operations undertaken by Government (English and Tamil).

@Circulated to Members in the Chamber on 12-9-1969.

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 1.

[216–ம் பக்கத்தில் 227–ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை கீழே மாவட்ட வாரியாக கொடுக்கப்பட்டுள்ளது:—

தஞ்சாவூர்	1,050	[இதில் 929 இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினர்(வலது சாரி). 106 இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினர் (இடது சாரி). 13 பிரஜா சோஷலிஸ்டு கட்சியினர். 2 சம்யுக்த சோஷலிஸ்டு கட்சியினர் அடங்குவர்.]
திருநெல்வேலி ..	476	
நீலகிரி	20	(பொதுவுடைமைக் கட்சித் தொண்டர்கள்.)
மதுரை வடக்கு ..	103	
சேலம்	8	
திருச்சிராப்பள்ளி ..	169	
இராமநாதபுரம் ..	976	
கோயம்புத்தூர் ..	84	
வட ஆர்க்காடு	27	(வலது சாரி பொதுவுடைமைக் கட்சியினர்.)
சென்னை மாநகர் ..	122	

மற்ற மாவட்டங்களில் வேறு எவரும் கைது செய்யப்படவில்லை.

The number of arrests made districtwise is as follows:—

Thanjavur	1,050	[This includes 929 C.P.I. (R), 106 C.P.I. (L), 13 P.S.P. and 2 S.S.P.]
Tirunelveli	476	
The Nilgiris	20	(Communist Party Volunteers)
Madurai North ..	103	
Salem	8	
Tiruchirappalli ..	169	
Ramanathapuram ..	976	
Coimbatore	84	
North Arcot	27	(Right Communist.)
Madras City	122	

No other arrests were made in other districts.

இணைப்பு 2.

(230-ம் பக்கத்தில் 281-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

இந்த அமைச்சரவை பதவி ஏற்ற காலையில் முந்திய அமைச்சரவையால் இருப்பில் வைக்கப்பட்டிருந்த துவரை, துவரம் பருப்பு, ஆகியவற்றின் இருப்பு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

துவரை	16,940 டன்.
துவரம்பருப்பு	8,921 டன்.

2. விலை உயர்வுக்கு முந்தி வெவ்வேறு தேதிகளில் விற்பனை செய்யப்பட்டு வந்த துவரம் பருப்பு விலை வீதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

தேதி.	அரசு விற்பனை விலை.	
	தொகுப்பு ரகம்	சிறப்பு ரகம்
(1)	(2)	(3)
18—9—1965	137·30	127·30
22—12—1965	125·62	116·10
8—2—1966	116·10	108·49
5—4—1966	109·44	97·06
28—4—1966	105·51	93·73
26—5—1966	96·46	84·66
19—10—1966	116·10	(எல்லா ரகங்களும்)
8—2—1967	91·03	(1965 இருப்பு)

3. 1—4—1967 தேதியன்றிருந்த நிலவரப்படி விற்பனை வரி சேர்க்காமல் துவரம் பருப்பின் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 116 ஆக இருந்தது. பின்னர் இந்த விலை, சந்தை விலையையொட்டி அதிகரிக்கப்பட்டது.

		குவிண்டால் ஒன்றுக்கு. (ரூபாய்)
29—5—1967	அரசு வெளியீட்டு விலை ..	120 + விற்பனை வரி
	துய்ப்போர் விலை ..	131 + விற்பனை வரி
1—6—1967	அரசு வெளியீட்டு விலை ..	125 + விற்பனை வரி
	துய்ப்போர் விலை ..	137 + விற்பனை வரி
22—6—1967	அரசு வெளியீட்டு விலை ..	145 + விற்பனை வரி
	துய்ப்போர் விலை ..	160 + விற்பனை வரி
12—10—1967	அரசு வெளியீட்டு விலை ..	205 + விற்பனை வரி
	துய்ப்போர் விலை ..	226 + விற்பனை வரி

4. 1967 ஏப்ரலில் வட இந்தியாவில் பயிர் நன்கு விளையாத காரணத்தினால் இம் மாநிலத்தில் அதிகமான துவரம் பருப்பு வராது என்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும், ஏப்ரலில் உள்ளூர் துவரம்பருப்பின் விலை உயர்ந்தது. அரசாங்க இருப்பை வைத்துக் கொண்டு இடைத்தரகர் எவரும் ஆதாயம் தேடாத வகையில் வெளியீட்டு விலையை அரசு மாற்றியமைத்தது. பாங்கறிந்து இருப்புக்களை வெளியிட்டதன் மூலமும் விலைகளை அவ்வப்போது மாற்றியமைத்ததன் பலனாகவும் இருப்பு முழுவதும் விற்பனை செய்யப்பட்டது.

1969 செப்டம்பர் 13]

5. இந்த இருப்புகளை 1967 மார்ச்சில் இருந்த குறைந்த விலைப் படி விற்றிருந்தால் ரூ. 20 லட்சம் வரை விரயம் ஏற்பட்டிருக்கும். இந்த விரயம் ஏற்படுவதை நாம் மேற்சொன்ன முறைகளினால் தடுத்து விட்டோம். அரசு அவ்வப்போது இருப்புகளை வெளிச்சந்தைக்கு அனுப்பாமல் இருந்திருந்தால் துவரம்பருப்பின் விலை மிகவும் ஏறியிருக்கும். இவ்வாறாக, துவரை, துவரம்பருப்பு, இருப்பு நிலவரம் மன நிறைவு தருவதாக இருந்தது. துவரை, துவரம்பருப்பு, வாணிபத்தின் வாயிலாக இம்மாநிலத்திற்கு ரூ. 3.45 லட்சம் நிகர ஆதாயம் கிடைத்தது. பொது மக்களின் தேவைகளையும் செவ்விய முறையில் நாம் நிறைவு செய்ய முடிந்தது.

A.—

When this Ministry took charge of office, the stock of toor and toor-dhall left over by the previous ministry was as follows:—

Whole toor	..	16,940 tonnes.
Toor dhall	..	8,921 tonnes.

2. The rates at which toor-dhall was sold during different periods before the price went up are given below :

Date. (1)		Government issue price. Phool Variety. (2)	Special Variety. (3)
18th September 1965	..	137·30	127·30
22nd December 1965	..	125·62	116·10
8th February 1966	..	116·10	108·49
5th April 1966	..	109·44	97·06
28th April 1966	..	105·51	93·73
26th May 1966	..	96·46	84·66
19th October 1966	..	116·10	(all varieties)
8th February 1967	..	91·03 (1965) stock.	

3. The price of toor dhall per quintal was Rs. 116 plus sales tax as on 1–4–1957 which was subsequently revised upwards keeping in step with the market prices :

29th May 1967	Government issue price	Rs. 120 + sales tax
	Consumer's price	Rs. 131 + sales tax
1st June 1967	Government issue price	Rs. 125 + sales tax
	Consumer's price	Rs. 137 + sales tax
22nd June 1967	Government issue price	Rs. 145 + sales tax
	Consumer's price	Rs. 160 + sales tax
13th October 1967	Government issue price	Rs. 205
	Consumer's price	Rs. 226 + sales tax

4. In April 1967, it was anticipated that due to failure of crops in North India, there would not be free arrivals of stocks in the State. Further, prices of local stocks looked up in April and Government revised the issue prices so that it was not worthwhile

for any middleman to make a profit out of Government stocks. By judicious release and periodical revision of prices the entire stocks were disposed of.

5. It will be seen that thus we had averted a loss of about Rs. 20 lakhs which would have certainly accrued, if we had sold out the stocks at the low level in prices which were reached in March 1967. The price of toor-dhall would have gone up, if the Government stocks had not been released from time to time in the open market. The State was thus having a commanding position in the matter of stocks of toor and toor-dhall. The entire transactions in toor and toor-dhall have resulted in a net profit of Rs. 3.45 lakhs to the State Exchequer. We were also able effectively to cater to the needs of the consuming public.

இணைப்பு 3.

[245ம் பக்கத்தில் 14-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]

தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1)					அரிசன கிராம உத்தியோகஸ்தர்கள் (2)
1 செங்கற்பட்டு	..	..	..	..	2
2 வட ஆர்க்காடு	..	..	..	..	4
3 தஞ்சாவூர் ..	..	..	..	..	5
4 திருச்சிராப்பள்ளி	..	..	..	..	15
5 சேலம் ..	..	..	..	..	2
6 இராமநாதபுரம்	..	..	..	..	6
7 சென்னை ..	..	..	..	..	1
8 கன்னியாகுமரி	..	..	..	..	2
9 மதுரை ..	..	..	..	..	3
10 திருநெல்வேலி	..	..	..	..	6
11 தென் ஆர்க்காடு	..	..	..	..	..
12 தருமபுரி ..	..	..	..	..	..
13 கோயம்புத்தூர்	..	..	..	..	..

பணியில் அமர்த்தப்பெற்ற மகளிர் எண்ணிக்கை.

மாவட்டம். (1)			கிராம முன்சிப். (2)	கர்ணம். (3)	மொத்தம். (4)
வட ஆர்க்காடு	..	..	2	1	3
தஞ்சாவூர் ..	..	..	..	2	2
சேலம் ..	..	..	1	3	4
கோயம்புத்தூர்	..	..	..	1	1
மதுரை ..	..	..	1	..	1

Serial number and District.	Number of Harijans employed as Village Officers.
(1)	(2)
1 Chingleput	2
2 North Arcot	4
3 Thanjavur	5
4 Tiruchirappalli	15
5 Salem	2
6 Ramanathapuram	6
7 Madras	1
8 Kanyakumari	2
9 Madurai	3
10 Tirunelveli	6
11 South Arcot	Nil.
12 Dharmapuri	Nil.
13 Coimbatore	Nil.

Number of women employed.

District.	Village Headman.	Karnam.	Total.
(1)	(2)	(3)	(4)
North Arcot	2	1	3
Thanjavur	..	2	2
Salem	1	3	4
Coimbatore	..	1	1
Madurai	1	..	1

இணைப்பு 4

[256-ம் பக்கத்தில் 34-ம் எண்ணுக்கான வெள்ளிக்குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க]

பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள நகரங்களில் எந்த நேரம் வரையில் அந்த நகருக்குள் பேருந்துகளை ஓட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

மாவட்டம்.	நகரம்.	இரவில் நகரப் பேருந்துகளை ஓட்ட அனுமதிக்கப் பட்டுள்ள நேர வரம்பு.		
(1)	(2)	(3)		
			ம.	நி.
1 தஞ்சாவூர் ..	தஞ்சாவூர்	இரவு	11	30
	கும்பகோணம்	,,	11	30
	மன்னார்குடி	,,	11	35
	நாகப்பட்டினம்	,,	11	05
	திருவாரூர்	,,	11	00
	மாயூரம்	,,	11	25

[1969 செப்டம்பர் 13

மாவட்டம். (1)	நகரம். (2)	இரவில் நகரப் பேருந்துகளை ஓட்ட அனுமதிக்கப் பட்டுள்ள நேர வரம்பு. (3)	ம.	நி.
2 செங்கற்பட்டு ..	காஞ்சிபுரம்	இரவு	10	20
	திருவள்ளூர்	,,	11	00
3 கோயம்புத்தூர்	கோயம்புத்தூர் நகரம் ..	இரவு	11	15
	சிங்காநல்லூர் நகரம் ..	,,	10	35
	மேட்டுப்பாளையம் நகரம் ..	,,	10	40
	பொள்ளாச்சி	,,	11	35
	உடுமலைப்பேட்டை	,,	10	55
4 ஈரோடு ..	ஈரோடு	இரவு	11	00
	திருப்பூர்			
	கோபிசெட்டிபாளையம் ..			
	தாராபுரம்			
5 தருமபுரி ..	கிருஷ்ணகிரி	இரவு	11	00
	தருமபுரி	,,	11	00
6 கன்னியாகுமரி	நாகர்கோவில்	இரவு	11	00
7 நீலகிரி ..	உதகை நகராட்சி	இரவு	9	00
	குன்னூர் நகராட்சி	,,	9	00
8 வட ஆர்க்காடு ..	வேலூர்	இரவு	11	15
	அரக்கோணம்	,,	10	10
	வாலாஜா	,,	10	15
	திருவண்ணாமலை	,,	10	50
9 இராமநாதபுரம்	அருப்புக்கோட்டை	இரவு	10	54
	காரைக்குடி	விடியற் காலை.	3	45
	ராஜபாளையம்	இரவு	10	45
	சிவகாசி	,,	11	00
	விருதுநகர்	,,	11	00
	ஸ்ரீவில்லிபுத்தூர்	,,	11	00
10 சேலம்	சேலம்	காலை	0	28
	மேட்டூர்	இரவு	11	10
	ராசிபுரம்	,,	10	30
11 தென் ஆர்க்காடு	திருப்பாதிருப்புலியூர் ..	இரவு	11	00
	விழுப்புரம்	,,	11	00
	சிதம்பரம்	,,	11	00
12 மதுரை ..	மதுரை	இரவு	11	15
	திண்டுக்கல்	,,	11	00
	பழனி	,,	11	00
13 திருச்சிராப்பள்ளி.	திருச்சிராப்பள்ளி ..	இரவு	11	00
	புதுக்கோட்டை	,,	11	00
	கரூர்	,,	11	00

(கனரக மின்சார இயந்திரங்கள் தொழிற்சாலைப் பணியரளர்களுக்கு வசதிகள் அளிப்பதற்காக சிறப்பு நேர்வாக இரவு 2–15 வரையில் திருச்சி சந்திப்பிலிருந்து வட்டாரப் பொறியியல் கல்லூரி வரையில் நகரப் போக்குவரத்து இயங்க அனுமதிக்கபபட்டுள்ளது)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1969 செப்டம்பர் 13]

மாவட்டம்.	நகரம்.		இரவில் நகரப் பேருந்துகளை ஓட்ட அனுமதிக்கப்பட்டுள்ள நேர வரம்பு.		
(1)	(2)		(3)		
				ம.	நி.
14 திருநெல்வேலி	திருநெல்வேலி		இரவு	11	00
	தூத்துக்குடி		,,	11	00
	தென்காசி		,,	11	00
	கோவில்பட்டி		,,	11	00

(திருநெல்வேலி நகரப் போக்குவரத்தில் இரண்டு பேருந்துகள் மட்டுமே கீழ்க்கண்டவாறு ஓட அனுமதிக்கப்பட்டுள்ளன. ஒன்று திருநெல்வேலி நகரிலிருந்து சமாதானபுரத்திற்கும், மற்றொன்று திருநெல்வேலி நகரிலிருந்து பெருமாள்புரத்துக்கும் ஓடுகின்றன. திரைப்பட மாளிகைகளில் இரண்டாவது காட்சி பார்த்துவிட்டு திரும்புபவர்களுக்கு வசதியாக அவை ஓடுகின்றன.)

15 சென்னை ..	சென்னை		இரவு	11	00

(சந்தைகள், திருவிழாக்கள் அல்லது பொது முக்கியத்துவம் உள்ள பிற விழாக்கள் நடக்கும்போது பெருமளவில் மக்கள் குழுமுவார்களாதலின், காத்திருக்கும் பயணிகளுக்கு வசதியாக, தமிழக போக்குவரத்துத் துறையின் சிறப்பாணையின் கீழ் இரவு 11 மணிக்கு மேற்பட்டும் நகரப் போக்குவரத்து நீட்டிக்கப்படுகிறது.)

பேருந்துப் போக்குவரத்து உரிமையாளர் எவராகிலும் மேலே குறிப்பிட்ட நேர வரம்பினை மீறுவாராஜுல், மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 60(1) பிரிவின்கீழ் அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவரது அனுமதிச் சீட்டின் செல்திறனை நிறுத்திவைப்பது போன்ற தண்டனைகள் அவருக்கு விதிக்கப்படுகின்றன,

Statement showing the time upto which town buses are permitted to ply during night in Towns like Mayuram in the various Districts :

District.	Name of town.	Time upto which town buses are permitted to ply during night.
(1)	(2)	(3)
1 Thanjavur ..	Thanjavur ..	11–30 P.M.
	Kumbakonam ..	11–30 ,,
	Mayuram ..	11–25 ,,
	Mannargudi ..	11–35 ,,
	Nagapattinam ..	11–05 ,,
	Tiruvarur ..	11–00 ,,
2 Chingleput ..	Kancheepuram ..	10–20 ,,
	Tiruvellore ..	11–00 ,,
3 Coimbatore ..	Coimbatore Town ..	11–15 ,,
	Singanallur Town ..	10–35 ,,
	Mettupalayam Town ..	10–40 ,,
	Pollachi Town ..	11–35 ,,
	Udum et Town ..	10–55 ,,

District.		Name of town.	Time up to which town buses are permitted to ply during night.
	(1)	(2)	(3)
4	Erode	Erode	11–00 P.M.
		Tiruppur	
		Gobi	
		Dharapuram	
5	Dharmapuri	Krishnagiri	11–00 ,,
		Dharmapuri	11–00 ,,
6	Kanyakumari	Nagercoil	11–00 ,,
7	The Nilgiris	Ootacamund Municipality	9–00 ,,
		Coonoor Municipality	9–00 ,,
8	North Arcot	Vellore	11–15 ,,
		Arkonam	10–10 ,,
		Walajah	10–15 ,,
		Tiruvannamalai	10–50 ,,
9	Ramanathapuram	Aruppukottai	10–54 ,,
		Karaikudi	3–45 A.M.
		Rajapalayam	10–15 P.M.
		Sivakasi	11–00 ,,
		Virudhunagar	11–00 ,,
		Srivilliputhur	11–00 ,,
10	Salem	Salem	0–28 A.M.
		Mettur	11–10 P.M.
		Rasipuram	10–30 ,,
11	South Arcot	Cuddalore N. T.	11–00 ,,
		Villupuram	11–00 ,,
		Chidambaram	11–00 ,,
12	Madurai	Madurai	11–15 ,,
		Dindigul	11–00 ,,
		Palani	11–00 ,,
13	Tiruchirapalli	Tiruchirapalli	11–00 ,,
		Pudukottai	11–00 ,,
		Karur	11–00 ,,

(A town service on the route Tiruchi Junction to Regional Engineering College has been permitted to ply upto 2-15 a.m. as a special case to give facilities to the employees of Heavy Electricals).

14	Tirunelveli	Tirunelveli	11–00 P.M.
		Tuticorin	11–00 ,,
		Tenkasi	11–00 ,,
		Koilpatti	11–00 ,,

(Two Town buses in Tirunelveli Town Service alone are permitted to ply one from Tirunelveli town to Samadanapuram and other from Tirunelveli Town to Perumalpuram after the second cinema show is over for facilitating people attending cinema second shows).

15	Madras	Madras	11–00 P.M.

(When there are fair festivals or other functions of public interest when there is a large congregation the service of city buses is extended beyond 23 hours to clear the waiting passengers under the special order of Tamil Nadu Transport Department.) If any operator is found to violate the time schedule, he is proceeded with under section 60 (1) of Motor Vehicles Act, and punishments like suspension of permits are awarded.

தமிழ்நாடு சட்டமன்றம்
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

LIBRARY
STATE ASSEMBLY & LEGISLATURE, MADRAS
16 NOV 1970

Index to
Tamil Nadu Legislative Assembly Debates

SIXTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

11TH, 12TH AND 13TH SEPTEMBER 1969.

Volume XXIII (Nos. 1 to 3).

A

	PAGES
ACCIDENTS—	
Traffic accidents	255
ACTS—	
